சிவ மஞ்சரி



சிவமஞ்சரி 2 தொகுதி

பூசை. ச. அருணவசந்தன்

27-2

உ
சிவமயம்

சிவமஞ்சரி

- இரண்டாம் தொகுதி -

(பக்கங்கள் - 161 முதல் 320 வரை)

ஆசிரியர்
"சிவமஞ்சரி செம்மல்" "அருட்பணி அரசு"

பூசை. ச. அருணவசந்தன்



இரண்டாம் பதிப்பு

2005

சிவசுந்தரி கலைக்கூடம்

29, பீமண்ண முதலி தோட்டத்தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை -18.

நூலின் விவரம்

நூலின் பெயர்	-	சிவமஞ்சரி (2) இரண்டாம் தொகுதி
நூலின் ஆசிரியர்	-	பூசை.ச.அருணவசந்தன்
பதிப்பு ஆண்டு	-	முதல் பதிப்பு -1998 இரண்டாம் பதிப்பு - 2005
உரிமை	-	ஆசிரியருக்கு
பதிப்பாளர் / ஆசிரியர்	-	பூசை.ச.அருணவசந்தன்
முகவரி	-	ப.#29./பு#40, பீமண்ண முதலி தோட்டத்தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.
பக்கங்கள்	-	8+160 ஆக 168 பக்கங்கள்
நூல் அளவு	-	கிரௌன் 1/4 - 24c.m. x 18.2c.m.
அச்சிட்டுள்ள பரப்பளவு	-	21.5 c.m. x 15.2 c.m.
பயன்படுத்தப்பட்ட அச்சுத்தாள்	-	பலாப்பூர் HP டபுள் கிரௌன் 11.6. Kg.
பயன்படுத்தப்பட்ட எழுத்துக்கள்	-	TMVL 10.5 Pt.
மின் அச்சுக் கோர்வை	-	தனம் லேசர் பிரிண்டர்ஸ், சென்னை - 41.
மறதொன்றி அச்சகத்	-	ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆப்செட் பிரிண்டர்ஸ், தங்கசாலை, சென்னை - 41.
நூலின் பொருள்	-	சிவபெருமானைப் பற்றி-புராணங்கள்-வடமொழி-தமிழ் வேதங்கள்-தலவரலாறுகள்-ஆகியவற்றிலிருந்து தொகுப்பட்ட செய்திகள் - தனித்தனி தலைப்புகளில்
விலை	-	ரூபாய் **80/-**
நூலகக் குறியீட்டு எண்.	-	

உ

சிவமயம் திருச்சிற்றம்பலம்



முதல் பதிப்பின் முன்னுரை

எல்லாம்வல்ல சிவபெருமானின் இனிய திருவருளினாலே சிவமஞ்சரியின் இந்த இரண்டாவது மலர் மலர்ந்து தங்கள் திருக்கரங்களில் தவழ்கிறது. இந்த இனிய நல்வேளையில் இதனை உருவாக்கத் துணை நின்ற அனைவரையும் நன்றியுடன் போற்றி வணங்கி மகிழ்கின்றேன்.

சிவமஞ்சரியின் முதல் இதழைக் கண்ணுற்று நேரில் அழைத்து அன்புடன் அருளாசி வழங்கிய திருஆவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிகர் அவர்களின் திருவருளைப் போற்றி வணங்குகிறேன்.

சிவமஞ்சரியின் ஒவ்வொரு கட்டத்திலும் ஊக்குவித்து அருளொடு பொருளும் அளித்து வழிகாட்டி வருபவர் எனது குருபிரான் வணக்கத் திற்குரிய நுங்கம்பாக்கம் குருஜி சிவஸ்ரீ. R. துரைராஜன் (எ) பத்மநாபன் அவர்களாவார். இவர் சிறந்த சிவபக்தியுடன் பல்வேறு திருப்பணிகளைச் செய்து வருபவர். சென்னை நுங்கம்பாக்கம் அகத்தீசுவரர் ஆலயத்தில் அன்பர்களைக் கொண்டு நல்ல முறையில் பிரதோஷ விழாவை நடத்தி வருவதுடன் அக்கோயிலில் நாள்தோறும் மூன்று சந்நிதிகளிலும் தீபங்களை ஏற்றும் புண்ணியச் செயலைத் தொடர்ந்து செய்துவருகின்றனர். விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்நெறி ஞானமாகும். என்பது அப்பர் அடிகளின் திருவாக்காகும். அந்த வகையில் இவருடைய பெயரைச் சொல்வதே பெரும் புண்ணியம் என்று கருதி இவரைப் போற்றி நன்றி பாராட்டி வணங்குகின்றேன்.

இவரை அடியொட்டி இவருடைய அன்பர் நுங்கம்பாக்கம் LVJ பில்டர்ஸ் உரிமையாளர் சிவஸ்ரீ. எம்.வி.ஜெய்சங்கர் அவர்கள் பல உதவிகளைச் செய்து வருகின்றார்கள். இவர் நிறைந்த பக்தியுடையவர். பல திருப்பணிகளுக்கு உதவி வரும் புண்ணிய சீலரான இவரைப் போற்றி பாராட்டி எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பணியின் இடையில் குடும்பச் சூழலால் நான் எனது சொந்த ஊருக்கே குடிபெயர்ந்து செல்ல வேண்டியதாயிற்று. தொடர்ந்து சென்னையில் தங்கிப் பணி செய்ய வேண்டிய போது உண்டியும் உறையுளும் கொடுத்து ஆதரிப்பவர் எனது அன்பிற்குரிய சகோதரி திருமதி.வீ. அனந்தலட்சுமி அவருடைய கணவர் திரு.வ.வீரராகவன் அவர்களுமாவார். சிறந்த சிவபக்தியுடன் வள்ளலார் வழியொழுகும் இந்தத் தம்பதியாரைப்போற்றி நன்றி பாராட்டுகின்றேன்.

சிவமஞ்சரி தொடர்ந்து வெளிவருவதற்கு ஆர்வம் காட்டிவருபவர். ஆன்மீக நன்மணி சிவஸ்ரீ. என்.ஆர்.வெங்கடேசன் அவர்கள் (உதவி இயக்குனர் சென்ட்ரல் இன்ஸ்டிரக்ஷன் மீடியா இன்ஸ்டிடியூட் சென்னை) பல ஆன்மீகப் பணிகளில் ஈடுபட்டுச் சிறந்த பணிகளைப் புரிந்து வரும் இவர் பசுபதி, உமாமகேசுவரர் ஆகிய பகுதிகளிலுள்ள வரை

கோட்டுப் படங்களைப் புதியதாக வரையவும் சேக ரிக்கவும் நன்கொடை அளித்தார்கள். இவருக்கு எனது நன்றி இவருடைய சகோதரர் சிவஸ்ரீ. R. சாய்ராம் அவர்களும் நமது பணிகளுக்கு பல வகையில் உதவி வருவதை நன்றியுடன் போற்று கின்றேன். இவர்களை எனக்கு அறிமுகப் படுத்தி வைத்த எனது உறவினர் எலப்பாக்கம் திரு. மணி வாசகம் (தலைமை ஆசிரியர்) அவர்களுக்கு நன்றி.

சிவமஞ்சரிக்கு தொடர்ந்த நல்லாதரவு வழங்கிவரும் மஞ்சக்கொல்லை திருமிகு. கயிலைப் புனிதர் டாக்டர்.அ. மாணிக்கம் M.B.B.S., M.S., அவர்கள் சென்னை மயிலை டாக்டர் V.P.R. வரதராஜன்B.Sc., M.B.B.S.,திருமுறைச்செல்வர் சிவத்திரு. M. பெருமாள் முதலியார் ஆகியோரையும் அச்சிடும் போது படி களைத் திருத்தி நல்லுரைவழங்கிய திருவாவடு துறை ஆதீன சரஸ்வதி மகாலாய சுவடிப்புல நெறியாளர் சித்தாந்தரத்தினம் காஞ்சி.சிவ.சதாசிவ தேசிகர் அவர்களையும் திரு.த.பூமி நாகநாதன், (உலக தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை. அவர்களை யும் நன்றியுடன் போற்றி மகிழ்கின்றேன்.

இப்பணிக்கு அடிக்கடி உதவி செய்து ஊக்கு வித்த சென்னை தேனாம்பேட்டை கட்டுமானப் பொறியாளர் திரு.ஜெயராமன் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவமஞ்சரியின் முதல் மலர் வெளி வந்ததும் நானும் வணக்கத்திற்குரிய அன்பர் திரு.மீனாட்சி சுந்தரசுவாமிகளும் ஆனைமலைக்குச் சென்று, கோயம்புத்தூர் வழியாகக் கொல்லம் சென்றோம். கொல்லம் ஆலயத்தில் சிவபெருமான் உமாதேவி யுடன் உமாமகேசுவரராகக் காட்சியளிக்கின்றார். இக்கோயிலை தரிசிக்கவும் அதன் தலவரலாற்றை எழுதவும் துணை நின்றவர் திரு.R.ரவீந்திரன் அவர்களாவார். (தனலட்சுமி பேங்க் சென்னை) இக் கோயில் கொல்லம் லட்சுமி ஜுவல்லர்ஸ் உரிமை யாளர் திரு.சரவணன் அவர்களின் பரம்பரைக் கோயிலாகும். திரு.ரவீந்திரன் தன் அத்தை மகனான திரு. சரவணன் அவர்களிடம் அழைத்துச் சென்று உதவி பெற்றுத்தந்தார். அது உமாமகே சுவரரைப் பற்றிய நூல் வெளிவர உதவியாக இருந்தது. அதுவே இதனுள் ஏழாம் பகுதியாக இடம் பெற் றுள்ளதாகும். ரவீந்திரன் தொடர்ந்து சிவமஞ்சரிக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருகின்றார். இவரை அன்புடன் போற்றுகிறேன்.

இந்த வேளையில் சிவமஞ்சரியின் ஆரம்ப காலம் முதல் துணை செய்து வரும் குருஜி காயத்ரி அருள்மாமணி வீரேசுவரானந்தா(எ)ஸ்ரீவீரமணி சுவாமி கள் சென்னை, நங்கநல்லூர், மணவழகர் மாலை ஆசிரியரும், மேனாள் தமிழ்நாடு, மின்வாரிய செயற்பொறியாளருமான கோவூர், திரு. K.P. துரை B.E.அவர்கள் திருவாளர்கள் நங்கைநல்லூர் திரு.கல் யாணசுந்தமையர், அப்பாவு மாத இதழ் ஆசிரியர் திருவான்மியூர், பாம்பனடிமை குகஸ்ரீ. வே.நா. சௌந்தரராஜன்-பிரகதா தம்பதியர், திரு வல்லிக் கேணி, கயிலைப்புனிதர் திரு. ஷண்முகம் (மேனாள் சார் பதிவாளர் பதிவுத்துறை) பேரா.திரு. ராதாகிருஷ் ணன் (அண்ணா பல்கலைக்கழகம்) தவத்திரு. பர்வத மலை சித்தர் ஸ்ரீலஸ்ரீ ஜோதிசாமிகள் மேற்கு மாம்பலம் திரு. ராஜகணபதி மயிலை சேவாசக்ரா திரு. நாராயண சுவாமிஐயர் அவர்கள் ஆகியோராவார். இவர்கள் யாவருக்கும் எமது நன்றியை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல ஆண்டுகளாக நமது எழுத்துப் பணி களுக்கு நல்லாதரவு தந்து ஊக்கப்படுத்தி வரும் கலைமகள், மஞ்சரி ஆசிரியர் திரு.லெமன்(எ) லெட்சுமணன், கலைமகள் ஆசிரியர் திரு.கீழாம்பூர் சங்கரசுப்பிரமணியன் அம்மன் தரிசனம் ஆசிரியர் திரு.கவிஞர். முருகதாசன் அவர்கள் ஆகியோருக்கு எமது நன்றி.

நமது பதிப்புப் பணிகளுக்கு உரிய ஆலோச னைகள் வழங்கி செம்மைப்படுத்தி வருபவர் சென்னை அடையாறு கற்பகம் கார்டன் ஸ்பீகல் பிரிண்டர்ஸ் உரிமையாளர் குமார்(எ) என்.பாலசுப்பிர மணியம் அவர்கள் அவர் நமக்குச் சிறந்த வழி காட்டியாக விளங்குகின்றார். மேலும் நமது அன் பிற்குரிய நண்பர் திருவான்மியூர் என்.எஸ். சுந்தர ராஜன் (மாலா ஸ்கீரீன்ஸ்) அவர்களுக்கும் எமது நன்றி.

இந்நூலினை பலருக்கும் அறிமுகப்படுத்தி நல்லாதரவினைத் தேடித்தந்து வரும் திருஆவடு துறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப்பயிற்சி மைய இயக்குநர் சிவஸ்ரீ. கு.வைத்தியநாதன் (ஈசான தேசிகர்) அவர்களுக்கும் புதுவை சைவ சித்தாந்தரத் தினம் திரு. ம.சேகர் பரமக்குடி ஹரிவாசு தேவ் தம்பதி யினர் சென்னை திருமுருக. விசாகநம்பி அவர்களுக் கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடர்ச்சி 6ஆம் பக்கத்தில்...

நன்றி மலர்கள்

இறைவன் திருவருளாலும் அன்பர்களின் நல்லாதரவினாலும் சிவமஞ்சரி (இரண்டாம் தொகுதியின் இரண்டாம் பதிப்பு 2005) வெளிவந்து, தங்கள் திருக்கரங்களில் தவழ்கிறது. இந்நூல் விரைவாக வெளிவர வேண்டும் என்பதற்காகக் கீழ்க்காணும் அன்பர்கள் முன்வெளியீட்டுத் தொகை* அளித்து உதவி செய்துள்ளார்கள். இவர்களுக்கு எனது பணிவார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்து அன்பர்களுக்கும் எல்லாம் வல்ல உண்ணாமுலை அம்பிகை உடனாய அண்ணாமலையெம் அண்ணல் சகலசெல்வயோகமிக்க பெருவாழ்வை அருள வேண்டும் என்று அவர் திருவடிகளில் பிரார்த்திக்கிறேன்.

- ஆசிரியர்.

"கயிலைமணி" **பேரா. சிவஸ்ரீ. Dr. சோ. முருகன்**
தெற்கு ரதவீதி, சிதம்பரம்

"சித்தாந்தரத்தினம்" **சிவஸ்ரீ. M. சேகர்-பத்மாவதி**
66, மாரியம்மன் கோயில்தெரு, 2வது மாடி,
உருளையன்பேட்டை, புதுவை - 600 005.

சிவஸ்ரீ. C. சுவாமி நாதன்
அருள் நகர், சென்னை சாலை, குடந்தை.

"சித்தாந்தரத்தினம்"
சிவஸ்ரீ. K. இரத்தினசபாபதி
27, திருவேங்கடமுதலி தெரு, முதலாவது தெரு,
புதுப்பேட்டை, சென்னை - 600 002.

திருமதி. வரலட்சுமி தேவநாயககுருக்கள்
கூவம் (திருவிற்கோலம்) திருவள்ளூர் மாவட்டம்.

சிவஸ்ரீ. சண்முகம் பாலகுமார்
C. 207/D, ராஜாஜி வீதி, பொள்ளாச்சி,
கோவை மாவட்டம்.

திருமதி. தங்கம் கிருஷ்ணமூர்த்தி
ராகமாலிகா அப்பார்மெண்ட்ஸ், ஜீவரத்தினம் நகர்,
அடையார், சென்னை - 20.

"திருப்பணிச் செல்வர்" **Dr. தேவராஜன்** M.B.B.S.
திருமிழிசை, சென்னை.

சிவஸ்ரீ. சரவண-சதாசிவ-வேலரசு
ஏகாம்பரநாதர் சந்நிதி தெரு, காஞ்சிபுரம்.

சிவஸ்ரீ. G.T. நாடியன் செல்வன்
(Cisco System (India) Pvt. Ltd. Bangalore)
விழுப்புரம், தென்னாற்காடு மாவட்டம்.

சிவஸ்ரீ. T.K. நீலகண்டன் 2, ரெயில்வே காலனி,
2வது தெரு, அமைந்தகரை, சென்னை - 29.

"திருக்கயிலைச் செல்வர்"
சிவஸ்ரீ. K.M.T. பரமேச சிவாச்சாரியார்
சிவஸ்ரீ. K.M.T. தேவசேனாபதி குருக்கள்
இலம்பையங்கோட்டூர், திருவள்ளூர் மாவட்டம்.

சிவஸ்ரீ. A. தணிகைவேலன்
கந்தசுவாமி கோயில்தெரு, குயப்பேட்டை, சென்னை.

"கயிலைப்புனிதர்" **சிவஸ்ரீ. G.S. ஆனந்தன்**
20, வைஷ்ணவி நகர், சந்திரன் கார்டன்ஸ்,
சின்ன திருப்பதி, சேலம் - 8.

சிவஸ்ரீ. T.R. ரமேஷ்
தி மானார் 1 சென்டாப், IIலேன் ஆழ்வார்பேட்டை,
சென்னை - 600 018.

"சித்தாந்தரத்தினம்" **சிவஸ்ரீ. Dr. C. ரவிசங்கர்** B.D.S.
ஜெயசற்குரு பல்மருத்துவமனை, வில்லியனூர் சாலை,
நடராசன் காம்ப்ளக்ஸ், ரெட்டியாளையம், புதுவை-10.

திருமதி. மனோன்மணி பாலசுப்பிரமணியன்
வடக்கு ஆவணி மூலவீதி, மதுரை-1.

சிவஸ்ரீ. S. மகாதேவன்
கம்பரசன் பேட்டை, திருச்சி.

"கயிலைப்புனிதர்" **சிவஸ்ரீ. முக்கால மேகாஷியாம்**
புல்லாரெட்டி அவென்யூ,ஷெனாய் நகர்,சென்னை-30.

சிவஸ்ரீ. Dr.T.R. சுரேஷ் M.B.B.S.
காசி விஸ்வநாதன் காலனி, மேற்கு மாம்பலம்,
சென்னை - 33.

சென்னை வீனஸ் காலனி, **சிவஸ்ரீ P.B. வெங்கட்ராமன்** அவர்களும் அவரது மருமகன்
சென்னை, மந்தவெளி, **சிவஸ்ரீ தி. அனந்தநாராயணன்** அவர்களும்

---

*இத்தொகைக்கு ஈடாக இப்பதிப்பின் புத்தகங்கள் அன்பர்களுக்குச் சலுகைவிலையில் வழங்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆ-ர்

"கயிலைமணி காசி சுவாமிகள்" **K.K. கோபால்சர்மா**
பரமேஸ்வரி நகர், சென்னை - 600 020.

சிவஸ்ரீ. J. கணேஷ்
பிளாட் எண். 5, சந்தோஷ் அப்பார்மெண்ட்ஸ்,
17/786, ராமசாமி சாலை, கே.கே.நகர், சென்னை-78.

சிவஸ்ரீ. L.M.V. ரமணன்
36, 2வது அவென்யூ, அட்சயா காலனி, பாடி,
சென்னை - 600 050.

சிவஸ்ரீ. V. சிவக்குமார்
44, அழகர்சாமி சாலை, கே.கே.நகர், சென்னை-78.

சிவஸ்ரீ. R. கிருஷ்ணமூர்த்தி
48/42, தங்கவேல் தெரு, வெற்றி நகர், சென்னை-82.

சிவஸ்ரீ. Dr. க.அ. புவனேஸ்வரி
முதுநிலை தமிழாசிரியை, K.G.பெண்கள்
மேல்நிலைப்பள்ளி, அன்னூர், கோவை மாவட்டம்.

சிவஸ்ரீ. Dr.R. ராதாகிருஷ்ணன்
அண்ணா பல்கலைக்கழகம், சென்னை - 23.

சிவஸ்ரீ. Dr. R.D. அறிவொளி
அண்ணா பல்கலைக்கழகம், சென்னை - 23.

சிவஸ்ரீ. S. பாரதி
ஸ்ரீனிவாசரெட்டி தெரு, சென்னை - 17.

4ஆம் பக்கத் தொடர்ச்சி...

எனது வாழ்க்கைத் துணைவி திருமதி. வசந்தா எனது அனைத்து சிவப்பணிகளுக்கும் உதவியாக இருப்பதோடு இல்லப்பொறுப்புகள் அனைத்தையும் தானே ஏற்றுக் கொண்டு உதவியாக இருக்கிறாள். அவருக்கு இந்த வேளையில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது பணிக்கு வேண்டிய நூல் ஆதாரங்களைத் திரட்ட உதவியாக இருந்தது டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூலகமாகும். நூலகக் காப்பாளர் வித்துவான் திரு. பாலசாரநாதன் நூலகர் சிவஸ்ரீ. K. பாஸ்கர் உடனாளர் திரு.எஸ்.சாய்ராமன் எழுத்தர் திரு.K.நடராஜன் பணியாளர்கள் புவனேசுவரி பொன்னுவேல், M. மணி, ராமஜெயம், திருமதி கன்னிகாமணி ஆகியோர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மின்னச்சுச் செய்து தரும், தனம் லேசர் பிரிண்டர்ஸ், உரிமையாளர் திரு.செ.சிகாமணி மின்தட்டச்சரும் எனது சகோதரர்களுமான திரு.வீ. வெங்கடேசன், திரு.ச.சேகர் ஆகியோருக்கும் மறுதோன்றி அச்சகத்தினர் திரு.S.முருகநாதன் (ஸ்ரீவேணி கிராபிக்ஸ்) திருவான்மியூர்) திரு.A.பாஸ்கர், திரு.வாசுதேவன் (பி.எம்.வி. ஆப்செட் சைதாப்பேட்டை) திருவல்லிக்கேணி ஆர்.ரவிக்குமார் (ஆர்.ஆர்.பார்ம்பக்ஸ்) ஆகியோருக்கும் நிழற்பிரதியாளர் சத்யாபிராசஸ் திரு.ராதாகிருஷ்ணன் துர்கா பைண்டிங் திரு.சரவணன் ஆகிய யாவருக்கும் எனது நன்றி உரித்தாகுக. இத்தொகுதிக்குத் தேவையான படங்களை வரைந்து உதவிய ஓவியர்கள் திரு.ஜெகன், திரு.சசி ஆகியோருக்கு எனது நன்றி.

இவர்கள் யாவருக்கும் உண்ணாமுலை அம்பிகை உடனாய அண்ணாமலை எம் அண்ணல் சகல செல்வயோகமிக்கப் பெருவாழ்வை அளித்தருளி அருள்பாலிக்க வேண்டுமென்று அவருடைய பொன்னார்த்திருவடிகளைப் போற்றிப் பணிந்து வேண்டுகின்றேன்.

இங்ஙனம்
சிவப்பணியில் மீளாஅடிமை

பூசை. ச. அருணவசந்தன்(எ)
பூசை. ச. ஆட்சிலிங்கம்

வெகுதான்ய வருஷம்
கார்த்திகை தீபத்திருநாள்
டிசம்பர் 02, 1998

உ

ஸ்ரீ பச்சையம்மன் துணை



இந்நூலின் உள்ளே . . .

மலர் 6.	பசுபதி	பக்கம்	161
மலர் 7.	உமாமகேசுவரர்	”	193
மலர் 8.	ஐந்தும் சிவபெருமானும்	”	225
மலர் 9.	திருக்கயிலாயம்	”	257
மலர் 10.	மகா சிவராத்திரி	”	289

சிவசுந்தரி கலைக்கூடம்

29, பீமன்ன முதலி தோட்டத்தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 18.

பேரன்புடைய, சிவநேயச் செல்வப் பெருந்தகையீர்,

சிவபெருமானின் எல்லையில்லாத பெருமைகளை இயன்றவரை விளக்கும் வகையில் சிவமஞ்சரி என்ற தொடர் நூலை எமது கலைக்கூடம் வெளியிட்டு வருகின்றது. இதனை 60 தலைப்புகளில் சிறந்த புகைப்படங்கள் வரைப்படங்களுடன் நேர்த்தியாக அச்சிட்டு வெளியிட முனைந்து, செயல்பட்டு வருகிறோம். (தடித்த எழுத்தில் உள்ள 5 நூல்கள் இந்த இரண்டாம் தொகுதியில் இடம் பெற்றுள்ளன) இவை,

1. சிவமே செம்பொருள்
2. மச்சேந்திரர்
3. திருவாவடுதுறை ஆதீனம்
4. முகலிங்கம்
5. பிரதோஷம்
6. **பசுபதி**
7. **உமாமகேசுவரர்**
8. **ஐந்தும் சிவபெருமானும்**
9. **திருக்கயிலாயம்**
10. **மகாசிவராத்திரி**
11. ஸ்ரீருத்திரர்
12. ஆதித்யேசுவரர்
13. சோமாஸ்கந்தர்
14. சைவ சமய சாத்திரங்கள்
15. ஸ்ரீ தியாகராஜர்
16. சந்திரசேகரர்
17. அக்னீசுவரர்
18. சித்தீசுவரர்
19. அகத்தீசுவரர்
20. அதி(க) தியாகராஜர்
21. கோதார கௌரீசுவரர்
22. அம்பிகாபதீஸ்வரர்
23. அரம்பேசுவரர்
24. காளீசுவரர்
25. திருமணக்கோலநாதர்
26. பிரம்மபுரீசுவரர்
27. பன்னிருத்திருமுறை அறிமுகம்
28. வேத ஆகம புராணேசுவரர்
29. திருமாலீசுவரர்
30. மூவராய் நின்ற முதல்வன்
31. ஸ்ரீவீரட்டகாசர்
32. ஸ்ரீகாலசம்ஹாரர்
33. ஸ்ரீமன்மதேசுவரர்
34. ஸ்ரீதிரிபுராந்தகர்
35. ஸ்ரீவீரபத்திரர்
36. தீபமங்களேசுவரர்
37. தலவிருட்சங்கள்
38. ராஜகோபுரங்கள்
39. விமானேசுவரர்
40. தீர்த்தீசுவரர்
41. பூதலிங்கேசுவரர்
42. இராட்சதலிங்கம்
43. சப்தரிஷீசுவரர்
44. தட்சணாமூர்த்தி
45. சிவாசாரியார்கள்
46. புஷ்பரதீசுவரர்
47. கங்காதீசுவரர்
48. எட்டும் சிவபெருமானும்
49. விருந்திட்டீசுவரர்
50. சிவாலய திருவிழாக்கள்
51. சபாநாயகர்
52. ஆனந்ததாண்டவம்
53. ஊர்த்துவ தாண்டவர்
54. நாகநாதர்
55. இராஜலிங்கேசுவரர்
56. பறவைகளும் பரமனும்
57. ஐராவதீசுவரர்
58. சிவாயுதங்கள்
59. சிவாலயப் பரிவாரங்கள்
60. பைரவர் என்பனவாகும்


மொத்தம் 2000 பக்கங்களுக்கும் அதிகமான அளவில் வெளிவரும் இந்நூல்

சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயிலாகும்

இந்நூல் ஆசிரியர் பூசை. ச. அருணவசந்தன் ஓதுவார் மரபில் வந்த சைவநெறியாளர். சென்னை பல்கலைக் கழகத்தில் முதுகலைப்பட்டம் பெற்றவர். தமிழகமெங்கும் பயணம் செய்து ஏறத்தாழ 20,000 கோயில்களைத் தரிசித்தவர். தான் கண்டும் கேட்டும் உணர்ந்த செய்திகளைப் பதினெண்புராணங்கள், தெய்வத்திருமுறை நூல்கள், தலவரலாறுகள் கல்வெட்டுக்கள் செவிவழிச் செய்திகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒப்பு நோக்கித் தொகுத்து நூலாக அளிக்கின்றார். மேன்மை கொள் சைவ நெறி உலகெங்கும் விளங்க, குறைந்த விலையில் நிறைந்த செய்திகளைத் தாங்கி சிவமஞ்சரி வலம் வருகிறது. இவருடைய பணியைப் பாராட்டி திருவாவடுதுறை ஆதீனம் குருமகாசந்நிதானம் சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் "சிவமஞ்சரிச் செம்மல்" என்ற பட்டத்தையும் அகில உலக பக்தி இலக்கிய பேரவையினர் "அருட்பணி அரசு" என்ற பட்டத்தையும் அளித்து கௌரவித்துள்ளனர்.

உ

பசுபதீ போற்றி!பாங்கின் மலைவல்லி காதலா போற்றி!! போற்றி!!!



பசுபதி

சிவபெருமானுக்குரிய தலையான எட்டு திருப்பெயர்களில் ஒன்று பசுபதி என்பதாகும். உலகிலுள்ள உயிர்க்கூட்டங்களைப் "பசு" என்ற பொதுப்பெயரால் சமயநூல்கள் குறிக்கின்றன. உயிர்களின் ஒப்பற்ற தலைவனாக இருப்பதால் சிவபெருமானுக்குப் "பசுபதி" என்பது பெயராயிற்று. இப்பெயரால் வடமொழி ஆதிவேதங்களும் தமிழ்மறைகளும் சிவபெருமானைப் போற்றி மகிழ்கின்றன.

மேலும், பராசக்தி பசுவடிவம் கொண்டு அநேக தலங்களில் சிவபூசை செய்தாள். அவளுக்குக் காட்சியளித்துச் சிவபெருமான் அவளைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டார். பராசக்தியான பசுவுக்கு அமைந்த பதியாதலின் சிவபெருமான் "பசுபதி" எனப்பட்டான்.

வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே சிவபெருமான் ''பசுபதி'' என்று அழைக்கப் பட்டதையும், அதையொட்டிய வரலாறுகளையும் பல ஆராய்ச்சி நூல்கள் விரிவாகக் குறிப்பிடுகின்றன. அவற்றை இயன்ற வரையில் தொகுத்து இம்மலரில் காணலாம்.

இதனுள் அம்பிகை, பசுவடிவம் தாங்கி வழிபட்ட திருத்தலங்களான பசுபதித் தலங்கள், காமதேனு முதலான தெய்வப் பசுக்கள் வழிபட்ட திருத்தலங்கள் ஆகியவற்றின் தலவரலாறுகளைக் காணலாம்.

சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்யும் நீரும், பிறபொருட்களும் சிவலிங்கத்திலிருந்து வெளியாகுமிடத்தைக் "கோமுகம்" என்கிறோம். இது சக்தியின் வடிவமாகும். கோமுகம் என்பதற்குப் "பசுவின்வழியாக" என்பது பொருளாகிறது. ஆகவே சிவனருள் என்பது பராசக்தி என்ற பசுவின் மூலமாகவே பக்தர்களாகிய கன்றுகளை அடைகின்றது என்பது பெறப்படும்.

சிவனருள் என்பது பெருங்கருணைக் கடலாக இருப்பது. அதனைச் சாதாரண பக்தன் பெற்றாலும், உடனே அதில் தோய்ந்து அதனை அனுப வித்துவிட முடியாது. அதனைப் பக்தன் இன்பமுடன் பெற்று அனுபவிக்கச் செய்பவள் பராசக்தியே யாவாள். பராசக்தி பசுக்களாகிய உயிர்க்கூட்டங் களின் தாயாக இருந்து பசுபதியான சிவபிரானின் அருளை அவை பெற்று அனுபவிக்கச் செய்கின்றாள்.

ஆறு என்ற சொல் ஆறு என்ற எண்ணைக் குறிப்பதுடன் ''வழி'' என்ற பொருளையும் குறிக்கின்றது. அதனையொட்டிப் பசுக்களாகிய உயிர்கள் பதியாகிய சிவனை அடையச் செய்யும் வழியாக நிற்கும் பராசக்தியையும் அவளுடைய தலைவனாகிய பசுபதியையும் இந்த ஆறாம் மலரில் சிந்தித்து மகிழலாம்.

கோமதி உடனாகிய பசுபதீசுவரப் பெருமான் அன்பர்களுக்குச் சகல செல்வயோகமிக்கப் பெருவாழ்வை அளித்து அருள்பாலிக்க வேண்டு மென்று அவனுடைய பொன்னார் திருவடிகளைப் போற்றி வணங்கி வேண்டுகின்றோம்.

--- சிவசுந்தரி

பசுபதி - பெயர் விளக்கம்

"பச்" என்ற வேர்ச் சொல்லிலிருந்து பசு என்ற சொல் வந்ததாக வடமொழி அறிஞர்கள் கூறுகின்றனர். இதற்கு கட்டப்பட்டது, என்பது பொருளாகும். உயிர்கள்யாவும் பாசம் என்கிற மும்மலங்களால் கட்டுண்டு கிடக்கின்றன. இந்த மும்மலக்கட்டுகளில் இருந்து விடுபட்டுப் பதியினை அடைவதே முக்தி எனப்படும். பசுபதி என்பதற்கு உயிர்களின் மும்மலக்கட்டுகளை விடுவித்து அதற்கு இன்பநிலையை அருளும் தலைவன் என்பது பொருளாகும்.

பசுக்களின் தெய்வநிலை

சமய வாழ்வில் பசுக்கள் சிறப்பான இடத் தைப் பெறுகின்றன. இந்து சமயத்தினர் பொதுவாகப் பசுக்களை மகாலட்சுமியின் வடிவமாகப் போற்று கின்றனர். குறிப்பாகச் சைவர்கள் பசுக்களைப் பரா சக்தியாகப் போற்றுவதைக் காணலாம். தினப்பூசை யின்போது பசுவின் பாலால் சிவபெருமானை முழுக் காட்டுவதைச் சிறப்புடன் போற்றுகின்றனர். பசுவின் பாலை அமுதமாகப் போற்றி அதனைச் சிவபெரு மானுக்கு நிவேதம் செய்கின்றனர். பசுவின் நெய் கொண்டு விளக்கெரிப்பதை மிகுந்த புண்ணியம் தரும் செயல் என்று கூறுவர். நெய் விளக்கேற்றுவ தற்காகப் பசுக்கள் கோயில்களுக்கு அளிக்கப் பட்டதை அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள ஏராளமான கல்வெட்டுக்களால் அறியலாம்.

சிவாலயங்களில் பசுக்களை வளர்த்து அதன் மூலம் பெறப்படும் பாலால் அபிஷேகம் செய்யப் பட்டது. பசுக்கள் கட்டுமிடம் பசுமடம் என்றும் கோசாலை என்றும் அழைக்கப்படும். அவற்றிற்கு உணவிடுதல் சிவதருமங்களில் ஒன்றாகப் போற்றப் பட்டது. பசுவுக்கு உணவளிப்பதும் சிவபூசையாகவே கருதப்பட்டது. திருமூலர் "யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை'' என்று கூறுவது காண்க. திருஞானசம்பந்தர் உலக நன்மையின் பொருட்டு "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என்று அந்தணர்களோடு பசுக்களையும் சேர்த்து வாழ்த்து வது குறிப்பிடத்தக்கது.

பசுக்களை நன்கு பராமரித்து வணங்கு பவர்கள் "கோலோகம்" என்ற புண்ணிய உலகத் திற்குச் செல்வர் என்று பெரும் புராணங்கள் கூறு கின்றன. பசுக்களுக்குத் தீங்கு செய்வது உலகிலுள்ள பெரும்பாவங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது.

நல்ல பசுக்களின் கொம்புகளில் புதிய ஆடைகள், பொற்காசுகள் முதலியவற்றைக் கட்டி அவற்றை உயரிய ஒழுக்கங்களைக் கொண்டவர் களுக்கு அளிப்பது கோதானம் எனப்பட்டது. இதனைப் புறப்பொருள் வெண்பாமாலை என்ற நூல், "கபிலை கண்ணிய புண்ணிய நிலை" என்று குறிக்கின்றது. பேரரசர்கள் வெள்ளியாலும், தங்கத்தாலும் செய்யப்பட்ட பசுவின் உருவங்களை தானமளித்த செய்திகளை வரலாற்றில் காண்கிறோம்.

பசுபதீஸ்வரச் சிற்பங்கள்



இந்திய மரபில் பசுக்கள் தெய்வீக ஆற்றல் கொண்டவைகளாகப் போற்றப்படுகின்றன. அவை தெய்வங்கள் உறையும் புனிதத்தலங்களைக் கண்டறிந்து மக்களுக்கு அறிவிக்கும் ஆற்றல் கொண்டவை என்று நம்பப்படுகிறது. இந்தியாவில் இமயம் முதல் குமரி வரையிலுள்ள அனேக தெய்வத்தலங்களில் புற்றின் உள்ளேயிருந்த தெய்வத்திருவடிவங்களைப் பசுக்களே பால் சொரிந்து மக்களுக்குக் காட்டியதாக அந்தந்த வட்டாரப் புராணங்கள் கூறுவதால் அறியலாம்.

பசுக்கள் இறைவன் திருவடிவினைக் காட்டிக் கொடுத்த கதையை இப்புராணங்கள் யாவும் ஒரே மாதிரியாகவே குறிப்பிடுகின்றன. இந்தக் கதைகளில் இடத்தின் பெயரும், தெய்வத்தின் பெயரும் வெவ் வேறாக இருக்கலாம். ஆனால் கதையின் போக்கு எல்லாவற்றிலும் ஒரே மாதிரியாகவே அமைந்தி ருப்பதைக் காண்கிறோம்.

அக்கதையானது,

"சிறப்புமிக்க ஊரில் ஒரு பெரிய செல்வந்தன் இருந்தான். அவனுக்கு ஏராளமான மாடுகள் இருந்தன. அவையாவும் மிகவும் நன்றாகப் பால் கொடுப்பவை.

ஒரு சமயம் அம்மந்தையில் இருந்த ஒரு மாடு மட்டும் பாலைச் சரியாகக் கறக்கவில்லை. மாடு நன்கு ஆரோக்கியமாக இருந்தாலும் பாலைச் சரியாகக் கறக்காததின் காரணத்தைத் தெரிந்து கொள்ளமுடியவில்லை அதனால் அந்தச் செல்வந்தன் மாடு மேய்க்கும் சிறுவனை அழைத்து அதன் காரணத்தை அறிந்துவரும்படிக் கூறினான்.

மாடு மேய்க்கும் சிறுவன் செல்வந்தனின் சொற்படியே மாடு மேய்க்கச் சென்ற இடத்தில் அந்தப் பசுவைக் கண்காணித்தான். அப்பசு உச்சிவேளையில் மந்தையிலிருந்து தனியே பிரிந்து சென்று, ஓரிடத்திலிருந்த (ஒரு புற்றில்) தானாகவே பாலைப் பொழிவதைக் கண்டான். உடனே ஓட்டமாக ஓடிவந்து அச்செய்தியைத் தன் எஜமானனிடம் கூறினான். அதைக் கேட்ட எஜமானன் அவ்விடத்தில் ஏதோ அதிசயம் இருக்கும் என்று கருதிப் பலரையும் துணைக்கழைத்துக்கொண்டு அந்தப் பையனுடன் பசு பாலைச் சொரிந்த இடத் திற்குச் சென்றான். அங்குக் கடப்பாரையால் தோண் டினான். அப்படித் தோண்டுகையில் கடப்பாரையின் முனைபட்டு ரத்தம் பெருகியது. அதனைக் கண்டயாவரும் அஞ்சி அவ்விடத்தைக் கைகளால் அகழ்ந்து பார்க்க, அங்கு சுயம்பு வடிவமான தெய்வம் இருக்கக்கண்டு தொழுதனர். அப்போது அங்குள்ள தெய்வம் ஒருவர்மீது ஆவேசித்து வந்து தனக்கு அவ்விடத்தில் ஒரு கோயில் கட்டுமாறு ஆணையிட்டது. அதன்படியே அங்கு கோயில் எழுப்பப்பட்டது.."

இக்கதைதான் இந்தியாவெங்கும் வழங்கப் படும் மூலக்கதையாகும். இதனைச் சற்றுக் கூட்டிக் குறைத்து, விரித்துச் சுருக்கித் தலபுராணமாகத் தரப் பட்டுள்ளதை எண்ணற்ற நூல்களில் காணலாம்.

பொதுவாக, சிவலிங்கங்களைக் கண்டறியப் பட்டதற்கே இக்கதைகள் கூறப்பட்டிருந்தாலும், பிற தெய்வத்தலங்களிலும் இக்கதையைக் காணமுடி கிறது. எடுத்துக்காட்டாகத் திருப்பதி வேங்கடவன்,

கோவைமாவட்டம் காரமடை ரங்கநாதர், பெரிய பாளையம் பவானி அம்மன், முதலிய தெய்வத் தல வரலாற்றிலும் இதுபோன்ற கதையைக் காண்கிறோம்.

இக்கதை மக்கள் மனதில் வேரூன்றி இருந்தால், இக்கதைக்குச் சம்பந்தமில்லாத தலங்களில் கூட இதனை விளக்கும் வரலாற்றுச் சிற்பமான பசு சிவலிங்கத்தின் மீது பால் சொரியும் காட்சியைக் கோபுரம், விமானம் முதலியவற்றில் சுதைச்சிற்பமாகவும், சுவர்களிலும் தூண்களிலும் புடைப்புச் சிற்பங்களாகவும் அமைத்திருக்கக் காண்கிறோம்.

இச்சிற்பத்தில் பசு நின்றவாறு இருக்க அதன் மடிக்குக் கீழே சிவலிங்கம் அமைந்திருக்கின்றது. பசுவின் மடியிலிருந்து பால் பொழிகின்றது. பசுவானது தன் முகத்தைத் திருப்பிச் சிவலிங்கத்தை அன்புடன் நாவால் துழாவி மகிழ்கின்றது. (நாவால் சிவலிங்கத்தை தொடமுடியாவிட்டாலும் அச்சிவ லிங்கத்தை அன்புடன் பார்க்கும் வகையிலாவது இந்தச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்களைப் ''பசுபதீசர்'' என அழைப்பர்.

தமிழகத்திலும், கம்போடியா, இலங்கை முதலிய அயல்நாடுகளிலும் உள்ள பல ஆலயங்களில் தேர்ச் சிற்பங்களாகவும் தூண் சிற்பங்களாகவும் இக்காட்சியைக் காண்கிறோம்.

❑ கொங்கு நாட்டில் உள்ள அனைத்துச் சிவாலயங்களிலும் காமதேனு சிவனை வழிபட்டு அருள்பெற்றுள்ளது. இதனை உணர்த்தும் வகையில் இவ்வட்டாரத்திலுள்ள கோயில்களில் அதன் முன்னேயுள்ள தீபஸ்தம்பத்தின் அடிப்படைப் பகுதியில் கிழக்கு நோக்கியவாறு (மேலே சொன்ன வகையில் அமைந்த) பசுபதீசுவரர் வடிவங்களை அமைத்துள்ளனர்.

❑ சில தலங்களில் பெரிய பசு ஒன்றை வெள்ளியால் செய்து அதன் மடிநிறையப் பாலை யூற்றி அந்தப் பால் அதன் மடியில் உள்ள காம்பின் வழியே வெளியேறுமாறு செய்து வைத்துள்ளனர். அதனை, சிவலிங்கத்தின் மீது பொருத்தி அதன் மடியிலுள்ள பால் சிவலிங்கத்திற்கு அபிஷேகம் ஆகும்படி செய்வர். இதன் மூலம் அத்தலத்தின் தலபுராண வரலாற்றை நினைவு கூறுகின்றனர்.

❑ சில தலங்களில் பசு லிங்கத்தின் மீது தனது பாலைப்பொழிந்து அதனை நாவால் வருடும் பாவனையில் வெள்ளியால் செய்து வைத்துள்ளனர். பேரூரில் இத்தகைய காட்சியைக் காணலாம்.

❑ கொங்குநாட்டில் தீபத்தம்பங்களில் அமைக்கப்படும் பசுபதி சிற்பங்களைப் போலவே தென்னகத்திலுள்ள சில கோயில் கொடிமரங்களின் அடிப்பட்டைப் பகுதியில் அவை அமைத்திருப்பதைக் காணலாம்.

❑ திருவாவடுதுறை கோமுத்தீசுவரர் ஆலயத்தில் பெரிய கற்பலகையில் செதுக்கப் பெற்ற புடைப்புச் சிற்பமாகப் பசு சிவலிங்கத்திற்குப் பால் சொரிந்து நாவால் வருடி மகிழும் காட்சி அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் உட்பிராகாரத்தில் வடகிழக்கு முனையில் அமைக்கப்பட்டுள்ள இதற்கு திருவுருவத்திற்குத் தினமும் பூசை நிகழ்கின்றது.

ஆக்கோட்டம்



பசுக்களைக் கட்டுமிடமாகிய பசுத்தொழுவம், கோயிலாகவே போற்றப்பட்டது. வேலாயுதத்திற்கு அமைக்கப்பட்ட ஆலயம், வேற்கோட்டம் என்றும், முருகன் ஆலயம் கந்தகோட்டம், குமாரகோட்டம் என்றும் வெள்ளையானையாகிய ஐராவதத்திற்கு அமைக்கப்பட்ட ஆலயம் வெள்ளானைக்கோட்டம் என்றும் அழைக்கப்பட்டது போலவே பசுக்களுக்காக அமைக்கப்பட்ட தொழுவம் "ஆக்கோட்டம்" எனப்பட்டது.

தென்னகத்தில் பல ஆலயங்களில் ஆக்கோட்டம் என்ற பசுத் தொழுவங்கள் சிறப்புடன் விளங்கியதைப் பழைய நூற்கள் தெரிவிக்கின்றன. பின்னாளில் இவை பசு மடம் என்றும் கோசாலை என்றும் பலவாறு அழைக்கப்பட்டன. இங்கு பசுக்களுக்குத் தினமும் பூசை நடைபெற்று சிறப்பு உணவுகள் அழைக்கப்பட்டன. இந்த பசுக்களிலிருந்து பெறப்பட்ட பஞ்சகவ்யங்களே சிவபூசைக்குப் பயன்படுத்தப்பட்டன

பசுபதீச்சரங்கள்

சிவபெருமான் தான்தோன்றிச் (சுயம்புத் திருமேனி) சிவலிங்கத்திருமேனியாகப் புற்றினில் எழுந்தருளியிருக்கும் போது ஒரு பசு பால் சொரிந்து அத்திருமேனியை வெளிப்படுத்தியதாகப் புராணம் குறிப்பிடும் தெய்வத் தலங்கள் ஏராளமானவையாகும். பசுவால் கண்டறியப்பட்ட பதியான சிவபெருமான் இத்தலங்களில் பசுபதீச்சரர் என்று பெயர் பெறவேண்டும். என்றாலும் அப்படி இல்லாமல் அவர் பல்வேறுத் தலங்களில் பல்வேறு பெயர்களிலேயே எழுந்தருளியிருக்கக் காண்கிறோம்.

பசுவால் வெளிப்படுத்தப்பெற்றச் சிவபெருமான் பசுபதீச்சுவரர் எனும் பெயரிலேயே எழுந்தருளியுள்ள திருத்தலங்கள் 'பசுபதீச்சரங்கள்'' என்று சிறப்புடன் அழைக்கப்படுகின்றன.

பஞ்சபூதத் தலங்கள் என்று ஐந்து சிவத்தலங்கள் இருப்பதைப் போலவே பசுபதித் தலங்கள் என்று ஐந்து தலங்கள் சிறப்புடன் போற்றப்படுகின்றன. இவற்றை "பஞ்ச பசுபதித்தலங்கள்'' என அழைப்பர். இவை நேப்பாளம் பசுபதி நாதர் கோயில், ஆவூர், திருக்கொண்டீச்சரம், பந்தணை நல்லூர், கருவூர் என்ற ஐந்தாகும். இவற்றுள் தலைச்சிறந்தது வடக்கே நேபாளத்தில் அமைந்துள்ள பசுபதிநாதர் கோயிலாகும். இது காமதேனு பூசித்தத் திருத்தலமாகும்.

1. நேபாளத்துப் பசுபதீச்சரம்

இந்தியாவின் வடக்கேயுள்ள நேப்பாள நாட்டின் தலைநகரம் காட்மண்டு ஆகும். இந்த நகரத்திலிருந்த ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள தியோபாதன் எனும் இடத்தில் பசுபதி நாதர் கோயில் அமைந்துள்ளது.

இந்தக்கோயில் உண்டானதற்கானப் புராண வரலாறு ஒன்று நெடுங்காலமாகச் சொல்லப்பட்டு வருகின்றது. அதன்படி, ஒரு சமயம் பிரம்மனுக்கும் திருமாலுக்கும் தங்களில் யார் பெரியவர் என்ற விவாதம் எழுந்தது. அவர்கள் சிவபெருமானிடம் சென்றார்கள். அவர் பெரிய லிங்கமாக மாறி நின்றார். பிறகு அவர் அவர்களை நோக்கி இந்த லிங்கத்தின் அடி அல்லது முடியை யார் அறிகின்றாரோ அவரே பெரியவர் என்று கூறினார்.

லிங்கத்தின் தலைப்பகுதியைக் காண பிரம்மா வானுலம் சென்றார். அடியைக் கண்டுவரத், திருமால் பாதாளலோகம் சென்றார். இருவராலும் அடியையும் முடியையும் காண முடியவில்லை. திருமால் தனது தோல்வியை ஒப்புக் கொண்டார். பிரம்மன் மட்டும் தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. எனவே சூட்சி செய்து வெல்ல நினைத்தார். அதனால் தாழம்பூவையும், காமதேனுவையும் தனக்குத் துணையாக அழைத்துக் கொண்டார்.



❑ பசுபதிநாதர் ஆலயம் - நேபாளம்.

தாழம்பூ, சிவபெருமானிடம் "பிரம்மா லிங்கத்தின் உச்சியில் வில்வ இலைகளை வைத்து வணங்கினார். அவற்றைக் காமதேனு உண்டு விட்டது" என்று பொய்சாட்சி சொன்னது. சிவன் காமதேனுவைப் பார்த்தார். காமதேனு தன் தலையை அசைத்து அது உண்மை என்றது. ஆனால் அதன் வால் மட்டும் இல்லை இல்லை என்று ஆடியது. (அதனால்தான் பசுவின் பின்பகுதி வணக்கத்திற்கு உரியதாக இருக்கின்றது).

சிவன் அனைவரையும் நோக்கி, "திருமாலே பெரியவர்" என்று கூறினார். பொய்சாட்சி சொன்ன தால் இனி தாழம்பூவைச் சிவபூசைக்கு உரியதல்ல என்றும் பிரம்மாவுக்குக் கோயிலே கூடாது என்றும் சாபம் கொடுத்தார். அத்துடன் காமதேனுவையும் காட்டுப் பசுவாகும்படிச் சபித்தார்.

....

இதன் பிறகு நெடுங்காலம் வளமாக வாழ்ந்த பூமி யுகமுடிவால் இருளிலும் வெள்ளத்திலும் மூழ்கியது. சில காலத்திற்குப் பிறகு தேவர்கள் மீண் டும் உலக உற்பத்தியைத் தொடங்க வேண்டும் என்று சிவனிடம் வேண்டினார்கள். அவரும் "அப்ப டியே ஆகட்டும்" என்றார்.

தேவர்கள் பிரம்மாவைக் கொண்டு தண்ணீரில் அமிழ்ந்திருந்த பூமியை வெளிக் கொணர்ந்தனர். அனைத்து ஜீவராசிகளும் முன்போலவே படைக்கப்பட்டன.

முன்பு சபிக்கப்பட்ட காமதேனு பல இடங்களில் திரிந்த பின்னர் இங்கு வந்து பூமியில் புதைந்து கிடந்த லிங்கத்தைப் பால் சொரிந்து வழிபட்டது.

பின்னர் இவ்விடத்தின் மகிமையை உணர்ந்த பிரம்மா, விஷ்ணு, இந்திரன் ஆகியோர் இந்தச் சிவலிங்கத்தைப் பூமியில் இருந்து எடுத்து இங்கு நிலைப்படுத்திப் புதியதாகக் கோயிலை அமைத்தனர். அதுவே இந்நாளில் "பசுபதிநாதர்" கோயிலென்று சிறப்புடன் திகழ்வதாகும்.

இந்த ஆலயத்தின் அருகிலேயே பாக்மதி எனும் புனித ஆறு ஓடுகின்றது. இதனைச் சிவகங்கை எனவும் அழைப்பர். நேப்பாள மகாத்மியம், ஹைமாவத காண்டம், சிவபுராணம், ஸ்காந்த புராணம் முதலிய நூல்கள் இத்தலத்தின் பெருமைகளை விளக்குகின்றன. இக்கோயில் பர்மியபாணியில் கட்டப் பட்டுள்ளது. நடுவில் உயரமான மேடைமீது மையக் கோயிலும் அதனைச் சுற்றிலும் அமைந்த பிராகாரங்களில் பரிவார ஆலயங்களும் உள்ளன.

வடக்கு வாயிலுக்கு நேராகப் பெரிய நந்தி அமைந்துள்ளது. இந்த நந்தி பொன்தகட்டால் பொதியப்பட்டுப் பொன்நந்தியாகக் காட்சியளிக் கின்றது. பிராகாரத்தில் வாசுகிநாதர், விஷ்ணு கிருதி முகபைரவர், உன்மத்த பைரவர் ஆகியோர் எழுந்தருளியுள்ள சந்நிதிகள் உள்ளன. துளசி குண்டமும் முத்தி மண்டபமும் பிராகாரத்தில் இடம் பெற்றுள்ளன.

வடக்கு வாயிலின் இருபுறமும் விநாயகரும் முருகரும் உள்ளனர். கருவறையில் உள்ள பெரிய சிவலிங்கத்திற்கு நான்கு திசைகளையும் நோக்கிய வாறு நான்கு முகங்கள் உள்ளன. இந்த நான்கு முகங்களுக்கும் நேராக நான்கு வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. லிங்கத்தின் மேலே உள்ள வழவழப்பான பகுதியில் முகம் அமைந்திரா விட்டாலும் அதனையும் ஒரு முகமாகப் பாவித்து வணங்குகின்றனர்.

இந்த நான்கு முகங்களில் தெற்கில் உள்ளது இராமேசுவரரையும், மேற்கில் உள்ளது துவாரகை நாதரையும், வடக்கில் உள்ளது கேதாநாதரையும் கிழக்கில் உள்ளது பூரி ஜெகன்நாதரையும் குறிக்கின்றன என்பர். இந்த ஆலயத்தில் தென் னிந்திய பிராமணர்கள் பூஜை செய்கின்றனர். வெள்ளியாலான சிவலிங்கமொன்றும் இங்கு வழி பாட்டில் உள்ளதென்று கூறுகின்றனர்.

கருவறையில் உள்ள பசுபதிநாதரின் ஒவ்வொரு முகமும் மார்பளவில் இரண்டு கைகள் கொண்டதாக அமைந்துள்ளன. இந்தக் கரங்களில் வலதுகரம் அபய முத்திரையுடன் ஜெபமாலையை யும் இடதுகரம் அமிர்தகலசத்தையும் கொண்டதாக உள்ளன.

பிற இடங்களைப் போலவே இங்கும் கிழக்கு முகம் தத்புருஷம் என்றும், மேற்கு முகம் சத்யோஜாதம் என்றும், தெற்கு முகம் அகோரம் என்றும், வடக்குமுகம் வாமதேவம் என்றும் உருவமற்றதாக உச்சியில் உள்ளது ஈசானம் என்றும்

அழைக்கப்படுகின்றன.

இக்கோயிலின் விமானம் முழுவதும் தங்கத்தகடுகளாலும் பக்கச்சுவர்கள் வெள்ளித் தகடுகளாலும் வேயப்பட்டுள்ளன. உட்புறம் சுவர்களில் சுற்றிலும் கண்ணாடிகளும், தரையில் சலவைக்கற்களும் பதிக்கப்பட்டுச் சிறப்புடன் விளங்குகின்றது.

ஆதிசங்கர பகவத்பாதர் நேப்பாளத்தில் உள்ள இந்த இடத்திற்கு வந்து அமர்சிங்பண்டா என்பவரை வாதில் வென்று இவ்விடத்தில் அத்வைத தத்துவத்தை நிலைநாட்டினார் என்பர். அவரே பசுபதிநாதர் கோயிலில் தென்னகத்துப் பிராமணர் களைக் கொண்டு பூசை செய்யும் முறையையும் உண்டாக்கினார் என்பர். அவருடைய திருஉருவம் அமைந்த ஒரு கோயில் இங்குள்ளது. இங்கு நான்கு முகங்களுக்கும் நான்கு வேதங்களில் வல்லவர்கள் பூசை செய்கின்றனர்.

இந்தக் கோயிலை நேப்பாள அரசர் தனது சொந்தப் பொறுப்பில் சிறப்புடன் நிர்வாகம் செய்து வருகின்றார்.

2. கருவூர் ஆநிலைப் பசுபதீச்சரம்

கொங்கு நாட்டுப் பேரூரில் சிவதரிசனம் பெற்ற காமதேனு அவராணைப்படியே மீண்டும் சிவபூசை செய்து படைப்புத்தொழிலை இயற்றும் ஆற்றல் பெற்ற இடம் கருவூராகும்.


பசுக்களில் சிறந்ததான காமதேனு இங்கு நிலையாகத் தங்கி பூசித்ததால் இக்கோயில் ஆநிலை எனப்பட்டது. அதன் படைப்புத் தொழிலுக்குக் கருவாக இருந்ததால் இவ்வூர் அன்று முதல் கருவூர் என அழைக்கப்பட்டது. இங்குள்ள இறைவன் காம தேனுவான பசுவால் வழிபடப்பட்டதால் "பசுபதீச் சுவரர்" என்று அழைக்கப்படுகின்றார். இவருக்கு ஆநிலையப்பர் என்பதும் பெயராகும்.

இந்த கொங்கு நாட்டுத்தலம் திருச்சி - ஈரோடு இருப்புப்பாதை வழியில் உள்ளது.தமிழ்நாட்டின் எப்பகுதியில் இருந்தும் இவ்வூரை அடையலாம்.

இங்கு கோயிலின் முன்புறமுள்ள தீபஸ தம்பத்தின் அடிப்பட்டைப் பகுதியில் பசு சிவலிங்கத் தின்மீது பால் சொரியும் காட்சிச் செதுக்கப் பட்டுள்ளது.

கருவறையில் உள்ள சிவலிங்கத்தின் மீது காமதேனுவின் காற்சுவடான குளம்படிச்சுவடுகள் உள்ளன, மாசி மாதத்தில் ஐந்து நாட்கள் சூரியனின் கதிர்கள் இறைவன் மீது விழுகின்றன.


திருஞானசம்பந்தப்பெருமானாலும் அருண கிரிநாதராலும் பாடப்பெற்ற இத்திருத்தலம் புகழ்ச் சோழர், கருவூர்தேவர் எறிபத்தர், சிவகாமியாண்டர் முதலான சைவப் பெருமக்கள் வாழ்ந்த இடமாகும்.



❑ கருவூர் ஆநிலைப் பசுபதீச்சரம்

திருஞானசம்பந்தப்பெருமான் இத்தலத்தைக் "கருவூர்ஆநிலை" என்று தேவாரத்துள் குறித்து ள்ளார்.

3. பந்தணை நல்லூர்ப் பசுபதீச்சரம்



வெண்மணல் புற்று வடிவில் அமைந்த பசுபதீச்சரர் மூலவர் - பந்தணைநல்லூர்

ஒரு சமயம் பார்வதிதேவிக்குப் பந்தாடுவதில் விருப்பம் உண்டாயிற்று. அவள் தமது தோழியரை கூட்டிக் கொண்டு இமயமலைச் சாரலில் பந்து விளையாடினாள். விளையாட்டில் ஈடுபட்டிருந்ததால் அவளுக்கு நேரம் போனதே தெரியவில்லை. அவளுடைய விளையாட்டிற்கு இடையூறு நேரிடும் என்பதால் சூரியன் அஸ்தமிக்காமல் நின்றான். இதனால் எங்கும் காலநிலை மாறியது.

இதனையறிந்த பரமேசுவரன் அங்கு வந்தார். விளையாட்டில் ஈடுபட்டிருந்ததால் அவர் வந்ததையும் தேவி கவனிக்கவில்லை, இதனால் கோபம் கொண்ட சிவபெருமான் அந்தப் பந்தைப் பற்றி வீசி எறிந்தார். அது பூவுலகில் வந்து வீழ்ந்தது. அவ்வாறு பந்து வந்து அணைந்தால் அந்த இடம் "பந்தணை நல்லூர்" என்றாயிற்று.

தன் விளையாட்டை நீக்கிய தேவி ஈசனைப் பணிந்தாள். அவர் கோபம் கொண்டு அவளைப் பசுவாகுமாறு கூறினார். அன்னை பராசக்தி பசு வடிவம் கொண்டு பூவுலகிற்கு வந்து பலதலங்களையும் வணங்கி பின்னர் மண்ணியாற்றங்கரையில் ஒரூரில் வந்து தங்கினாள். அவ்விடமே இன்று கோவிந்த புத்தூர் என வழங்குகின்றது. தங்கைக்குத் துணையாகத் திருமாலும் கோபாலனாய் இங்கு வந்து தங்கினார்.

பின்னர் அன்னை பராசக்தி பசுவடிவுடன் அருகில் இருந்த கண்ணுவ முனிவரின் ஆசிரமத்தினையடைந்தாள். (அதுவே முன்னாளில் அவளுடைய பந்து வீழ்ந்த பந்தணைநல்லூர் என்ற இடமாகும்.) அங்கிருந்த பசு மந்தையில் தானும் சேர்ந்து கொண்டாள். பின்னர் ஒரு நாள் அங்கிருந்த கொன்றை வனத்தில் சிவபெருமான் புற்றில் எழுந்தருளியிருக்கக் கண்டு தன் பாலால் அவருக்குத் திருமஞ்சனமாட்டினாள்.

அப்போது அங்கு வந்த கோவலனனான கண்ணன் அப்பசுவை விரட்ட ஓடிவந்தார். அதைக் கண்டு பசுவாகிய அன்னை நகர அவளுடைய பாதங்கள் சுவாமியின் திருமுடியில் பட்டன. அம்பிகை கொம்பால் அப்புற்றினைக் குத்தக் கொம்பின் வடுவும் பட்டன. இவ்வாறு கொம்புச் சுவடும் குளம்புச் சுவடும் தன் மீது பட்ட உடனே பெருமான் அங்கு அவர்களுக்குக் காட்சியளித்தார்.

உடனே பார்வதிதேவியின் பசுவடிவமும், திருமாலின் மேய்பவன் வடிவமும் நீங்கின. அவர்கள் தமது இயல்பான வடிவத்தைப் பெற்றனர். தேவியின் தவத்தை ஏற்ற பெருமான் அவளை மணந்து கல்யாணசுந்தரராக அனைவருக்கும் காட்சியளித்தார்.

அன்று முதல் தேவியாகிய பசுவால் வழிபடப்பட்டதால் இறைவன் பசுபதீச்சரர் என்றழைக்கப்படுகின்றார்.

மேற்சொன்ன தலவரலாற்றை விளக்கும் வகையில் தொடர்சிற்பங்கள் இக்கோயில் நடராசர் சந்நிதியின் திருச்சுற்றின் கீழ்ப்புறத்தில் அமைக்கப் பட்டுள்ளன. இதில் அம்பிகை தவம் செய்தல் அருகில் பசுக்கூட்டம், கண்ணுவமுனிவர். அம்பிகை பால்சொரிந்து சிவலிங்கத்தை வழிபடல். தேவி சாபநீக்கம் பெற்றுக் கொன்றை மரத்தடியில் இறைவனை வழிபடுதல் ஆகியன கலைநுணுக்கத் துடன் செதுக்கப்பட்டுள்ளன.

இப்போது, இங்கு கருவறையில் சிவபெருமான் குட்டையான புற்றுவடிவம் கொண்டச் சிவலிங்கமாகக் காட்சியளிக்கின்றார். அந்த லிங்கத்தைச் சுற்றிலும் கல்லினாலான ஆவுடையார் அமைக்கப் பட்டுள்ளது. மேற்பகுதியான பாணம் புற்றுமண் வடிவமாகவே உள்ளது. அம்பிகையின் பால் படிந்ததால் இந்த மணல்லிங்கம் வெண்மையாகக் காட்சியளிக்கின்றது. அதன் தலையில் பசுவின் குளம்படிச்சுவடு காணப்படுகின்றது. அதன் மீது குவளை அணிவித்து அபிஷேகம் செய்கின்றனர்.

இக்கோயிலில் உள்ள (மூன்றாம் குலோத்துங்கனின் முப்பத்தொன்பதாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்ட) கல்வெட்டு பிச்சை மடத்தைச் சேர்ந்த ஒருவர் பசுபதீச்சுவரருக்குத் திருமஞ்சன காலத்தில் அணிவிக்க, குவளை செய்ய, பொன் கொடுத்ததைக் கூறுகின்றது. சோழ மன்னர்கள் விஜயநகர மன்னர்கள் காலத்தில் பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டுகள் இத்தலத்து இறைவனை "பசுபதிதேவர்" என்று குறிக்கின்றன.

இது பாஸ்கர க்ஷேத்திரங்களில் ஒன்றாகும் ஆண்டு தோறும் ஆவணித்திங்களில் 19.20.21 ஆம் நாட்களில் சூரியனின் கதிர்கள் கருவறையிலுள்ள இறைவன் மீது படர்கின்றன.

இத்தலத்து இறைவனைத் திருநாவுக்கரசர், "எம்மையாளும் பசுபதியே" எனவும், திருஞான சம்பந்தப்பெருமான், "பந்தணை நல்லூர் நின்ற யெம் பசுபதியாரே" எனவும் இறுதியடிகளைக் கொண்ட பதிகங்களைப் பாடியுள்ளனர்.

❑ பந்தணை நல்லூர் கும்பகோணத்திலிருந்து திருப்பனந்தாள் செல்லும் வழியில் உள்ள தலமாகும். இந்நாளில் இது பந்தநல்லூர் என்று அழைக்கப்படுகின்றது.

பசுபதி திருவிருத்தம்

திருநாவுக்கரசர் அருளிச் செய்துள்ள பதிகங்களில் ஒன்று பசுபதி திருவிருத்தமாகும். சிவவழிபாட்டில் திளைத்துச் சிவபெருமானைப் பாடிப்பரவித் தொழுது நிற்கும் (பசுத்தன்மையான) அடியவர்களின் இயல்புகளையும், பதியாகிய சிவபெருமான் அவர்களைக் காக்கவேண்டும் என்ற வேண்டுகோளையும் கூறுவதாக அமைந்ததே பசுபதி திருவிருத்தமாகும்.

சிவனடியார்கள் விபூதியை மேனியில் முழுக்கப் பூசித் தரையில் புரண்டு, பெருமானைப் பாடிப்பரவுகின்றனர். பிறவியை வெறுத்துப் பெருமானின் பாதத்தில் தலைவைத்த உத்தமர்கள். உலகில் வேறொருவரைத் தஞ்சமடையாது சிவனின் திருவடிகளையே தஞ்சமாக உடையவர்கள். ஒரு துன்பமுமின்றிச் சிவன் திருவடிகளைச் சாமளவும் இறைஞ்சுபவர்கள். துன்பமாகிய கடலைக் கடக்க அவனுடைய திருவடிகளைத் தெப்பமாகக் கொண்டவர்கள். உலகியல் சுகங்கள் அத்தனையும் துறந்து அவனுடைய பாதத்தைத் தொழுபவர்கள் சித்தம் உருகிச் சிவனே எம் தலைவன் என்று சிந்தையுள்ளே பித்தம் பெறுகத் தன்னை மறந்தவர்கள்.

எம்மை உடைமைப் பொருளாகக் கொண்டு ஆளும் பதியாகிய சிவபெருமானே! இந்த அடியவர்களுடைய நிலையைக்கண்டு இரங்கி இவர்களுக்கு அருள்செய்க. இவர்களுக்குத் துன்பம் வராது காத்தருள்க. பிறவிக் கடலைக் கடக்கச் செய்து இன்னருள்புரிக என்று திருநாவுக்கரசர் இப்பதிகத்தில் வேண்டுகின்றார்.

அவர் பசுபதி திருவிருத்தத்தைத் திருப்புகலூரில் வீற்றிருந்தபோது பாடியதாகத் தேவாரத்தைப் பதிப்பித்தவர்கள் குறித்துள்ளனர். இப்பதிகத்தில் திருப்பந்தணைநல்லூர் அம்பிகையின் பெயரான காம்பலைக்கும் பணைத்தோளி, வேய்த்தோளி என்ற பெயர்கள் வருவதாலும் ஒவ்வொரு பாடலும் "பசுபதியே" என்று முடிவதாலும் இதனை அவர் பந்தணை நல்லூருக்கு எழுந்தருளியபோது அருளியிருப்பார் என்று கூறுவதே பொருத்தமாகும்.

4. கொண்டீச்சரமான பசுபதீச்சரம்

தஞ்சை மாவட்டம், நன்னிலத்திற்கு, கிழக்கே 2 கி.மீ. தொலைவில் தூத்துக்குடி என்னும் இடத்திற்கு அருகில் கொண்டீச்சரம் அமைந்துள்ளது. இதனை இந்நாளில் "திருக்கண்டீசுவரம்" என்று அழைக்கின்றனர்.

பார்வதி தேவிக்குக் கொண்டி என்பதும் பெயராகும். திருவாரூரில் தியாகேசப்பெருமானுடன் வீற்றிருக்கும் அம்பிகைக்குக் கொண்டி என்ற பெயர் வழங்குவது காண்க. அதுபோலவே காமதேனுவின் புதல்வியருள் ஒருத்தியும் கொண்டி என்று அழைக்கப்படுகின்றாள்.

கொண்டியாகிய பார்வதிதேவி பசுவடிவம் கொண்டு, இங்கிருந்த வில்வவனத்தில் சிவ வழிபாடு செய்த்தால் இக்கோயிலுக்குக் கொண்டீச்சரமென்றும், ஊருக்கு வில்வாரண்யம் என்றும் இறைவனுக்குப் பசுபதீச்சுவரர் எனவும் பெயர்கள் வழங்குவதாயிற்று.

பசுவடிவம் கொண்டதேவி புற்றிடம் கொண்ட பெருமானைக் காணும் ஆவலில் தனது கொம்பால் அந்தப் புற்றினைக் கிளற அவளுடைய கொம்பின் சுவடுகள் சிவலிங்கத்தில் பதிந்தன. அக்காயத்தினை ஆற்றத் தேவி தனது பாலைச் சொரிந்து சிவனை வழிபட்டாள். அக்காயத்தின் தழும்புகளை இன்றும் சிவலிங்கத்தின் திருமுடியில் காண்கிறோம்.

அம்பிகையின் பூசனையால் மகிழ்ந்த இறைவன் இத்தலத்தில் அவளை மணந்து அடியவர்களுக்குத் தமது திருமணக்கோலத்தைக் காட்டியருளினார் என்பர்.

பின்னாளில் காமதேனுவின் புதல்வியருள் ஒருத்தியான கொண்டி இங்கு சிவபூசை செய்தாள் அதனால் இத்தலம் கொண்டீச்சரம் எனப்பெயர் பெற்றதென்பர். அப்பர்பெருமான் இத்தலத்தைக் கொண்டீச்சரம் என்றே பாடியருள்கின்றார்.

5. ஆவூர்ப் பசுபதீச்சரம்

சோழநாட்டுத் திருத்தலமான ஆவூர், (கும்பகோணம் மன்னார்குடி சாலையிலுள்ள) வலங்கைமானை அடுத்துள்ள கோவந்தகுடிக்கு அருகில் உள்ளதாகும்.

வசிட்டரின் சாபத்தைப் பெற்ற, காமதேனு பூவுலகிற்கு வந்து பல தலங்களில் வணங்கியபின் இங்கு வந்து ஒரு அரசமரத்தின் கீழ் இருந்த புற்றில் எழுந்தருளியிருந்த சிவபெருமானைக் கண்டு வழிபட்டது. அதன் வழிபாட்டால் மகிழ்ந்த சிவபெருமான் அதற்குக் காட்சியளித்து அருள்புரிந்தார். தெய்வப்பசு பூசித்தால் இவ்வூருக்கு ஆவூர் (ஆ-பசு+ஊர்) என்றும் இறைவனுக்குப் பசுபதீசுவரர் என்றும் பெயர்கள் வழங்குவதாயிற்று. பெருமான் அரசவனத்தில் எழுந்தருளியிருப்பதால் தலமரம் அரசு ஆகும். இங்கு காமதேனு, உண்டாக்கிய தீர்த்தம் தேனுதீர்த்தம் என்று அழைக்கப்படுகின்றது.

இவ்வூர்க் கல்வெட்டுகள், நித்தவிநோத வளநாட்டு, ஆவூர்க் கூற்றத்து. ஆவூர் பசுபதீசுவரமுடையார் என்று இறைவனைக் குறிக்கின்றன. திருஞானசம்பந்தப்பெருமானும், இத்தலத்தை ஆவூர்ப்பசுபதீச்சரம் என்றே பாடியருள்கின்றார். இக்கோயில் கோட்செங்கட் சோழனால் கட்டப்பட்ட மாடக்கோயிலாகும். கொடிக்கம்பத்தில் சிவலிங்கத்தின் மீது பசு பால் சொரிந்து வழிபடும் காட்சி அமைக்கப்பட்டுள்ளது. அம்பிகையின் பெயர் பங்கய மங்கை என்பதாகும்.

நடுநாட்டுப் பசுபதீச்சரம்

திருவண்ணாமலை விழுப்புரம் சாலையில் ஆவூர் என்ற ஒரு திருத்தலம் உள்ளது. இது சோழர்காலத்தில் பெருஞ்சிறப்புடன் விளங்கியதை இவ்வூர்க் கல்வெட்டுகள் குறிக்கின்றன. இதில் எழுந்தருளியுள்ள இறைவன் பசுபதீசுவரர் என்று அழைக்கப்படுகின்றார்.

தென்குடித்திட்டைப் பசுபதீச்சரம்

இந்நாளில் திட்டை என அழைக்கப்படும் "தென்குடித் திட்டை" திருமுறைத்தலங்களில் ஒன்றாகும். இங்கு எழுந்தருளியுள்ள பெருமானைக் காமதேனு வழிபட்டதால் இறைவர் பசுபதீசுவரர், தேனுபுரீசுவரர் என்று அழைக்கப்படுகின்றார்.

பசுபதி கோயில் - பசுபதீசுவரர்

திருமுறைத்தலங்களில் ஒன்றான திருப்புள்ளமங்கை இந்நாளில் "பசுபதிகோயில்" என்று அழைக்கப்படுகின்றது. புள்ளிருக்குவேளூர் என்ற தலம் இந்நாளில் வைத்தீசுவரன் கோயில் என்று பெயர் மாற்றம் பெற்று அழைக்கப்படுவதுபோல இத்தலத்திற்கும் பெயர் மாறியுள்ளது. இத்தலத்து இறைவர் பசுபதீசுவரர் என்றும் அம்பிகை அல்லியங்கோதை என்றும் அழைக்கப்படுகின்றனர். இத்தலம் இப்பகுதியில் வழங்கியவரும் தொன்மைக்கதைகளின் அடிப்படையில் இப்பெயர் பெற்றதென்று கூறுகின்றனர்.

பட்டீச்சரங்கள்

பட்டி என்பது மாட்டுமந்தைக்கும், பசுக்களைக் கட்டிவைக்கும் கொட்டிலுக்கும் பெயராகும். ஜவ்வாது மலைத்தொடரில் அனேக ஊர்களுக்குப் பட்டி என்ற பெயர்கள் இருப்பதைக் காண்கிறோம். பெரிய அளவில் பட்டிகள் அமைந்த இடங்களைச் சுற்றி அமைந்த ஊர்கள் காலப் போக்கில் பட்டிகள் என்று பெயர் பெற்றன என்பர், .ஊர்ப்பெயர் ஆய்வாளர்கள், இவ்வகையில், சிறுகூடல்பட்டி, தேவனாம்பட்டி போன்ற ஆயிரக்கணக்கான ஊர்கள் பட்டி எனும் பின் ஒட்டுடன் தோன்றியுள்ளன.

பசுக்கள் வழிபட்டதால் சிவத்தலங்கள் பசுபதீச்சரங்கள் என்ற அழைக்கப்பட்டது போலவே பசுவின் மற்றொரு பெயரான பட்டி என்றபெயராலும் பட்டீச்சரங்கள் என்ற பெயரைப் பெற்றன. தஞ்சை மாவட்டத்தில் பழையாறையை ஒட்டி இரண்டு பட்டீச்சரங்கள் அமைந்துள்ளன. இவற்றில் ஒன்று இராப்பட்டீச்சரம் என்று அழைக்கப்படுகிறது. கோயம்புத்தூரின் ஒரு பகுதியாகிய பேரூரில் காமதேனு பூசித்த பட்டீச்சரம் உள்ளது. இதன் சிறப்பை விளக்கவும் தஞ்சை மாவட்டத்துப் பட்டீச்சரத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டவும் ஆன் என்ற முன் ஒட்டோடு சேர்த்து இவ்வூர் ஆன்பட்டீச்சரம் என்று அழைக்கப்படுகிறது. மேலும் தென்னகம் எங்கும் பல பட்டீச்சரங்கள் உள்ளன. அவற்றுள் சிலவற்றை இங்கு காணலாம்.

பழையாறைப் பட்டீச்சரம்

பட்டீச்சரம் காவிரிக்கு தென்கரையில் உள்ள 127 தேவாரப்பாடல் பெற்ற தலங்களில் 23வது திருத்தலமாக விளங்குவதாகும்.

இது தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்தை அடுத்த தாராசுரத்தில் இருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ளது. முன்னாளில் இங்குள்ள கோயில் பட்டீச்சரம் என்றும் இதனைச் சூழ்ந்த ஊர் மழபாடி என்றும் அழைக்கப்பட்டு வந்தது. அது பழையாறையின் உள்ளடங்கிய பகுதியாகவும் விளங்கி வந்துள்ளது. இதனை, கல்வெட்டுகள் முடிகொண்ட சோழபுரம் என்று அழைக்கின்றன.

ஒரு சமயம் பராசக்தியானவள் தனித்து, தவம் செய்ய விரும்பி இங்கு வந்து ஓர் வனம் அமைத்து அதில் தனது தவத்தைத் தொடங்கினாள். அப்போது தேவர்கள் மரம், செடி, கொடிகளின் வடிவந்தாங்கி அவளுக்கு உதவியாக இருந்தனர். தேவியின் பூசைக்கு வேண்டிய பொருட்களை அளிக்கக் காமதேனு தன் புதல்வியாகிய பட்டியை அங்கு அனுப்பி வைத்தது.

நீண்ட நாள் தவம் மேற்கொண்ட பார்வதிக்குச் சிவபெருமான் செம்பொற்சடையுடன் காட்சி கொடுத்து அருள் புரிந்தார். பின்னர் அந்த இடத்தின் மேன்மையை உணர்ந்த "பட்டி" எனும் பசு அந்தத் தலத்தில் வெண்மணலால் சிவலிங்கமமைத்து வழிபாடு செய்தது. பின்னர் அவ்விடமே பெருங்கோயிலானது. பட்டியால் வழிபடப்பட்டதால் இக்கோயில் பட்டீச்சரம் என்றானது. தேனு(பசு)வால் வழிபடப்பட்டதால் இறைவன் தேனுபுரீசர் என்றும் அழைக்கப்படுகின்றார். இவ்விடத்தில் இராமர், தர்மசர்மா, சித்திரசேனன், கிளி முதலானோர் வழிபட்டுபேறு பெற்றனர்.

திருஞானசம்பந்தருக்கு இறைவன் முத்துப் பந்தல் அளித்த இடம் இதுவேயாகும் பட்டீச்சர மான்மியம் என்ற வடமொழிப் புராணமொன்றும், அதன் மொழிபெயர்ப்பான உரைநடை நூல் ஒன்றும், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் பாடப்பெற்ற பட்டீச்சரப்புராணமும் இத்தலத்தின் சிறப்பினைப் போற்றுகின்றன.

இந்நாளில் பட்டீச்சரத்தில் "துர்க்கை" மிகச் சிறப்புடன் வழிபடப்படுகின்றாள்.

கொங்கு கமழ் ஆன்பட்டீச்சரம்

கொங்கு நாட்டின் தலைநகரான கோவையின் ஒரு பகுதியாகத் திகழ்வது பேரூர். அங்குள்ள கோயில் ஆன்பட்டீச்சரம் என்றும், இறைவனின் பெயர் பட்டீச்சுவரர் என்றும் வழங்குகின்றன. இவ்வூரைப்பற்றிய தலவரலாறு பின்வருமாறு:-

ஒரு சமயம் பிரம்மன் படைப்புத்தொழிலைச் செய்ய யோகத்தில் வீற்றிருக்கும் போது முன்வினை வசத்தால் தூங்கிவிட்டான். தேவர்கள் பலரும் கூடி அவனை எழுப்பியும் அவன் எழுந்திருக்கவில்லை அதனால் திருமால் காமதேனுவை நோக்கி, நீ சிவபெருமானிடம் வரம்பெற்றுப் படைப்புத் தொழிலைத் தொடங்குக" என்றர்.

அதன்படியே காமதேனு, கயிலைமலைச் சாரலுக்குச் சென்று, சிவபெருமானை நோக்கிக் கடும் தவம் புரிந்தது. அப்போது அங்கு வந்த நாரதர் அதனை நோக்கி, 'உமக்கு விரைவில் சிவதரிசனம் கிடைக்கவேண்டுமாயின் கொங்குநாட்டுப் பேரூருக்குச் சென்று அங்குள்ள காஞ்சியாற்றில் நீராடி புற்றிடம்கொண்டப் பெருமானை வழிபடுவதே நல்லது. ஆதலின் அப்பணியை விரைந்து செய்வாய்", என்றார்.

அவர் சொற்படியே காமதேனு தனது பசுக் கூட்டங்களுடன் கொங்கு நாட்டுக்கு வந்து முதலில் வெள்ளியங்கிரி மலையை வணங்கியது. பின்னர் சிவன்மலை, முதலான முப்பது இடங்களில் சிவலிங்கங்களை அமைத்து வழிபட்டது. இறுதியாக இங்கு வந்து காஞ்சி நதியில் நீராடிச் சிவயோகத்தில் இருந்தது. அப்போது சூரியன் மறைந்து வரும் மாலை நேரமாக இருந்ததால் காமதேனுவின் மகளான பட்டி இன்பமுடன் விளையாடிக் கொண்டிருந்தது. அது அங்குமிங்கும் துள்ளியோடி விளையாடுகையில் அங்கிருந்த புற்றில் கால் வைத்தது. அங்கு அதன் கால் சிக்கிக் கொண்டதால் மற்றோர். காலை வைத்து விடுபட முயல அக்காலும் சிக்கிக் கொண்டது. பின்னர் அது தன் கொம்பால் அப்புற்றைக் கிளறி அதிலிருந்து விடுபட்டு வந்தது. பின்னர் அங்கு நிகழ்ந்ததையெல்லாம் தனது தாயிடம் கூறியது.

மறுநாள் சூரியன் உதயமானவுடன் அங்கு சென்ற காமதேனு புற்றடியில் பெருமான் எழுந்தருளியிருக்கக் கண்டது. அவருடைய திருமேனியில் பட்டியின் கொம்பு, குளம்பு ஆகியவற்றின் சுவடுகள் இருக்கக்கண்டு மிகவும் வருந்தியது "சிவபெருமானே என் மகளால் நான் சிவ அபராதம் செய்து விட்டேன்" என்று கண்ணீர் விட்டு அழுதது.

அப்போது சிவபெருமான் அங்கு தோன்றி," அன்ப, வருந்தாதே முன்பு நாம் தேவியின் முலைத் தழும்பையும் வளைத்தழும்பையும் ஏற்றதுபோலவே இந்தத்தழும்புகளையும் அன்பால் ஏற்றோம். இனி இவ்வூர் உன்பெயரால் பட்டிபுரி, காமதேனுபுரம் என வழங்கும். நீ எஞ்சிய தவத்தைக் கருவூருக்குச் சென்று செய்து வருவாய். அங்கு உனக்குப் படைக்கும் ஆற்றலைத் தருவோம் என்றார்.

அன்று முதல் பட்டி வழிபட்டதால் இக் கோயில் பட்டீச்சரம்,* என்றும், இறைவர் பெயர் பட்டீச்சரர் என்றும் வழங்குகின்றன. மூலவரின் திரு மேனியில் பசுவின் காற்குளம்புகளின் சுவடுகளையும் கொம்பு குத்திய சுவடுகளையும் இன்றும் காணலாம்.

கொங்கு மண்டலத்தின் தலைமையிடம் இதுவேயாகும். இங்கு காமதேனு சிவபெருமானைப் பால் சொரிந்து வழிபட்ட காட்சியே கொங்கு நாட்டிலுள்ள அனைத்து ஆலயங்களிலுள்ள தீபத் தம்பங்களில் பசுபதி சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது.


★ ★ ★

தில்லையம்பதியில் ஜைமினி முனிவருடன் வியாக்ரபாதரும், பதஞ்சலி முனிவரும் சேர்ந்து சிவபெருமானின் திருநடனத்தைத் தரிசனம் செய்தது போலவே பேரூர் அரசவனத்தில் பசுக்களை மேய்க்கும் பணியைப் புனிதமாக ஏற்றுக் கொண்ட பட்டிமுனியும், பசுவின் முகம் கொண்ட

* கும்பகோணத்தை அடுத்து ஒரு பட்டீச்சரம் இருப்பதால் அதிலிருந்து இதனை பிரித்துக் காட்ட ஆன் என்ற சிறப்புச்சொல் சேர்த்து இதனை ஆன்பட்டீச்சரம் என வழங்குகின்றனர்.

கோமுனியும் தவம்செய்து, அரசம்பலத்தில் சிவபெருமானின் திருநடனத்தைத் தரிசனம் செய்தனர். பசுவின் பெயரால் அமைந்த இவ்விரு முனிவரும் காலவர் எனும் முனிவரோடு சிவபெருமானை வழிபட்டுப் பேறுபெற்றனர் என்று பேரூர்ப்புராணம் கூறுகின்றது..


பேரூர்ப்புராணம், பிரம்மா பட்டிமுனியாக வும், திருமால் கோமுனியாகவும் கோலந்தாங்கி வழிபட்டனர் என்றும், இப்போதும் அவர்கள் அங்கிருந்து கொண்டு எந்நேரமும் அரசம்பல வாணரைத் தரிசித்துக் கொண்டிருக்கின்றனர் என்றும் கூறுகின்றது.



❑ கோமுனியும் - பட்டிமுனியும் காண நடமாடிய அரசம்பலவாணர் - பேரூர், கோவை.

❑ பட்டி என்ற சொல் நாயையும் குறிப்பதாகும். ஆதிநாளில் மாடுகள் அடைக்கும் பட்டிகளை இரவில் புலி, ஓநாய், நரி முதலிய விலங்குகளின் தாக்குதலில் இருந்த காக்க நாய்களைக் காவலாக வைத்திருந்தனர். மாட்டு மந்தைகளைக் காக்கும் நாய்களையுடைய வீரன் பட்டிவீரன் என்று அழைக்கப்பட்டான். பசுக்களைப் பகைவீரர்கள் ஓட்டிச் சென்றபோது அவைகளை மீட்கச் சென்ற வீரன் அப்பணியில் இறந்தால் அவனுக்கு நடுகல் எடுத்துள்ளனர். அதில் அவனுடைய நாயின் உருவமும் இடம் பெற்றுள்ளதைக் காண்கிறோம். அவனுக்கு பட்டிவீரன், நிறைமீட்டான் முதலிய பெயர்கள் வழங்கியதைக் கல்வெட்டுக்களால் அறிய முடிகின்றது. மலையாளத்தில் நாய்க்கு பட்டி என்ற பெயர் நடைமுறையில் வழங்குகின்றது.

பட்டி சுற்றுதல்



கொங்கு நாட்டில் (கோவை, சேலம் மாவட்டங்களில்) உள்ள அனைத்து சிவாலயங்களுக்கு முன்புறமும் பட்டி மேடை என்ற பெயரில் ஒரு மேடை உள்ளதைக் காண்கிறோம். அதன் மீது அரச மரமும் அதன் நிழலில் நாகலிங்கங்களும் விநாயகரும் இருக்கக் காணலாம். சிவராத்திரி, திருவாதிரை, மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் ஆகிய நாட்களில் மாடுகளை இந்தப் பட்டிமேடையைச் சுற்றி வலம்வர வைப்பர். இது பட்டிசுற்றுதல் என்றழைக்கப்படும்.

முன்பு கொங்கு மண்டலத்தில் சிவபெருமான் அரசமரமாக நின்றதையும் பார்வதிதேவியும் அவளுடைய தோழிகளான தெய்வப் பெண்களும் பசு வடிவம் கொண்டு அந்த அரசமரத்தைச் சுற்றி வந்து சிவவழிபாடு செய்ததையும் இந்த நிகழ்ச்சி குறிக்கிறதென்பர். இம்மண்டலத்தில் பட்டிகளாகிய பசுக்களுக்கும் அரசமர வழிபாட்டிற்கும் இடையே நெருங்கிய தொடர்பு நெடுங்காலமாக இருந்து வருகிறது.

கோவைப் பேரூர் இறைவன் பட்டீசர் என வழங்குவதும் இத்தலத்தில் அரச மரத்தடியில் இறைவன் நடனமாடியதையும் அதையொட்டி இங்குள்ள நடராஜசபை அரசம்பலம் என்றழைக்கப்படுவதும் இங்கு எண்ணத்தக்கதாகும்.

தேவி பசுவடிவாக வழி பட்ட திருவாவடுதுறையிலும் படர் அரசு எனும் அரசமரமே தல மரமாக விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும். எனவே திருவாவடுதுறைக்கு அரசவனம் என்பதும் பெயராயிற்று. இவற்றை நோக்க அரசமரம் சிவபெருமானாகவும் அவற்றை சுற்றிவந்து வழிபடும் பசுக்களை பார்வதிதேவியராகவும் பாவித்து வழிபடும் வழக்கம் சோழமண்டலத்திலும் நெடுங்காலமாக இருந்து வருவதை உணர முடிகிறது.

பிறமாவட்டங்களில் அரசமரவழிபாடு சிறுதெய்வவழிபாடாகிவிட்டது. கோவை மாவட்டத்தில் மட்டுமே சிவவழிபாட்டில் பட்டி மேடைகளும் பட்டி சுற்றும் வழக்கமும் இன்றும் இருந்து வருகின்றன.

கோவை, ஈரோடு மாவட்டங்களில் சிவாலயங்களில் முன்புறம் மட்டுமே அமைக்கப்பட்டு வந்த பட்டி மேடைகள் காலப்போக்கில் மாரியம்மன் விநாயகர் முதலிய அனைத்துக் கோயில்களில் முன்பும் அமைக்கப்பட்டன. இப்படி கோயில்களின் முன்புறம் பட்டிமேடையை அமைப்பது என்பது இம்மண்டலத்தில் கோயிலின் ஒரு அங்கமாகவே ஆகிவிட்டது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஆதீண்டு குற்றி

பசுக்கள் தன் உடலில் தோன்றும் தினவை உராய்ந்து தீர்த்துக்கொள்ள பசுக்கள் மேயும் மந்தைவெளியில் ஒரு நெடுங்கல்லை நட்டுவைப்பர். இது "ஆதீண்டு குற்றி அல்லது ஆதீண்டும் கல்" எனப்பட்டது. பசுவின் வசதிக்காக இவ்வாறு கல் நடுவது முப்பத்தியிரண்டு சிவதருமங்களில் ஒன்றாகும். இதில் சிவபெருமான் நீங்காது உறைவார் என்று நம்பப்படுகிறது. ❑

மாதேசுவரர்

(மாடேச்சுவரர்)

கொங்கு மாவட்டங்களில் மாதேசுவர் எனும் பெயரில் பல இடங்களில் சிவலிங்கம் அமைக்கப் பட்டிருப்பதைக் காண்கிறோம். கொங்கு நாட்டில் பசுக்கள் சிவஅம்சமாகவே போற்றப்பட்டன. இவைக ளுக்கு நோய்கள் ஏற்பட்டால் அவற்றைச் சிவபெரு மானே வந்து தீர்த்து வைப்பான் என்று நம்பினர். அப்படி வரும் சிவனே "மாடேசுவரன்" எனப் பட்டான். அதுவே மாதேசுவரன் என வழங்குகின்றது என்பர்.

இம்மண்டலத்திலுள்ள ஏராளமான ஊர்களில் மாதேசுவரனுக்கு சிறு ஆலயங்கள் அமைந்துள்ளன. இவற்றுள் பசுபதியாகிய சிவபெருமான் சிவலிங்க வடிவில் எழுந்தருளியுள்ளார்.

இத்தகைய ஆலயங்கள் பெரும்பாலும் மாடுகள் மேயும் மந்தைவெளிகளையொட்டியே அமைந்துள்ளன. மாடுகளுக்கு நோய்வந்தால் இந்தச் சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்து அந்த நீரை மாடுகளுக்கு வாயில் ஊற்றி உடல் மீதும் தெளிப்பர்.

இங்கு மாதேசுவரன் மலை என்ற பெயரில் ஒரு மலையும் அதன் மீது மாதேசுவரர் கோயிலும் அமைந்துள்ளன. இது தனிச் சிறப்புமிக்கதாகும்.

பசுக்கள் இறந்து போனால் அவற்றைப் புதை த்து அதன் மீது சிவலிங்கம் அல்லது பசு உருவத்தை அமைக்கும் வழக்கமும் இப்பகுதியில் உள்ளது. இவ்வாறு அமைந்த இடங்களும் காலப்போக்கில் மாதேசுவரர் கோயில்களாக வளர்ந்துள்ளன என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

கோவைமாவட்டம் அன்னூரில் பெரிய மாதே சுவரர் ஆலயம் அமைந்துள்ளதைக் காண்கிறோம். இத்தகைய மாதேசுவரன் கோயிலில் சிவராத்திரி திருவாதிரை முதலியன கொண்டாடப்படுகின்றன.

(சிறு தெய்வக் கோயில்களில் குதிரைகளின் சுடுமண் சிற்பங்களை உருவாரமாகச் செய்து வைப்பது போலவே) மாதேசுவரர் ஆலயங்களில் மாடுகளின் உருவங்களை உருவாரமாகச் செய்து வைக்கின்றனர். தங்கள் மாடு கன்றுகளுக்கு நோய் வந்தால் அவை தீர வேண்டும் என்று வேண்டிக் கொண்டு அதற்குக் காணிக்கையாக இத்தகைய வடிவங்களைச் செய்து இங்கு வைக்கின்றனர்.


கோமளேஸ்வரர் - கோமளவல்லி

"கோமளம்" என்ற சொல்லுக்கு இளமை, அழகு, கறவைப் பசு, என்ற பல பொருள்கள் உள்ளன. இதனால் பசு வழிபட்ட சிவபெருமானுக்குக் கோமளீசுவரர் என்பது பெயராயிற்று. பசுக்களுடன் தானும் ஒரு பசுவாகி சிவபெருமானை பூசித்ததால் அம்பிகைக்கு கோமளை, கோமளவல்லி, கோமாளாம்மாள் என்பன பெயர்களாயின. சென்னையின் மையப்பகுதியாகிய சிந்தாதிரிப்பேட்டையை ஒட்டி கோமளீசுவரன் பேட்டை என்ற இடம் உள்ளது. இங்கு ஒரு பசு பால் சொரிந்து புற்றிலிருந்து வெளிப்படுத்திய சிவலிங்கத்திற்குப் பெரிய ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பெருமானின் திருமுடியில் பசுவின் குளம்புச் சுவடு உள்ளது. இவருக்கு கோமளீசுவரர் என்பது பெயராகும். அம்பிகை கோமளவல்லி என்று அழைக்கப்படுகிறாள். இவர்கள் பெயரால் இப்பகுதி கோமளீச்சுவரன் பேட்டை எனறு அழைக்கப்படுகிறது.

பசுக்களும் அரசமரமும்

பசுக்கள் சிவபெருமானை வழிபட்ட தலங்களில் எல்லாம் அரசமரமே தலமரமாக விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும். எடுத்துக்காட்டாக பசுக்கள் பூசித்த திருவாவடுதுறையில் "படர்அரசு" தலமரமாக விளங்குகிறது. இதனால் அதற்கு அரசவனம் என்பது பெயராயிற்று. இதுபோலவே ஆவூரிலும் அரச மரமே தலமரமாகும். யாவுக்கும் மேலாக காமதேனு 32 சிவலிங்கங்களை அமைத்து வழிபட்ட கொங்கு மண்டலத்தில் உள்ள ஒவ்வொரு சிவாலயத்திலும் அரசமரங்கள் சிறப்புடன் கொண்டாடப்படுவதும், அதன் தலைமையிடமான பேரூர், "அரசம்பலம்" என்றழைக்கப்படுவதும் இங்கு எண்ணத்தக்கதாகும். இதன் மூலம் அரசமரம் சிவபெருமானாகவும் பக்க்கள் பார்வதிதேவியாகவும் போற்றி வணங்கப்படும் நிலையை உய்த்துணர முடிகிறது.

ஆவுடையார்



●ஆன்ம நாதர்-ஆவுடையார் கோயில்

"ஆ" என்பது உலக உயிர்களின் தொகுதியான ஆன்மாக்களையும், பாலைச் சுரந்தளிக்கும் பசுக்களையும் குறிக்கும் பொதுச் சொல்லாகும். ஆன்மாக்களைத் தன் உடைமைப் பொருளாகக் கொண்டிருப்பதால் சிவபெருமானுக்கு ஆவுடையான் என்பது பெயராயிற்று. இதனை ஆவுடையார் எனவும் அழைப்பர்.

ஆன்மாக்கள் இறைவனைச் சூழ்ந்து பாசத்தால் கட்டுண்டு இருப்பதனைக் குறிக்கும் வகையில் சிவலிங்கத்தைச் சூழ்ந்துள்ள வட்டமான பீடத்தை ஆவுடையார் என அழைக்கின்றோம்.

சிவலிங்கத்தின் வட்டமான பீடம் ஆவுடையார் என்றும், அதன் மீது நிமிர்ந்து நீண்டுள்ள பகுதியைப் பாணம் (அல்லது சிவபாகம்) எனவும் ஆவுடையாரில் இருந்து பக்கவாட்டில் நீண்டு நீர் வெளியேற்றும் தாரையை நாளம் அல்லது மனோன்மணி எனவும் அழைக்கின்றோம்.

சில இடங்களில் சிவலிங்கத்திற்குப் பதிலாக ஆன்மாக்களை உணர்த்தும் இப்பீடத்தினை மட்டும் வைத்து வணங்குகின்றோம். இதனை ஆவுடையப்பர் என வழங்குவர். இதன்மீது அருவ வடிவில் சிவபெருமான் விளங்குகின்றார். இவர் சகல ஆன்மாக்களிலும் அந்தர்யாமியாக விளங்குவது போல் இங்கும் அந்தர்யாமியாக விளங்குவதால் இவர் ஆன்மநாதர் என்று அழைக்கப்படுகின்றார்.

பல தலங்களில் இத்தகைய ஆவுடையார் வழிபாடு இருந்தாலும் மாணிக்கவாசகசுவாமிகள் திருவருள் பெற்றத் திருப்பெருந்துறையில் சிறப்பாக இருக்கின்றது. இறைவன் பெயரால் இத்தலமே "ஆவுடையார் கோயில்" என வழங்குகின்றது. இறைவன் ஆன்மநாத சுவாமி என்றழைக்கப்படுகின்றார்.

ஆவுடையப்பனுக்குத் தேவியாக இருப்பதால் பராசக்தி ஆவுடைநாயகி என்றழைக்கப்படுகின்றாள். காஞ்சீபுரத்தையடுத்த கடம்பர் கோயில் எனும் தலத்தில் அம்பிகை முன்னாளில் பீடவடிவில் எழுந்தருளியிருந்தாள். அதனால் இவளை ஆவுடைநாயகி என வழங்கினர். பின்னாளில் முழுவுருவத்தை நிலைப்படுத்தியபோதும் ஆவுடைய நாயகி என்றே வழங்குகின்றனர். இப்போது இதனை வடமொழிப்படுத்தி தேனுமத்தியாம்பாள் என அழைக்கின்றனர். திருப்பரங்குன்றத்திலுள்ள அம்பிகையின் பெயரும் ஆவுடைநாயகி என்பதேயாகும்.

காஞ்சிபுரத்தில் காமாட்சி அம்பிகைக்கு முன்னுள்ள ஸ்ரீசக்கரம் அமைந்த பீடம் ஆவுடையார் போலவே இருப்பது எண்ணத்தக்கதாகும்.

பசுபதி என்பதன் தமிழ்ச்சொல்லே ஆவுடையார் என்பதாகும். (ஆ= பசு, ஆன்மா, உடையான், உடையைப் பொருளாகக் கொண்ட பதி, ஆதலின் ஆவுடையான் என்பதே பசுபதியாகும்.

முன்பே சொன்னதுபோல நடுவில் சிவன் வீற்றிருக்க அவரைச் சுற்றிலும் பசுக்களாகிய உயிர்கள் வட்டமாக நிற்பதைக் குறிக்கும் அனேக சிற்பங்கள் கிடைத்துள்ளன. எடுத்துக்காட்டாக மொகஞ்சொதராவில் கிடைத்துள்ள முத்திரையில் இறைவன் நடுவில் யோக நிலையில் வீற்றிருக்க சுற்றிலும் விலங்குகள் நிற்கும் புடைப்புருவங்கள் கிடைத்துள்ளன. இம்முத்திரை வடிவத்தைப் பசுபதி என்று ஆய்வாளர்கள் குறிக்கின்றனர். இதன் விளக்கத்தை 192-ஆம் பக்கம் காண்க).

பரமனை மணந்த பாவையர்

நாஞ்சில் நாட்டு ஆவுடைநாயகி



நாகர்கோயிலின் ஒரு பகுதியாக விளங்குவது வடசேரியாகும். இப்பகுதியில் தழுவிய மகாதேவர் கோயில் என்ற பழமையான சிவாலயம் ஒன்றுள்ளது. அது இந்நாளில் தடிமார் கோயிலென வழங்குகின்றது. இக்கோயிலில் உள்ள பார்வதிதேவிக்கு "ஆவுடைநாயகி" என்பது பெயராகும்.

ஒரு சமயம் பார்வதிதேவியார் இத்தலத்தில் ஆவுடையம்மை என்ற பெயரில் தோன்றி வளர்ந்து வந்தாள். அவள் தினமும் கோயிலுக்குச் சென்று சிவபெருமானை வணங்குவது வழக்கம். பூப்பு எய்திய பிறகு கோயிலுக்கு முன்னைப்போல் அவளால் தொடர்ந்து வர இயலவில்லை. அதனால் மிகவும் வருந்தினாள். சிவபெருமானிடம் தன்னை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மன்றாடினாள். அவளுடைய வேண்டுகோளை ஏற்ற சிவபெருமான் ஒரு சமயம் அவள் இங்கு வந்து வணங்கி நின்ற போது யாவரும் காணச் சிவலிங்கத்திலிருந்து தோன்றி அவரைத் தழுவிக்கொண்டு அதே சிவலிங்கத்தில் மறைந்தார். அன்று முதல் இவர் தழுவிய மகாதேவர் என்றழைக்கப்படுகின்றார். அதுவே மருவி இந்நாளில் தடிமார் கோயிலென வழங்குகின்றது.

ஆவுடைநாயகி

அம்பிகைக்குப் பசு வடிவம் கொள்வதில் பெருவிருப்பம் அதிகம். அவள் அனேக தலங்களில் பசுவடிவம் கொண்டு சிவபெருமானைப் பூசித்தாள். அவள் பசுவடிவம் கொண்டபோது இந்திராணி, மகாலட்சுமி, சரஸ்வதி, முதலிய தேவமாதர்களும் அரம்பையர்களும் பசுக்களாக வடிவம் தாங்கி அவளுடைய சிவபூசைக்கு உதவியாக இருந்தனர். இப்படித் தெய்வப் பசுக்களுக்கு இடையே இருந்ததால் அம்பிகைக்கு ஆவிடைநாயகி என்பதும் பெயராயிற்று. இதனை நினைவு கூறும் வகையில் பசுக்களுடன் அம்பிகையை சேர்த்து வழிபடும் வழக்கம் இருந்து வருகின்றது. மேலும் அவளுக்குத் தெய்வலோகப் பசுவான காமதேனுவும் உதவியாக இருந்தது. இதனை நினைவு கூறும் வகையில் அம்பிகைக்குக் காமதேனு வாகனத்தை அமைத்து விழாவில் உலாவரச் செய்கின்றனர்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சியை அடுத்த களந்தை என்னும் தலத்தில் பசுவுடன் கூடியவளாக அம்பிகை மூலத்தானத்தில் எழுந்தருளியுள்ளாள். இத்தகைய காட்சியை வேறெங்கும் காணமுடியவில்லை. இதில் அம்பிகை நான்கு கரங்களுடன் திகழ்கின்றாள். மேற்கரங்களில் பாசம், அங்குசம் தாங்கி கீழ் வலது கரத்தில் அபயமுத்திரை ஏந்தி, இடது கரத்தைப் பசுவின் தலையின் மீது வைத்து வருடும் பாவனையில் உள்ளாள். அம்பிகை பசுவை அணைத்தவாறு "கோமதி"யாகக் காட்சியளிக்கின்றாள். 'ஆ'வை உடைமையாகக் கொண்டிருப்பதால் அம்பிகைக்கு ஆவுடையாள் என்பது பெயராயிற்று. மூலத்தானத்தில் பசுவுடன் கூடி அம்பிகை காட்சியளிப்பது வேறெந்தத் தலத்திலும் இல்லாத அமைப்பாகும். (இதே போன்ற திருவுருவம் ஒன்று ஆந்திர மாநிலத்திலுள்ள சுரட்டப்பள்ளி ஆலயத்தின் பிராகாரத்தில் உள்ளது என்கின்றனர்.)



களந்தை அம்பிகை

தேனீசுவரர்



பால்வண்ணநாதர் (மருந்தீஸ்வரர்) - திருவான்மியூர்.

தேனு என்ற சொல்பசுவைக் குறிக்கும் சொல் லாகும். *மேலும் விரும்பியவற்றை வேண்டியவாறு தருவதால் பாற்கடலில் தோன்றிய தெய்வப் பசுவுக்குக் காமதேனு என்பது பெயராயிற்று.

இந்தத் தெய்வப் பசு அனேக தலங்களில் சிவபூசை செய்து மகிழ்ந்துள்ளது. இதன் மானஸ புத்திரிகளான பட்டி, விமலி, நந்தினி, சபளி, கொண்டி என்ற கன்றுகளும் சிவபூசை செய்து பேறுபெற்றன.

காமதேனு பூசித்தலங்களில் முதன்மை பெற்றது வெள்ளியங்கிரியாகும். அதன்பிறகு அது கொங்கு நாட்டில் முப்பத்திரண்டு சிவாலயங்களை நிறுவிப் பூசித்த பின் கருவூரில் பூசித்து படைக்கும் ஆற்றலைப் பெற்றதென்று புராணங்கள் கூறுகின்றன.

திருஆவினன்குடி என்கின்ற பழனி, பெண்ணாகடம் என்ற தலங்களும் காமதேனு பூசித்த தலங்களாகும். காமதேனுவின் பாலைத்திரட்டி வான்மீகி முனிவர் வழிபட்ட லிங்கமே திருவான்மியூர் மருந்தீசுவரர் என்கின்ற பால்வண்ண நாதராவார். இந்த லிங்கத்தைக் காமதேனு வழிபட்டுக் கொண்டிருக்கும்போது அதன் கன்றான நந்தினி துள்ளிக் குதித்து விளையாடிக் கொண்டிருந்தது. அது தவறுதலாக லிங்கத்தின் மீதும் குதித்து விட்டது அதன் கால் சுவடு பெருமானின் திருமுடியில் பட்டது. மற்றோர் கால் வழுக்கியதால் சிவலிங்கத் தின் பாணத்தில் நீண்ட பள்ளம் விழுந்தது. காமதேனு இதையறிந்து மனம் பதைத்தது. கண்ணீர் விட்டு அழுதது. பெருமான் அதற்கும் கன்றுக்கும் முன்னே தோன்றினார். காமதேனுவே வருந்தாதே பார்வதிதேவியின் வளைத்தழும்பையும் முலைத் தழும்பையும் பெற்றதுபோலவே + இதையும் அணிந்து மகிழ்ந்தோம். இவ்வடிவில் இவை நீங்காது இருந்து உனது பக்தியைப் பறைசாற்றி நிற்கும் என்று கூறி வேண்டிய வரங்களைத் தந்து அருள் பாலித்தார். அதனால் திருவான்மியூர்ப் பெருமா னுக்குக் காமதேனீசர் என்பதும் பெயராயிற்று. முன் னாளில் பெருந்திருவிழாவில் ஒருநாள் காமதேனு வுக்கு அருளும் ஐதீகம் நடைபெற்று வந்தது.

இதுபோலவே ஒரு சமயம் நாகப்பட்டினத்தை அடுத்த சிக்கலில் காமதேனு வசித்தபோது அதன் பால் பெரிய குளமாகத் தேங்கியது. அந்த குளத்திலிருந்து திரண்ட வெண்ணையைக்கூட்டி வசிட்ட முனிவர் சிவலிங்கம் செய்து வழிபட்டார். பூசை செய்து முடிந்த பின்னர் அவர் லிங்கத்தை நீரில்விட எடுத்தார். அந்த லிங்கம் அங்கேயே சிக்கிக் கொண்டது. அந்த இடமே இப்போது சிக்கல் என்ற தலமாகப் போற்றப்படுகின்றது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் வெண்ணைய்பிரான் என்றும் அம்பிகை வேல்நெடுங்கண்ணி என்றும் அழைக்கப்படுகின்றனர்.

பின்னும் ஒரு சமயம் காமதேனு வான் வழியாகப் பறந்து சென்று கொண்டிருந்தது. அதன் மடியில் அதிகமிருந்த பால் பூமியில் விழுந்து அங்காங்கே பாலேடுகளாகத் தங்கின. கபிலன் என்ற முனிவர் அதைக்கண்டு அவற்றைத் திரட்டி

+ * காமம் - விருப்பம் காமதேனு - விரும்பியதை தரும் பசு. இது போன்ற வரலாற்றை பேரூர் பட்டீச்சர வரலாற்றிலும் காணலாம்.

அதனுடன் பலமூலிகைகளையும் சேர்த்து ஒரு லிங்கமாக்கி மிகுந்த பக்தியுடன் வழிபட்டாள். அந்த லிங்கத்திலிருந்து பெருமான் உமாதேவியாருடன் வெளிப்பட்டு அவருக்கு அருள்பாலித்தார். காம தேனு கழித்த பாலால் நனையப்பெற்றதால் அத்தலம் கழிப்பாலை என்று பெயர் பெற்றது.

பசுக்களுக்குரிய முதன்மைப் பெயரான தேனு என்ற இப்பெயரால் பலதலங்கள் தென்னகமெங்கும் உள்ளன. இவை தேன்பாக்கம், தேனூர், என்ற பெயர் களைப் பெற்றுள்ளன. இவற்றில் ஒன்று பாடல் பெற்ற தலமான அச்சிறுபாக்கத்திற்கு அருகில் அமைந்த தேன்பாக்கம் ஆகும். இங்கு மரகதவல்லி உடனாய பசுபதீசுவரர் ஆலயம் உள்ளது. ஒரு காலத்தில் மிகப்பெருங்கோயிலாக விளங்கிய இக்கோயில் இன்று எளியநிலையில் காட்சியளிக் கின்றது. இதுபோன்றே அச்சிறுபாக்கம் மலையின் மீதிலும் பசுபதீசுவரருக்கான ஆலயம் அமைக்கப் பட்டிருந்தது. இது இந்நாளில் முருகன் கோயிலாக மாற்றப்பட்டுள்ளது.

கோவையின் தெற்கில் வெள்ளலூர் என்னும் தலம் உள்ளது. இது கொங்குநாட்டு முப்பத்திரண்டு தலங்களில் ஒன்றாகும். இங்குள்ள சிவபெருமான் காமதேனுவால் நிலைப்படுத்தி வழிபடப்பட்டதால் தேனீசுவரர் என்று அழைக்கப்படுகின்றார்.

சென்னையை அடுத்ததாக மாடம்பாக்கம் என்ற திருத்தலம் உள்ளது. இதுவும் காமதேனு வழிபட்ட தலமாகும். இறைவன் தேனுபுரீசுவரர் என்றழைக்கப் படுகின்றார். சோழர்காலத்தில் சிறப்புடன் போற்றப் பட்ட இக்கோயில் அண்மையில் திருப்பணி செய்யப் பட்டுச் சிறப்புடன் விளங்குகிறது.

கங்கைக் கரையும் காராம் பசுவும்

தென்னகத்து ஆலயங்களில் அந்த ஆலயத்திற்கு அளிக்கப்பெற்ற பல்வேறு நன்கொடைகள் கல்வெட்டுக்களாகப் பொறித்து வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இவற்றில் அதனை அளித்த அரசர்களின் மெய்க்கீர்த்திகளும் கொடையைப் பற்றிய தெளிவான செய்திகளும் அந்த தர்மத்தைக் காப்பாற்றுவோர் அடையும் புண்ணிய பயன்களையும் அந்த தர்மத்தை அழிப்போர் அடையும் பாவங்களையும் பட்டியலிட்டுக் குறித்துள்ளனர். அப்படி அடையும் பாவங்களில் ஒன்று கங்கைக்கரையில் காராம் பசுவைக் கொல்லும் பாவம் ஆகும். இது கடுமையான நரகத்தில் நெடுங்காலம் உழலவைக்கும் என நம்புகின்றனர். ஆதலால் சிவதருமங்களை அழிக்கும் பாவம் கொடுமையானதென்றும் அது கங்கைக்கரையில் காமதேனுவைக் கொன்ற




பாவத்தைவிடக் கொடியதாகும் என்றும் குறிக்கப் பட்டது. இதன் மூலம் கங்கைக்கரையும், காமதேனு வும் சைவசமயத்தில் மிகவும் புனிதமானவைகளாகப் போற்றப்பட்டதைக் அறிகிறோம்.

திக்பாலகர்களின் பசுக்கள்

சிவபெருமானின் அருளால் ஒருசமயம் நான்கு பசுக்கள் தோன்றின. அவற்றை அவர் நான்கு திசைபாலகர்களுக்கு அளித்தார். இந்திரன் சுஷீதை என்ற பசுவையும், யமன் கபிலை என்ற பசுவையும், வருணன் ரோஹிணி என்ற பசுவையும், குபேரன் காமதேனு என்ற பசுவையும் அடைந்தனர்.

(மஹாபாரதம் - அனுசாசனபர்வம்)



கோமுகம்

பசுவின் முகம் தெய்வத்தன்மை பொருந்திய தாகக் கூறப்படுகின்றது. அதன் கண்களில் சூரிய சந் திரர்களும் முன் உச்சியில் சிவபெருமானும் இருப் பதாக நம்புகின்றனர். ஆதலின் இறைவனின் திரு வருள் பசுவின் முகம் மூலமாகவே பெறப்படுவ தாகக் கருதினர். எனவே சிவலிங்கத்தின் மேனியில் பட்டு வெளியேறும் நீரான அபிஷேகப் பிரசாதத் தைப் பெறும் வாயிலைக் "கோமுகம்" என அழைக் கின்றனர். அதுபோலவே ஆலயங்களில் சிவனுக்கு அபிஷேகம் செய்த நீர் வெளியேறும் வழியும் கோமுகம் என்றே வழங்கப்படுகின்றது. பெயருக் கேற்ப இந்த நீர்வழியைப் பசுவின் முகம் போல அமைத்தனர் (பின்னாளில் இதுயாளி முகம் போல வும் அமைக்கப்பட்டது)

சிவன் தன் சடாபாரத்தில் தாங்கி வெளிவிட்ட கங்கை முதல் அனைத்து நவகோடி புண்ணிய தீர்த் தங்களும் பசுவின் வாயில் இருந்து வெளியேறும் நீரில் இருப்பதாக நம்பப்படுகின்றது. எனவே புனித நீர் தோன்றிப் பெருகுமிடத்தில் பசுவின் முகத்தை அமைத்து அதன் வாய்வழியாக அந்தநீர் வெளிவர வகை செய்துள்ளனர். எடுத்துக்காட்டாகத் திருக்கே தாரத்தில் கௌரி அம்மையார் வெந்நீர் மயமான குளமாக விளங்குகின்றாள். இக்குளத்திலிருந்து வெளிவரும் நீர் பசுவின் வாயினின்று வெளியேறு வதுபோல அமைக்கப்பட்டுள்ளதைக் கூறலாம். இதுபோன்றே கங்கை முகத்துவாரம் காவிரி ஆற்றுத் தொடக்கம், அழகர் மலையிலுள்ள சிலம்பாற்றுத் தொடக்கம் ஆகியவற்றிலும் பசுவின் முகங்கள் அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

தொண்டை நாட்டில் திருவூறல் எனும் தேவா ரத்தலம் உள்ளது. இத்தலத்தில் ஊற்று நீர் ஒரு பசுவின் முகத்திலுள்ள வாய் வழியாக வெளிவந்து இறைவன் கோயிலைச் சுற்றிக் கொண்டு மீண்டும் இன்னோரு பசுவின்வாயிலிருந்து வெளியேறி குசத் தலை ஆற்றிற்குச் செல்வதைக் காணலாம். இதே போன்றே இராமகிரி என்ற தலத்திலும் நீர்த்தாரைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பெரிய வேள்விச்சாலைகளில் வேள்வியின் முடிவில் யாககுண்டங்களில் மந்திரம்ஓதி கொண்டே நெய்யைத் தொடர்ந்து விடும் வசுத்தாரா எனும் நிகழ்ச்சி நடைபெறும் இதற்கு உதவும் ஹோம கரண்டி (இதனை சுருவம் என்பர்) யின் நெய் வெளி யேறும் முகத்தைப் பசுவின் முகமாக அமைக் கின்றனர்.

பல சிவபூஜா துரந்தரர்கள் தமது அபிஷேக பாத்திரத்தைப் பசுவடிவமாகவே அமைத்துள்ளனர். இதில் பசுவின் வாய்வழியாக நீர் வெளியேறும் வகையில் துளை அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக வெளியேறும் நீரால் சிவலிங்கத்திற்கு அபி ஷேகம் செய்கின்றனர். இத்தகைய அபிஷேக பாத் திரங்கள் காசி நகரில் ஏராளமாக விற்கப்படுகின்றன.

வடநாட்டில் சிவபூஜைக்குப் பயன்படுத்தும் கெண்டியைப் பசுவின் வடிவமாகவும் நீர் அப்பசு வின் வாய்வழியாக வெளியேறும் முறையிலும் அமைக் கின்றனர்.

சிவலிங்கத்திலுள்ள ஆவுடையார் எனப்படும் வட்டமான பகுதியில் இருந்து நீண்டு நீர்வெளியேற்ற வசதியாக அமைந்த நாளமும் கோமுகம் என்று அழைக்கப்படுகின்றது. மேலும் இந்நூலில் பல இடங் களில் கோமுகம் பற்றிய செய்திகளை ஆங்காங்கு காணலாம்.

108 கோமுகங்கள்

இமயமலைச்சாரலில் முத்திநாத் என்கின்ற வைணவத்தலம் உள்ளது. இங்கு ஆலயத்தைச் சுற்றிலும் பசுவின் முகத்தைப் போன்று செய்யப்பட்ட 108 கோமுகங்கள் உள்ளன. இதிலிருந்து நீர் விழுந்த வண்ணமாக உள்ளது.

பசுக்கள் தந்த ஆறுகள்

கோமுகி



ஆறுகள் வானுலகத்திலிருந்து பூமிக்கு வந்து அதனைச் செழிக்க வைத்ததைப் புராணங்கள் பல வாறுகுறிக்கின்றன. விண்ணுலகத்திலிருந்துகங்கையைப் பகீரதன் பூமிக்குக் கொண்டுவந்தான் என்று சிவபுராணம் கூறுகின்றது. தென்னாட்டிற்கு வளம் சேர்க்கும் காவிரியையும், தாமிரபரணியையும் அகத்தியர் கொண்டு வந்தாரென்று தென்னகத்துத் தலபுராணங்கள் கூறுகின்றன. இதுபோன்றே பூமி செழிக்கப் பசுக்கள் கொண்டு வந்த ஆறுகள் பல உள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்கது கோவை மாவட்டத்தில் ஓடும் காஞ்சியாறு. நொய்யாலாறு என்று பலவாறு அழைக்கப்படும் ஆன்பொருனை யாகும். மற்றொன்று தென்னாற்காடு மாவட்டத்தில் ஓடும் கோமுகி ஆகும்.

இவற்றில் தென்னாட்டுக் கோமுகியாறு புராணச் சிறப்புடையதாகும். இது வடாற்காடு மாவட்டத்தில் உள்ள சேர்வராயன் மலைத் தொடரிலுள்ள வெள்ளிமலை என்னும் சிவன் மலையில் உற்பத்தியாகிப் பல தலங்கள் வழியே ஓடித் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள "நல்லூர்" எனும் தலத்தில் மணிமுத்தாற்றுடன் கலந்து விடுகின்றது. இதன் தென் கரையில் "வரஞ்சரம்"எனும் திருத்தலம் உள்ளது. இங்கு வீற்றிருக்கும் பெருமானுக்குப் "பசுபதீச்சுவரர்" என்பது பெயராகும். ஒரு சமயம் இத்தலத்தில் சிவனை வழிபட காமதேனுவும், தெய்வலோகப் பசுக்களும் ஒன்று கூடின. அவற்றிற்கு அங்கு பூசைக்கு வேண்டிய நீர் கிடைக்க வில்லை. அதனால் சிவன் மலைக்குச் சென்று அங்கு தவம் செய்தன. பின்னர் தனது குளம்பாலும் கொம்பாலும் கிளறி ஒருவழியை ஏற்படுத்தின. அவ்வழியில் ஆகாய கங்கையும் காமதேனுவின் பாலும் பெருகி ஆறாக ஓடிவந்தன. அவ்வாறு பசுவின் காரணமாகப் பெருகி வந்ததால் இந்த ஆறு "கோமுகி" எனப்பட்டது. அதன் கரையில் பசுக்களால் அமைத்து வழிபடப் பட்டதால் இறைவன் 'பசுபதீசர்" என்ற பெயருடன் எழுந்தருளியுள்ளார்.

பசுக்களுக்கு வரத்தைச் சரம் (கிடைக்கும்படி) செய்ததால் இவ்வூர் வரஞ்சரம் என்று பெயர் பெற்றது. பெரிய சிவாலயமாக விளங்கும் வரஞ்சரம் பசுபதீசர் ஆலயம் மேலும் பலபுராணச் சிறப்புகளையும், கல்வெட்டுக்களையும் கொண்டதாக விளங்குகின்றது.

....

மணிபல்லவம் என்ற தீவில் "கோமுகி" எனும் பெயரில் பெரிய குளம் இருந்தது என்பதை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அதனுள் ஆபுத்திரனால் போடப்பட்ட அமுதசுரபி மணிமேகலைக்குக் கிடைத்தது என்று ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை குறிப்பிடுகிறது.

வடநாட்டில் இமயமலைச் சாரலில் பசுக்கள் உண்டாக்கிய கோமதி என்ற ஆறும் ஓடுகின்றது. இந்தியா முழுவதும் கோமுகம், கோமுகி, தேனு தீர்த்தம் என்ற பெயர்களில் பல பொய்கைகளும் சுனைகளும் இருக்கக் காண்கிறோம்.

திரு ஆமாத்தூர்

பசுக்கள் மிகவும் சாதுவாக இருப்பதால் விளையாட்டாக அவற்றைப் பலரும் துன்புறுத்தினர். இதனால் வருத்தமுற்ற பசுக்கள் தம்மைப் பகைவரிடமிருந்து காப்பாற்றிக் கொள்ள திருஆமாத்தூர் எனும் தலத்தில், ஈசனை வழிபட்டு கொம்பையும் வலிய குளம்புகளையும் பெற்றன. அதனால் இத்தலம் வடமொழியில் பசுக்களின் தாய்வீடு எனும் பொருளில் "கோமாத்ருபுரம்" என்றழைக்கப்படுகின்றது. இத்தலம் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள விழுப்புரத்திற்கு அருகில் அமைந்துள்ளது.

❑ பிரதோஷகாலத்தில் சிவாலயங்களில் உள்ள கோமுகத்தைப் பார்வதிதேவியாராகவே எண்ணி வணங்கவேண்டும் என்று பூஜா பத்ததிநூல்கள் கூறுகின்றன.

பஞ்ச பசுக்களும் பசுபதியும்

பசுபதியான சிவபெருமானுடைய வழிபாட்டில் ஐந்து பசுக்கள் சிறப்பிடம் பெறுகின்றன. இந்த ஐந்து (பஞ்ச) பசுக்களின் பெயர்களையும் சிறப்புக்களையும் புராணங்களும், மகாபாரதமும் விரிவாகக் கூறுகின்றன. இங்குக் கபிலையின் ஐந்து பசுக்கள், அவற்றின் சிறப்பு, காமதேனுவின் கன்றுகளான ஐந்து பசுக்கள் அவை வழிபட்ட தலங்கள் ஆகியவற்றைக் காணலாம். இந்த ஐந்து பசுக்களை வடமொழியில் பஞ்ச பசுக்கள் என்று குறிப்பர்.

புராணங்கள் காட்டும் பஞ்ச பசுக்கள்

சிவவழிபாட்டில் கருநீல நிறங்கொண்ட பசுக்களை வழிபடுவது சிறப்பாகப் போற்றப்படுகிறது இவை கபிலை என்று அழைக்கப்படுகின்றன. இதனால் பசு வழிபாட்டிற்கே கபில பூசை என்பதும் பெயராயிற்று.

இந்தக் கபிலை என்ற பசு பாற்கடலிலிருந்து தோன்றியதாகும். சிவபக்தி நிறைந்தது. நந்தியம் பெருமானைத் தனது கணவனாக நினைந்து வாழ்வது இதன் மானசீக புத்திரிகளான கன்றுகள் ஐந்தாகும்.

சிவபெருமானுக்கு ஐந்து முகங்கள் இருப்பது போலவே அவரை வழிபடும் இந்த பசுக்களின் எண்ணிக்கையும் ஐந்தாகும். இவை முறையே நந்தை, சுபத்திரை, சுரபி, சுசீலா, சுமனை என்று அழைக்கப்படுகின்றன. இவற்றிற்குரிய அதிதேவதை, நிறம், அதன் பாலால் அபிஷேகம் செய்து வழிபடுவதால் கிடைக்கும் பலன் ஆகியன புராணங்களில் குறிக்கப்பட்டுள்ளன. இவை ஐந்தும் சிவபெருமானுக்குரிய பஞ்ச கவ்யத்தைத் தருகின்றன.

நந்தை என்ற பசு பொன் நீலமான கபில நிறம் கொண்டதாகும். இதற்கு அதிதேவதை வாயுதேவன் இது தரும் தயிர் சிறப்புடையதாகும்.

சுபத்திரை என்னும் பசு கருமை நிறங் கொண்டதாகும். விஷ்ணுவை அதிதேவதையாகக் கொண்ட இதன் நெய் சிறப்புமிக்கதாகும்.

சுரபி என்னும் பசு வெண்மை நிறம் கொண்டதாகும். அக்னியை அதிதேவதையாகக் கொண்ட இதன் கோமயம் சிறப்புடையதாகும்.

சிவந்த தாமிர நிறமாகவுள்ள சுமனை என்ற பசு வருணனை அதிதேவதையாகக் கொண்டதாகும். இதன் கோஜலம் சிறப்புடையதாகும்

சுசீலை என்ற பசு, புகை வண்ணம் கொண்டதாகவும் பொன்னிறம் கொண்டதாகவும் போற்றப்படுகிறது. சந்திரனை அதிதேவதையாகக் கொண்ட இதன் பால் சிறப்புடையதாகும்.

மேலும் ஒரு நூல் பஞ்சமுக லிங்கத்தின் கிழக்கிலுள்ள தத்புருஷ முகத்தைச் சந்திரன் (சுசீலையின்) பாலாலும், தெற்கிலுள்ள அகோரமுகத்தை, அக்னி (சுரபியின்) கோமயத்தாலும், மேற்கிலுள்ள சத்யோ ஜதமுகத்தைத் திருமால் (சுபத்திரையின்) நெய்யாலும், வடக்கிலுள்ள வாமதேவ முகத்தை வருணன் சுமனையின் கோஜலத்தாலும் உச்சியி லுள்ள ஈசானமுகத்தை வாயுதேவன் (நந்தையின்) தயிராலும் அபிஷேகம் செய்து பூசிக்கின்றனர் என்று குறிக்கின்றது.

பஞ்ச பசுக்கள் வழிபட்ட பசுபதீசுவரர்

காமதேனு என்ற தெய்வப் பசுவுக்கு மானச புத்திரிகளாகத் தோன்றியவை ஐந்து கன்றுகளாகும். இவை பட்டி, விமலி, சயனி, நந்தினி, கொண்டி என்று அழைக்கப்படுகின்றன. இவை ஐந்தையும் பஞ்ச பசுக்கள் என்று கூறி வழிபடுவர். சிவபூசையின் ஒரு அங்கமாகப் பஞ்சபசுக்களை வழிபடும் வழக்கமும் உள்ளது.

இந்த ஐந்து கன்றுகளும் சிவபக்தி நிரம்பியவை. இதில் பட்டி எனும் பசு கும்பகோணத்திற்கு அருகிலுள்ள பட்டீச்சரத்தில் பார்வதியுடன் சேர்ந்து சிவபூசை செய்து சிவனருள் பெற்றது. இதனால் சிவபெருமானுக்குப் பட்டீசர் என்பது பெயராயிற்று. இது பழையாறை என்ற பழைய நகருடன் இணைந்திருந்ததால் பழையாறைப் பட்டீச்சரம் என சைவ உலகிலும் வரலாற்றிலும் அழைக்கப்படுகின்றது.

பழையாறையிலுள்ள வடதளியில் விமலை என்ற பசுபூசித்துப் பேறுபெற்றது. இங்குள்ள இறைவர் தர்மபுரீசுவரர் என்றும் அம்பிகை விமலை நாயகி என்றும் அழைக்கப்படுகின்றனர். விமலையாகிய பசுவுக்கு அருள் செய்ததால் இங்கு வீற்றிருக்கும் பார்வதி விமலை என்று அழைக்கப்படுகிறாள். இக்கோயில் வள்ளலார் கோயில் என்று அழைக்கப்படுகின்றது.

பழையாறையின் மேற்கில் அமைந்துள்ளதால் மேற்றளி என்று பெயர் பெற்ற கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமானுக்குக்கைலாசநாதர் என்றும் அம்பிகைக்குச் சபா:நாயகி என்றும் பெயர் வழங்குகின்றன.

சபளிக்கு அருள் செய்ததால் இங்குள்ள இறைவிக்குச் சபளி நாயகி எனப் பெயர்கள் வழங்கி அதுவே சபாநாயகி ஆயிற்று என்பர். நந்தினி வழிபட்ட தலம் முழையூர் ஆகும். இங்குள்ள இறைவர் பரசுநாதேசுவரர் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

கொண்டி என்ற பசுக்கன்று வழிபட்ட தலம் கொண்டீச்சரமாகும். இது இந்நாளில் திருக்கண்டீசுவரம் என்று வழங்குகின்றது. (170ம் பக்கம் பார்க்க)

கபிலேசுவரர்

கபிலா என்பதும் பசுக்களுக்கு ஒரு பெயராகும். நீலம் கலந்த கருமை படர்ந்து மின்னும் நிறம் கொண்ட பசுவே கபிலா எனப்படும். இதனைக் காராம்பசு எனவும் அழைப்பர். இதன்மடி பெருத்ததாகவும் நிறைய பாலைப் பொழிவதாகவும் இருக்கும். இத்தகைய கபிலநிறப் பசுவின் பாலே சிவபூசைக்கு உரியதாகும். (இப்போது இத்தகைய பசுக்கள் கிடைக்காததால் எல்லா நிறப் பசுக்களின்பாலையும் பயன்படுத்துகின்றோம்.)

சிவபூஜையின் ஓர்அங்கமாகக் கபிலபூசை எனப்படும் பசு பூசையும்இடம் பெறுகின்றது. கபிலையால் பூசிக்கப்படுவதால் இறைவன் கபிலேசுவரர் என்று அழைக்கப்படுகின்றார். திருப்பதி மலையடிவாரத்தில் கபிலேசுவரர் ஆலயமும் கபில தீர்த்தமும் அமைந்துள்ளதைக் காணலாம். பசுக்களை வளர்த்த முனிவர்கள் பலர் கபிலமுனி என்று பெயர் பெற்றிருந்ததைக் காண்கிறோம்.

ஆனைந்து (பஞ்சகவ்யம்)

சிவபெருமானுக்குரிய அபிஷேகப் பொருள்களில் முதன்மையானது "ஆனைந்து" என்று அழைக்கப்படும் பஞ்சகவ்யமாகும். இது பசுவின் பால், நெய், தயிர், கோஜலம், கோமயம் (சாணம்) ஆகிய ஐந்தின் கலவையாகும். இவற்றைக் கொண்டு சிவபெருமானை அபிஷேகிப்பதால் செல்வம் பெருகும் என்று பூஜாபத்ததி நூல்கள் கூறுகின்றன.

திருமுறைகளில் நூற்றுக்கணக்கான இடங்களில் சிவபெருமான் "ஆனைந்து ஆடி மகிழும்" காட்சி பாடப்பெற்றிருப்பதைக் காணலாம்.

சிவாலயங்களில் நடைபெறும் கும்பாபிஷேகம், திருவிழாத் தொடக்கம் முதலான அனேக சமயங்களில் ஆனைந்தை உரிய மந்திரத்தால் தனித்தனியே பூசித்து, பின்னர் ஒன்றாகக் கூட்டி மந்திரித்து அதனைக் கொண்டு சிவலிங்கத்திற்கும், உலாமூர்த்திகளுக்கும் அபிஷேகம் செய்கின்றனர். சிவமூர்த்திக்கு அபிஷேகம் செய்த பஞ்சகவ்யத்தை அருந்துவதால் நாட்பட்ட நோய்கள் நீங்கும். ஆரோக்கியம் வளரும். செல்வம் பெருகும் என்று ஆன்றோர்கள் கூறுகின்றனர்.

திருவண்ணாமலையிலுள்ள அண்ணாமலையார் ஆலயத்தில் பொறிக்கப் பட்டுள்ள ஒரு கல்வெட்டு அண்ணாமலையாருக்குத் தினமும் ஆனைந்தால் திருமுழுக்காட்டுவதற்கு அளிக்கப்பெற்ற நிவந்தத்தைக் கூறுகின்றது. இதன்படி திரு அண்ணாமலையில் அண்ணாமலையார் பூசைக்குத் தினமும் ஆனைந்தாகிய பஞ்சகவ்யம் அளிக்கப் பெற்றதைஅறிகின்றோம்.

TIRUVANNAMALAI



✪ எப்போதும் அபிஷேகம் செய்வதால் ஈரமாகவும், சூரியவெப்பமும் காற்றோட்டமும் இல்லாததாகவும் இருக்கும் கருவறைகளில் நுண்கிருமிகள் வளர ஏதுவாகும். இதைத் தடுக்கவே இப்பஞ்சகவ்வியம் பயன் படுத்தப்பட்டதென்று ஆய்வாளர் கூறுவர் (பஞ்ச கவ்வியம் சிறந்த கிருமி நாசினியாகும்).

✪ திருக்கோயில்களை பசுஞ்சாணம் கொண்டு மெழுகுதல் சிறந்த சிவப்பணியாக கருதப்பட்டது. அப்பரடிகள் பல இடங்களில் அலகிட்டு மெழுகுதலை குறித்துள்ளதைக் காணலாம்.

✪ "எனக்கு உயிர் துணையாய் நின்ற சிவபெருமானே" என்று கூறி அவருடைய பூசைக்கு ஆநலம் எனப்படும் பஞ்சகவ்யத்தைத் தருபவர்கள் அருள் வேந்தரவார்கள் - திருஞானசம்பந்தர்.



ஸ்ரீ சுந்தரேசுவரர் சௌந்தராம்பிகை-கோவூர்

சௌந்தராம்பிகை உடனாய சுந்தரேசுவரர் கோவூர்

கோபதீசுவரர்

கோ என்பது அரசன், பசு, தலைவன் என்ற பல பொருட்களைச் தரும் ஒரேழுத்துச் சொல்லாகும். இதனால் பசுக்கள் சிவபெருமானை வழிபட்ட தலங்கள் கோ என்ற முதலெழுத்துடன் சேர்த்து அழைக்கப்படுகின்றன. 'கோ" ஆகிய பசுக்களின் நடுவில் உறைவதால் இறைவன் கோபதி என்று அழைக்கப்பட்டான். உமாதேவியார் "கோ" வின் வடிவம் கொண்டு சிவபெருமானை வழிபட்டதால் அவள் கோமதி என்று அழைக்கப்பட்டாள். இந்தக் "கோ" என்ற பெயர் அடிப்படையில் அமைந்த சிவத்தலங்களை இப்பகுதியில் காணலாம்.

கோவூர்

சென்னையின் தென்பகுதியில், குன்றத்தூரை யடுத்துள்ள கோவூரில் பெரிய சிவாலயம் உள்ளது. இங்கு அம்பிகை பசுவடிவம் கொண்டு சிவபெருமானை வழிபட்டாள் என்றும், அதனால் மகிழ்ந்த சிவபெருமான் அவளுக்கு அழகிய வடிவுடன் தன் திருமேனியைக் காட்டி காட்சியளித்தார் என்றும் கூறப்படுகின்றது. இதனால் பெருமானுக்கு அழகர் (சுந்தரேசுவரர்) என்றும் திருமேனீசுவரர் என்றும் பெயராயிற்று. "கோ" வழிபட்டதால் இவ்வூர் கோவூர் எனப்பட்டது. அழகனுக்கேற்ற அழகியாக விளங்குதலின் அம்பிகை அழகாம்பிகை (சௌந்தராம்பிகை) என்று அழைக்கப்படுகின்றாள்.

திருஆவடுதுறை கோமுத்தீச்சரம்

மயிலாடுதுறை - கும்பகோணம் சாலையிலுள்ள திருவாலங்காட்டிலிருந்து கிழக்கே 2கி.மீ தொலைவில் அமைந்துள்ள திருவாவடுதுறை சமயவரலாற்றில் தனிச்சிறப்பிடம் பெற்ற தலமாகும். திருஞானசம்பந்தருக்கு இறைவன் பொற்கிழி அளித்த பதி. இறைவனின் சாபத்தால் பசு உருவம் கொண்ட அம்பிகை பல தலங்களிலும் வழிபட்டு இங்கு வந்து வழிபட்டாள். சிவபெருமான் அவளுடைய பசு உருவைக்கழித்து அழகிய முன்னைய வடிவை அளித்து ஆரத்தழுவிக்கொண்டார். அம்பிகையின் "கோ வடிவம்" கழிந்த இடமாதலின் இதற்குக் கோகழி என்பது பெயராயிற்று. மாணிக்கவாசகப்பெருமான் இத்தலத்து இறைவனை "கோகழி ஆண்ட குருமணி வாழ்க" என்று பாடுகின்றார். அம்பிகை இங்கு வந்தபோது அனேக தேவர்கள் பசுவடிவம் கொண்டு அவளுடன் சிவபெருமானை வழிபட்டனர். அவர்களுக்குப் பெருமான் காட்சியளித்து முத்தி நல்கினார். அதனால் இத்தலம் கோமுத்தி என்றும் பெயர் பெயற்றது. இங்கு அம்பிகை பசு படிவம் கொண்டு சிவலிங்கத்திற்குப் பாலாட்டும் சிற்பம் வழிபாட்டில் உள்ளது. பெருமான் அம்பிகையை அணைத்து அருள்செய்த திருக்கோலம் "அணைத்தெழுந்த பிரான்" என்ற பெயரால் உலாத்திருமேனியாக உள்ளது. இத்தலத்து இறைவனை திருமுறைகள் பசுபதி என்று குறிக்கின்றன. சேக்கிழார் பெருமான் இவரைப் "பசுபதியார்" என்று திருமூலர் புராணத்தில் குறிக்கின்றார். இந்நாளில் இறைவன் மாசிலாமணீசுவரர் என்று அழைக்கப்படுகின்றார்.

கோமதி வழிபடும் சங்கரன்கோயில்

நெல்லை மாவட்டத்திலுள்ள சங்கரங்கோயில் சிறந்த சிவத்தலமாகும். இங்குச் சிவபெருமான் புன்னை நிழலில் புற்றிடங்கொண்டவராக விளங்குகின்றார். இங்கு பசுவடிவம் கொண்ட பார்வதிதேவி சிவபெருமானைப் பாலால் வழிபட்டாள். சரஸ்வதி, இந்திராணி, மகாலட்சுமி முதலான தேவமாதர்கள் பார்வதியுடன் பசுவடிவம் கொண்டு தங்கியிருந்தனர். இந்திரலோகப் பசுக்களான காமதேனு முதலிய அனேக பசுக்களும் அவர்களுடன் சிவவழிபாட்டில் கலந்து கொண்டன. "கோ" வடிவுடன் பசுக்களின் மத்தியிலிருந்ததால் அன்னைக்குக் " கோமதி" என்பது பெயராயிற்று. இன்றும் அப்பெயரிலேயே அவள் விளக்குகின்றாள்.

இதனை யொத்ததாக அனேக தலங்கள் "கோவில்" பெயரால் அமைந்துள்ளன.

பசுக்களைப் போற்றிய நாயன்மார்கள்



அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாறான பெரிய புராணத்தில் மூன்று நாயன்மார்களின் வாழ்க்கை பசுவோடு தொடர்புடையதாக விளங்குகின்றன. இவர்கள் முறையே ஆனாய நாயனார், சண்டேசுவர நாயனார், திருமூலர் என்பவராவர்.

இதில் ஆனாய நாயனார் வழிவழியாக ஆன்குலத்தை மேய்க்கும் தொழிலையுடையவர். இவர் பசுக்குலத்தை மகிழ்விக்கும் விருப்பமுடன் குழல் ஊதுபவர். இறுதியில் கொன்றை மலர்கள் மலர்ந்திருப்பதைக் கண்டு அவற்றையே சிவபெருமானாக எண்ணி இசைமழை பொழிந்து, சிவனருள் பெற்றுக் கயிலை சேர்ந்தார்.

சண்டேசுவரநாயனார் மறைக்குலத்தைச் சேர்ந்தவர் என்றாலும், பசுக்கள் சிவபெருமானுக்கு ஆனைந்து கொடுப்பன, தெய்வீகத் தன்மை உடையவை என்ற கருத்தில் தானே விரும்பி பசுக்களை மேய்க்கும் தொழிலை ஏற்றுக் கொண்டார். பின்னர் அவர் காட்டிய அன்பால் கவரப்பட்ட பசுக்கள் அவரைத் தங்கள் கன்றாகவே எண்ணி பாலைப்பொழிய அவற்றைக் கொண்டு அவர் மணலால் லிங்கமைத்து வழிபாடு செய்து சண்டீசபதம் பெற்றார்.

மூன்றாவதான திருமூலர் பசுக்களோடு எவ்வித தொடர்புமில்லாதவர். அவர் செல்லும் வழியில் ஒரு மேய்ப்பவன் இறந்ததால் வருந்தும் பசுக்களின் துயரை நீக்கக் கூடுவிட்டு கூடுபாய வேண்டியதாயிற்று. பின்னர் பசுமேய்ப்பவனான அந்த மூலன் என்பவனே உடலிலேயே தங்கிச் சிவாகமத்தைத் தமிழில் திருமந்திரமாலையாக அருளவேண்டியதாயிற்று.

இறைவனின் பாதோதகமான அபிஷேக நீரைப் பெறும் வாயிலைக் கோமுகம் என்கிறோம். அவ்வகையில் கோமுகமாக அதாவது பசுக்களின் காரணமாகவே திருமந்திரம் பிறந்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இம்மந்திர மாலையே பன்னிரு திருமுறைகளில் பத்தாந்திருமுறையாக அமைந்துள்ளது.

திருமூலர் வரலாற்றினைப் பாடிய சேக்கிழார் பெருமான் அவருடைய புராணத்தில் இரண்டு பசுபதீச் சரங்களைக் குறிக்கின்றார். "பன்னு புகழப் பசுபதி நேப்பாளம் பணிந்தேத்தி" என்று வட நாட்டு பசுபதி நாதரையும், "ஆவடு தண்டுறை அணைந்து பெரும் பசுபதியார்" என்று திருவாவடுதுறையையும் கோமுத்தீச்சுவரையும் குறிப்பிடுகின்றார். இப்படி இரண்டு பசுபதி நாதர்களையும் வணங்கி அருள் பெற்ற திருமூலரைத் தொடர்ந்து காணலாம்.

நம்பிரான் திருமூலர்

அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான திருமூலர் நந்தியருள்பெற்ற நான்மறை யோகியருள் ஒருவர். அட்டமாசித்திகள் கைவரப் பெற்றவர். இவருடைய இயற்பெயர் சுந்தரர் என்பாருமுண்டு. இவர் ஒரு சமயம், பொதிய மலையில் வசித்துவரும் அகத்தியருடன் சிலநாள் தங்கி வருவதற்கு விரும்பினார். எனவே திருக்கயிலாய மலையில் இருந்து புறப்பட்டுக் கேதாரம், பசுபதியார் விளங்கும் நேப்பாளம், காசி, ஸ்ரீகாளத்தி, திருவாலங்காடு, சிதம்பரம் முதலான தலங்களைத் தரிசனம் செய்து கொண்டு காவிரிக்கரையை அடைந்தார்.

அங்குப் பல தலங்களைத் தரிசித்த பின் கோகழியான திருவாவடுதுறைக் கோயிலை அடைந்து வலம் வந்து ஆங்கு உறையும் பசுபதி நாதரை வணங்கி, எழுந்தருளியிருந்தார்.

ஒருநாள் காவிரிக்கரையில் பசுக் கூட்டங்கள் கண்ணீர்விட்டு அழுது கொண்டிருத்தலைக் கண்டார். நெருங்கிச் சென்று அதற்கான காரணத்தை அறியமுற்பட்டார்.

அங்கு சாத்தனூர் அந்தணர்களின் பசுக்களை மேய்ப்பவர்கள் குலவழி வந்த மூலன் என்பவன் தங்கள் குலமரபுப்படி அந்தணர்களின் பசுக்களை மேய்க்கும் போது வினை முடிந்ததால் இறந்து வீழ்ந்து கிடந்தான். அன்பு பாராட்டும் அவனுடைய பிரிவால் அம்மந்தையில் உள்ள பசுக்கள் வருந்தி அழுது கொண்டிருந்தன.

இதைக் கண்ணுற்ற முனிவர் இப்பசுக்களின் துயரை நீக்குவேன் என்று உறுதி பூண்டார். இவன் உயிர்பெற்று எழுந்தால் தான் இப்பசுக்கள் மகிழும். எனவே இப்போது என் உயிரை இவன் உடலில் செலுத்தி இவனாக எழுந்திருப்பேன் என்று சொல்லி தம் உடலை ஓரிடத்தில் பத்திரப்படுத்தி வைத்து விட்டு அவன் உடலில் தன் உயிரைச் செலுத்தி எழுந்தார்.

மூலன் தான் உயிர் பெற்று எழுந்தான் என்று பசுக்கள் மிகவும் இன்பமடைந்தன. அவரைச் சுற்றி வந்த முகர்ந்து நக்கி மகிழ்ந்தன. மாலைக் காலமானதும் பசுக்கள் மேய்ச்சலை முடித்துக் கொண்டு காவிரியில் நீர் பருகிக் கரையேறி வீடு நோக்கித் திரும்பின. இவர் அவற்றைத் தொடர்ந்து சாத்தனூர் வரை வந்து அவைகள் வீடுகளுக்குச் சென்றபின், ஓரிடத்தில் தங்கியிருந்தார்.

அப்போது மூலனின் மனைவியும், மக்களும் அவரை அணுகி அவரை அழைத்தனர். அப்போது உங்களுடன் எனக்கு ஏதும் உறவில்லை என்று சொல்லிவிட்டு ஒரு பொதுஇடத்தில் சென்று தங்கியிருந்தார்.

மூலனின் மனைவி அன்றிரவு முழுவதும் வருந்தினாள். அடுத்த நாள் இவர் நிலையை எடுத்துச் சொல்லி ஊராரிடம் முறையிட்டாள். ஊரவர்களும் இவரை அடுத்து, இவர் சித்த, விகற்பங்களைந்து சிவயோகத்தில் நிற்கும் நிலையைத் தெளிந்து அறிந்து கொண்டனர். மூலன் மனைவியை நோக்கி, "இனி இவரை முன் போல எண்ணவேண்டா, இவர் சிவநெறி நின்றார். இனித் திரும்பமாட்டார்," என்று கூறி அவளைத்தேற்றி அனுப்பினர்.

பின்னர் சிவயோகியார் மாடுகள் வந்த வழியே திரும்பச்சென்று தன் உடலைப் பாதுகாத்து வைத்த இடத்தை அடைந்து தனது உடலைத் தேடினார். அங்கு அது காணவில்லை. பின்னர் அது காணாமல் போனதன் காரணத்தைத்தன் யோகத்தால் அறிய முயன்றார்.

சிவபெருமான், தான் அருளிய சிவாகமங்களைப் பூவுலகில் மக்கள் அறியும் வண்ணம் தமிழில் தனது வாக்காக வெளிப்படுத்த எண்ணம் கொண்டதால் அவ்வுடலை மறைத்து விட்டார் என்பதை யோகத்தால் உணர்ந்தார்.

இது சிவனருள் என்று எண்ணித் திருவாவடுதுறையை அடைந்து அங்கிருந்த படர் அரசின் கீழ் சிவயோகத்தில் வீற்றிருந்தார். பின்னர் மூவாயிரம் ஆண்டுகள் யோகம் நிகழ்த்தி ஆண்டிற்கு ஒரு பாடல் வீதம் மூவாயிரம் பாடல்களை அருளினார். இந்நூலே "ஒன்றவன் தான்" எனத் தொடங்கும் திருமந்திர மாலையாகும்.

பின்னர் திருவாவடுதுறைப் பெருமானை வணங்கி, திருக்கயிலையைச் சேர்ந்தார். இவருடைய ஆலயம் திருவாவடுதுறை கோமுத்தீசப் பெருமான் ஆலயத்துள் இரண்டாம் பிராகாரத்தில் உள்ளது.

காளையைத் தேடி வந்த பசு

ஒரு காலத்தில் சிவபெருமான், பந்து விளையாட்டில் ஈடுபட்டுத் தன்னை மறந்த அம்பிகையைப் பசுவாகும்படிக் கூறினார். பின்னர் தானே அப்பசுவுக்கேற்ற காளையுமானர். காளையாய் வடிவம் கொண்ட சிவபெருமான் பின்னாளில் திருக்கானப்பேர் எனும் தலத்தில் ஒரு புற்றுக்குள் சிவலிங்கமாக எழுந்தருளினார். அவரைத் தேடிபசு வடிவம் கொண்ட தேவி அங்கு வந்தாள். அவள் அவர் வீற்றிருந்த புற்றைச் சிதைக்க அவளுடைய கொம்பும் குளம்பும் குத்திய சுவடுகள் அவர் மேனியில் பதிந்தன. பெருமான் அவளுக்குக் காட்சியளித்து அவளை மீண்டும் தன் இடப்பாகத்தில் சேர்த்துக் கொண்டார். இவ்வாறு அவர் உமையைத் தன்னுடன் இணைத்துக் கொண்டதால் (ஸ+உமா-சோம) சோமநாதர் எனப் பெயர் பெற்றார்.

மதுரையை அடுத்துள்ள சிவகங்கைச் சீமையில் அமைந்த "காளையார் கோயிலில்" சிவபெருமான் காளையப்பராகவும், சோமநாதராகவும், மீனாட்சி சுந்தரராகவும் மூன்றுலிங்கங்களாக மூன்று கருவறையில் எழுந்தருளி யிருப்பதைக் காணலாம். இத்தலம் திரிலிங்கத்தலமாகும்.

தத்துவநோக்கில் சுந்தரரேசுவரைப் பசு லிங்கம் என்றும், காளையப்பரைப் பதிலிங்கம் எனவும், சோமநாதரைப் பசுவும் பதியும் கலந்து விட்ட பசுபதிலிங்கம் என்றும் கூறுவர் இம்மூன்று லிங்கங்களையும் தத்துவத்திராய லிங்கம் என்பாரும் உண்டு.


இந்நாளில் சுவர்ண காளீச்சுவரர் என அழைக்கப்படும் காளையப்பரின் திருமேனியில் பசு வடிவாக வந்த தேவியின் கொம்பும், குளம்பும் பட்டச் சுவடுகள் காணப்படுகின்றன. இதனை உணர்த்தும் வகையில், சுந்தரமூர்த்தி சுவாமிகள் இப்பெருமானை "மாமலை மங்கை, உமைசேர் சுவடும்" புகழக் கற்றனவும் பரவிக் கைதொழுவது என்று கொலோ? கார் வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே" என்று பாடிப் பரவுகின்றனர்.

மடி சங்கு


சங்குகள் பலவகைப்படும் அவற்றுள் வலம்புரிச்சங்கு உயர்ந்ததாகும். அதனைவிட ஆயிரம் மடங்கு உயர்ந்தது மடி சங்காகும். இச்சங்கின் மேற்புறம் விரல்போன்ற நீண்ட நாளம் என்ற அமைப்புகள் இருக்கும். இவற்றில் நீண்ட குழல் போன்ற துவாரங்களும் உள்ளன. இச்சங்கில் பாலை ஊற்றினால் அது மழைபோன்று மெல்லிய தாரையாக நாளத்தின் வழியாக வெளிப்படும் அப்போது அந்தச் சங்கு பார்ப்பதற்குப் பசுவின் மடி போலவும் அதன் மேலுள்ள நாளங்கள் பசுவின் மடிக்காம்புகள் போலவும் காட்சியளிக்கின்றன.

இச்சங்கைச் சிவலிங்கத்தின் திருமுடி மேல் பிடித்துக் கொண்டு அதில் பாலை வார்த்து அபிஷேகம் செய்வர். இப்படி அபிஷேகம் செய்யும் காட்சி பசு தானே இறைவன்மீது பாலைப் பொழிவது போலிருக்கும். அப்போது அமிர்தவர்ஷணி, ராகம் இசைப்பர். பசுபதி திருவிருத்தம் ஓதுவர்.

இச்சங்கைக் கோமடி சங்கு என்பர். இதைக் கொண்டு இறைவனை திருமுழுக்காட்டுவது கோடி மடங்கு நன்மை தரும் என்பர். செங்கை மாவட்டத்தில் பெரும்பேறு எனும் தலத்தில் இத்தகைய அபூர்வமான மடி சங்கு ஒன்று உள்ளது.




வலம்புரிச் சங்கினைத் திருமகளாகப் போற்றுவதைப் போலவே மடிசங்கினைப் பார்வதிதேவியாகப் போற்றுகின்றனர்.



சைவ சமயத்துள் பசுக்கள் பெற்றுள்ள பெருநிலை

(இந்நூலில் பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ள செய்திகளின் கருத்துத் தொகுப்பு)



❑ பசுவுக்கு "ஆ" அல்லது "ஆன்" என்பது சிறப்பான பெயர். எனவே பசுக்கள் சிவனை வழி பட்ட தலங்கள் ஆவூர் எனவும், அங்குள்ள இறை வனின் பெயர் பசுபதீசர் எனவும் வழங்குகின்றன.

❑ **தேனு**" என்பது பசுவின் வடமொழிப் பெயர்களில் ஒன்றாகும். எனவே பசுவால் வழிபடப் பட்ட இறைவர் தேனீசுவரர் என்று அழைக்கப் படுகின்றார்.பசு வடிவம்கொண்டு இறைவனை வழிபட்டதால் இறைவிக்குத் தேனாயி, தேனாம்பிகை என்பவை பெயராயின.

❑ **கொண்டி** என்பது காமதேனுவின் மகளுக்கும், பார்வதிக்கும் பெயராகும். இவ்விருவராலும் வழிபடப் பட்டதால் இறைவர் கொண்டீசுவரர் என அழைக்கப் படுகின்றார்.

❑ **பட்டி** என்பது பசுக் கூட்டத்திற்கும், காமதேனுவின் மகள் ஒருத்திக்கும் பெயராகும். எனவே பட்டியால் பூசிக்கப் பெற்ற இறைவரும், மாட்டுப்பட்டிக்கு இடையே அமைந்த இறைவரும், பட்டீசர் என்றழைக்கப்படுகின்றார். கோவைப் பேரு ரிலும், தஞ்சை மாவட்டத்திலும் இறைவர் பட்டீசர் என்று பெயர் பெறுகின்றார்.

❑ பசுவினைக் கட்டுமிடம் கட்டுத்தறி எனப் படும். கன்றினைக் கட்டுமிடம் கட்டுத்தறி எனப்படும். கன்றினைக் கட்டும் முளை, ஆப்பு எனப்படும். ஒரு பெண் இந்த ஆப்பையே சிவனாக எண்ணி வழிபட்ட தலம் ஆப்பனூர் என்வும் இங்கு எழுந்தருளிய இறைவனின் பெயர் நடுதறியப்பர் எனவும் வழங்கு கின்றது. இத்தலம் தஞ்சை மாவட்டத்தில் அமைந் துள்ளது.

❑ பசுக்களுக்கு (உயிர்களுக்கு) பாசங்களை விலக்கி (மலங்களை நீங்கி) ஞானமும் மோட்சமும் தரும் - பதியாக விளங்குதலின் இறைவன் பசுபதி எனப்படுகின்றான்.

❑ **கோ** என்பது பசுக்களுக்குப் பெயர்ஆதலின் பசுக்கள் சிவ வழிபாடு செய்த தலங்கள் கோவூர் கோமங்கலம் எனப்பட்டன.

❑ பசுக்களின் கூட்டம் கோகுலம் எனப்பட்டது. எனவே பசுமந்தை நிறைந்த இடமும் கோகுலம் எனப்பட்டது. திருக்கோழம்பம் எனும் பாடல் பெற்றதலத்தில் பசுக்கூட்டம் தங்கி இறைவனை வழிபட்டதால் அதற்குக் கோகுலபுரம் என்பது பெயராயிற்று என்பார்கள்.

❑ **'கோ'**க்கள் வழிபட்டதால் இறைவன் கோபதி எனவும் அவனுடைய தேவி கோமதி எனவும் அழைக்கப்படுகின்றனர்.

❑ பசுக்களை நிலையாகக் கட்டுமிடம் ஆநிலை எனப்பட்டது. இத்தகைய இடத்தில் அமைக்கப் பெற்றதால் கருவூர்க்கோயில் கருவூர் ஆநிலை எனப்பட்டது. இதனையொட்டி இறைவர் ஆநிலையப்பர் என்றழைக்கப்படுகின்றார்.

❑ **தேவி** பசுவடிவம் கொண்டு வழிபட்டதலம் திருவாவடுதுறையாகும். இங்கு தேவியின் கோவடிவம் (கழிந்ததால் இத்தலம் கோகழி எனப்படுகிறது. இத்தலம் திருவாசகத்தில் "கோகழி" என்றே குறிக்கப்படுகின்றது. பசுவடிவில் விளங்கிய தேவர்களுக்கு இங்கு இறைவன் முத்தியளித்ததால் அவர் கோமுத்தீச்சுவரர் என்றழைக்கப்படுகின்றார்.

❑ **தம்** உடலிலிருந்து பாலைச் சுரந்து உயிர் களைக் காப்பதால் பசுக்களுக்குச் சுரபி என்பது பெய ராயிற்று. அமுதமாகிய பாலைச் சுரந்தளிப்பதால் இவற்றிற்கு அமுதசுரபி என்பதும் பெயராயிற்று.

❑ **கருநீல** நிறம் (அ) மயிற்கழுத்து நிறம் கொண்ட பசு கபிலை எனப்படும்.இத்தகைய கபிலை யால் வழிபட்டதால் இறைவன் கபிலேச்சுவரர் என்ற ழைக்கப்படுகின்றார். திருப்பதி திருமலையின் அடிவாரத்தில் ஆழ்வார் தீர்த்தத்தின் (நந்தி சர்க்கிள்) அருகில் கபிலேச்சுவரர் கோயில் அமைந்துள் ளதைக் காணலாம்.

தேவாரத்துள் பசுபதி

ஆதிநாள் தொடங்கி வேதங்களில் வழங்கப் பட்ட "பசுபதி" என்ற பெயர் வழிவழியாகச் சிவனடி யார்களால் சிறப்பாகப் போற்றப்படுகின்றது. தமிழ்மறையான தேவாரம் பசுபதி என்ற சொல்லால் சிவபெருமானைப் பல இடங்களில் அழைத்து மகிழ் வதைக் காண்கிறோம்.

திருஞானசம்பந்தப்பெருமான் சிவபெரு மானைப் **"பசுபதி அதன்மிசை வருபசுபதி"** என்று திருமறைக்காட்டுப்பதிகத்தில் அருளிச் செய்துள்ளார். காண்கின்றோம். பசுபதி என்பது சிவபெருமானுக்கு உரியதைப் போலவே அவருடைய வாகனமான நந்தி தேவருக்கும் உரியது என்பதை இதனால் அறிய முடிகின்றது. பேணு பெருந்துறைப் பதிகத்தில் **"பசுபதி ஈசனோர் பாகம் பெண்ணாய அண்ணல்"**என்று குறிக்கின்றார். இதனால் உமைக்கும் பசு என்ற பெயர் வழங்குதல் அறிகிறோம்.

இலம்பையங்கோட்டூர் பதிகத்தில் **"பாலனாம், விருத்தனாம் பசுபதி தானாம்"** என்று அருளிச்செய் கின்றார். இதில் முன்னைய குழந்தைப் பருவத்திற்கும் பின்னைய வயோதிகப் பருவத்திற்கும் இடையிலுள்ள காளைப்பருவத்தைக் குறிக்கப் பசுபதி என்ற சொல் ஆளப்பட்டுள்ளதைக் காண்கிறோம். சிவபெருமான் சுந்தரருக்குக் காளைப் பருவத்தினனாக (வாலிப) காட்சி யளித்ததும் இங்கு எண்ணத்தக்கதாகும்.

மேலும் திருக் கழுமலப்பதிகத்தில் **"பண்ணி யல் கொச்சைப் பசுபதியே, பசுமிக ஊர்வார் பசுபதியே** என்று அருளிச் செய்கின்றார். இதில் பசு என்ற சொல் மூன்று முறையும் பசுபதி என்ற சொல் இரண்டு முறையும் வருகின்றது. இதற்குச் சிவ பெருமான் ஆன்மாக்களாகிய பசுக்களின் தலைவ னாதலின் பசுபதி எனப்பட்டான் என்பதும், இடபமாகிய பசுவின் மீது வருதலால் பசுபதி எனப் பெயர் பெற்றான் என்பதும் பொருளாகும்.

திருநாவுக்கரசுப்பிரான் திருவாரூரில் அருளிய பதிகத்தில் **''பசுபதியை பாவகனை'** என்று குறிக்கின்றார் இதில் பசுபதி என்பது அக்னி வடிவாக விளங்கும் அட்டமூர்த்தியின் பெயர் என்பதும் அதனையடுத்த பாவகன் என்ற பெயர் சிவபெருமான் நெருப்புத் தூணாக நிற்கும் நிலைக்குறிப்பதும் உணரத் தக்கதாகும்.

மேலும் அவர் திருவையாற்றுப் பதிகத்தில் "பசுபதீ" என்றுதாம் பன்முறை அழைத்து மகிழ்வதாகக் குறிப்பதால் அது அவரால் மந்திரச் சொல்லாகவே போற்றப்பட்டதை உணரமுடிகிறது.

அவர் சிவனடியார்களின் நிலையை விரிவாகக் கூறி அவர்களைக் காக்குமாறு சிவபெருமானிடம் வேண்டி அருளிச் செய்த பதிகம் **பசுபதி திருவிருத்தம்** என்று போற்றப்படுவதும் இங்கு எண்ணத்தக்கதாகும்.

திருவாவடுதுறைப் பதிகத்தில் **"பவித்திரன் பசுபதி பவளக்குன்று"** என்று பெருமானைப் போற்றுகின்றார். இதில் அவர் பவித்திரன், பவளக் குன்று என்ற நெருப்பின் குணத்தையும் வடிவத் தையும் குறிக்கும் சொற்களைச் சிவபெருமானின் அக்னிவடிவப் பெயரான பசுபதி என்பதற்கு இருபுறத் தும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கழுமலம், திருவாவடுதுறை, அவிநாசி ஆகிய தலங்களில் அருளிச் செய்துள்ள பதிகங்களில் சிவபெருமானைப் 'பசுபதி' என்று அழைக்கின்றார். இதில் பின்இருபதி கங்களில் அமைந்துள்ள பசுபதி என்ற சொல்லைத் தொடர்ந்து 'பரமேட்டி' என்ற சொல் ஆளப் பட்டுள்ளது. 'பரமேட்டி' என்ப தற்கு நிறைந்த பார்வையை நம் மீது வைத்திருப் பவன் என்பது பொருளாகும். சிவபெருமான் அவனுடைய உடமைப் பொரு ளாகிய நம்மீது கருணை நிறைந்த பார்வையை எப்போதும் செலுத் துவது இதனால் பெறப்படும். இதனை யொத்ததாக இன்னும் பல இடங்களில் தேவாரத்துள் சிவபெருமான் பசுபதி என்னும் பெயரால் போற்றப்படுகிறார்.



வேதங்கள் காட்டும் பசுபதி

வேதங்களில் சிவபெருமான் "பசுபதி" என்று புகழப்படுகின்றார். ரிக் வேதத்தில் "ய ஈ சேஸ்ய த்விபத" என்ற மந்திரம் வருகின்றது. இதன் பொருள் சிவபெருமான் இரண்டு கால்களும் நான்கு கால்களும் உடைய பிராணிகளை ஆளுகின்றார் என்பதாகும்.

யஜுர் வேதத்தில் "ஏஷாமீசே பசுபதி: பசூநாஞ் சதுஷ்பதா முதசத்விபதாம்" (3-1-4-3) என்ற மந்திரம் வருகின்றது. இதற்கு இரண்டு கால்களையும் நாற்கால்களையும் உடைய (பசுக்களை) உயிர்களைப் பசுபதியானவர் ஆள்கின்றார் என்பது பொருளாகும்.

சிவபெருமான் பசுபதி என்ற பெயரைப் பெற்றதற்கான தொன்மைக் கதை ஒன்று உள்ளது. இதன்படி:

வேதத்தில் கூறப்பட்டுள்ள பிராமணஸ்பதியே முதலில் எல்லையற்ற அதிகாரம் படைத்தவராக விளங்கினார். அவர் ஒரு சமயம் அவர் கோபங் கொண்டு தேவர்களைத் துன்புறுத்தினர். அவருக்கு அஞ்சிய தேவர்கள் உருத்திரனைச் சரணடைந்து பிராமணஸ்பதியிடமிருந்து தம்மைக் காக்குமாறு வேண்டினர். உருத்திரர் அவர்களுக்கு அபயமளித்து பிராமணஸ்பதியைத் தேடிச் சென்று அவருடன் போரிட்டார். போரின் முடிவில் பிராமணஸ்பதி தோற்றர் உருத்திரர் அவரைக் கொல்லத் தமது வாளை ஓங்கினார். பிராமணஸ்பதி அவரைப் பணிந்து உருத்திரரே! உமக்கு வணக்கம் நீரே யாவருக்கும் தலைவர் இரண்டுகால்களையும் நான்கு கால்களையும் உடைய பசுக்களுக்குப் பதியானீர் என்று போற்றி வணங்கினார். அன்று முதல் உருத்திரருக்கும் அவருடைய மூலமான பரமேசுவரருக்கும் பசுபதி என்பது பெயராயிற்று.

மேலும் ஒரு தொன்மைக்கதையும் உள்ளது. அதன்படி தேவர்கள் தமக்கு இன்னல் விளைக்கும் மூன்று கோட்டைகளில் வசிக்கும் திரிபுராதிகளை வென்று தம்மைக் காக்கும்படிச் உருத்திரரிடம் வேண்டினர். அப்போது உருத்திரர் எல்லோருடைய சக்தியிலும் பாதியைத் திரட்டினால்தான் அவர்களை வெல்லமுடியும் என்றார். எல்லா தேவர்களும் தங்களின் பாதி சக்தியைத் தர ஒப்புக்கொண்டனர். ஆனால் அவற்றை ஏற்றுத் தாங்கிக் கொள்பவர் யாருமில்லை. குறிப்பாக உருத்திரனின் சக்தியில் பாதியைத் தாங்கத் தக்கவர் எவருமில்லை. அதனால் அனைவரும் உருத்திரரைப் பணிந்து பெருமானே உமது பாதிசக்தியைத் தாங்கத்தக்கவர் எங்களில் எவருமில்லை. எங்கள் அனைவரின் சக்தியைத் திரட்டினாலும் தாங்கத் தக்கவர் நீங்கள் ஒருவரே. ஆதலின் எங்களுடைய சக்தியை ஏற்றுத் திரிபுராதி அசுரர்களை வென்று எங்களைக் காக்க வேண்டுமென்று பணிந்து கூறினர். உருத்திரர் அதன்படி அவர்களுடைய பாதி சக்திகளைத் திரட்டி தன்னுடலில் ஏற்று திரிபுரங்களை வென்றார்.

அவரை அந்தவேளையில் தேவர்கள் அனைவரும் கூடி "பசுபதி" என்று வாழ்த்தினர். அப்போது தேவர்களால் துதிக்கப்பெற்றதே ஸ்ரீருத்திரமாகும். ஸ்ரீருத்திரத்தில் "நம: சர்வாய ச பசுபதயே ச" என்ற தொடர் வருகின்றது. இதற்கு எல்லாப்பொருள்களுமாக இருக்கின்ற பசுபதிக்கு வணக்கம் என்பது பொருளாகும்.

தைத்ரீய ஆரண்யகம், "உமாபதயே பசுபதயே நமோ நம: என்று கூறித் துதிக்கின்றது. இதற்கு உமாபதியானவருக்கும் பசுபதியானவருக்கும் நமஸ்காரம் என்பதாகும். ஜாபால உபநிஷத்

ஜீவ: பசவ உத்கா:
தத் பதித்வாத் பசுபதி: ।

என்று கூறுகின்றது. இதற்கு ஜீவன்கள் பசுக்களாகச் சொல்லப்பட்டித்தலின் சிவபெருமான் பசுபதி என்று கூறப்படுகின்றார் என்பதாகும். இதே நூலில், அகங்காரத்தோடு கூடிய சம்சாரி ஜீவன்களாக பசுக்கள் உள்ளன என்றும், பசுபதி எல்லாவற்றையும் அறிந்தவரும். ஐந்தொழில் நடத்துபவரும் அனைத்திற்கும் தலைவனாகவும் இருக்கின்றார் என்ற பொருளைத் தரும்.

தத்வம்: பசுபதி ரஹம்கா விஷ்ட
சம்சாரீ ஜீவ: ஸ ஏவ பசு: ।
ஸர்வஜ்ஞ: பஞ்சக்ராத்ய ஸம்பந்ந:
ஸர்வேச்வர ஈச: பசுபதி ।।

என்ற வாக்கியமும் உள்ளது. பாசுபதப் பிரஹமம்

ஸ்வத: சிவ பசுபதி :।

சுயமாகவே சிவபெருமான் பசுபதி என்று விளக்குகின்றது.

இதனையொத்ததாக வேதங்களிலும் ஆரண்யகங்களிலும் அனேக இடங்களில் "பசுபதி" புகழ்ந்து வணங்கப்படுவதைக் காண்கிறோம்.

எண்பேருருக்கள் ஒன்றான பசுபதி




சிவபெருமான், நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்ற எட்டு பேருருக்கள் கொண்டு விளங்குகின்றார். இந்த எட்டு வடிவங்களாகப் பரந்திருக்கும் நிலையைச் சமய நூற்கள் 'அஷ்ட மூர்த்தம்' என்று போற்றுகின்றன.

இதில் அக்னி வடிவாக விளங்கும் சிவபெருமானுக்குப் பசுபதி என்பது பெயராகும். அப்போது உமாதேவியார் "ஸ்வாகா" என்ற பெயரில் இவருடன் எழுந்தருளியுள்ளார். இவர்களுடைய குமாரனாக ஸ்கந்தன் கூறப்படுகின்றார். இச்செய்தி களை லிங்கபுராணத்திலும் பிராமாண்ட புராணத் திலும் காணலாம்.

ஆகமங்கள் எண் மூர்த்திகளின் திருவுருவவர்ணனைகளைக் கூறு கின்றது. அதன்படி 'பசுபதி' தேவர் நாற்கரங்கள் கொண்டவர். மேற்கரங்களில் வாளும், கேடயமும் தரித்து முன்னிரு கரங்களில் அபய, வரத முத்தி ரைகளைத் தாங்கியுள்ளார். தூய வெண்நிறம் கொண்டு சந்திரனைப்போல் பிரகாசிக்கும் தேகத்தையும் எடுத்துக்கட்டிய சடா மகுடத்தையும் கொண்டவராக விளங்குகின்றார். சடாமகுடத்தில் சந்திரபிறையும் கங்கையும் அணி செய்கின்றன.

சிவபூஜா துரந்தர்கள் சிறப்புச் சிவபூஜையின் ஒரு அங்கமாகச் சிவபெருமானின் அஷ்ட மூர்த்தங்களை வழிபடுகின்றனர்.

பசு, பதி, பாசம்



உயிர்களைப் பற்றியுள்ள உலகப் பற்றுக்களே "பாசம்" என்று அழைக்கப்படுகின்றன. பாசங்களைக் களைந்த உயிர் இறைவனை அடையும் உயர் நிலையாகிய பசுத்தன்மையை அடைகின்றது. பிறகு தன்னை அறிவதால் பதியினை அடைந்து சிவானந்தப் பேரின்பத்தைத் துய்க்கின்றது. இது ஆலயங்களில் பலிபீடம், நந்தி, சிவலிங்க மூர்த்தி என்ற மூன்றால் குறிக்கப்படுகின்றது என்பர். ஆலயங்களின் முன்னுள்ள பலிபீடம் உயிர்கள் தங்களைப் பற்றியுள்ள பாசங்களைக் களையுமிடமாகும். அதனையடுத்துள்ள நந்தியின் உருவம் உயிரானது பசுத்தன்மையை பெற்றுச் சிவசிந்தனையில் மூழ்கி நிற்பதைக் குறிக் கின்றது. உயிர்களுக்குத் தலைவனாகவும் பேரின் பத்தை அருளும் சக்தியாகவும் விளங்கும் சிவபெரு மானைச் சிவலிங்கம் குறிக்கின்றது. ஆதலின் சிவாலங் களிலுள்ள சிவலிங்கம், நந்தி, பலிபீடம் ஆகிய மூன்றும் பதி, பசு, பாசம் என்கின்ற முப்பொருளை உணர்த்துகின்றது.

தொல்லியல் காட்டும் பசுபதி



இந்தியாவின் வடமேற்கிலுள்ள சிந்துசம வெளியில் அமைந்த மொகஞ்சோதரா, அரப்பா என்ற இரண்டு இடங்களில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அகழ்வாராய்ச்சி மேற்கொண்டு மறைந்துபோன இரண்டு பெரிய நகரங்களைக் கண்டு பிடித்தனர். இவையிரண்டும் சுமார் 5000 ஆண்டு களுக்கு முன்பே மிகச்சிறப்புடன் திகழ்ந்தவை யாகும். சிந்துநதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக் கத்தால் இவை மண்மூடிக் கொண்டவை என்று கருதப்படுகின்றது.

இங்கு வாழ்ந்த மக்கள் திராவிடர்களாவர். இவர்கள் நாகரீகத்தில் தலைசிறந்திருந்தனர். இவர்கள் சைவநெறியை மேற்கொண்டிருந்தனர் என்பதை ஆராய்ச்சியாளர்கள் நன்கு ஆராய்ந்து வெளியிட் டுள்ளனர்.

இங்குப் பல முத்திரைகள் கிடைத்துள்ளன. அவை சிவழிபாட்டின் மேன்மையைக் கூறுவதாக உள்ளன என்று அவர்கள் கருதுகின்றனர்.

இவற்றில் குறிப்பிடத்தக்க ஒரு முத்திரையில் (22வது எண்ணாகத் தொல்லியல் துறையால் குறிக்கப் பட்டது) உள்ள வடிவத்தைப் பசுபதி என்கின்றனர்.

இதில் பசுபதி பத்மாசனத்தில் ஒரு பீடத்தில் வீற்றிருக்கின்றார். இந்தப் பீடத்தின் கால்கள் காளையின் கால்களைப்போன்று உள்ளன. இவர் இரண்டு கைகளையும் அகட்டி முழங்காலின் மீது வைத்துள்ளார் இரண்டு கொம்புகளுடன் கூடிய தலைமுடியுள்ளது. அதற்குமேல் ஆலமரம் போன்ற மரக்கிளையுள்ளது. இவருக்கு மூன்று முகங்கள் உள்ளன.

இதே போன்று அமைந்த மற்றோர் முத்திரையில் இந்த வடிவத்தைச் சுற்றிலும் ஆறுவிலங்குகள் காட்டப்பட்டுள்ளன. இடப்பாகத் தில் யானையும் புலியும் நிற்கின்றன. அவைகளுக்கு இடையே ஒரு மனிதன் நிற்கின்றான். வலப்புறத்தில் காண்டாமிருகமும், எருமையும் உள்ளன. பசுபதி வீற்றிருக்கும் பீடத்தின் கீழ் இரண்டு மான்கள் (அல்லது) மலையாடுகள் நிற்கின்றன.

இவ்வடித்தினை நன்கு ஆராய்ந்த **ஸ்ரீ இராம்பிரசாத்சந்திரா** எனும் அறிஞர் இவ்வடிவின் பார்வை மூக்கின் நுனியில் நிலை பெற்றிருப்பதால் இது யோகத்தில் வீற்றிருக்கும் சிவனின்வடிவம் என்று குறிப்பிடுகின்றார். இரண்டு கால்களும் நான்கு கால்களும் உடைய ஜீவர்களுக்கு தலைவனாக இருப்பதால் இறைவன் பசுபதி எனப்பட்டான் என்று வேதங்களில் குறிக்கப்பட்டது போலவே இந்த முத்திரையில் நான்கு கால்களையுடைய விலங்குகளும் இரண்டு கால்களையுடைய மனிதனும் பெருமானைச் சூழ்ந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் மொகஞ்சொதராவில் கண்டு பிடிக்கப்பட்ட இதேபோன்ற உருவம் பெண் தெய்வத்துடன் கிடைத்துள்ளது. அதுவும் மூன்று முகம் கொண்டதாக உள்ளது. நிர்வாண வடிவில் காணப்படும் இதனை வரலாற்றுக்கு முந்தைய சிவ வடிவம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

இதனால் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சைவம் சிறப்புடன் இருந்ததையும் அப்போதே சிவன் யோகக் கடவுளாகச் சித்தரிக்கப் பட்டுள்ளதையும் அறியலாம். அப்பொழுதே சிவபெருமான் பசுக்கூட்டங்கள் (உயிர்க்கூட்டங்கள்) சூழ வீற்றிருக்கும் சிற்பங்களான பசுபதி சிற்பங்கள் வழிபடப்பட்டன என்பதையும் அறிய முடிகின்றது.

உ

உமை மணவாளனுக்குப் பாரும் விசும்பும் அறியப் பல்லாண்டு கூறுதுமே



உமாமகேஸ்வரர்

உலக உயிர்கள் யாவும் இன்பத்தையே விரும்புகின்றன. அந்த இன்பத்தை வழங்கும் இறைவனின் அருளாற்றலாக வெளிப்பட்டவள் பராசக்தி, அவள் கருணையின் ஊற்றாகவும் அருளின் வடிவமாகவும் இருப்பவள். அன்பர்கள் மீதுகொண்டபரிவினால் அவள் இப்பூவுலகில் அவர்களுக்கு மகளாகப் பிறந்து வளர்ந்து, பின்னர், சிவபெருமானை மணந்து கொண்டாள். அப்படித் தோன்றியபோது, தாடசாயணி, மாதங்கி, காத்யாயனி என்று பல்லாயிரம் பெயர்களால் அழைக்கப்படுகிறாள்.

ஆகமங்கள் அவளைக் கௌரி என்று அழைத்து மகிழ்கின்றன. இப்படிப் பலபெயர்களால் அழைக்கப்பட்டபோதிலும் அவள் "உமா" என்ற பெயராலேயே மகிழ்கின்றாள். அப்பெயராலேயே சிவபெருமான் உமாபதி என்றும் உமாமகேசுவரர் என்றும் அழைக்கப்படுகின்றார். வேதங்கள் "உமாபதியே நமோ நம", என்று திரும்பத் திரும்ப உமையின் பெயரால் அவருக்கு வணக்கத்தைக் கூறுகின்றன.

ஏழு என்பது ஏழு என்ற எண்ணைக் குறிப்பதுடன் எல்லையற்றது என்ற பொருளையும் தருவதாகும். ஆதலின் சிவமஞ்சரியில் ஏழாவது மலர் இறைவனின் எல்லையற்ற அருளின் வடிவமாகத் திகழும் பராசக்தியான உமாதேவியுடன் கூடிய சிவபெருமானின் பெருமைகளைச் சிந்திப்பதாக மலர்கின்றது.

இதில் பராசக்தி உமை என்று பெயர் பெற்றது, சிவபெருமானை மணந்து கொண்டது, இருவரும் உமாமகேசுவரராகக் காட்சியளிப்பது, உமாமகேசுவரத்தலங்கள், உமாமகேசுவர வடிவங்கள் மற்றும் அவை தொடர்பான அனேக செய்திகள் தொகுத்தளிக்கப்படுகின்றன.

அன்பர்கள் யாவரும் உமையின் பேருராளால் மகேசனான சிவபெருமானின் திருவருளைப் பெற்றுப் பேரின்பத்தைத் துய்த்து மகிழ்ச்சியுடன் இனிது வாழ்க என வாழ்த்தி வணங்குகின்றோம்.

–சிவசுந்தரி

"உமா' எனும் சக்திபிரணவம்

அனைத்து மந்திரங்களுக்கும் மூலமாக இருப்பது "ஓம்" என்ற பிரணவ எழுத்தாகும். இது அகரம், உகரம், மகரம் எனும் மூன்றெழுத்தாலானது. இந்த (அ+உ+ம) எழுத்துக்களின் சேர்க்கையே "ஓம்" என்பதாகும். இதில் "அ" என்பது சிவனையும், "உ" என்பது சக்தியையும் "ம" என்பது அவர்களுடைய அருளையும் குறிக்கின்றதென்பர்.

இவற்றின் முறையை மாற்றி உ+ம+அ என்று சேர்த்து ஒலிப்பதால் உமா என்ற சொல் உருவாகிறது. இதுவும் பிரணவத்தின் ஒருவகையேயாகும். மந்திரங்களின் ஆதாரமாகவும் அதன் பொருளாகவும் அதன் பயனாகவும் இருப்பவள் தேவியே. எனவே இது அவள் பெயராக அறியப்படுகின்றது. இதனைச் "சக்தி பிரணவம்" எனவும் அழைப்பர்.

யாவுமாக விளங்கும் தேவியின் தலைவனாக இருப்பதால் சிவபெருமான் உமாபதி என்று அழைக்கப்படுகின்றார். முன்பு ஆன்மாக்களாகிய பசுக்களின் தலைவனாக இருப்பதால் "பசுபதி" என்றழைக்கப் பட்டது போலவே, இப்போது உமையின் தலைவன் எனும் பொருள்பட "உமாபதி" என்றழைக்கப்படுகின்றார். மகேச்சுவரன் என்பதும் உயிர்களின் தலைவன் என்றே பொருள்படும் அவ்வகையில் உமையின் தலைவனாகிய சிவபெருமான் உமா மகேச்வரன் என்றழைக்கப்படுகின்றார். சிவ நாமங்களில் உமா என்ற ஒலியுடன் கூடிய சிவ நாமங்களே உயர்ந்ததென்று சொல்லப்பட்டுள்ளது. இதனையொட்டி உமையொருபாகன், உமாமகேச்சுவரன், உமேசன், உமாசகிதன், உமாஆலிங்கனமூர்த்தி முதலானபெயர்கள்சிவபெருமானுக்குஅமைகின்றன.

உம்மாச்சி (குழந்தைகள் பாஷையில் உமாமகேசுவரர்)



...ஒரு சமயம் ஒரு வைஷ்ணவர் குழந்தையோடும் தாயாரோடும் இங்கே வந்திருந்தார் அவர் குழந்தையைப் பார்த்து. "உம்மாச்சித் தாத்தாவிற்கு நமஸ்காரம் செய்" என்றார். உம்மாச்சி என்றால் ஸ்வாமி என்ற அர்த்தம். குழந்தைகள் வார்த்தைப், பரம்பரை பரம்பரையாக 2000 அல்லது 3000 வருஷங்களாக வந்து கொண்டிருக்கின்றது. அந்த உம்மாச்சி என்ற வார்த்தையும் குழந்தைகள் பரம்பரையில் வந்த பழைய வார்த்தை. ஆனால் அதன் சரியான அர்த்தம் தெரியவில்லை. உம்மாச்சி என்பது யாரைக்குறிக்கின்றது, என்று ரொம்ப நாளாகவே யோசித்துவந்தேன் (பிறகுதான்)... உமாமஹேசுவரர் என்பது "உம்மாச்சு" என்றாயிற்று என்று தெரியவந்தது. அதுவேதான் உம்மாச்சி என்றும் ஆயிற்று ஆகவே குழந்தை பாஷையில் இருந்து அவர்களுடைய ஸ்வாமி உமாமஹேசுவரரென்பது தெரிந்தது.. நாம் எவ்வளவோ மாற்றிக் கொண்டிருக்கின்றோம். குழந்தைகளுடைய எண்ணப்படி மிகப்பழைய காலத் திலிருந்து ஸ்வாமியாக எண்ணப்பட்டு வந்தவர் உமாமஹேசுவரர் என்பது தெரிகின்றது.

--காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அருளுரையிலிருந்து.

உமாமஹேஸ்வராஸ்திரம்

இது பிரமனுக்குச் சிவபெருமானால் அளிக்கப்பட்டதாகும் இது ஆயிரங்கோடிச் சூரியப் பிரகாசமுடையது - இதனைப் பிரம்மன் திருமாலின் மீது விட்டபோது சிவபெருமான் அதனை மீண்டும் தன்னுள் ஒடுக்கிக் கொண்டார். உமாமகேசுவர அஸ்திரத்தை நினைவூட்டும் வகையில் சிவாலயங்களில் உள்ள திரிசூலமான அத்திரதேவரின் மையத்தில் உமாமகேசுவரரை அமைக்கும் வழக்கம் ஏற்பட்டது

பராசக்தி பர்வதராஜனுக்குத் திருமகளாக அவதரித்துத் தவம் செய்தபோது, பரமசிவனால் "உமா" என்று அழைக்கப்பட்டாள். அதனால் அப்பெயர் தனிச் சிறப்பு பெறுவதாயிற்று. அப்பெயராலேயே அம்பிகை தேவாரத்துள் பலநூறு இடங்களில் அழைக்கப்படு கின்றாள். சிவபெருமான் அவளை மணந்து அடியவர் களுக்குக் காட்சியளிக்கும் கோலமே உமாமகேசுவரத் திருக்கோலம் என்று அழைக்கப்படுகின்றது. அவ் வடிவில் அவர்கள் கருவறையுள் எழுந்தருளியுள்ள தலங்கள் உமாமகேசுவரத் தலங்கள் என்று அழைக்கப் படுகின்றன. இப்பகுதியில் உமையின் திருமணத் தையும், தென்னகத்தில் உமாமகேசுவரத் தலங்கள் தோன்றிய வரலாற்றையும் மற்றும் அதன் சிறப்புக் களையும் காணலாம்.



உமாமகேஸ்வரர் திருக்கல்யாணம்

ஒரு சமயம் கயிலையங்கிரியில் நவமணிகள் பதித்த சிம்மாசனத்தின் மீது பார்வதிதேவியாரும், பரமேசுவரனும் வீற்றிருந்தனர். அப்போது தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள் முதலியோர் கூடி எம்பெரு மானைத் தோத்திரம் செய்து வழிபட்டனர். தும்புரு, நாரதர், கந்தவர்கள் முதலியோர் இனிய கானம் இசைத்துத் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

அந்த நேரத்தில் அம்பிகை, பரமேசுவரனை வணங்கி "அன்பரே, நான் இப்போது கொண்டுள்ள இந்த உடல், மகாபாதகனும், சிவநிந்தனை செய்த வனுமான தட்சனால் வளர்க்கப்பட்டது. அதனால் என்னை அவனுடைய மகள் என்ற பொருளில் "தாட் சாயணி" என அழைக்கின்றனர். எனவே, தாங்கள் அனுமதித்தால் மீண்டும் பிறந்து உங்களைப் பூசிக்க விரும்புகின்றேன்", என்று கூறி வணங்கி நின்றாள்.

அதனைக்கேட்டுச் சிவபெருமான் மகிழ்ந்து, "தேவி நீ சொன்னதும் நல்லதே. நெடுங்காலமாக இப்பனிமால் வரையின் அரசனான இமவானும் அவன் மனைவியான மேனையும் புத்திரப்பேறு வேண்டித் தவம் செய்து வருகின்றனர்.

நீ சென்று அவர்களுக்கு மகளாகத் தோன்றி வளர்வாய். ஐந்து வயது நிரம்பியதும் எம்மை நோக்கித் தவம் புரிவாய். நாம் உரிய நேரத்தில் உன்னை மணந்து உலகிற்குத் திருவருள் புரிவோம்," என்று அருளினார்.

இதைக்கேட்ட பார்வதிதேவி சிவபெரு மானை மனம், மொழி, மெய் ஆகியவற்றால் வணங்கினாள். அக்கணமே அவளுடைய உடல் கற்பூரம் காற்றில் கரைவது போல் கரைந்து விட்டது. தன் உருவம் மறையவே ஒளியுடம்பு பெற்ற தேவி இமயமலைச் சாரலையடைந்தாள்.

அம்மலையின் பனிபடர்ந்த சிகரங்களுக்கு மேல் தெள்ளிய அமுதம் போன்ற நீர் நிரம்பிய "பத்மை' என்ற பொய்கை இருந்தது. அதன் கரையில் தான் பர்வதராசன் மகப்பேறு வேண்டி தவம் செய்து கொண்டிருந்தான். அவன் தனது சந்தியாகால வழிபாட்டைத் தொடங்க அப்பொய்கையில் இறங்கிய போது அவன் முன்பாக ஆயிரத்தெட்டு இதழ்களைக் கொண்ட தாமரைமலர் மீது, கண்ணைக் கவரும் வடிவுடைய மரகதமேனிக் குழந்தையாகப் பராசக்தி தோன்றினாள்.

அந்தக் குழந்தையைக் கண்ட பர்வதராசன் மிக்க மகிழ்ச்சி கொண்டு ஆனந்தக் கூத்தாடினான். அடியேன் செய்த தவம் பலித்தது என்று சொல்லி அக்குழந்தையைத் தூக்கி உச்சி முகர்ந்து முத்தம் கொடுத்து மகிழ்ந்தான். மிக்க அன்புடன் தனது அர்ண்மனைக்கு எடுத்துச் சென்று தன் மனைவி யாகிய மேனையிடம் கொடுத்தான்.



மேனை அத்தெய்வக் குழந்தையைத் தொழுது வாங்கி அணைத்து முத்தம் சொரிந்தாள். அவள் உள்ளத்தில் அன்பு சுரந்தது போலவே மார்பிலும் பால் சுரந்தது. அவள் அக்குழந்தையைப் பாலூட்டிச் சீராட்டினாள்.

குழந்தைக்கு அணிமணிகளைச் சூட்டி, தங்கத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டி வளர்த்தாள். பர்வத ராஜனின் குமாரியாதலால் அவளுக்குப் "பார்வதி" என்று பெயர் சூட்டினர்.

நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமு மாக வளர்ந்த தேவிக்கு ஐந்து வயது நிரம்பியது.

ஒரு நாள் பார்வதிதேவியார் தம் தந்தை யாகிய இமயராசனை அழைத்து, "பிதாவே நான் சிவ பெருமானைக் குறித்துக் கடுந்தவம் செய்து, அவரிடம் என்னை மணந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்ள விரும்புகின்றேன், ஆதலின் எனக்கு அதற்கான தவச் சாலையைச் செய்து கொடுங்கள்" என்று அன்புடன் வேண்டினாள்.

அதைக்கேட்ட அரசன் துணுக்குற்று, "மகளே, ஐந்து வயதிலா தவம் செய்ய விரும்புகின்றாய்? பட்டினி கிடந்து உடலை வருத்திக் கொண்டு செய்யும் தவம் உனக்கு ஏற்றதல்ல. அவ்வெண்ணத்தை உடனே விடுவாய்" என்று அன்புடன் உரைத்தான்.

பார்வதியோ விடாமுயற்சியுடன், "தந்தையே என்முயற்சியைத் தடுக்க வேண்டாம். தவம் செய்வது எனக்கு எளியதே," என்று மன்றாடினாள்.

இறுதியில் ஒருவாறு மனம் தேறிய மன்னன் இமயமலைச் சாரலில் வனப்பு மிக்க ஓர் இடத்தில் அவள் தவம் செய்ய ஒரு பர்ணக சாலையை அமைத்துக் கொடுத்தான். பார்வதிக்குக் காவலாக பல கன்னிப் பெண்களையும் நியமித்தான்.

அந்த இடத்தில் அன்னையும் சிவபெரு மானை நோக்கிக் கடுந்தவம் மேற்கொண்டாள்.

இது, இப்படியிருக்கச் சிவபெருமானிடம் பெருவரங்கள் பெற்று ஆயிரத்தெட்டு அண்டங் களையும் அரசு செய்து வரும் சூரபத்மனின் அட்ட காசங்கள் பெருகின. அவனுடைய அட்டகாசத்தால் நல்லோர் உள்ளம் நடுக்குற்றது. அவர்கள் பார்வதி தேவியாரைப் பிரிந்து, கல்லால மரத்தின் கீழ் யோக நிலையில் வீற்றியிருக்கும் சிவபெருமானைச் சரணடைந்தனர்.

அப்போது அவர் சின்முத்திரை தாங்கி சிவஞானத்தை, சனகாதி நால்வருக்கு உபதேசித்துக் கொண்டிருந்தார். உள்ளம் ஒடுங்கிய நிலையில் மோனநிலையில் சிவபெருமான் கணப்பொழுது நின்றார். ஆனால் அதற்குள் உலகில் அனேக ஆண்டுகள் ஓடிவிட்டன.

சிவமூர்த்தி மேற்கொண்ட தவ நிலையால் விண்ணில் அமரர்களுக்கும், மண்ணில் மனிதர்கள் விலங்குகள் முதலியவற்றிற்கும் காம இச்சை அறவே நீங்கி முற்றுந்துறந்து முனிவர்கள் போலாயினர். உலகில் சிருஷ்டியே நடைபெறவில்லை.

இப்படியே ஒருபுறம் சிருஷ்டி நடைபெறா மலும், மறுபுறம் அசுரர் கொடுமையாலும் வருந்திய தேவர்கள் பிரமதேவனை அழைத்துக் கொண்டு வைகுந்தம் சென்று திருமாலிடம் புகலடைந்தனர். அவர் அவர்களிடம் சிவபெருமான் பார்வதியை மணந்து ஒரு குமாரனைப் பெற்றால்தான் உங்கள் குறை தீரும். அக்குமாரன் மட்டுமே சூரபத்மனை அழிக்கவல்லவன். ஆதலின் மன்மதனை அனுப்பிச் சிவபெருமானின் தவத்தைக் கலைக்கச் செய்வீர் என்று கூறினார்.

பிரம்மலோகத்தின் தலைநகரான மனோவ திக்கு வந்து சேர்ந்த, பிரமதேவன் தன் தம்பியான மன்மதனை அழைத்து, "அருமைத் தம்பியே, நீ உடனே சென்று தவத்தில் மூழ்கியிருக்கும் சிவ பெருமானின் மீது உன் பஞ்சபாணங்களைச் செலுத்தி, அவர்மனதில் பார்வதியை மணந்து கொள்ளும் வேகத்தை உண்டாக்குவாய், என்று ஆணையிட்டான்.

இதனைக் கேட்ட மன்மதன் பதறினான். சிவ பெருமானின் தவத்தைக் கலைத்தால் அவர் என்னை அழித்துவிடுவார். அவர் அக்னிமயமானவர். அவரை எதிர்த்த பின்னர் உயிருடன் திரும்ப முடியாது. ஆதலின் எனக்கு வேறுவழி சொல்வீர்" என்றான்.

"மன்மதனே, உன்னைத் தவிர இப்போது எங்களுக்குக் கதி இல்லை. உலக நன்மைக்காக இந்த உதவியை நீ தான் செய்ய வேண்டும்" என்றார். ஒருவாறு மனம் தேறிய மன்மதன் கயிலைக்குச் சென்று அவருடைய தவத்தைக் கலைப்பதற்கு உடன் பட்டான்.

பின்னர், தன் அரண்மனைக்குச் சென்று தன் ஆயுதங்களான கரும்புவில், தாழை மடல்வாள், பஞ்ச மலர்ப் பாணங்கள் ஆகியவற்றை ஏந்தித் தென்றல் எனும் தேரில் ஏறிக் கயிலையை நோக்கிப் புறப்பட்டான். அப்போது அவன் மனைவியாகிய ரதி தேவி "அன்பரே எங்கு செல்கின்றீர்கள்," என்று கேட்டாள்.


மன்மதன் அவளிடம், "சிவசிவ, நீ ஏன் போகும் போதே எங்கே போகிறாய்"? என்று கேட்டு அபசகுனம் செய்கிறாய். நான் சிவபெருமானின் தவத்தைக் கலைக்கச் செல்கிறேன்," என்று கூறினான்.

அன்பரே! சிவனிடம் போரிட்டு மீண்டவர் யார்? நீங்கள் தனியாகப் போக வேண்டாம் நானும் உடன் வருகிறேன்" என்றாள்.

பின்னர், இருவருமாகத் தம் பரிவாரங்களுடன் கயிலைமலைச் சாரலை அடைந்தனர். அங்குத் தன் பரிவாரத்தைக் கீழே விட்டுவிட்டு ரதியும் மன்மதனும் மலையின் மீது ஏறினர்.

முதலில் மன்மதன் அம்மலையின் மீதுள்ள பறவை, விலங்குகளுக்குக் காமஇச்சையை உண்டாக்க நினைத்து அவற்றின் மீது மலர்க்கணைகளாகிய மோகஸ்திரத்தை ஏவினான்.

இதையறிந்த நந்திதேவர் கோபங்கொண்டு "ஹு"ங்காரம் செய்தார். அந்த ஒலியால் தடுமாறிய அவனுடைய பாணங்கள் ஆகாயத்தில் அப்படியே நின்றுவிட்டன. மன்மதன் நடுநடுங்கி நந்திதேவரின் காலில் வீழ்ந்து பிரமனின் ஆணையைக் கூறினான். நந்திதேவர் அவனுக்கு அபயமளித்து, "நீ மேலைக் கோபுரவழியாகச் சென்று உன் முயற்சியில் வெற்றியடைவாய்" என்று வாழ்த்தி அனுப்பினார்.



அதன்படியே மேலை வாயில் வழியாக மன்மதன் சிவபெருமானையடைந்து, தன் வில்லை வளைத்து அவர்மீது ஐம்மலர்க் கணைகளைப் பொழிந்தான்.

அதனால் தவம் கலைந்த சிவபெருமான் தனது நெற்றிக்கண்ணை விழித்து அவனை நோக்கினார். அதில் தோன்றிய நெருப்புச் சுவாலையால் மன்மதன் எரிந்து அந்தக் கணமே சாம்பலாகிவிட்டான்.

அப்போது அங்குவந்த இந்திரன், பிரமதேவன், திருமால் ஆகியோர் மன்மதன் சாம்பலாகி விட்டதை உணர்ந்து வருந்தி அழுது சிவபிரானைச் சரணடைந்து வேண்டினர். ரதிதேவி சிவபெருமானைத் தொழுது தன் கணவனை மீண்டும் எழுப்பித்தர வேண்டுமென்று மன்றாடி வேண்டினாள். பரம கருணாநிதியாகிய சிவபெருமான் அவளுக்காக இரங்கி அவள் கண்களுக்கு மட்டும் தெரியும்படி அவனை உயிர்ப்பித்தார்.

பின்னர், அனைவரும் சிவபெருமானிடம் விரைவாக நீங்கள் பார்வதியை மணந்து ஒரு குமாரனைத் தந்து சூரபத்மாதியரை அழித்து தேவர்களைக் காத்தருள வேண்டுமென்று வேண்டினர். அவரும், "அப்படியே ஆகட்டும் என்றார்.

பின்னர், சிவபெருமான் திருவிளையாடல் புரியக் கருதி வயோதிகராக வடிவம் தாங்கிப் பார்வதி தேவியார் தவம் செய்யும் பர்ணக சாலையை அடைந்தார். அங்குள்ளவர்களிடம் தான் பார்வதி தேவியாரைப் பார்க்க வேண்டுமென்று கூறினார்.

அப்போது பார்வதியின் தோழியாகிய விசயை அவருக்கு ஒரு ஆசனம் அளித்து அமரச் செய்தாள். பின்னர் உள்ளே சென்று பார்வதியை அழைத்து வந்தாள். தேவி திருநீறும் கண்டிகையும் பூண்டு நின்ற அவரைச் சிவபெருமானுடைய அடியவர் என்று எண்ணி வணங்கினாள். அவளை நோக்கிய அப்பெரியவர், "பெண்ணே நீ ஏன்? தவம் செய்கின்றாய்" என்றார்.

அப்போது அவள் தோழியாகிய விசயை, "பெரியீர்! இவள் பரமேசுவரனைக் குறித்துத் தவம் செய்கின்றாள். அவரைத் திருமணம் செய்து கொள்வதே இவளுடைய தவத்தின் குறிக்கோள் என்றாள்.

அதைக்கேட்டுப் பெரியவர் நகைத்தார். "பெண்ணே! அயன், மால் முதலானவர்களும் அவரைக் காண முடியாது ஏங்குகின்றனர். அவரை அடைய முயல்வது வீண்வேலை. அதனால் உன் அழகையும் இளமையையும் வீணாக்கிக் கொள்ளாதே," என்றார்.

இதைக்கேட்ட தேவி கோபங்கொண்டாள், "ஐயனே நான் சிவபெருமானை அன்பினால் அடைய முயல்கின்றேன். என் முயற்சியில் தளரமாட்டேன் இப்பிறவியில் முடியாவிட்டாலும் இனி தொடரும் பிறவிகளிலும் எனது தவத்தைத் தொடருவேன். பஞ்சாக்கினி மத்தியில் ஊசி முனையில் நின்று தண்ணீரும் அருந்தாது தவம் செய்வேன், ஆயிரம் பிறப்பெடுத்தாலும் ஓயாது தவம் செய்வேன்" என்றாள்.

பெருமான் மீண்டும் நகைத்தார். "பெண்ணே உன்முயற்சியைப் பாராட்டுகின்றேன். உன் உறுதியைக் கொண்டு நீ எதையும் சாதிப்பாய் சந்தேகமே இல்லை. ஆனாலும் நீ தேர்ந்தெடுத்துள்ள மாப்பிள்ளைதான் சரியில்லை.

அவருக்கு நல்ல உடையில்லை, தோல்தான் ஆடை, பாம்புதான் ஆபரணங்கள், ஊர்தியோ கிழட்டு மாடு. மேலும் பன்றிக் கொம்பு, தலைமாலை, ஆகியவற்றை அணிந்து கொண்டு வாழ்வதோ மயானம், உணவோ நஞ்சு, பின்னும் குள்ளமான விளையாட்டுப் புத்தியுடைய பூதங்களே சேனைகள். அப்பப்பா, போயும் போயும் அவரைத் தானா உனக்கு ஏற்ற புருஷனாக வரித்தாய்? என்று சொல்லிப் பெரிதாகச் சிரித்தார்.

இதைக் கேட்ட பார்வதி நடுங்கினாள். சிவ அபராதமான சொற்களைக் கேட்க நேர்ந்தால் தன் செவிகளைப் பொத்திக் கொண்டாள். "ஏ! பெரியவரே சிவவேடத்துடன் நின்றதால் உம்மிடம் பேசிக் கொண்டிருந்தேன். இனியும் நீங்கள் ஒரு வார்த்தை பேசினாலும் மேற்கொண்டு நான் தாங்கிக் கொள்ள மாட்டேன். இங்கிருந்து நீங்கள் செல்கின்றீர்களா? அல்லது நான் செல்லட்டுமா? என்று அவ்விடம் விட்டு எழுந்தாள்.

அப்பெரியவர், "பெண்ணே நீ ஏன் உன்னை வாட்டிக் கொள்கிறாய். நான் உன்னை மணக்கவே இங்கு வந்தேன் என்னைப் போகச் சொல்வது முறையா? என்றார்.

இச்சொற்களைக் கேட்ட பார்வதி "யான் சிவபெருமானையன்றி வேறு யாரையும் மணக்க மாட்டேன் என்று சொல்லித் தன் இருசெவிகளையும் பொத்திக்கொண்டு அவ்விடம் விட்டு அகல முயன்றாள். அப்போது இனியும் தேவியையும் சோதிக்கலாகாது என்று நினைத்த சிவபெருமான் அவளுக்கு விடைவாகனத்தில் காட்சியளித்தார். அவளை நோக்கிப் "போதும் உன் தவத்தை நிறுத்து" எனும் பொருள்பட "உமா' என அழைத்தார். பின்னர் அதுவே அவள் பெயராயிற்று. அவளிடம் "தேவி, உன் அன்பின் பெருக்கால் அகம் மகிழ்ந்தேன். நாளையே மணம் பேச வருகின்றேன். நீ உன் தவத்தைக் கலைத்து அரண்மனைக்குச் செல்வாய்," என்று மொழிந்து மறைந்தருளினார்.

பரமசிவன் பார்வதி தேவிக்குக் காட்சியளித்து "உமா" எனும் பேர் சூட்டி மணம் பேச வருவேன் என்றதைப் பார்வதியின் தோழியர்கள் சென்று இமவானிடமும் மேனையிடமும் கூறினர்.

மிக்க மகிழ்ச்சி கொண்ட அரசனும் அரசியும் தவச்சாலைக்கு வந்து, உமா தேவியாரை அழைத்துக் கொண்டு அரண்மனைக்குத் திரும்பினர். பிள்ளை வீட்டார் பெண் வீட்டிற்கு வந்து மணம் பேச வேண்டியது மரபென்பதால் சிவபெருமான், சப்த ரிஷிகளை அழைத்துத் தனக்காக இமயமலை அரசனிடம் பெண் கேட்டு வரும்படி அவர்களை அனுப்பிவைத்தார்.

அந்த முனிவர்கள் அவ்வாறே இமயமன்னனிடம் சென்றுச் சிவபெருமானுக்காகப் பெண் கேட்டுத் திருமணத்தை நிச்சயித்துத் திரும்பினர்.

இமயமன்னன் தனது மகளான உமாதேவியின் திருமணம் உறுதியானதும் தேவதச்சனைக் அழைத்துத் தனது தலைநகரான ஔஷதிப் பிரஸ்தத்தை இந்திர லோகம் போல அமைப்பாயாக'' என்று கூறினான். அதன்படியே பூந்தடாகங்களும், பொன்மாளிகை, மாடங்களும் அமைக்கப்பட்டன. நகரமெங்கும் மங்கலப் பொருள்களான வாழை, பாக்கு, தென்னை முதலிய தோரணங்களையும் மலர்மாலைகளையும் கொண்டு அழகுபடுத்தினர். அந்த நகரின் வெளியே பதினாயிரம் யோசனைப் பரப்புள்ள இடத்தைச் சமப்படுத்தி அதனைச் சுற்றி மதில் அமைத்து அதற்கு நான்கு பக்கங்களிலும் வாயில் அமைத்தனர். அப்பரப்பின் மையத்தில் பொன் மயமான மண்டபமும், அதன் நடுவில் இந்திர நீலக் கற்களினாலான சிம்மாசனமும் அதனைச் சூழ, பலரும் அமரப் பலவகையான ஆசனங்களையும் அமைத்தனர்.



நகர் முழுவதையும் நன்கு அலங்கரித்து வீதிகளில் வாசமுள்ள பன்னீர் தெளித்துக் கற்பக மலர்களைத் தூவினர்.

இறைவனின் திருமண விழாவைக்காண முனிவர், கின்னரர், கிம்புருஷர், வித்யாதரர்கள் முதலான பதினெண்கணங்களும் அம்மண்டபத்தில் எள்விழ இடமின்றிக் கூடினர்.

தெய்வப்பெண்களுடன் லட்சுமி, சரஸ்வதி, சப்தமாதர்கள் முதலியோர்கள் கூடிமணப் பெண்ணாகிய பார்வதிதேவியை நன்கு அலங்கரித்தனர்.

இமவான் திருக்கயிலாயத்திற்குச் சென்று சிவபெருமானைத் தரிசித்துப் "பெருமானே, சோதிடர்கள் குறித்துள்ளப் பங்குனி உத்திரநாளாகிய இன்றைக்குத் தாங்கள் எழுந்தருளி எனது மகளைத் திருமணம் புரிந்தருள வேண்டுமென்றான்.

அதற்குச் சிவபெருமான், "அன்பனே இன்றே எமது வரம்பிலாக் கணங்களுடன் எழுந்தருள்கின்றோம். நீ முன்னே செல்வாய்" என்று மொழிந்தார்.

அவன் விடைபெற்றுக்கொண்டு சென்ற பின்னர் நந்தியம்பெருமானை அழைத்து. அன்பனே ! நமது கணங்களைத் திருமணத்திற்கு அழைப்பாய் என்றார்.



நந்தி நினைத்த மாத்திரத்திலேயே காலாக்கினி ருத்திரர், கூச்மாண்டேசர், ஆட்கேசர், மகாசாத்தன்., ஏகாதசருத்ரர், உருத்திர கணங்கள், பவர் முதலான அஷ்டமூர்த்திகள் ஆகியோரும். குண்டோதரன், கண்டாகர்ணன், பினாகி, பானுகம்பன், சங்குகர்ணன், முதலான சிவபூதகணத் தலைவர்கள், அவர்களின் படையில் உள்ள பூதர்கள், திருமால், பிரமன் அஷ்டதிக்குபாலகர் முதலான தேவர்கள், சூரியன், சந்திரன், கிரகங்கள், நட்சத்திரங்கள் அஷ்டவசுக்கள், வித்யாதரர்கள் முனிவர்கள் ஆகிய அனைவரும் ஒன்றாக ஒரு நொடியிற்கூடினர்.

அவர்களை நோக்கி, "நந்தியம்பெருமான் நீங்கள் அனைவரும் திருமணத்தில் கலந்து கொண்டு சிவபெருமானின் அருளைப் பெறுக," என்று ஆணைமொழிந்தார்.

அப்போது பிரமன் சிவபெருமானை நோக்கி, ஐயனே, தாங்கள் திருமணக் கோலம் கொள்ள மகுடம் புனைந்து இந்த ரத்தினாபரணங்களை அணிந்து எங்களை மகிழ்விக்க வேண்டுமென்று சொல்லி அவற்றை அவர் முன் நீட்டினான்.

சிவபெருமான் மெல்லப் புன்முறுவல் பூத்துத் தன் அருட்சத்தியாலே தனது பன்றிக்கொம்பு ஆமையோடு, சிரமாலை ஆகியவற்றை இரத்தின ஆபரணங்களாகும்படியாகவும். ஜடாமகுடத்தை. வைரக்கிரீடமாகவும் மாற்றி அமைத்துக்கொண்டார்.

பின்னர் சிவபெருமான் கயிலையைவிட்டுப் புறப்பட்டார். அமரர்கள் துதிபாடவும், அரம்பையர்கள் ஆடவும், கும்போதரனின் புயத்தின்மீது திருவடிகளை வைத்து இடப வாகனத்தின் மீதுச் சிவபெருமான் எழுந்தருளினார்.

அப்போது, விநாயகர் ஐநூற்றேழு கோடி பூதங்கள் சூழவந்து அவரை வணங்கி முன்னே சென்றார்.

பின்னர் இடபவாகனத்தின் மீது எழுந்தருளிய பெருமானுக்குச் சூரிய, சந்திரர் தண்ணிழற் குடைகளைப்பிடித்தனர், வாயு சாமரம் வீசினான், வருணன் சாந்தாற்றினையும், இந்திரன் ஆலவட்டத்தையும் பிடித்து முன்னே செல்ல பூதகணங்கள் ஏழுகோடி இசைக்கருவிகளை முழக்கிக் கொண்டு முன்னே வரவும் பெரிய ஊர்வலமாக இமவானின் திருநகரை அடைந்தனர்.

இமவானும் அவனுடைய தேவியரும் சிவபெருமானைப் பூரணகும்பமும் பொற்பாலிகைகளும் வைத்து வணங்கி வரவேற்றனர். பின்னர் அவருடைய திருவடிகளைக் காமதேனுவின் பாலால் முழுக்காட்டி, சகல புவனப் புனித நீர்களாலும் நீராட்டிக் கற்பக மலர்களைச் சூட்டி வழிபாடு செய்து வரவேற்று, நந்தி விளக்கு ஏந்தி அழைத்துச் சென்று திருமண மண்டபத்தில் உள்ள பொன்மேடையின்மீது அமைந்த இரத்தின சிம்மாசனத்தின்மீது அமர்த்தினர்.

அப்போது உலகத்திலுள்ள அனைவரும் இமயமன்னனின் தலைநகரான "ஔஷதிப் பிரஸ்தத்தில்" கூடியதால் பூமியின் சமநிலை பாதிக்கப்பட்டது. இதனால் பூமியில் நடுக்கமும், தளர்வும் உண்டாயிற்று. அதனால் வடபகுதி தாழ்ந்து தென்பகுதி உயர்ந்தது. அனைவரும் கூடி அதனைச் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர்.

சிவபெருமான் அங்குள்ளவர்களை நோக்கி உங்களில் யாராவது தென்திசைக்குச் சென்று உங்கள் தவ வலிமையால் பூமியைச் சமப்படுத்துங்கள் என்றார். எல்லோரும் அதற்கு மறுமொழி பேசாமல் அமைதியாக இருந்தனர்.

சிவபெருமான் அகத்தியரை நோக்கி, "குறுமுனியே உலகம் வடக்கே சரிந்ததால் இமயமலையும் தாழ்ந்து விட்டது. சுவர்க்கம் இதைவிடச் சாயும், மேருமலையும் நிலைதவறும் எனவே நீ தென்னாட்டிற்குச் சென்று இதனைச் சமன் செய்வாய்." என்றார்.

(ஆயிரம் மூட்டை பஞ்சுப் பொதிகளைச் சிறிய இரும்புக்கட்டியால் ஈடுசெய்வது போலப்

பார்ப்பதற்குச் சிறியவராக இருந்தாலும் அகத்தியர் பிரபஞ்சத்திற்கு இணையான வல்லமையைப் பெற்றிருந்தார்.)

சிவபெருமானின் ஆணையைக் கேட்ட அகத்தியர் மனம் வருந்தினர். "ஐயனே அடியேன் என்ன குற்றம் செய்தேன், தங்கள் திருமணக் கோலக் காட்சியை நான் காணவேண்டாமா?" என்று பணிவாக வேண்டினார்.

முனிவனே, "தயங்காதே நீ, பொதிய மலைக் குச் செல். தென்னகத்தில் நீ விரும்பிய இடங்களி லெல்லாம் இத்திருமணக் கோலக்காட்சியினை உனக்கு காட்டுவோம். அங்கு மகிழ்வுடன் தரிசிக்க லாம்." என்று கூறி விடைகொடுத்தார்.

அதன்படியே அகத்தியர் தன் அட்டமா சித்திகளைப் பயன்படுத்தி வழியில் வில்லவன், வாதாபியை எனும் அசுரர்களை அழித்து, விந்திய மலையின் கர்வத்தை அடக்கிப் பொதியமலைக்கு ஒரு நொடியில் வந்து சேர்ந்தார்.

அவருடைய வரவால் பூமி சமநிலை எய்தியது. உலகம் மகிழ்சியடைந்தது.

பின்னர், சிவபெருமான் உமாதேவியை அழைத்து வருமாறு கூறினார். துர்க்கை முன்னே அம்பிகையின் வரவைக் கூறிவர, இந்திராணி தாம் பூலம் தாங்க, பாதாளகங்கை, ஆகாயகங்கை, மண்ணுலககங்கை ஆகிய கங்கைகள் மூவரும் கவரிகள் வீச, காளிதேவி குடைபிடிக்க, லட்சுமி, சரஸ்வதி இருபுறம் தாங்கிப் பற்றிவர வெண்பனி மலைவல்லியாகிய உமாதேவியார் தன் அரண்மனை யிலிருந்து எழுந்தருளி வந்து மணமேடையில் வீற்றிருக்கும் சிவபெருமானை வணங்கினாள்.

பின்னர், அவர் அருகில் அவளை அமர்த்தி, மேனை நீர் வார்க்க இமவான் சிவபெருமானின் திருவடிகளைப் பூசித்தான். அதன் பிறகு தேவியின் கரத்தைச் சிவபெருமானின் கரத்தின் மீது வைத்து "அடியேன்" புதல்வியைத் தங்களுக்குத் தந்தேன்" என்று கூறி தாரை வார்த்து அளித்தான்.

பின்னர், பிரமதேவன் மந்திரங்களைச் சொல்ல தேவகுரு, அசுரகுரு முதலியோர் திருமணத்தை நடத்தினர். விநாயகப்பெருமான் சாட்சி பூதராக எழுந்தருளினார். அடுத்தாக சிவபெருமான் அம்மி மிதித்து, அருந்ததி காட்டி உமாதேவியாருக்கு திருமங்கலநாண் சூட்டினார். இனிதே திருமணம் நிறைவுற்றது. தேவர்கள் பூமாரி பொழிந்தனர். உலகம் உவகை எய்தியது.

இமவான், அங்கு வந்த அனைவருக்கும் சந்தனம், பன்னீர், உண்பொருள்யாவற்றையும் அளித்து மகிழ்ந்தான்.

பின்னர் யாவரும் காணச் சிவபெருமானும் உமாதேவியாரும் திருமணக்கோலத்துடன் இடபவாக னத்தில் ஏறிக்காட்சி கொடுத்து, இமவான் மேனையிடமும் மற்றுள்ளோரிடமும் விடைபெற்றுக் கொண்டு திருக்கயிலையை அடைந்து அங்குப் பொன்மண்டபத்தில் வீற்றிருந்து அருளினார்கள்.

அன்றுமுதல் உமாமகேசுவரராக எம்பெருமா னும் தேவியும் காட்சியளித்து, அன்பர்களுக்கு அருள்பாலித்து வருகின்றார்கள்.

இந்த திவ்யதம்பதியரின் திருவடிவினைக் கண்ணால் கண்டு வணங்குவதே இம்மையில் பதினாறு செல்வத்தையும் மறுமையில் மோட்சத்தை யும் அளிக்குமென்று ஆன்றோர்கள் கூறுவர்.



திருமணக்கோலநாதர்- திருவேற்காடு
முன்புறம் சிவலிங்கவடிவில் திருவேற்காட்டீசுவரர்

தேவாரத்தில் உமையவள் திருமணம்

திருநாவுக்கரசுப்பெருமான் பார்வதிதேவி கயிலையை விட்டுப் பிரிந்து சென்று இமவானின் மகளாகித் தன்னை வருத்திக் கொண்டு மாதவம் செய்ததையும் இறைவன் அவ்ள் விரும்பியவாறே அவளை மணந்து கொண்டு அருள்பாலித்ததையும் திருச்சேறைப்பதிகத்தில்,

"பெருந்திரு இமவான் பெற்ற
பெண் கொடி பிரிந்து பின்னை
வருந்துவான் தவங்கள் செய்ய
மாமணம் புணர்ந்து மன்னும்
அருந்திரு மேனிதன்பால்
ஆங்கொரு பாகமாகத்
திருந்திட வைத்தாற் போலும்
சேறைச் சென்னெறிச் செல்வனாரே

என்றும், அவளுடைய தவத்தின் நிறையைச் சிவபெருமான் சோதிக்கச் சென்றதைத் திருவீழி மிழலைப் பதிகத்தில் மெல்லியாளால் தவத்தின் நிறை அளக்கலுற்றுச் சென்றானை என்றும் குறிக்கின்றார்.

இதனையொத்ததாக சுந்தரர் பார்வதி தேவியார் பெரிய தவத்தைச் செய்ததையும் சிவபெருமான் அவளுடைய தவத்தைச் சோதித்து அவளுடைய உறுதியைக் கண்டு மகிழ்ந்து அவளுக்கு வேண்டிய வரங்களைத் தந்து திருமணம் செய்துகொண்டார் என்பதையும் கலயநல்லூர் பதிகத்தின் முதல் பாடலில் அருளிச் செய்துள்ளதைக் காண்கிறோம். அது

"குரும்பை முலை மலர்குழலிக்
கொண்ட தவம் கண்டு
குறிப்பினொடும் சென்றவள்தன்
குணத்தினை நன்கறிந்து
விரும்பு வரம் கொடுத்தவளை
வேட்டருளிச் செய்த
விண்ணவர் கோன் கண்ணுதலோன்"

என்பதாகும்.

இன்னும் ஓரிரு இடங்களில் தேவாரத்தில் இக்காட்சியைக் காணலாம்.

பார்வதி பரிணயம் அல்லது உமாபரிணயம்

உமையம்மை பர்வதராசனுனக்கு மகளாகப் பிறந்ததால் "பார்வதி" என்றழைக்கப்பட்டாள் எனவே உமையின் திருமணம் பார்வதி கல்யாணம் எனப் பட்டது. பார்வதி கல்யாணத்தை விளக்கும் வகையில் பல நெடுங்கதைப் பாடல்களைப் பல கவிஞர்கள் இயற்றியளித்துள்ளனர். இவற்றில் ஒன்றே "பார்வதி பரிணயம்" எனும் நூலாகும். பலர் இதனை நாட்டிய நாடகமாக அமைத்து நடித்துள்ளனர்.

முன்னாளில் கோயில் பணியில் ஈடுபட்டிருந்த ஆடலரசிகள் "பார்வதி பரிணயத்தை" நாட்டிய நாடகமாகக் கோயில்களில் சிறந்த முறையில் நடித்து வந்துள்ளனர். பார்வதி கல்யாணத்தை வில்லுப் பாட்டாகவும், இசைக் கச்சேரிகளாகவும் இப்போதும் பலர் நடத்தி வருகின்றனர்.

ஜாதகதோஷங்களினால் திருமணமாகாதவர்கள் சிவபுராணத்தில் உள்ள பார்வதி கல்யாண வைபவத்தைப் பாராயணம் செய்து வந்தால் அவர்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறும் என்ற நம்பிக்கை நிலவுகிறது.

திருமணங்களில் மணமக்களைச் சிவபார்வதியராகப் பாவித்து ஊஞ்சலில் அமர்த்தி பார்வதி கல்யாணப் பாடல்களைப் பாடுவது வழக்கமாகும். இதில் நவரசங்கள் ததும்பும் பாடல்கள் சிறப்பாகப் பாடப்பட்டன.

உமாமகேசுவரர் திருக்கோலம்

சிவாலயங்களில் நடைபெறும் பெருந்திருவிழாவில் திருக்கல்யாண விழாவிற்கு அடுத்த நாளில் உமாமகேசுவர கோலக்காட்சி என்ற ஐதீக விழா நடைபெறுகின்றது. அந்நாளில் சோமாஸ்கந்தரையும் தனி அம்பிகையையும் ஒரே பீடத்தில் அமர்த்தி சோடச உபசார பூசைகளைச் செய்வர். இது சிவபெருமான் திருமணத்திற்குப் பிறகு உமாதேவியுடன் அமர்ந்து அன்பர்களுக்கு அருள் வரங்களைத் தந்த நிகழ்ச்சியைக் குறிக்கின்றது.

உமாமகேசுவர வடிவங்கள்

உமையோடு கூடியிருந்து மகிழும் சிவபெருமானின் "உமா மகேசுவர வடிவங்கள்" இந்தியா விலும், வடக்கிலுள்ள நேபாளத் திலும் கடல்கடந்த நாடுகளான இந்தோனேஷியா, முதலிய நாடு களிலும் சிறப்பாகப் போற்றப்ப' கின்றன.

தமிழகக் கோயில்களில் உமையும் சிவனும் ஒரேபீடத்தில் அமர்ந்திருக்கும் கோலமே "உமா மகேசுவரர்" என்று போற்றப்படு கின்றது. திருமறைக்காடு, திரு வேற்காடு முதலிய தலங்களில் கருவறையில் சிவலிங்கத்திற்குப் பின்னால் அம்மையும் அப்பனும் ஒரே ஆசனத்தில் அமர்ந்து உமாமகேசுவரராகக் காட்சியளிப் பதைக் காணலாம்.

சிவபெருமான் உமை யைத் திருமணம் செய்து கொண்ட பிறகு உயர்ந்த ஆசனத் தில், தேவியுடன் அமர்ந்திருந்து அத்திருமணத்திற்கு வந்தவர் களுக்கு அனேக வரங்களை வழங்கினார். அந்தக் காட்சியை நினைவூட்டும் வகையில் இந்தத் திருவடிவம் அமைந் திருப்பதால் இதனை திருமண வரதான கோல மென்று அழைக்கப்படும்.இவரை, உமை மணவாளர் எனவும் அழைப்பர். இந்த வடிவங்களில் இறைவன் மேற்கரங்களில் மான், மழு ஏந்திக் கீழ்க்கரங்களில் அபய, சிம்மகர்ண முத்திரை களைத் தாங்கியுள்ளார். வலது காலைத் தொங்கவிட்டு இடது காலை மடித்துப் பீடத்தின் மீது அமர்ந்துள்ளார். இது அகத்திய ருக்குத் தனது திருமணக் கோலத் தினைக் காட்ட கொண்ட வடிவமென்பர். இதனால் இது அகத்தியர் வரதான கோலமென்று அழைக் கப்படும்.



சில தலங்களில், சிவபெருமான் உமையைத் தன் மடிமீது அமர்த்திக் கொண்டு உமாமகேசுவரராகக் காட்சியளிக்கின்றார். திருஉத்தரகோச மங்கையில் அமைந்துள்ள வடிவம் இத்தகையதேயாகும். கேரளம் கர்நாடக



மாநிலங்களிலுள்ள பெரும்பான்மை யான உமாமகேசுவரர் வடிவங்களில் சிவ பிரானின் மடியில் அமர்ந்திருக்கும் உமை யைக் கண்டு மகிழலாம்.

இவ்வடிவத்தினை இரண்டு வகையாகப் பிரிப்பர் முதல் வகை உமையைத் திருமணம் செய்து கொண்ட பிறகு உல்லாசமாக இருப்பதை உணர்த்தச் சிவபெருமான் அவளைத் தன் மடிமீது அமர்த்திக் கொண்டு ஆரத்தழுவி மகிழ்ச்சியை வெளிப்படுத்து வதாகும். இவை உமா ஆலிங்கன மூர்த்தி, உமா சகித மூர்த்தி என்று பலவாறு அழைக்கப்படும்.

இதில் பெருமான் மேற்கரங்களில் மான், மழு ஏந்தியுள்ளார். முன் வலது கையில் அபயமுத்திரை தாங்கி, இடது கையால் அம்பிகையினை அணைத் தவாறு காட்சியளிக்கின்றார்.

இரண்டாவது வகைஅம்பிகை சிவகமங்களின் பொருளை விவரித்துக் கேட்க, பெருமான் அவளைத் தன் மடிமீது அமர்த்திக் கொண்டு அவளுக்கு ஆகமத்தின் உள்ளுறை நுண்பொருளை விளக்கிக் கூறும் வகையில் அமைந்ததாகும். இதில், சிவபெரு மான் இடது கையால் அம்பிகையை அணைத்துக் கொண்டு வலதுகையில் உபதேசிக்கும் நிலையிலான சின்முத்திரையைத் தாங்கியுள்ளார். இத்தகைய வடிவங்கள் உமா உபதேசமூர்த்தி, சாம்பவி தட்சணா மூர்த்தி, சக்திதட்சணா மூர்த்தி என்று பலவகைப் பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

முதலில் சொன்ன அன்புடன் ஆறத்தழுவி மகிழும் உமாமகேசுவரர் ஓவியங்களையும் சிற்பங்களையும் கேரள மாநிலத்திலுள்ள அனேக ஆலங்களில் காணலாம். இவற்றில் இடபமும் சேர்ந்தே அமைக்கப்பட்டுள்ளது. குருவாயூர் கிருஷ் ணன் ஆலயத்துச் சுவர்களில் தீட்டப்பட்டுள்ள இத்தகைய உமாமகேசுவர ஓவியங்கள் கலைச் சிறப்புடன் திகழ்கின்றன.

நேபாளத்தில் அமைந்துள்ள உமா மகேசுவர வடிவங்கள் தனிச்சிறப்பு கொண்டவையாகும். இவை ரூபமண்டனம், விஷ்ணு தர்மோத்திரம் முதலிய நூல்களில் கூறியுள்ளபடி அமைக்கப்பட்டுள்ளன. இதில் உயர்ந்த பீடத்தில் சிவபெருமான் ஒய்யாரமாக வீற்றிருக்கின்றார். அவருக்கு இடப்புறம் உல்லா சமாக உமாதேவியார் சாய்ந்து கொண்டுள்ளாள். அவளுடைய வலதுகை சிவனின் மடிமீது ஊன்றி யிருக்க இடதுகையில் கண்ணாடியை ஏந்தி அழகு பார்த்துக் கொள்கின்றாள். அவர்களுக்கு மேலே கங்கை பட்டாடையை விரித்துக் குடைபிடிப்பது போல் வருகின்றாள். மேலே பிரம்மாவும் விஷ்ணு வும் வணங்கியவாறு உள்ளனர். பக்கவாட்டிலும் பீடத்திலும் கணங்கள் பிருங்கி, விநாயகர், முருகன் ஆகியோர் அமைந்துள்ளனர்.

கம்பீரமும், உல்லாசமும், ஒருசேர அமைந்த முகபாவங்களும் எழிலாக அமைக்கப்பெற்ற இத்தகைய உமாமகேசுவர வடிவங்களை நேபாளத் திலும், திபெத்திலும் பரவலாகக்காண்கிறோம்.



உமாமகேசுவரதத் திருத்தலங்கள்

சிவபெருமான் உமாதேவியாரோடு இணைந்து காட்சிதரும் திருக்கோலமான உமாமகேசுவர வடிவங்கள் எழுந்தருளியுள்ள திருத்தலங்கள் உமாமகேசுவரத் தலங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இத்தலங்களில், பெரும்பாலும் கருவறையில் சிவலிங்கத்திற்குப் பின்னணியில் அமைந்த மேடையின் மீது உமாகேசுவரர் வீற்றிருப்பதைக் காண்கின்றோம். சில தலங்களில் உமாமகேசுவரரைப் பிராகாரத்திலோ, தனிச் சந்நிதிகளிலோ அமைத்து வழிபடுகின்றனர்.

உமாமகேசுவரர் இத்தலங்களில் எழுந்தருளியுள்ளதற்கான காரணத்தைத் தலபுராணங்களில் விரிவாகக் கூறுகின்றன. இவற்றின் அடிப்படை பலவகையாகும். இவற்றில் சிலவற்றை இப்பகுதியில் காணலாம்.

1. உமாமகேசுவரர் திருமணக் கோலக்காட்சி திருத்தலங்கள்

உமாதேவியின் திருமணத்தின்போது பூமியைச்சமப்படுத்த சிவபெருமான் ஆணைப்படி தென்னாட்டிற்கு வந்த அகத்தியர் பலவேறு தலங்களைத், தரிசித்து அங்கெல்லாம் தம்பெயரால் லிங்கம் அமைத்து வழிபட்டார். சில இடங்களில் யோக நிலையில் நின்று பெருமானின் திருமணக் கோலத்தைக் கண்டு களித்தார். தான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற முறையில் தன்னைச் சார்ந்தவர்களும் அந்தக்கோலத்தைக் காணும்படி செய்தார்.

அன்பர்கள் அப்போது கயிலையில் நடைபெற்ற திருமணத்தின் ஒரு நிகழ்ச்சியைக் கூட விடாமல் பார்த்தார்களாம். இதனை வேதாரண்ய புராணம் தேவியார் திருமணவேள்வியால் ஏற்பட்ட புகையினால் கலங்கிய கண்களோடும் காட்சியளித்ததையும் அன்பர்கள் கண்டார்கள் என்று கூறி இது போன்ற நுண்மையான பல திருமணக்காட்சிகளையும் கண்டு மகிழ்ந்தார்கள் என்று குறிப்பிடுகின்றது.

இவ்வாறு அகத்தியருக்குச் சிவபெருமான் தன் திருமணக் கோலத்தைக் காட்டிய திருத்தலங்கள். "கல்யாணபுரம்", "மணவாளஸ்தலங்கள்", "உமாமகேச்சுவரத்தலங்கள்" என்று பலவாறு அழைக்கப் படுகின்றன. இவற்றில் மூலத்தானத்திலேயே ஸ்ரீகண்டராகிய மகேச்வரர் உமையுடன் திருமணக் கோலத்தில் எழுந்தருளியுள்ளார். இத்தகைய திருத்தலங்கள் இருபத்தொன்று எனவும், பதினாறு எனவும் இருவகையானகருத்து நிலவுகின்றது. இத்தகைய தலங்களில் அகத்தியருக்குத் தனியான சந்நிதியும், அகத்தியரால் உண்டாக்கப்பட்ட தீர்த்தங்களும் அமைந்துள்ளன.

இத்தலங்களில் முதன்மை பெற்றது திருமறைக்காடு என்னும் வேதாரண்யமாகும். இதனை ஒத்ததாகச் சென்னையை அடுத்த திருவேற்காடு, திருமழிசை, கும்பகோணத்தை அடுத்த நல்லூர் பொன்னமராவதியை அடுத்துள்ள பிரான்மலை முதலியனவும் உமாமகேசுவரத் தலங்களாகப் போற்றப்படுகின்றன.

மறைக்காடுறையும் மணவாளன்

தஞ்சை மாவட்டத்தில் கீழைக் கடலோரத்தில் வேதாரண்யம் இருப்புப்பாதை நிலையத்தையொட்டி வளம் நிறைந்த ஊராக வேதாரண்யம் அமைந்துள்ளது. இவ்வூருக்கு மயிலாடுதுறை, காரைக்குடி, நாகப்பட்டினம் முதலிய இடங்களில் இருந்து நிறைய பேருந்து வசதியுள்ளது.

இது திருமுறைகளில் திருமறைக்காடு என வழங்கப்பெறும். இங்கு அகத்திய முனிவர் தங்கி வழிபாடு செய்து திருமணக்கோலக் காட்சியைக் கண்டு களித்தார் என்பர். அவர்தனது வழிபாட்டிற்காக அமைந்த கோயில் அகத்தியான் பள்ளி என்று தனித் தலமாக உள்ளது. இங்கு அகத்தியர் திருஉருவம் அமைந்த தனிச்சந்நிதியும் உள்ளது..

வேதாரண்யேச்சுவரர் ஆலயத்தின் கருவறையில் பெருமான் மறைக்காடர் எனும் பெயரில் சிவலிங்க வடிவமாக எழுந்தருளியுள்ளார். அவருக்குப் பின்புறம் பெரிய மேடைமீது உமாமகேசுவரர் என்னும்"மறைக்காட்டுறையும் மணவாளர்" தேவியுடன் எழுந்தருளியுள்ளார். இவரே அகத்தியருக்குத் திருமணக்கோலம் காட்டியபிறகு அப்படியே சம்புபட்சத் திருமேனியாக எழுந்தருளியுள்ளார் என்பர்.

அகத்தியருக்கு இவர் சித்திரைமாதம் பூர்வ பட்ச சப்தமி நாளில் (ஞாயிற்றுக்கிழமை உச்சிப் போதில்) திருமணக்காட்சி கொடுத்ததால் அன்று இவருக்கு அபிஷேகம் செய்து சந்தனக் காப்பு



உமாமகேசுவரர் திருமழிசை
(காட்சி கொடுத்த நாயகர்)

சாத்தி சிறப்புப் பூசனை செய்யப்படுகின்றது.

இராமர் இப்பெருமானை வழிபட்டுப் பேறு பெற்றார் என்பர். இந்நாளில் மாசி மகநட்சத்திரத்தில் திருமணத் திருவிழா கொண்டாடப்படுகின்றது. திருக் கயிலாயத்தில் இருப்பது போலவே உமாமகேச்சுவரர் இங்கு காட்சியளிப்பதால் இது தட்சண கயிலாயம் எனப்போற்றப்படுகின்றது.

இக்கோயிலின் தென்மேற்கு முனையிலும் உமாமகேசர் எழுந்தருளியிருப்பது கண்டு களிக்கத் தக்கதாகும்.

திருஞானசம்பந்தப்பெருமான் "இழைவளர் தருமுலை மலைமகள் இனிதுறை தரும் எழில் உருவினன்" எனவும், திருநாவுக்கரசர் மறைக்காட்டுறையும் மணவாளன் என்றும் இறைவனின் திருமணக் கோலத்தைப் பாடிப்பரவுகின்றனர்.

வேதாரண்யம் தலபுராணத்தில் மணவாள சருக்கம் எனும் பகுதியில் சிவபெருமானின் திருமண வைபவமும் அகத்தியருக்கு இங்கு காட்சி கொடுத்து அமர்ந்த வைபவமும் சிறப்பாகக் கூறப்பட் டுள்ளன.

இடும்பாவனத்து உமாமகேசுவரர்

வேதாரண்யத்தை அடுத்துள்ள இடும்பாவனம் எனும் தலத்திலும் கருவறையில் சிவலிங்கத்திற்குப் பின்புறம் உமாமகேசுவரர் எழுந்தருளி அருள்பாலிக் கின்றார். இது தேவாரப் பாடல் பெற்ற திருத்தலமாகும். அகத்தியருக்கு இறைவன் திருமணக் கோலங்காட்டி அருளிய தலங்களில் ஒன்றாகும்.

இங்குள்ள உமாமகேசுவரரைத் திருஞான சம்பந்தர் "மலையார்தரு மடவாளொரு பாகம் மகிழ் வெய்தி" என்றும், மடவாளொடு பாகம் மகிழ் வெய்தி" என்றும் தேவாரத்தில் குறிப்பிடுகின்றார்.


இங்கு மூலத்தானத்தில் சிவலிங்க மூர்த்தியாக எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்குச் சற்குணநாதர் என்றும், அம்பிகைக்கு மங்களநாயகி என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

இத்தலத்தைச் சுற்றியுள்ள சில தலங்களிலும் கருவறையில்,உமாமகேசுவரர் எழுந்தருளியுள்ளதைக் காணகிறோம்.

திருவேற்காட்டு மணக்கோலநாதர்

சென்னையை அடுத்துள்ள திருவேற்காடு தேவாரப் பாடல் பெற்றத் திருத்தலமாகும். இங்கு சிவபார்வதியர் அகத்தியருக்குத் தமது திருமணக் கோலத்தைக் காட்டினார் என்பர். இங்கு கருவறையில் சிவலிங்கமாகத் திகழும் வேற்காட்டீசுவரருக்குப் பின்னால் அமைந்த மேடையில் உமையுடன் பெருமான் திருமணக் கோலநாதராகக் காட்சியளிக் கின்றார். சுவாமியின் வலப்புறம் விநாயகர் சாட்சி பூதராக வீற்றிருக்கின்றார்.

ஆண்டு தோறும் சித்ராபௌர்ணமியில் உற்சவமூர்த்தியான வேற்காட்டீசருக்கும், வேல்நடுங் கண்ணி அம்பிகைக்கும் திருமணம் நடத்தப் படுகின்றது. அப்போது அகத்தியமுனிவரின் திரு வுருவம் எழுந்தருளி வைக்கப்பட்டு அவருக்குத் திருமணக்கோலம் காட்டும் ஐதீகம் நடைபெறுகின்றது. இறுதியில் அகத்தியருக்கும் சுவாமி அம்மனுக்கும் ஏககாலத்தில் தீபாராதனை நடைபெறுகின்றது. (பார்க்க படம் பக்கம் 201ல் திருவேற்காடு மணவாளர்)



திருமறைக்காடுறையும் மணவாளன் - திருமறைக்காடு வேதாரண்யம்

திருமழிசை மணவாளன்

சென்னை அடுத்துள்ள திருமழிசை திருவேற்காடு தலத்தோடு தொடர்புடையதாகும். இங்கு ஒத்தாண்டேசுவரர் ஆலயம் அமைந்துள்ளது. இங்கு கருவறையுள் லிங்கத்திற்குப் பின்புறம் அமைந்துள்ள மாடத்தில் உமாமகேசுவரர் எழுந்தருளியுள்ளார். அகத்தியர் இங்கு வழிபட்டு இறைவனின் திருமணக் காட்சியைத் தான் கண்டதுடன் அன்பர்களுக்கும் காட்டி அருளினார் என்பர்.

திருவேற்காட்டில் உமா மகேசுவரரின் திருமணக் காட்சியைக் கண்டுகளித்த அகத்தியர் தம் சீடரான புலத்தியருக்கும் பிறருக்கும் அதன் சிறப்பைக் கூறினார். அவர்கள் ஐயனே நாங்களும் அக்காட்சியினை கண்டுகளிக்க விரும்புகின்றோம். எமக்கு அதனைக் காணும் வகை செய்க என்று கூறி வேண்டினர். அவரும் அப்படியே ஆகட்டும் என்றார். மறுநாள் அகத்தியர் திருவேற்காட்டிற்கு

அருகிலுள்ள அழிஞ்சல் வனத்தின் நடுவே அமைந்திருந்த லிங்கத்தை வணங்கி யோகத்தில் ஆழ்ந்திருந்தார். அந்தச் சிவலிங்கத்திலிருந்து உமா தேவியுடன் சிவபெருமான் வெளிப்பட்டு அனை வருக்கும் முன்பு நடைபெற்ற தமது திருமணக் காட்சியைக் காட்டினர். அனைவரும் அதைக் கண்ட பேரின்பம் பெற்றனர். அந்த இடமே திருமழிசை என்ற தலமாகத் திகழ்கிறது. இந்த ஆலயம் கல்வெட் டுக்களில் அகத்தீசுவரம் என்று அழைக்கப்படுகிறது.

நல்லூர் உமாமகேசுவரர்

தஞ்சைத் தரணியில் கும்பகோணத்திற்கு அருகில் அமைந்துள்ளது. நல்லூர் ஆகும். சிவபெரு மான் அப்பர்சுவாமிகளுக்குத் தமது திருவடிகளைத் தலையில் சூட்டி அருள்பாலித்த தலம்.

அகத்தியர் இங்கு வழிபட்டு உமா மகேசு வரரின் திருமணக் கோலத்தைக் கண்டு மகிழ்ந் தார். இதனைக் குறிக்கும் வகையில் கருவறையில் சிவலிங் கத்திற்குப் பின்புறம் உயர்ந்த மேடையில் பெரிய அளவிலான உமாமகேசுவரர் வடிவம் அமைக்கப் பட்டுள்ளது. இதன் இடப்புறமும் வலப்புறமும் பிரமனும், திருமாலும் காட்சியளிக்கின்றனர்.

இத் திருவுருவங்கள் சுதையால் செய்யப்பட்டு பலவகை வண்ணங்களால் அழகுபடுத்தப்பட்டு, பொலிவுடன் விளங்குகின்றன.

இத்தலத்தில் சிவலிங்கமாக விளங்கும் பெருமானுக்குப் பஞ்சவர்ணேசுவரர் என்றும் அம்பிகைக்குக் கல்யாணசுந்தரி என்பது பெயராகும். இக்கோயில் கட்டுமலை அமைப்புடையதாகும். இம்மலைக்குச் சுந்தரிகிரி என்பது பெயர்.

பிரான்மலை உமாமகேஸ்வரர்

கடை ஏழுவள்ளல்களில் ஒருவனான "முல்லைக்குத் தேர்தந்த பாரிவள்ளல்" ஆண்டமலை அந்நாளில் பறம்புமலை எனப்பட்டது. அதுவே இந்நாளில் பிரான்மலை என வழங்குகின்றது.

இம்மலையின் அடிவாரத்திலும் மலைக்குச் செல்லும் வழியின் மையத்திலும் உச்சியிலுமாக மூன்று கோயில்கள் உள்ளன. இவை மூன்றும் முறையே பூமி, அந்தரம், சுவர்க்கம் என அழைக்கப்படுகின்றன.

இங்கு பூமி ஆலயமாகிய மலையடிவாரக் கோயிலில் கொடுங்குன்றநாதர், குயிலமுதநாயகி-யுடன் எழுந்தருளியுள்ளார்.

அந்தரம் என்னும் மலைப்பாதையின் நடுவில் அமைந்துள்ள கோயிலில் பைரவர் சிறப்புடன் காட்சி யளிக்கின்றார். மலை உச்சியில் உள்ள சுவர்க்கக்கோயி லில்தான் அகஸ்திய முனிவருக்குக் காட்சியளித்த உமையொருபாகர் ஒரே பீடத்தில் எழுந்தருளி யுள்ளார். இருவருக்கும் இரண்டு திருக்கரங்களே உள்ளன. இறைவன் வலக்கரத்தில் மழு (செண்டு) ஏந்தி இடக்கரத்தைத் தொடைமீது வைத்துள்ளார். அம்பிகை இடக்கரத்தில் மலர் ஏந்தி வலக்கரத்தை தொடைமீது ஊன்றி வீராசனத்தில் அமர்ந்துள்ளாள்.

திருக்கயிலாயத்தில் நடைபெற்ற உமாமகேச் சுவரத் திருமணத்தை நினைவு கூறும் வகையில் அமைந்துள்ளதால் இத்திருத்தலம் தட்சண கயிலாசம் என்றழைக்கப்படுகின்றது.

இவர்களுக்கு வெண்மையான ஆடைகள் வெள்ளைப்பூக்கள் மட்டுமே பயன்படுத்தப்படு கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். பாறையைக் குடைந்து செய்யப்பட்ட கருவறையில் வீற்றிருக்கும் இந்த உமாமகேச்சுவரர் சிலாசுதைச் சிற்பமாக இருப்பதால் தீபாவளித்திருநாளில் மட்டுமே பெரிய அளவில் அபிஷேகம் செய்யப்படுகின்றது.

இக்கோயிலுக்கு 4கி.மீ. தொலைவில் ஒரு சுனை உள்ளது. இச்சுனைக்கருகில்தான் அகஸ்திய முனிவர் தவம் செய்து உமாமகேச்சுவரரின் திருமணக் கோலக்காட்சியைப் பெற்றார் என்று கூறுகின்றனர்.

இங்குள்ள கோயில்கள் விசாலமானதாகவும் சிறந்த வேலைப்பாடுகளுடன் பல தெய்வச் சந் நிதிகளை உள்ளடக்கியவாறும் அமைந்துள்ளது. திரு வண்ணாமலை குன்றக்குடி ஆதீனத்தாரால் இக் கோயில் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

இங்குள்ள இறைவரை மங்களநாதர், கொடுங்குன்றமுடைய நல்லமங்கைபாகர், குன்றாண்ட நாயகர், மணவாளர் எனப் பலவாறு இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

திருஞானசம்பந்தப்பெருமான் இங்கு உமை யவளோடு வீற்றிருக்கும் பெருமானின் எழிலைத் "தேனிற் பொலி மொழியாளோடு மேயான்"., "பெருமா னவன் உமையாளொடுமேவும் பெரு நகரான்". "நலமங்கை பாகத்தான்". "உமையாளொடு மேவு நாதன்"" என்று பலவாறு துதிக்கின்றார்.

உமைக்கு அருள்செய்யும் உமாமகேசுவரர் (போக நாயகர்)

சிவபெருமான் உமாதேவியைத் தன் இடது மடிமீது அமர்த்திக் கொண்டு காட்சியளிக்கும் திருக்கோலமும் "உமாமகேசுவரர்" வடிவமென்றே போற்றப்படுகின்றது. இது இரண்டு வகையில் அமைகின்றது. முதல்வகை "போக உமாமகேசுவரர்" என்றும் மற்றது உபதேச உமாமகேசுவர வடிவமென்றும் அழைக்கப்படுகின்றது. போக உமாமகேசுவர வடிவங்களைக் கேரளாவிலுள்ள சில ஆலயங்களில் ஓவியங்களாகக் காண்கிறோம். தென்னகத்து ஆலயங்கள் பலவற்றில் அம்பிகையை மடிமீது அமர்த்திக்கொண்டு அவளுக்கு ஆகமங்களின் நுண்பொருளை விளக்கும் திருக்கோலத்தைக் கண்டு மகிழ்கிறோம். இவற்றில் முதன்மை பெற்றது உத்தரகோசமங்கை உமாமகேசுவர வடிவமாகும். இவ்வடிவங்களில் பெருமான் மேற்கரங்களில் சூலத்தையும் பாசத்தையும் ஏந்தியுள்ளார். கீழ் வலது கரம் அபயம் அல்லது சின்முத்திரையைத் தாங்க•இடது கரம் தேவியை அணைத்துக் கொண்டுள்ளது. இவற்றுள் சிலவற்றை இப்பகுதியில் காணலாம்.


உத்திரகோச மங்கை

பாண்டிநாட்டுத் திருவாசகத் தலமான உத்திர கோசமங்கை இராமநாதபுரத்திற்கும் பரமக்குடிக்கும் இடையில் அமைந்துள்ளதாகும். இங்குள்ள மங்கள நாதர் ஆலயத்தில் வடக்குப் பிரகாரத்தில் நடராஜருக் கென பெரிய சந்நிதி அமைந்துள்ளது. அதனோடு இணைந்தவாறு சிறு சுற்றுப் பிராகாரத்துடன் கூடிய கட்டுமலை உள்ளது. அதன் மீது கருவறையும் முக மண்டபமும் கூடியதாக சிற்றாலயம் அமைந்துள்ளது. இதன் கருவறையில் உமா மகேசுவரர் எழுந்தருளி யுள்ளார்.

சிவபெருமான் உயர்ந்த மேடையின் மீது ஆசனத்தில் அமர்ந்துள்ளார். மேல் வலது கரத்தில் சூலமும் இடதுகரத்தில் பாசமும் திகழ்கின்றன. கீழ் இடது கரத்தால் தனது இடது மடிமீது அமர்ந்துள்ள அம்பிகையை அணைத்துக் கொண்டு வலது கரத்தால் ஞான உபதேசம் செய்கின்றார். கலைநயம் மிக்க கல்திருமேனியாக இவ்வடிவம் விளங்குகின்றது.

இந்தக் கட்டுமலைக்கு வடக்கிலும் தெற்கிலும் ஏறியிறங்கத் தனிப்படிகள் அமைந்துள்ளன. இம்மலை மகேந்திர மலையினை நினைவூட்டக் கட்டப்பட்ட தாகும். மன்னுமாமலை மகேந்திரம் அதனில் சொன் ன ஆகமம் தோற்றுவித்தருளியும் என்றபடி அம்பி கைக்குச் சிவபெருமான் மகேந்திரமலைமீது அமர்ந்து சிவா கமங்களை அருளிச் செய்தார் என்று திருவாச கம் குறிப்பிடுவது காண்க.

இது அம்பிகை சிவனுடைய சாபத்தால் மீனவ குலத்தில் பிறந்து வளர்ந்து உரியவயதில் அவரால் ஆட்கொள்ளப்பட்டு அவரிடமிருந்து வேத ஆகமங்களின் பொருளை அறிந்து கொண்ட இடமாகும். உத்திர (மேலான) கோசத்தினை



(ஆகமநூல்களை) மங்கைக்கு (பார்வதிக்கு) அருளிச் செய்யப்பட்ட இடமாதலின் இது உத்திரகோசமங்கை என்றழைக்கப்படுகின்றது என்பர். இவருக்கு நேர் எதிரில் மாணிக்கவாசகருக்கான சிற்றாலயம் அமைந்துள்ளது. தினமும் உச்சி காலத்தில் இந்த கட்டுமலை மீதுள்ள உமாமகேசுவரருக்கும் மரகதலிங்கத்திற்கும், மணிவாசகப் பெருமானுக்கும் ஏககாலத்தில் தீபாராதனை நடைபெறுகின்றது.

திருவிடைமருதூர் (சாம்பவி உமாமகேசுவரர்)

தென் கயிலாயங்களில் ஒன்றாகப் போற்றப்படும் திருஇடைமருதூர் மகாலிங்கசுவாமி ஆலயத்தில் உமாமகேசுவரர் பலவேறு அளவுகளில் எழுந்தருளியுள்ளார். தெற்குப் பிராகாரத்தில் அமைந்துள்ள உமாமகேசுவரரின் கல் திருமேனி கலையழகு கொண்டதாகும். வடக்குப் பிரகாரத்திலும் தலமரத்தின் அடியிலும் அளவால் சிறிய உமாமகேசுவர வடிவங்கள் உள்ளன. இவற்றில் சிவபெருமான் உமையைத் தன் மடிமீது அமர்த்திக் கொண்டு காட்சியளிக்கின்றார்.

இவை தவிர, கருவறைக்கு முன்னுள்ள மகா மண்டபத்தில் வடக்குப் பகுதியில் தெற்கு நோக்கிய வாறு அமைந்துள்ள பெரிய அலங்கார வளைவிற்குள் காட்சிதரும் உமா மகேசுவரரைக் காண்கிறோம். இது சுதையால் அமைக்கப்பெற்று வண்ணம் தீட்டப் பட்டுப் பொலிவுடன் காட்சியளிக்கின்றது.

இதில் பெருமான் நாற்கரங்களுடன் விளங்குகின்றார். மேற்கரங்கள் மான் மழு ஏந்த கீழ்க்கரங்களில் சின்முத்திரையும் ஓலைச்சுவடியும் உள்ளன. இடது பக்கம் அம்பிகை அமர்ந்துள்ளாள்.

இவரை இங்கு சாம்பவி தட்சணாமூர்த்தி என்று அழைக்கின்றனர். இவர் அம்பிகைக்கு ஆகமப்பொருளை உபதேசிப்பதுடன் அன்பர்களுக்கும் உபதேசிக்கின்றார் என்பர்.

திருப்புகலூர் சித்தீச்சரத்து உமாமகேசுவரர்

அப்பர்சுவாமிகள் சிவனடிக்கீழ் சேர்ந்த திருப்புகலூரில் ஆலயத்திற்குத்; தென்மேற்கில் சித்தர் கோயில் என்ற தனி சிவாலயம் அமைந்துள்ளது. இதனுள் சித்தீசுவரர் என்ற லிங்கமும் அதன் பின்னனியில் பெரிய சுதைச் சிற்பமாக உமாமகேசுவரர் திருவுருவமும் உள்ளன. இத்திருவுருவம் சுதையால் செய்யப்பெற்று அழகிய வண்ணங்கள் தீட்டப்பட்டு பொலிவுடன் விளங்குகின்றது. இங்கு சிவபெருமானும் உமாதேவியும் கூடிச் சித்தர்களுக்கு ஞான உபதேசம் செய்தார்கள் என்று கூறப்படுகின்றது. இந்நாளில் இக்கோயிலில் பூசையும் விழாக்களும் இல்லை.

திரு அஞ்சைக்களத்து சிவபஞ்சாட்சரியான உமாமகேச்சுவரர்

கேரள நாட்டில் உள்ள அனேக திருத்தலங்களில் ஓவியமாகவும் சிற்பமாகவும் உமாமகேச்சுவரர் விளங்கக் காண்கிறோம். குருவாயூர் ஸ்ரீ கிருஷ்ணர் கோயில், இதன் அருகில் உள்ள மம்மியூர் சிவாலயம் முதலியவற்றில் கருவறையின் தெற்குச் சுவரில் உமாமகேச்சவரரின் வண்ண ஓவியம் அழகுடன் காட்சியளிக்கின்றன.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்இறுதியாகப் பதிகம் பாடிக் கயிலைக்கு ஏகிய திருவஞ்சைக்களம் எனும் இடத்தில் அமைந்துள்ள திருவஞ்சைக்களத்தப்பர் ஆலயத்தின் வடக்கு உட்பிராகாரத்தில் சிறு உமா மகேச்சுவரர் சந்நிதி அமைந்துள்ளது. இங்கு மடியின் மீது தேவியை அமர்த்திக் கொண்டு அமர்ந்தவாறு மகேசுவரர் காட்சியளிக்கின்றார். இங்கு இம்மூர்த்தம் "சிவபஞ்சாட்சரி" என்றழைக்கப்படுகின்றது.

சிவம் அமைதியான எல்லையில்லாத பெருவெளியாய் அமைந்துள்ளதாகும். சிவத்திலிருந்து (பஞ்சாட்சரமாக உள்ள) ஐந்தெழுத்தால் ஐந்தொழில் இயற்றப்பட்டு உலக உற்பத்தி நடைபெறுகின்றது. ஆகவே உலக உற்பத்திக்குக் காரணமான பஞ்சாட்சரம் சக்தியாகக் கருதப்படுகிறது. இங்கு சிவம் எனும் அமைதியான பெருவெளியும் அதில் ஓயாது தொழிலியற்றும் சக்தியான பஞ்சாட்சரமும் இணைந்த நிலையே உமாமகேச்சுவரராகக் காட்சியளிக்கின்றது என்பர்.

எனவே இவ்வடிவம் சிவபஞ்சாட்சரீ" என்று குறிக்கப்பட்டுள்ளது.

சிவபராக்கிரமம் காட்டும் உமா உபதேசமூர்த்தி



சிவபெருமான் சிவாகமங்களை உமாதேவி யாருக்கே முதலில் உபதேசித்தார். அவளே அதனை அருள் முகத்தால் பிற ஆன்மாக்களுக்கு உணர்த்தி னாள். இவ்வகையில் அம்பிகை சிவனுக்கு சிஷ்யை யாகவும். பின்னர் ஆன்மாக்களுக்கு குருவாகவும் விளங்குகின்றாள். சைவமரபின் முதல் ஏழு குரு மார்களில் அம்பிகை முதல் குருவாகப் போற்றப்படுவது இங்கு எண்ணத்தக்கதாகும்.

இந்த அடிப்படையில் அம்பிகையை அருகில் அமர்த்தி அவளுக்கு ஆகமங்களை உபதேசிக்கும் மூர்த்தியை உமாஉபதேசமகேசுவரர் என்று அழைக் கின்றோம். இவர் ஆறு கரங்கள் கொண்டவர். இவற்றில் மான், பாம்பு, ஜபமாலை, தண்டம், உபதேச முத்திரை, மழு ஆகியவற்றை ஏந்தியுள்ளார் என்று சிவபராக் கிரமம் கூறுகின்றது.

காலப்போக்கில் இந்த மூர்த்தியை ஜபமாலை, புத்தகம் கொண்டவராகவும் அமைத்தனர். இவரை உமாதட்சணாமூர்த்தி என வழங்குகின்றனர்.

சில இடங்களில் உள்ள உமாமகேசுவர வடிவங் களில் சிவபெருமான் சூலம், ஜெபமாலை ஆகியவற்றை ஏந்தியவாறு அமைக்கப்பட்டுள்ளார். மதுரை முதலான திருத்தலங்களில் இத்தகைய உமாமகேசுவர வடிவைக் காணலாம். இவரை உமாசகிதர் எனவும் அழைப்பர்.

சிவபராக்கிரமத்துள் உமாமகேசுவரர்

சிவபராக்கிரமம், உமையோடு கூடிய சிவபெருமானை, உம்மாமகேசுவரர், சுகாசனர், உமேசர் முதலிய பெயர்களால் குறிக்கின்றது. இதில் உமாமகேசுவரர் என்பது பரசிவம் உலக உயிர்களின் நன்மைக்காக திருவுருவம் கொண்டு அருள்புரியும் வடிவமாகும்.. உலக உற்பத்தியின் பொருட்டு ஆதி சிவத்திலிருந்து தோன்றிய பராசக்தி, ஆதிசக்தி, இச்சாகத்தி, கிரியாசக்தி ஆகிய ஐம்பெருஞ் சக்திகளுக்குப் பின்னர் தோன்றியது சதாசிவமாகும். அந்த சதாசிவத்தின் ஆயிரத்திலொரு கூறு மகேசன் என்று அழைக் கப்படும். இந்த மகேசுவரன் தன்னுடைய அரு ளைப் பெண் வடிவமாக்கித் தன் வலப்பாகத்தில் அமர்த்திக்கொண்டு காட்சியளிக்கின்றார். இதனால் அவர் உமாமகேசுவரர் என்று அழைக்கப்படுகின்றார்.

சுகாசனமூர்த்தி என்பது சிவபெருமான் உமையவளைத் தன் மடிமீது அமர்த்திக் கொண்டு வேத ஆகம நூல்களில் சொல்லப்பட்டுள்ள கருத் துக்களை அவளுக்கு விளக்கும் வகையில் அமைந் ததாகும். இவர் ஆறுதிருக்கரங்கள் கொண்டுள்ளார். காலடியில் முயலகன் வீழ்ந்து கிடக்கின்றான்.

உமேசமூர்த்தி என்பது சிவபெருமான் உமை யுடன் கூடி உலகப் படைப்பினை ஒழுங்குறச் செய்த திருக்கோலமாகும். ஒரு சமயம் பிரம்மதேவன் தன் படைப்புத் தொழிலுக்கு உதவியாக சநகன், சநந்தனன், சநாதனன் சநற்குமாரன் ஆகிய நான்கு புதல்வர்

களைத் தோற்றுவித்தான். அவர்கள் நல்லுணர்வு பெற்று மோட்சமடைந்து விட்டனர். தன் படைப்புத் தொழிலைச் செய்ய முடியாமல் சோர்ந்து வீழ்ந்த பிரமன் திருமாலைத் தஞ்சமடைந்தான். திருமால் அவனை அழைத்துக்கொண்டு கயிலை மலையை அடைந்தார். இருவரும் சிவபெருமானைச் சரணடைந்து உலகப்படைப்புத்தொழிலைச் செம்மைப் படுத்த வேண்டினர்.

சிவபெருமான்தனது நெற்றிக்கண்ணால் அவர்களைச் சுட்டெரித்துச் சாம்பலாக்கினார். பின்னர் தமது வலத்தோளில் ந்து உமாதேவியைத் தோற்றுவித்து அவளை இடப்பாகம் அமர்த்திக் கொண்டார். பின்னர் தானும் அவளுமாக முன்போலவே பிரமன், திருமால் சனகாதியர் முதலியோரைப் படைத்தனர். அவர்களிடம் சிவபெருமான் நாம் இப்போது உமையோடுகூடி மகிழ்கின்றோம். ஆதலின் உலகப் படைப்பும் அதனைக் காத்து அருள்வதும் உமக்கு எளிதாய் வரும் என்று கூறி வரமளித்தார்.

அவர்கள் அவ்விருவரையும் வணங்கிப் போற்றித் தத்தம் உலகம் மீண்டனர். அன்றுமுதல் சிவபெருமான் சக்திமான் என்றும் உமேசர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

போகத்தை உணர்த்தும் உமா மகேசுவரர்

சிவசக்தியரின் கலப்பாலேயே இந்த உலகமும் அதில் உயிர்த் தொகுதியும், அசையும் அசையாப் பொருள்களும் தோன்றியுள்ளன. சிவபெருமான் சக்தியைத் தோற்றுவித்து அவளோடு சேர்ந்தே இதனைப் படைத்தான் என்றுச் சமய நூல்கள் கூறுகின்றன. மேலும் இவை ஒழுங்கா நடைபெற சிவசக்தியரின் ஒருங்கிணைவு இன்றியமையாததாகும். இதனை திருவாசகத்தில் மலையரையன் பொற்பாவையாகிய உமாதேவியாரைச் சிவபெருமான் உலகறிய தீ வேட்டுத் திருமணம் செய்து கொண்டது ஏன்? என்று கேட்டு அதற்கு பதிலாக அப்படி அவர்கள் திருமணம் செய்து கொள்ளவில்லையானால் உலகத்தின் நிலை அழியும் என்று மணிவாசகர் அருளிச் செய்துள்ளதைக் காண்க. ஆதலின் உலகத்தின் சரியான இயக்கத்திற்குச் சிவபெருமான் உமையோடு சேர்ந்திருப்பது அவசியமானது என்று அறியப்படும் சிவபெருமான் உமையோடு இன்றித் தனித்து நிற்பின் உலக உயிர்களெல்லாம் யோகநெறி நின்று வீடுபேறு பெற்று விடும். இதனால் உலகில் இன்ப துன்பங்கள் இல்லாது போகும். இதனால் பெருமான் உமையோடு கூடியிருந்து உலக உயிர்களுக்கு இன்பத்தை ஊட்டுகின்றான் என்று சமய நூல்கள் கூறுகின்றன. முன்பு உமைக்கு சிவாகமங்களையும் யோகநெறிகளையும் குருவாகி உபதேசித்த இறைவனே இந்நிலையில் அவளுக்கு இன்பத்தையும் அளிக்கிறான். இந்நிலையை குறிக்கும் உமாமகேசுவர வடிவங்களே போக உமாமகேசுவர வடிவங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

இது சிவபெருமான் உமாதேவியரைத் தன்மடிமீது அமர்த்திக் கொண்டு உல்லாசமாக இருக்கும் கோலமாகும். இதில் சிவ பெருமானின் மடிமீது அம்பிகை வீற்றிருக்கின்றாள். அவள் தன்னுடைய வலது கரத்தால் பெருமானின் கழுத்தை வளைத்துள்ளாள். பெருமான் இடது கரத்தால் அவளைத் தன் மார்புறத் தழுவிக் கொண்டு வலது கரத்தால் அவளுடைய கன்னத்தை வருடும் பாவனையில் உள்ளார். பின் கரங்களில் சூலமும் மருகமும் உள்ளன. தூரத்தில் பெருமானின் இடபவாகனம் காவலாக உள்ளது. அப்போது அங்குவந்த கங்கை அந்த இன்பநிலைக் காட்சியைக் கண்டு நாணித் தனது முகத்தை மூடிக் கொண்டுள்ளாள். இந்தக் காட்சியைக் கேரளத்திலுள்ள பல ஆலயங்களில் கண்ணைக் கவரும் ஓவியங்களாகத் தீட்டியுள்ளனர்.

நல்லம் உமாமகேசுவரர்

இந்நாளில் கோனேரி ராஜபுரம் என்றழைக்கப்படும் தலம் தேவாரத்துள் நல்லம் என்றும் குறிக்கப்பெற்றதாகும். இங்கு பூமிதேவி சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்ததால் பெருமான் பூமீசுவரர் என்று அழைக்கப்படுகின்றார். பூமிதேவியின் சிவபூசைக்கு மகிழ்ந்த சிவபெருமான் சிவலிங்கத்திலிருந்து உமாதேவியுடன் உமாமகேசுவரராகக் காட்சியளித்தார். அதனால் பெருமானை உமாமகேசுவரர் என்று அழைக்கின்றனர். இங்குள்ள அம்பிகைக்குத் தேக சௌந்தரி என்பது பெயராகும்.

கும்பகோணம் காரைக்கால் சாலையிலுள்ளது கோனேரி ராஜபுரம். இது மாமன்னர் ராஜராஜ சோழனின் பாட்டியான செம்பியன் தேவியார் திருப்பணி செய்து வழிபட்ட தலம் உலகப்புகழ்பெற்ற மிகப் பெரிய நடராஜரின் உலோகத் திருமேனி இத்தலத்தில் உள்ளது. இங்குள்ள பெருமான் போகஉமாமகேச்சுவரனாக விளங்குகின்றான் என்பதைத் திருஞானசம்பந்தப்பெருமான் "போகத்தியல்பினால் பொலிந்து அழகாகும் ஆகத்தவளோடும் அமர்ந்த அழகன்" என்று குறிக்கின்றார்.

ஊழிக்காலத்து உமாமகேசுவரர்

ஊழிக்காலத்தில் உலகம் கடலால் கொள்ளப்பட்டு எங்கும் தண்ணீர் மயமாகிவிடும். அந்தத் தண்ணீர் பெருக்கத்தின்மீது சிவபெருமான் உமாதேவியுடன் தோணியில் வீற்றிருப்பார். காலங்கள் சென்றபின் சிவ பெருமான் உமாதேவியின் மூலம் உலக உற்பத்தியைத் தொடங்குவார். ஆதலில் அவர்கள் ஆதி திவ்ய தம்பதியர் என்றும், கர்ப்ப ஞானேசுவரர் கர்ப்ப ஞானேசுவரி என்றும் ஆதித் தாய்தந்தையர் என்றும் அழைக்கப்படுகின்றனர். இத்தகைய உமாமகேசுவரர் எழுந்தருளியுள்ள தலங்களில் முதன்மை பெற்றது சீர்காழியாகும் இதனை யொத்தவை மேலைக்காழி எனப்படும் திருக்கருப்பறியலூர் திருவீழிமிழலை முதலியனவாகும்.

சீர்காழி உமாமகேசுவரர்

திருஞானசம்பந்தர் அவதாரம் செய்தருளிய பெரும் சிவத்தலம் சீர்காழியாகும். இதற்கு, பன்னிரண்டு பெயர்கள் வழங்குகின்றன. இவற்றில் ஒன்று தோணிபுரம் என்பதாகும். இங்குள்ள பிரம புரீசுவரர் ஆலயம் மூன்று தளங்கனளக் கொண்டதாக அமைந்துள்ளது. இதில் கீழ்த்தளத்தில் பிரம்மபுரீசுவரர் சிவலிங்க வடிவில் எழுந்தருளியுள்ளார். அதற்குமேல் உள்ள தளத்தில் உமாமகேசுவரர் ஒரு தோணியில் அமர்ந்துள்ளார். இவரை இங்கு தோணியப்பர் என்று அழைக்கின்றனர். இவருக்கு மேலுள்ள விமானத்தின் தென் சிகரப் பகுதியில் சட்டநாதர் எழுந்தருளி யுள்ளார். இம் மூவருக்கும் சிறப்புவழிபாடுகளும் நாள் வழிபாடுகளும் நன்கு நடைபெறுகின்றன.

இங்கு நடுப்பகுதியில் உமாமகேசுவர கோலத்தில் தோணியப்பராகச் சிவபெருமான் வீற்றிருப்பதற்கும், சீர்காழிக்குத் தோணிபுரம் என்ற பெயர் உண்டானதற்கும் உரிய விளக்கத்தைச் சீர்காழி தலபுராணம் சிறப்பாக விளக்குகின்றது. அதன்படி :

ஒரு சமயம் ஆதிசேடனுக்கும், வாயு தேவனுக்கும் தங்களுக்குள் யார் பெரியவர் என்ற நீண்ட விவாதம் எழுந்தது. இறுதியில் தங்கள் பலத்தைச் சோதித்து அறிந்துகொள்ள, ஆதிசேடன் தன் ஆயிரம் தலைகளாலும் உடலாலும் கயிலை மலையை மூடிக் கொள்வதென்றும் வாயுதேவன் அவனுடைய பிடியிலிருந்து மலையின் ஒரு பகுதி யையாவது மீட்க வேண்டும் என்றும் ஒரு போட்டியை வைத்துக் கொண்டனர். இந்தப் போட்டியில் வெல்பவரே பெரியவர் என்ற தீர்மானத்திற்கு இருவரும் ஒப்புக் கொண்டனர். அதன்படி ஆதி சேடன் கயிலையைத் தன் உடலால் சுற்றியும் ஆயிரம் பாம்புப்படங்களால் அதன் உச்சியை மூடியும் கயிலை மலையே தெரியாத அளவுக்கு மூடிக்கொண்டான். வாயுதேவன் கடுங்காற்றை வீசிக் கயிலையை அவனிடமிருந்து பெற முயற்சித்தான். இதனால் உலக உயிர்கள் வாடித்துன்புற்றன. நெடுங்காலமாயிற்று வாயு சற்று ஓய்ந்தான்.

அப்போது ஆதிசேடன் தனது ஓரிரு தலை களைச் தூக்கிப்பார்த்தான். அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு வாயுதேவன் கயிலையின் சிகரங்களில் ஒன்றையும் கிளைகள் பத்தையும் அவன் பிடியிலிருந்து பறித்து வீசினான். அப்படி வீசப்பட்டச் சிகரங்கள் பத்தே திருச்சிமலை திரு எரும்பீசுவரம், திருவாரூர், திருவிடைமருதூர், திருநாகேசுவரம் முதலானத் தென்கயிலாயத் தலங் களாயின. உரோமசர் என்ற முனிவன் வேண்டு கோளின்படி பெரியகிளையைக் கயிலை மலைச் சார லிலிருந்து இருபது பறவைகள் கொண்டு வந்து சீர் காழியின் மையத்தில் வைத்தன.

அதன் மீது உமாதேவியாருடன் சிவபெரு மான் வீற்றிருந்து காலவித்து என்னும் அரசனுக்கும் உரோமச முனிவனுக்கும் வேண்டிய வரங்களைத் தந்தார். காலப்போக்கில் அம்மலை பூமியில் அழுந்தி மறைந்தது.

காலவித்துமன்னன் அத்தலத்தில் மலையிருந் ததனை நினைவூட்டும் வகையில் சுதைக் கட்டிடமாக கட்டுமலையையும் அதனைத் தாங்குவது போல் இருபது பறவைகளின் உருவங்களையும் சுதைச் சிற்பங்களாகச் செய்து வைத்தான்.

மற்றுமோர் சமயம் பொங்கி வந்த ஊழிக்கடல் அலையில் உலகம் முற்றும் மூழ்கி மறைந்து விட இத்தலம் மட்டும் மூழ்காமல் இருந்தது. யாவற்றையும் அழித்து அடக்கிய ஊழிவெள்ளக் கடலின் மீது அறுபத்து நான்கு கலைகளை ஆடையாக அணிந்து கொண்டு சிவபெருமான் உமாதேவியாருடன் பிரணவத்தைத் தோணியாகக் கொண்டு பயணம்

செய்தான். இந்த இடம் வந்ததும் இந்த மலைமீது ஓடத்துடன் தங்கினான்.

பின்னர் ஊழியொழிந்து உலகோற்பத்தியைத் தொடங்கியபோது சீர்காழியம்பதியில் சம்புபட்சத் திருமேனியாக உமாமகேசுவராகவே தோணிமீது எழுந்தருளினார். அன்று முதல் இத்தலம் தோணிபுரம் என வழங்குவதாயிற்று. உமாமகேச்சுவரரும் தோணி யப்பர் என்று அழைக்கப்படுகின்றார். கல்வெட்டுக்கள் இப்பெருமானைத் திருத்தோணிபுரம் உடையார் என்றும் அருகில் வீற்றிருக்கும் உமையைப் பெரிய நாச்சியார் என்றும் குறிப்பிடுகின்றன.

இதை நினைவூட்டும் வகையில் கட்டு மலையின்மீது தோணியில் வீற்றிருப்பவராக உமா மகேசுவரர் பெரிய வடிவில் அமைக்கப்பட்டுள்ளார்.

இது உமாமகேசுவரர் வீற்றிருப்பதால் உமா பதிபுரம் என்றும் அழைக்கப்படுகின்றது. இதற்குப் கிரிபுரம், காளீசம், பிரமேசம், கஞ்சுகேசம் என்ற பெயர்களும் புராணங்களில் குறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

திருஞானசம்பந்தப் பெருமானுக்கு ஞானப் பால்கொடுத்த நாயகி இவளே. ஞானசம்பந்தர் இரு வரையும் இணைத்து "பேதையாள் அவளோடும் பெருந்தகை இருந்ததே" என்றும், "பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே" என்றும் பாடிப் பரவுகின்றார்.

சீர்காழியில் அமைந்துள்ளகோயிலில் அழகிய கட்டுமலை மீது தோணியப்பர் சுமார் 10 அடி உயரமுடைய உமாமகேச்சுவர மூர்த்தியாக எழுந்தரு ளியுள்ளார். இவருக்குத் தினமும் நான்கு கால பூஜை நடைபெறுகின்றது. சித்திரை ஆடி, ஐப்பசி, தை ஆகிய மாதங்களின் முதல் தேதிகளிலும், சித்திரை, மார்கழி திருவாதிரைகளிலும், கார்த்திகைக் கிருத்திகையிலும், மாசி சிவராத்திரி நாளிலும் சிவபெருமானுக்குப் புழுகும் உமாதேவியான பெரியநாயகியாருக்குக் கலவைச் சாந்தும்பூசி விசேட ஆராதனை செய்கின் றனர்.


முன்புறம் உள்ள உமாமகேசுவர உலாத் திருமேனி ஆண்டிற்கொருமுறை (திருஞானசம் பந்தருக்குபாலமுது தரும் திருமுலைப்பால் உற்சவத் தன்று மட்டும்) திருவீதியுலாக் காண்கின்றார். இவருக்கு மேற்கரங்களில் மான். மழு ஏதுமில்லை. புராண காலத்திற்குப் முன்பே ஏற்பட்ட மூர்த்தியாதலின் இவர் அவைகளை ஏந்தவில்லை என்பர்.

தலைஞாயிறு உமாபதி

இந்நாளில் மேலைக்காழி, தலைஞாயிறு என்று அழைக்கப்படும் தலம் திருமுறைகளில் திருக்கருப் பறியலூர் என்று குறிக்கப்படுவதாகும். இது வைத்தீ சுவரன் கோயிலுக்கு அருகில் உள்ளதாகும். சீர்காழி யில் உள்ளது போலவே இங்கும் கட்டு மலையின் மீது உமாமகேசுவரர் சந்நிதி அமைந் துள்ளது. இங்குள்ள தோணியப்பர் கரத்தில் மான்மழு உள்ளது. இவரைக் கர்ப்பஞானேசுவரர் என்றும் அம்பி கையைக் கர்ப்ப ஞானேசுவரி என்றும் அழைக்கின்றனர். சுந்தரரும் சம்பந்தரும் பாடிய திருத்தலமாகும். சீர்காழியின் மேற்கில் அத்தலத்தைப் போலவே இருப்பதால் இதற்கு மேலைக்காழி என்பது பெயராயிற்று. இத்தலத்தில் மகாமண்டபத்தில் "உமா மகேசுவரரின்" கல் திருமேனியும் காட்சியளிக்கின்றது.

தேவாரத்தில் உமாபதி

சிவாகமங்கள் ஆதிசக்தியான பார்வதி தேவியைக் கௌரி எனும் பெயரால் சிறப்புடன் அழைத்து மகிழ்கின்றன. ஆனால் தமிழ்மறையான தேவாரம் அந்தக் கௌரி என்ற பெயரை எத்தலத்திலும் பயன்படுத்தவில்லை அது பார்வதியை உமை என்ற பெயராலேயே பலநூறு இடங்களில் அழைத்து மகிழ்வதுடன் சிவபெருமானையும் உமைபங்கள், உமையொருபாகன், உமைநாயகன், உமையவள் கணவன் என்று அழைக்கின்றது. இந்த அடிப்படையில் பெருமானுக்கு "உமாபதி" என்பதும் பெயராயிற்று. முன்பு பசுக்களின் தலைவனாக விளங்குதலின், பசுபதி என்றழைக்கப்பட்டது போலவே இப்போது உமாதேவியின் கணவன் என்பதால் உமாபதி என்று அழைக்கப்படுகின்றார். இப்பெயரால் சிவபெருமானை அப்பர் சுவாமிகள் கஞ்சனூர்ப் பதிகத்தில் உருத்திரன் உமாபதியை உலகானானை என்றும் சுந்தரர் நன்னிலத்துப் பெருங்கோயில் பதிகத்தில் கயிலை... "உமாபதி" என்றும் குறிக்கின்றனர்.



தோணியப்பர் - பெரியநாயகி (உமாமகேசுவரர்) - சீர்காழி

சுவர்ண மூர்த்தியாக விளங்கும் உமாமகேசுவரர்


உமாமகேசுவரரைத் தங்கத்தால் செய்து பூசிப்பது இம்மையிலேயே பெரிய நலன்களைத் தருவதாகும். அதிலும் கார்த்திகைத் தீபத்திருநாளில் பொன்னாலான உமாமகேசுவரரை வாழைமரத்தடியில் வைத்துப் பூசிப்பது எல்லையற்ற சுகங்களைத் தரும் என்று புராணங்கள் கூறுகின்றன. கார்த்திகைத் தீபத் திருநாளை "உமா மகேசுவர விரதகாலம்" என்றும் கூறுவர் (பார்க்க முதல் மலர்) இது சிவபெருமானுக் குரிய எட்டு தலையான விரதங்களில் ஒன்றாகும்.

உமாமகேசுவரரின் திருவுருவங்களைத் தங்கத் தால் செய்து வழிபடும் வழக்கம் நெடுங்காலமாகப் போற்றப்பட்டு வருகின்றது. குறிப்பாக இது சோழர்கள் காலத்தில் மிகச்சிறப்பாகப் போற்றப்பட்டதை அறிகிறோம். அவர்கள் பல ஆலயங்களுக்கு உமா மகேசுவரரின் வடிவங்களைத் தங்கத்தால் செய்த ளித்ததை அவர்கள் காலத்தில் பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டுகளால் அறிகிறோம்.

எடுத்துக்காட்டாக உமாமகேசுவரத் தலமான திருஇடைமருதூரில் சோழன் இராஜகேசரி வர்மனின் (கி.பி. 985-1113) பத்தாவது ஆட்சியாண்டில் 278ஆம் நாளில் வெட்டப்பட்டுள்ள * கல்வெட்டு சோழகுலப் பேரரசி பஞ்சவன் மாதேவியார் தங்கத்தால் செய்யப் பட்ட உமாசகிதத் திருமேனியினை இக்கோயிலுக்கு அளித்ததைக் குறிப்பிடுகிறது.

மேலும் பல ஆலயங்களில் இத்தகைய கல்வெட்டுகளைக் காணமுடிகிறது.

ஹைதர் அலி வெளியிட்டஉமாமகேசுவரர் தங்க நாணயம்



மைசூரை ஆண்ட ஹைதர் அலி எனும் முகமதிய மன்னர் அனைத்து சமயங்களிடமும் அன்பு கொண்டவராக விளங்கினார். அவர் தனது ஆட்சிக் காலத்தில் உமாமகேசுவரின் வடிவம் ஒருபக்கமும் "ஹை" என்ற எழுத்து மறு பக்கமும் கொண்ட தங்க நாணயங்களை வெளியிட்டார்.

அவற்றில் ஒன்று இப்போது சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளது. அதன் படத் தையே அருகில் காண்கின்றீர்கள்.

இது மூன்று கிராம் எடையுள்ளதாகும். இதன் ஒரு பக்கத்தில் உமா தேவியை மடிமீது அமர்த்திக் கொண்டு சிவன் காட்சியளிக்கின்றார்.

▲ தங்கநாணயமும் அதன் பெரிது படுத்தப்பட்ட தோற்றமும் நன்றி-தினமணிகதிர் நாள்- 18-3-1995

வேத வழி நூல்களில் உமாபதி

வேதவழி நூலாகிய தைத்ரீய ஆரணியகம் "அம்பிகாபதயே உமாபதியே" - நம: என்றுக் கூறித் துதிக்கின்றது. இதன் பொருள் அம்பிகையான உமையின் கணவனுக்கு வணக்கம் என்பதாகும். கைவல்ய உபநிடதம் "உமாசகாயம் பரமேச்சுவரம்" என்றுக் குறிக்கின்றது. இதற்கு உமையோடு கூடியிருப்பவராகிய பரமேசுவரன் என்பது பொருளாகும்.

கோகர்ணத்து உமாமகேசுவரர்

உமாதேவியார் திருக்கோகர்ணத்தின் பெருமைகளைப் பெருமான் வாயிலாகக் கேள்விப்பட்டு அங்கு சில காலம் தங்கிச் சிவபூசை செய்ய விரும்பினாள். அந்தத் தலத்திற்குச் சென்றுத் தன் பெயரால் ஒரு பெரிய வனத்தை உண்டாக்கினாள். அதன் மத்தியில் அவளுக்கு உதவியாக உலகில் உள்ள அனைத்துத் தீர்த்தங்களும் ஒரு மடு வடிவில் வந்து சேர்ந்தன. அந்த வனத்திற்கு உமாவனம் என்றும் மடுவிற்கு உமை மடு என்றும் பெயராயிற்று. அந்த இடத்தில் உமாதேவி தம் பெயரால் உமாமடிகேசுவரர் என்ற சிவலிங்கத்தை அமைத்து வழிபாடு செய்தாள்.
-திருக்கோகர்ணபுராணம்

ஸ்ரீ விமானத்து உமாமகேசுவரர்

சிவாலயங்களில் கருவறையிலும், தனிச்சந்நிதிகளிலும் அமைந்து அருள்பாலிக்கும் உமா மகேசுவரத் திருமேனிகளைக் கண்டோம். இதற்கு முற்றிலும் மாறாகக் கருவறை விமானத்தில் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கும் உமாமகேசுவரரைக் குடந்தையில் தரிசிக்கின்றோம்.

குடந்தை செல்வப்பிரான்

குடந்தையின், மையப்பகுதியில் அமைந் திருப்பது நாகநாதசுவாமி ஆலயமாகும். இது குடந்தைக் கீழ்க்கோட்டம் என்று தேவாரத்தில் போற்றப்படும் தலமாகும். இங்குள்ள கருவறையின் ஸ்ரீ விமானத்தின் கிழக்குக்கிரீவமும் கீர்த்தி முகமும் நன்கு வளர்த்திக் கட்டப்பட்டு பெரிய அலங்கார வளைவு அமைக்கப் பட்டுள்ளது. அதன் மையத்தில் சிவபெருமான் உமா தேவியாருடன் எழுந்தருளியுள்ளார்.

பதினோராம் நூற்றாண்டில் வெட்டப்பட்ட பரகேசரி ராஜேந்திர சோழனின் 8ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இவரைச் செல்வப்பிரான் என்று குறிப்பதுடன் இவருக்குப் பூசை செய்வதற்கு நிபந்தமளிக்கப் பெற்ற செய்தியையும் குறிக்கின்றது. பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை இவருக்குப் பூசைகள் நடந்து வந்ததாகத் தெரிகின்றது. இப்போது விமானத்தின் முன்புறம் தலம் மீது கல்தூண்கள் நடப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

(A.R.E. 15 0f 1908 & A.R.E 256 of 1911)

வீழி விமானத்து உமாமகேசுவரர்

குடந்தையில் இருப்பது போலவே திருவீழி மிழலையிலுள்ள ஆலய விமானத்தில் சிறு அள விலான உமாமகேசுவரரின் திருவுருவத்தைக் காண் கிறோம். திருவீழிமிழலையில், திருஞானசம்பந்தப் பெருமான் தங்கி வழிபட்டு வந்தபோது அவருக்குச் சீர்காழியின் நினைவு அடிக்கடி தோன்றியது அங்குள்ள தோணியப்பரான உமா மகேசுவரரைக் கண்டு வணங்க அவருக்கு விருப்பம் உண்டாயிற்று. அதனால் சீர்காழி செல்ல ஏற்பாடுகளைச் செய்தார். சிவபெருமான் அவரிடம் அந்தச் (சீர்)காழிக் காட்சியை இந்த வீழியிலேயே காட்டுகின்றோம் தரிசித்து மகிழ்க" என்று கூறி இவ்வூர் விமானத்தில் தோணியப்பர் வடிவில் காட்சியளித்தார் அதைக் கண்டு மகிழ்ந்த ஞானசம் பந்தப்பெருமான் காழியையும் வீழியையும் இணைத்துப் பாடி மகிழ்ந்தார். அதை நினைவூட்டும் வகையில் திருவீழிழலை ஆலய விமா னத்தில் சுதைச் சிற்பமாக உமாமகேசுவரர் அமைக்கப்பட்டுள்ளார்.

* திருஞானசம்பந்த பெருமான் திருப்புகலியான சீர்காழியையும் - திருவீழிமிலையையும் இணைத்துப் பாடிய பதிகம் மைம்மரு பூங்குழல் என்று தொடங்கு கின்றது. இதில் சிவபெருமான் உமாதேவியாரோடு இருப்பதை "வாண்நுதல் மான்விழி மங்கையோடும்," என்றும் காம்பனதோளியோடு கலந்து என்றும் பூங் கொடியோடி யிருந்தானை என்றும் குறிக்கின்றனர்.

* திருஞானசம்பந்தருக்குச் சிவபெருமான் தோணியின் மீது அங்கிருப்பது போலவே இங்கு காட்டுகிறோம் என்று கூறியதைச் சேக்கிழார். "தோணி யில் நாம் அங்கிருந்த வண்ணம் தாமரை வீழி தன்னுள், சேணுயர் விண்ணின்று இழிந்த இந்தச் சீர்கொள் விமானத்துக் காட்டுகின்றோம் பேணும் படியால் அறிதி'' என்றுச் திருஞானசம்பந்தர் புராணத்துள் குறிக்கின்றார்.

திருவையாற்றுச் செஞ்சடை உமாமகேசுவரர்

தஞ்சாவூரையடுத்துள்ள திருவையாறு சைவ வரலாற்றில் தனிச்சிறப்பிடம் பெற்றுள்ள தலமாகும். இங்குப்: பஞ்சநதீசுவரர் என்று வழங்கப்படும் ஐயாறப்பன் ஆலயம் சிறப்புடன் திகழ்கின்றது. இங்குக் கருவறையை ஒட்டியதாக சிறு பிரகாரம் உள்ளது. இங்கு மூலத்தானத்தின் கீழ் சிவபெருமான் ஒரு யோகியின் வடிவத்தில் அமர்ந்திருப்பதாகவும் அவருடைய சடைகள் இந்தப் பிராகாரத்தில் படர்ந்து விளங்குவதாகவும் கூறுகின்றனர். அதனால் இந்தப் பிராகாரத்தில் பக்தர்கள் வலம் வருவதில்லை. இந்தப் பிராகாரத்தின் மேற்குச் சுவரில் கிழக்கு நோக்கியவாறு அழகிய திருமேனியாக உமாமகேச்வரர் எழுந்தருளியுள்ளார். இவரைச் சுற்றிச் பிரணவாகாரமான அழகிய பிரபை அமைக்கப்பட்டுள்ளது. ஒரே கல்லில் பிரபையுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த உமாமகேசுவரர் மிக்க கலைநயத்துடன் காட்சியளிக்கின்றார். அப்பர் பெருமானுக்கு ஐயாரப்பர் இங்கு திருக்கயிலைக் காட்சியைக் காட்டியருளியதை உணர்த்தும் வகையில் இங்கு இந்தத் திருமேனி அமைக்கப்பட்டுள்ளதென்பர்.

சிவமகாபுராணத்துள் உமாமகேசுவரர்



சிவமகா புராணத்தில் வாயு சம்ஹிதை உத்திரபாகத்தில் உமாமகேசுவர ஆராதனை தனிச்சிறப் புடன் குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

ஒரு சமயம் முனிவர்களின் மனதில் இந்த உலகம் உண்டாவதற்கு காரணம் யாது? நாம் எங்கிருந்து வந்தோம்? எங்கிருந்து தோன்றினோம்? இந்த உலகத்தையும் நம்மையும் படைத்தவர் யார்? நாம் யாரால் சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? நாம் எங்கே போகப் போகிறோம்? என்ற சந்தேகங்கள் அடுக்கடுக்காக உண்டாயின. அதற்கான விடைகளைக் காண முடியாததால் அவர்கள் யோகநிட்டை கூடினர். அவர்களுடைய ஞானக்காட்சியில் சிவபெருமானும் அவருடைய மடியில் அமர்ந்தவளாக உமாதேவியும் தோன்றினர். அதனைக் கண்டு மகிழ்ந்த முனிவர்கள் உலகிலுள்ள அனைத்துப் பொருட்களுக்கும் இவர்களே மூலகாரணம் என்று அறிந்து கொண்டனர். இவர்களை தியானிப்பவர்கள் எளிதில் மோட்சமடைவர் என்பதையும் உணர்ந்தனர். (இதன் மூலம் உமாமகேசுவர தரிசனமே ஞானத்தைத்தரும் என்பது உணர்த்தப்பட்டது).

மேலும் ஒரு சமயம் சிவபெருமான் உமாதேவி யாருக்கு சிவாகமங்களை அருளிச் செய்தார். அவை உலகில் சான்றோர்களால் வழிவழியாகப் போற்றப்பட்டு வந்தன என்றாலும் காலப்போக்கில் அவற்றில் பல மறைந்துவிட்டன.

நீண்ட காலத்திற்குப் பிறகு ஒருநாள் அம்பிகை சிவபெருமானிடம் உலக உயிர்கள் உய்யும் பொருட்டு முன்பு எனக்கு உபதேசித்த சிவாகமங்களை மீண்டும் கூறியருள வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். அவரும் அவளைத் தன் மடிமீது அமர்த்திக் கொண்டு ஒரே இரவில் சிவாகமங்கள் அனைத்தையும் அவளுக்கு விளக்கினார். அப்போது அகத்தியர், குரு, ததீசி, உப மன்யு முதலானவர் உடனிருந்து அவற்றைக் கேட்டு வந்து உலகிற்கு உபதேசித்தனர். (இதன்மூலம் உலகினருக்கு ஆகமங்கள் உமாமகேசுவரராலேயே கிடைத்தது என்பதும் பெறப்படும்.)

சிவபுராணத்தின் இந்தப் பகுதியில் பலவேறு சிவதீட்சாமுறைகள் பூசாவிதிகள் சிவஹோமங்கள் விளக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து உமாமகேசுவரரைப் போற்றும் விரிவான தோத்திரமும் இடம் பெற்றுள்ளது. இத்தோத்திரம் சிவபெருமானின் பஞ்சதேக மூர்த்தங்களாக விளங்கும் ஐந்து உமா மகேசுவரர்களைக் குறிப்பிடுகின்றது. இதன்படியான ஈசானப்பிரம்ம உமாமகேசுவரர், தத்புருஷப் பிரம்ம உமாமகேசுவரார், அகோரப்பிரம்ம உமாமகேசுவரார், வாமதேவப்பிரம்ம உமாமகேசுவரர் சத்யோஜாத பிரம்ம உமாமகேசுவரர் ஆகிய ஐந்து வடிவங்களுக்கு வணக்கம் கூறி அவர்களின் அருள் வேண்டப்படுகின்றது.

மேலும் சதாசிவ உமாமகேசுவரர் என்ற சிவவடிவத்தையும் இத்தோத்திரம் குறிப்பிடுகின்றது. இந்த உமாமகேசுவரர் நான்கு முகங்களும் எட்டு திருக்கரங்களும் கொண்டவராகச் சித்தரிக்கப்படு கின்றார். கரங்களில் சூலம், மழு, வாள், வஜ்ஜிரம், பாசம், அங்குசம், பரிசை, கேடயம், நாகம் ஆகியவை உள்ளன. இவரைத் தியானித்து வழிபடுவதால் உண்டாகும் பலன்களும் சொல்லப்பட்டுள்ளன. இந்த வடிவில் அவர் உமாதேவியுடன் சூரிய மண்டலத்தின் நடுவில் காட்சியளித்ததைப் புராணம் தனிச்சிறப்புடன் குறிப்பிடுகின்றது.

*சிற்ப நூல்களில் உமாமகேசுவரர்

உமாமகேசுவரர் திருவுருவங்களை அமைத்து வழிபட வேண்டிய முறைகளைச் சிற்ப நூல்களும், பூஜாபத்தி நூல்களும் விரிவாகக் கூறுகின்றன. அவற்றில் உமாமகேசுவரரின் திரு வுருவ வர்ணனைகள் தியானச் சுலோகங்களாக அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

"விஷ்ணு தர்மோத்திரம்" என்னும் நூல் பிரகாசிக்கும் ஒளிபொருந்தியவராய் உமாதேவியை யும் சிவபெருமானையும் கொள்க. எட்டு திசையை யும் ஒருங்கே காணவல்ல தேவர் தலைவனான சிவபெருமானைப் பிறையை அணிந்த சடைமுடி உடையவனாகவும், உமாதேவியை மெல்லிய இடையும் பருத்த தனங்களும் கொண்டவளாகவும் அமைக்க. சிவபெருமானின் இடது கரம் அன்னை யின் இடது தொடையில் ஊன்றியிருக்க அன்னை யின் வலது கரம் நீலோற்பமலரை ஏந்தியதாக அமைக்க. அன்னை இடதுகையில் கண்ணாடியைத் தாங்கி வலது கரத்தை ஐயனின் வலது தொடை மீது ஊன்றியவளாக அமைக்கவும் என்று கூறுகின்றது,

"ரூபமண்டனம்" என்ற நூல் இறைவன் மேற் கரங்களில் திரிசூலம், நாகம் ஆகியவற்றை ஏந்தி முன் வலதுகரத்தில் மாதுளம் பழத்தைத் தாங்கி இடது கரத்தினால் அன்னையை அணைத்துக் கொண்டுள்ளார் என்றும் அம்பிகை இடது கரத்தில் கண்ணாடியைத் தாங்கி வலது கரத்தால் பெருமானை அணைத்துக் கொண்டுள்ளவளாகக் காட்சியளிக் கின்றாள் என்றும் கூறுகின்றது. இவர்கள் அமர்ந் துள்ள பீடத்தின் கீழ் இடபதேவர், முருகன், கணேசர்



நடனமாடும் பிருங்கி முனிவர் ஆகியோரையும் அமைக்கவேண்டும் என்று அந்நூல் குறிப்பிடு வதையும் காண்கிறோம்.

ஸ்ரீதத்வநிதி என்ற நூல் தனது இடப்புறம் மலைமகளும் எதிரில் இடபமும் பின்னணியில் இந்திராதிதேவர்களும் இருபுறமும் திருமால் அயன் வாயு முதலியோர்களும் சுற்றிலும் பிருங்கி நாரதர், பாணன், பைரவர், விநாயகர், ஸ்கந்தன், வீரேசுவரன் ஆகியவர்களும் சூழநின்று துதிக்கப்படும் வெண்மை நிறம் கலந்த செந்நிறம் கொண்டவராகப் பிரகாசிக்கும் அழகு மேனியையுடைய சம்புவைச் (சிவபெருமானை) சரண் அடைகின்றேன் என்று குறிப்பிடுகின்றது.

இன்னும் அனேக சிற்ப, ஓவிய நூல்களில் "உமாமகேசுவரர்" திருமேனிகளைச் சிறப்பாக விவரிக்கும் பாடல்களைக் காண்கிறோம்.

● தகவல் மூலம் : திருவாவடுதுறை ஆதீன வெளியீடான படிமத் திருக்கோலங்கள்.

நாரதர் அமைத்த உமாமகேசுவரர்

கர்னாடக மாநிலத்தில் "சுப்பிரமணியா" என்னும் திருத்தலம் உள்ளது. இங்குக் கருவறையில் பாம்புப்புற்று வடிவில் முருகப்பெருமான் எழுந்தருளியுள்ளார். இந்த ஆலயத்தின் பிரகாரத்தின் வடகிழக்கில் உமாமகே சுவரருக்கான பெரிய சந்நிதி உள்ளது. இதில் தன் மடிமீது உமையை அமர்த்திக் கொண்டு அமர்ந்தவடிவில் உலோகத்திருமேனியாக உமாமகேச்சுவரர் எழுந்தருளியுள்ளார். இவருடன் சூரியன், திருமால், தேவி, கணபதி ஆகிய நால்வரும் எழுந்தருளியுள்ளனர். இச்சந்நிதியில் உமாமகேசுரரை மையமாக வைத்துப் பஞ்சாயதன முறையில் வழிபாடு நடைபெறுகின்றது. இம்மூர்த்திகள் நாரதமகாமுனிவரால் அமைத்து வழிபடப்பட்டதென்பர்.

உமாமகேசுவர விரதங்கள்



உமாமகேசுவரரை வணங்கிப் போற்றி நோற்க வேண்டிய விரதங்கள் பலவாகும் அவற்றில் சில வற்றை இங்குக் காணலாம்.

1. ஆதித்ய சயன விரதம்

அஸ்த நட்சத்திரமும் சப்தமியும் கூடிவரும் தினம் (அ) அஸ்த நட்சத்திரம் கூடிய ஞாயிற்றுக்கிழமையில் உமாமகேசுவர விக்கிரகங்களை அலங்கரித்துச் சூரிய மந்திரங்களால் பன்னிரண்டு முறை அர்ச்சித்துத் தானங்கள் செய்பவர்கள் அனைத்து செல்வங்களைளயும் அடைவர். அவர்களுடைய முன்னோர்கள் சிவலோகத்தில் சிறப்புடன் வீற்றிருப்பர் இது நாரதருக்கு உருத்திரர் சொன்னதாகும்.

2. சௌளபாக்ய சயன விரதம்

சித்திரை மாதம் வளர்பிறை சுத்த திரிதியையில் முற்பகலில் உமா மகேசுவர விக்கிரங்களை எழுந்தருளி வைத்து அதற்குத் திருக்கல்யாணம் நடத்தி அடியவர்களுக்கு விருந்து படைத்து விரதம் கடை பிடிப்பவர்கள் அனைத்து சௌபாக்யங்களையும் அடைவர். இது மச்சமூர்த்தி மனுவுக்குச் சொன்ன விரதமாகும்.

3.ஆர்த்தானந்த திரிதியா விரதம்

சுக்கிலபட்ச திரிதியையோடு உத்திராடம், பூராடம், மிருகசீரிடம், அஸ்தம், மூலம் ஆகிய நட்சத்திரத்திலொன்று சேர்ந்து வரும் நாளில் தொடங்கி உமாமகேசுவரக் கல்பப் பிராகாரம் உமாமகேசரைப் பூசித்து வந்தால் பெணகள் சகல சௌபாக்கியங் களுடன் நீண்டகாலம் வாழந்து பார்வதி உலகத்தை அடைவர். இது பார்வதிக்கு, சிவபிரான் சொன்னது.

4. அமுக்தா பாண விரதம்

புரட்டாசிமாத வளர்பிறை சப்தமியில் உமா மகேசுவரரைக் கலசத்தில் எழுந்தருளி வைத்து 12 முடி கொண்ட காப்பைப் பூசையில் வைத்து வீடு, மனை, மனைவி, மக்கள் கசலசெல்வர்களுடன் வாழ பிராத்தித்து நோன்பு நோற்று பூசித்துக் காப்பை வலது கையில் அணிந்து கொள்ளவேண்டும் இது கிருஷ்ணரால் தர்மபுத்திரருக்குச் சொல்லப்பட்ட விரதமாகும்

5. கதலி விரதம்

இது புரட்டாசி, கார்த்திகை, வைகாசி, மாசி ஆகிய மாதங்களொன்றில் வருகின்ற வளர்பிறை சதுர்த்தி நாளில் வாழை மரத்தரடியில் உமா மகேசுவரரை எழுந்தருளி வைத்து நமது வாழ்வு வாழையடி வாழையாக வளர வேண்டுமென்பதற்காக நோற்கப்படும் நோன்பாகும்.

6. உமாமகேசுவர விரதம் (1)

இது பொன்னால் சிவபெருமானையும் வெள்ளியால் பார்வதி தேவியையும் செய்து பூர்ண கலசத்தில் வைத்துப் பூசை செய்ய வேண்டும். பதினைந்து முடியுள்ள நோன்புக் கயிற்றைத் குங்குமத்தில் தோய்ந்து பூஜை செய்து வலக்கரத்தில் அணிந்து கொள்ள வேண்டும் புரட்டாசிப் பௌர்ணமி நாளில் நோற்கப்படும் இந்த விரதத்தை விஷ்ணு பிரமன் முதலியோர் அனுஷ்டித்துப் பேறுபெற்றார்கள்.

7. உமா மகேசுவர விரதம் (2)

சித்திரை அல்லது மார்கழி மாத வளர்பிறை அஷ்டமி பௌர்ணமி சதுர்த்தசிகளில் தொடங்கி 5 நாள் கொண்டாடப்படும் நோன்பாகும் இந்நாளில் சிவப்பற்றுள்ள தம்பதியர்களை உமாமகேசுவரராகப் பாவித்து அவர்களுக்கு உணவிட்டுத் தானம் அளிக்கவேண்டும்.

கொல்லம் உமாமகேஸ்வரர்



சிவபெருமானின் ஆணைப்படித் தென்னாட்டிற்கு வந்த அகத்தியர் பல தலங்களுக்கும் சென்று தரிசனம் செய்து மகிழ்ந்தபின், பொதிகை மலைக்குச் சென்றுத் தவத்தில் ஆழ்ந்தார். அந்தப் பேரின்ப நிலையினின்று நீண்ட காலத்திற்குப் பிறகே கண் விழித்தார்.

அதன் பிறகு, பரசுராமரால் உருவாக்கப்பெற்ற இன்றைய கேரளத்தில் உள்ள கொல்லம் நகருக்கு வந்தார். அந்நாளில் இது பெரிய வனமாக இருந்தது. இதன் மத்தியில் பல விழுதுகளுடன் கூடிய பெரிய ஆலமரம் இருந்தது. இதன் அடியில் அகத்தியர் பெரிய பர்ணக சாலை அமைத்துத் தன் சீடர்களுடன் சிவனை வழிபட்டு வசித்து வந்தார்.

ஒரு நாள் காலையில் தன்னுடைய பூசைகளை முடித்துக் கொண்டு அமர்ந்திருந்தபோது, அவருக்கு உமாமகேச்சுவரரின் திருமணக் கோலத்தை மீண்டும் காண வேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. உடனே பரமேசுவரனைத் துதித்தார். உடனே அந்த இடத்தில் அன்று இமய மலைச்சாரலில் நடைபெற்ற திருமண நிகழ்வுகள் வரிசையாகத் தொடர்ந்து தோன்றின. அங்கிருந்த அனைவரும் அக்காட்சியைக் கண்டு மகிழ்ந்தனர்.

இறுதியில் அனைவரும் தேவியுடனான சிவபெருமானைத் துதித்து, 'தாங்கள் காட்டிய இந்தத் திருமணக் கோலத்திலேயே இங்குக் கோயில் கொண்டருள வேண்டுமென வேண்டினர். அவர்கள் முன்னே தோன்றிய உமையும் சிவனும் அப்படியே ஆகட்டுமென்றனர்.

அக்காட்சியைக் கண்ட உமையின் தந்தையான இமயமலை அரசன் இமவானும், தாயான மேனையும் அவர்களிடம் நாங்கள் எப்போதும் கண்டு மகிழும்படி இப்படியே நீங்கள் வடக்கு நோக்கி அமர்ந்தருள வேண்டுமென்று வேண்டினர். மேலும் இத்தலத்தில் எங்கள் பெண்ணின் பெயரால் தாங்கள் உமாமகேசுவரர் என்ற பெயராலேயே விளங்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். அதன்படியே சிவபார்வதியர் 'உமா மகேச்சுவரர்' ஆக இங்கு எழுந்தருளினர்.

அகத்தியர் ஆசிரமம் அமைத்து வாழ்ந்த வனப்பகுதி நீண்ட காலத்திற்குப் பிறகு நாடு, நகரங்களாகியது என்றாலும் கோயில் அமைந்த இப்பகுதியில் தேவர்கள் தினமும் பூஜை செய்து வந்ததால் அங்கு மக்கள் நெருங்க முடியவில்லை. அப்பகுதியினைக் குபேரனின் காவலனான பூதம் ஒன்று காவல் காத்து வந்தது.

இப்படி இருக்கையில் ஒரு சமயம் அகத்தியர் மக்கள் கலியுகத்தில் இந்த இடத்தைத் தரிசித்து வணங்கித் திருமணப் பேற்றையும் புத்திரபேற்றையும் சகல நலன்களையும் பெறுவதற்கு வழி செய்யும் வகையில் இந்த இடத்தில் ஒரு ஆலயம் அமைக்க வேண்டும் என எண்ணினார். அதை, சிவபெருமானிடம் வேண்டினார். அவரும் காலம் கனியும்போது "உரியன செய்வோம்" என்றார்.

அதன்படியே, சிவபெருமான் ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னர் திருவனந்தபுரத்து அரண்மனைப் பொற்கொல்லரும், விசுவகர்மா இனத்தில் தோன்றியவருமான ஸ்ரீவேங்கடேசுவரன் என்பவர் கனவில் தோன்றி இந்த இடத்தைக் குறிப்பிட்டு இங்கு உமா மகேச்சுவரர் ஆலயத்தை அமைக்கும்படி ஆணையிட்டார். அதன்படியே அவர் கொல்லத்திற்கு வந்து ஆலமரத்தடியில் உள்ள சிவசக்தியான 'உமா மகேச்சுவரர்' பீடத்தைக் கண்டார். அப்போது அப் பகுதியைக் காவல் காத்து வந்த சிவபூதம் தன் அனுமதியின்றி இவ்விடத்திற்கு அவர் வந்ததால் மிக்க கோபம் கொண்டு புயலெனச் சீறிவந்தது. அவர் அதனை வணங்கி தன் கனவின் தன்மைகளை எடுத்துக் கூறி இங்கு தான் கோயில் கட்ட உதவும்படி வேண்டினார். பின்னர் அப்பூதத்தின் துணையுடன் கோயிலையும் அமைத்தார்.

அவர் அங்கு அழகிய ஆலயத்தை அமைத்து மக்கள் வழிபட விரிவான ஏற்பாடுகளைச் செய்ததுடன் தானும் அப்பகுதியில் குடியேறித் தம் குலத்தொழிலான 'பொற்கொல்லர்' வேலையையும் செய்து வந்தார். அவர் காலத்தில் சுவாமி அம்மன் வடிவங்கள் புற்று மண்ணால் அமைத்து வழிபாடு செய்யப்பட்டு வந்தது. பின்னர் புற்று மண்சிலைகளுக்குப் பதிலாக அத்தி மரத்தால் ஆன திருஉருவங்களை அமைத்தனர். பின்னர் அவர் வழி வந்த திரு சரவணப் பெருமாள் என்பவர் 'அபிஷேகப் பிரியனான' சிவ பெருமானுக்கு அபிஷேகம் செய்ய வசதியாக மூலவர் திருமேனிகளை இறைவன் அனுமதியுடன் கல் திருமேனிகளாக அமைத்து 108குடம் நீரால் அபிஷேகம் செய்யும் முறையைத் தோற்றுவித்தார். அவருடைய பேரர்களே இப்போது கோயிலைச் சிறப்புடன் நடத்தி வருகின்றனர். இக்கோயில் கேரளத்தின் முக்கியமான நகரங்களில் ஒன்றான கொல்லம் நகரின்மையப் பகுதியில் அமைந்துள்ள மெயின் ரோடில் வடக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. கருவறையில் உமாமகேச்சுவரர் மான்மழு வேந்தி அபய வரத முத்திரையுடன் இடபவாகனத்தில் அமர்ந்துள்ளார். அவருக்கு அருகில் உமை பாசாங்குசம் அபய வரதமுத்திரைகளைத் தாங்கி யோக போகே சுவரியாய் சிம்ம வாகனத்தில் அமர்ந்துள்ளாள். இத்தகைய ஒப்பற்ற காட்சி வேறெங்கும் காண முடியாததாகும்.

கோயிலின் தென்மேற்கில் கிழக்கு நோக்கியவாறு 'சிவபூதன்" ஆகிய மாடப்புறத் தம்பிரான் ஓங்கிய வாளும் ஊன்றிய கதையும் கொண்டு விளங்குகின்றார். கருவறை வாயிலின் இருபுறமும் கணபதியும் முருகனும் அமர்ந்துள்ளனர். தினமும் இங்குக் கணபதி வேள்வியுடன் தொடங்கும் பூஜை நிர்மால்ய தரிசனம், காலை சந்தி, மாலை சந்தி என்ற சிறப்புடன் நடை பெறுகின்றது. திவ்யதம்பதிகளாக விளங்கும் அம்மையப்பருக்குச் சிறப்பான மலர் அலங்காரம் தினமும் நடைபெறுகின்றது.

இப்போது இக்கோயிலில் நல்வாழ்க்கை அமையவும் திருமணத்தடைகள் நீங்கி நல்ல திருமணம் அமையவும் 'சுயம்வர அர்ச்சனை' என்ற சிறப்புவழிபாடு நடைபெறுகின்றது. இப்பிரார்த்தனையின் பயனால் பலருக்குச் சிறப்பான வாழ்க்கை அமைந்துள்ளதைப் பல தம்பதியரின் அனுபவங்களினால் அறியமுடிகிறது. ஆதலால் இவ்வழிபாட்டை பலரும் செய்து பயன் பெறுகின்றனர். நீண்ட காலம் திருமணத்தடையால் வருந்துவோர்களும், இல்வாழ்க்கைச் சிக்கல்களால் துணைவரைப் பிரிந்து வருந்துவோர்களும் இங்கு நேரில் வரமுடியாத நிலையில் இருந்தாலும் தங்கள் பெயர் நட்சத்திரம் ஆகியவற்றை எழுதி (உமாமகேச்சுவரர் ஆலயம், மெயின் ரோடு கொல்லம் கேரளா எனும் முகவரிக்கு) அனுப்பினால் அவர்களுக்காகத் தனி வழிபாடு நடத்தி பிரசாதம் அனுப்பவும் செய்கின்றனர்.

நாமும் நமக்கு இல்லறம் நன்கு அமைய இத்திருத்தலத்தைப் போற்றி வணங்குவதுடன் மற்றவர்க்கும் நல்ல சுகமான வாழ்வு அமைய பிரார்த்திப்போம்.

மனையறம் நல்கும் உமாமகேசன் அருளால் யாவரும் இனிதே வாழ்க!







ஐந்தும் சிவபெருமானும்

அனைத்து இந்திய சமயங்களிலும் ஐந்து என்ற எண் தனிச்சிறப்பிடம் பெறுகிறது. குறிப்பாகச் சைவசமயத்துள் ஐந்து என்ற எண் பலநோக்கில் உள்ளதாகக் காண்கிறோம்.

எடுத்துக்காட்டாக, சைவசமய நூல்களின்படி இந்த உலகமும் உயிர்த் தொகுதியும் சீராக இயங்க சிவபெருமான் நடத்தும் தொழில்கள் ஐந்தாகும். இது தமிழில் ஐந்தொழில் என்றும் வடமொழியில் பஞ்சகிருத்தியம் என்றும் அழைக்கப்படும். இவை முறையே ஆக்கல், காத்தல், அருளல், மறைத்தல், அழித்தல் என்பவனவாகும்.

சிவபெருமான் இந்த உலகின் மூலப்பொருளாக உண்டாக்கிய பொருள்கள் ஐந்தாகும். இவை முறையே நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற ஐந்தாகும். மேலும் உலகத்திலுள்ள இன்ப துன்பங்களை மனிதன் அனுபவிப்பதற்காக அளிக்கப்பட்டுள்ள புலன்கள் ஐந்தாகும். இவை மெய், வாய், கண், மூக்கு, செவி என்பனவாகும்.

இவற்றால் அடையப்படும் அனுபவம் முறையே உணர்தல், பேசுதல், பார்த்தல், நுகர்தல், கேட்டல் என்று ஐந்தாகும்.

சைவசமயத்தின் மேலான மூலமந்திரம் ஐந்தெழுத்து மந்திரமாகும். இது "நமசிவாய" என்ற ஐந்தெழுத்துக்கள் கொண்டதாகும். இதனை அஞ்செழுத்து மந்திரம் என்றும் பஞ்சாட்சரம் என்றும் பல பெயர்களால் அழைப்பர்.

சிவனுடைய முகங்கள் ஐந்து சிவப்பிரம்ம மந்திரங்கள் ஐந்து, சிவன் அணிந்துள்ள பாம்பின் தலைகள் ஐந்து, அவர் அணிந்துள்ள விபூதியின் வகைகள் ஐந்து. அவருக்கு செய்யப்படும் அபிஷேகப் பொருட்கள் ஐந்து, அவரது குமாரர்கள் ஐவர், அவருக்குச் சூட்டுகின்ற வில்லும் ஐந்து. இப்படி அனேக செய்திகள் சைவசமயத்துள் ஐந்தின் வகையாக இருக்கக் காண்கிறோம்.அவற்றுள் சிலவற்றை இம்மலரில் அறிந்து மகிழலாம். எட்டு என்ற சொல் எட்டு என்ற எண்ணைக் குறிப்பதுடன் எட்டு என்ற பொருளையும் உணர்த்துகிறது. சிவபரம்பொருளை எட்டிப்பிடிப்பதற்கு உபாயமாக விளங்கும் ஐந்து பொருட்களைச் சிவமஞ்சரியின் இந்த எட்டாவது மலரில் விளக்கமாக அறிந்து மகிழலாம்.

அஞ்சொல் இளமங்கையான பார்வதியுடன் இனிதமர்ந்து ஐந்தொழிலை நடத்தி அனைத்துலகம் இன்பமுற எண்பெரும் சித்தி இனிதுடன் அருளும் ஐமுகச் சிவபெருமான் அன்பர்கள் அனைவருக்கும் எல்லாச் சுகங்களையும் இனிதே அளித்திட வேண்டுமென்று அவனுடைய பொன்னான திருவடிகளைப் போற்றிப் பணிந்து வேண்டுகின்றோம்.

-சிவசுந்தரி

ஐந்துவடிவாக விளங்கும் ஆதிசிவம்

ஆதிமூலப் பொருளாகிய ஆதிசிவம் உலகம் தோன்றிச் செயல்படவும், உயிர்கள் இன்ப,துன்பம் அனுபவித்து மேன்மை பெறவும், அகண்ட பெருவெளியாகிய உருவமற்ற நிலையிலிருந்து படிப்படியாக உருவம் தாங்குகிறது. இதன்படி முழுஉருவம் கொண்ட சிவம் மூர்த்தம் சதாசிவம் என்று அழைக்கப்படும். இதில் சிவபெருமான் ஐந்து முகங்களும் பத்துகரங்களும் கொண்டு பத்மாச னத்தில் வீற்றிருந்து அன்பர்களுக்கு அருள் பாலிக் கின்றார். இந்தச் சதாசிவமூர்த்தம் ஐந்து வடிவங்கள் தாங்கி, ஐந்து தொழிலை நடத்துகிறது. இவற்றிற்கு முறையே தத்புருஷப்பிரம்மம், அகோரப்பிரம்மம், சத்யோஜாதப்பிரம்மம், வாமதேவப்பிரம்மம், ஈசானப் பிரம்மம், என்று பெயர்கள் வழங்குகின்றன. இவரிகளின் வடிவம் வனப்பு முதலியவற்றைப் புராணங்கள் விரிவாகக் கூறுகின்றன. இவர்கள் நமசிவாய என்ற ஐந்தெழுத்துக்களின் வடிவாக விளங்குகின்றனர். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற ஐம்பூதங்களில் நின்று அவற்றை தொழில் படுத்துகின்றனர். உமாதேவியார் தன்னிடமிருந்து ஐந்து சக்திகளைத் தோற்றுவித்து இவர்களுக்கு அளித்துள்ளார்.

இதன்படி : முதலாவதான சத்யோஜாத சிவம் தங்கம் போன்ற நிறத்துடன் சங்காலாகிய குண்டலங் களை அணிந்து பூமி எங்கும் அதில் நிறைந்து வீற்றி ருக்கின்றார். இவர் உயிர்களின் வினைகளை நீக்கி அவற்றிற்கு நற்பயன்களைத் தருகின்றார். பஞ்சாட் சரத்தின் முதல் எழுத்தான 'ந' இவருடை வடிவமாகும்.

இரண்டாவதான வாமதேவ சிவம் நீரின் மத்தியில் வீற்றிருக்கின்றார். குங்குமம் போன்ற செம்மை நிறத்தில் பிரகாசிக்கின்றார். பஞ்சாட்சரத்தில் இரண்டாவது எழுத்தான 'ம' என்ற எழுத்தின் பொருளாக விளங்குகிறார். பதிமூன்று கலைகளுடன் உமாதேவியுடன் வீற்றிருக்கும் இவர் உயிர்களின் பாவங்களை விரித்து அவற்றை அமுதம் பருகச் செய்கின்றார்.

மூன்றாவதான அகோரசிவம் அக்னி மண்டலத்தின் நடுவில் வீற்றிருக்கின்றார். கறுத்த பெரிய வடிவத்தையும் உடையவராக விளங்கும் இவர் உயிர்களின் பாவங்களை சுட்டெரிக்கின்றார். எட்டு கலைகளுடன் கூடிய இவர் பஞ்சாட்சரத்தில் மூன்றா வது எழுத்தான 'சி' என்ற எழுத்தாக விளங்குகின்றார். இவருடைய உமாதேவியார் அகோரேசி என்ற பெயருடன் விளங்குகின்றார்.

நான்காவதான தட்புருஷ சிவம் வாயு மண்ட லத்தின் மத்தியில் நான்கு கலைகளுடன் வீற்றிருக் கின்றார். இவர் உயிர்களின் மனமயகத்தை நீக்கி அருள் புரிகின்றார். பாலசூரியனைப் போன்று பிரகாசிக்கும் இம்மூர்த்தி பஞ்சாட்சரத்தின் நான்காவது எழுத்தாகிய 'வா' என்பதின் பொருளாக விளங்குகிறார்.

ஐந்தாவதாக விளங்கும் ஈசானசிவம் கோடி சூரியனைப் போன்று பிரகாசிக்கின்றார். பஞ்சாட்சரத் தின் ஐந்தாவது எழுத்தான 'ய' என்பதன் வடிவாக ஐந்து கலைகளுடன் பிரகாசிக்கின்றார். ஆகாயத்தில் பரந்து வீற்றிருக்கும் இவர் உயிர்களின் பாவங்களை எரித்து அவைகளுக்குச் சுகங்களை அருளிச் செய்கின்றார்.

ஐந்தெழுத்து அழகி

சிவமூலமந்திரம் என்றழைக்கப்படும் 'நமசிவாய' என்பது அன்பர்களுக்கு அருள்புரிய ஓர் அழகிய பெண் வடிவம் கொண்டுள்ளது. இப்பெண்ணை, பஞ்சாட்சரி, ஐந்தெழுத்து மங்கை, என்று, பல பெயர்களால் அழைக்கின்றனர். இவள் ஐந்து முகங்களைக் கொண்டவள். நான்கு கரங்களில் நீலோற்பலமலர், தாமரை மலர், அபயமுத்திரை, வரதமுத்திரை ஆகியவற்றைத் தாங்கி, தாமரை மலரில் பத்மாசனத்தில் வீற்றிருக்கின்றாள். இவளுடைய அடர்ந்த கரிய கூந்தல் பிரகாசிக்கின்றது. இவளுடைய கிழக்கு நோக்கிய முகம், வெள்ளியைப் போன்றுப் பிரகாசிக்கும். இது பஞ்சாட்சரத்தின் நான்காம் எழுத்தாகிய 'வா' எழுத்தின் பொருளானது. மற்றைய வடக்கு நோக்கிய சிவப்பு முகம் 'ம' என்ற எழுத்தையும் தெற்கு நோக்கிய கறுப்பு நிறம் கொண்ட முகம் 'சி' என்ற எழுத்தையும் மேற்கு நோக்கிய தங்க நிறங்கொண்ட முகம் 'ந' என்ற எழுத்தையும் மேலே உள்ள வெண்ணிறம் கொண்ட முகம் 'ய' என்ற எழுத்தையும் அதன் நுண்பொருளை விளக்குகின்றன என்று, சிவமகாபுராணம் கூறுகின்றது.

பஞ்ச மூர்த்திகள்



ஸ்ரீ விநாயகர் · முருகன் · சிவபெருமான் · உமாதேவியார் · சண்டேசுவரர்

சிவாலயப் பெருந்திருவிழாவின் பொழுது தினமும் நடைபெறும் திருவீதியுலாவில் ஐந்து மூர்த்திகள் எழுந்தருள்கின்றனர். இவர்கள் விநாயகர், முருகன், சிவபெருமான், உமாதேவியார், சண்டேசுவரர் ஆகியோராவர். இவர்களையே *"பஞ்சமூர்த்திகள்"* என்று அழைக்கின்றோம்.

பெருந்திருவிழாவின் முதல் அங்கமாக நடைபெறும் கொடியேற்றத்தின் போது இவ்வைந்து மூர்த்திகளும் கொடிமரத்திற்கு முன்பு எழுந்தருள்கின்றனர். இவர்கள் முன்னிலையில் விரிவான பூஜைகளுடன் கொடியேற்றமும், தொடர்ந்து திருவீதியுலாவும் நடைபெறுகின்றது. திருவிழாவின் பத்து நாட்களிலும் காலை, இரவு வேளைகளில் பஞ்சமூர்த்திகளின் வீதியுலா நடைபெறும். விழாவின் இறுதியில் இவர்களின் முன்னிலையில் கொடியிறக்கப்பெற்று விழா நிறைவு பெறுகின்றது.

சிலதலங்களில்பகலில்சந்திரசேகரர் விழாவும் இரவில் பஞ்சமூர்த்திகளின் புறப்பாடும் நடைபெறுகின்றன.

பொதுவாக இவ்வரிசையில் உள்ள விநாயகப்பெருமான் பெருச்சாளிவாகனத்திலும், முருகன் மயில் வாகனத்திலும், சிவபெருமான், உமாதேவியார், சண்டேசுவரர் ஆகிய மூவரும் இடப வாகனங்களிலும் வலம் வருகின்றனர்.

சிறப்பான திருவிழாக்களையொட்டி இவர்கள் வலம் வரும் வாகனங்களின் வரிசையும் மாறிவரும். இவற்றின் பட்டியலைப் பின்வரும் மலரில் காணலாம்.

திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம் முதலிய பெரியதலங்களில் ஐந்து மூர்த்திகளுக்கும் ஐந்து தேர்கள் உள்ளன. இவற்றில் ஐந்து மூர்த்திகளும் வலம் வருகின்றனர். இதனைப் *"பஞ்சரத"* உற்சவம் என்பர்.

இவ்வரிசையில் எழுந்தருளும் விநாயகர் நின்ற நிலையில் நாற்கரம் கொண்டு அவற்றில் முறையே பாசம், அங்குசம், தந்தம், மோதகம் ஆகியவற்றைத் தாங்கி அருள் பாலிக்கின்றார். (மூலவராக அமையும் விநாயகரை அமர்ந்திருப்பது போலவும், உலாத்திருமேனியாக உள்ள விநாயகரை நிற்பவராகவும் அமைப்பதே மரபாகும்).



○ அன்னவாகனத்தில் உமாதேவியார்.

அடுத்தவரான முருகப்பெருமான் இருபெரும்தேவியர்களுடன் காட்சியளிக்கின்றார். இவரும் நின்றநிலையில் நாற்கரங்களில் சக்தி, குலிசம் எனும் படைக்கலங்களுடன் அபய,வரதமுத்திரைகளைத் தாங்கியவராக விளங்குகின்றார்.

மூன்றாவதான சிவபெருமான் தன் இணைபிரியாத பராசக்தியுடன் வீற்றிருக்கின்றார். இருவருக்கும் இடையில் முருகப்பெருமான் குழந்தைவடிவில் காட்சியளிக்கின்றார். இவ்வடிவம் "சோமாஸ்கந்த மூர்த்தி" என அழைக்கப்படும். சிவமூர்த்தங்கள் யாவற்றிலும் உயர்ந்தது இதுவே என்பதால் பெருந்திருவிழாவில் இவரை முதன்மை மூர்த்தியாக வைத்து வணங்குகின்றனர். இவருக்குப் "பெரிய நாயகர்" என்ற பெயரும் உண்டு.

நான்காவது மூர்த்தியாகிய உமாதேவியார் நின்ற நிலையில் காட்சியளிக்கின்றாள். முன் சொன்ன சிவபெருமான் அருகில் வீற்றிருக்கும் பராசக்தியும் இவளே. அது இறைவனோடு இணைபிரியாத நிலை. இது அன்பர்க்குத் தாயாகி வந்த தனித்த வடிவமாகும். இவ்வாறு இரண்டுமுறையில் அன்னை இடம் பெறுவது இங்கு நோக்கத்தக்கதாகும்.

ஐந்தாவதாக வருபவர் சண்டேசுவரராவர். இவரும் மூலவராக இருக்கும் போது அமர்ந்த நிலையிலும் இப்படி உலாவரும்போது நின்றவாறும் காட்சியளிக்கின்றார். அபூர்வமாக சில தலங்களில் அமர்ந்தவடிவில்உலாவரும்சண்டீசரையும் காணலாம்.

திருவிழா நாட்களில் இந்த ஐந்து மூர்த்திகள் வீதிகளில் வலம் வருவது கண் கொள்ளாக்காட்சியாகும். இந்தவரிசையில் சிவபெருமான், அவருடைய ஒருபகுதியான உமாதேவியார், அவர்களின் குமாரர்களான விநாயகர், முருகர் ஆக நால்வரும்கடவுளாக விளங்க ஐந்தாமவரான சண்டீசர் மானுடராக விளங்குகின்றார். மனிதன் தன் அளவற்ற பக்தியால் இறைநிலையை அடைந்து விடமுடியும் என்பதனை எடுத்துக்காட்டவே கடவுள் குடும்பத் தொகுதியுடன், சண்டீசரும் சமநிலையில் வைத்தெண்ணப்படுகிறார் என்று அன்பர்கள் கூறுவர்.

சிவாலயங்களில் மட்டுமின்றிச் சில முருகன், விநாயகர், ஆலயங்களிலும் மேற்சொன்ன பஞ்சமூர்த்திகள் திருவிழாக்களில் வீதி வலம்வருகின்றனர்.

அச்சுக்கலை வளர்ச்சியின் தொடக்கத்தில் அச்சிடப்பட்ட அனைத்து சிவாலய விழா அழைப்பிதழ்களிலும். ஒரேவரிசையில் பஞ்சமூர்த்திகள் வாகனத்துடன் எழுந்தருளியுள்ள காட்சி இடம் பெற்றிருந்ததைக் காண்கிறோம். இப்போதும் திருவண்ணாமலை, காஞ்சீபுரம் முதலான திருத்தலங்களின் பெருந்திருவிழாவிற்கான அழைப்பிதழில்பஞ்சமூர்த்திகள் இடம்பெற்றிருக்கக் காண்கிறோம்.

தஞ்சை மாவட்டங்களில் அமைந்த பஞ்சமூர்த்திகள் வரிசையில் அம்பிகைக்கு இடபத்திற்குப் பதில் அன்னவாகனத்தை அமைத்துள்ளனர். திருவண்ணாமலையில் சண்டேசுவரருக்குப் புலிவாகனம் அமைத்துள்ளதை அக்கோயில் அழைப்பிதழில் காணலாம்.

சிவாலயங்களின் முகப்பின் மீது ஐந்து வளைவுகள் அமைக்கப்பெற்று அவற்றில் இந்த ஐந்து மூர்த்திகளையும் வைப்பது வழக்கமாகும்.



சிவபெருமானின் ஐந்துவகைக் கோலங்கள்

சிவபெருமானின் திருவடிவம் எண்ணிலடங்காதன, என்றாலும் அவரை அன்பர்கள் எளிதில் வழிபட்டு உய்யும் வண்ணம் அவர் அருள் பெற்ற ஞானிகள் அவருடைய இருபத்தைந்து சிவவடிவங்களைத் தேர்ந்தெடுத்து அதற்கு "மகேச்சுவர வடிவங்கள்" என்று பெயரிட்டு அவற்றை வழிபட வகை செய்துள்ளனர்.

பின்னாளில் மேற்சொன்ன இந்த இருபத்தைந்து வடிவங்களில் ஐந்தினைத் தேர்ந்தெடுத்து ஆலயங்களில் உலாத் திருமேனிகளாக அமைக்கும் வழக்கம் வந்துள்ளது.

இவ்வடிவங்கள் முறையே சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், பிரதோஷநாயகர், சபாநாயகர் (நடராசர்), பிட்சாடனர் ஆகிய மூர்த்திகளாவர். (சிலர் இவ்வரிசையில் பிட்சாடனரை விடுத்து பள்ளியறை நாயகரையும் சிலர் பள்ளியறை நாயகருக்குப் பதிலாக ஸ்ரீபலி நாயகரைக் கூறுவர்.)

1. பிரதேஷநாயகராகிய மூர்த்தி பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை வரும் பிரதோஷ விழாவில் இடபவாகனத்தில் ஆலயத்திற்குள்ளேயே வலம் வந்து உலாக் காண்பார்.

2. அடுத்ததான சந்திரசேகரர் மாதப்பிறப்பு, சிவராத்திரி, காணும் பொங்கல், விஜயதசமி பார்வேட்டை முதலிய நாட்களில் உலாவருவார். திருவண்ணாமலை, திருவான்மியூர், திருஒற்றியூர் முதலான தலங்களில் பெருந்திருவிழா நாட்களில் பகலில் சந்திரசேகரர் வீதியுலாவும் இரவில் சோமாஸ்கந்தர் வீதியுலாவும் நடைபெறக் காணலாம்.


3. மூன்றாவதான "சோமாஸ்கந்த மூர்த்தம்" கொடியேற்றிச் செய்யும் பெருந் திருவிழாவில் உலாவருவதாகும். சிவாலயங்களில் இவர் தென்மேற்கு முனையில் எழுந்தருள்வார். இவரே சிவமூர்த்தங்களில்

தலைசிறந்த உலாத்திருமேனியாகப் போற்றப்படுகிறார்.

4. நான்காவதான நடராசப் பெருமான் பெருந்திருவிழாவின் இறுதி நாளான தீர்த்தவாரி தினத்திலும், மார்கழி திருவாதிரை நாளிலும் உலாக்காண்பார்.

5. பெருந்திருவிழாவின் எட்டாம் நாள் மாலையில் பிக்ஷாடன மூர்த்தி வலம் வருவார். இது இறைவனின் எளிவந்த திருக்கோலமாகும். ★

பஞ்சாயதன வழிபாடு



சைவ சமயத்துள் சில பிரிவினர் பஞ்சாயதன வழிபாட்டை ஏற்றுக் கொண்டுள்ளனர். இவ்வழிபாட்டில் சிவபெருமான், அம்பிகை, விநாயகர், சூரியன், திருமால் ஆகிய ஐவர் இடம் பெறுகின்றனர். பொதுவாக இவ்வழிபாட்டில் வழிபடப் படும் தெய்வங்களுக்கு உரிய உருவங்களை அமைக்காமல் அவர்களது இயற்கை (சுயம்பு) வடிவங்களான (சிவபெருமானுக்குரிய) பாணலிங்கம்; (பார்வதி தேவிக்கான) பொன்தாது கொண்ட மண்கட்டி; (திருமாலுக்கான) சாளக்கிராமம்; (சூரியனுக்கான) ஸ்படிகம் (அ) வெண் கூழாங்கல்; (விநாயகப்பெருமானுக்குரிய) (ஜெஸ்பர்) சிவப்புக்கல் ஆகியவற்றை வைத்து வழிபடுகின்றனர்.

ஆயினும் காலப்போக்கில் இத்தகைய இயற்கை வடிவங்களுக்குப் பதிலாக சிலர் இத்தெய்வங்களின் அழகிய திருஉருவங்களை வைத்து வழிபடும் நிலையும் உண்டாகி விட்டனர். எடுத்துக்காட்டாக சென்னை தங்கசாலைத் தெருவில் உள்ள குஜராத்தியர் சபையினல் உள்ள ஆலயத்தில் இத்தகைய ஐந்து மூர்த்திகளையும் ஒரே பீடத்தில் அழகிய வடிவுடன் அமைத்திருக்கக் காணலாம். இதைப்போலவே கர்னாடக மாநிலத்தில் உள்ள "குக்கு சுப்பிரமணியா" ஆலயத்திலும் உமாமகேசரை நடுவில் கொண்ட பஞ்சாயதன திருஉருவங்கள் கொண்ட வழிபாட்டைக் காணலாம்.

சிவபெருமானை நடுவில் வைத்து சுற்றிலும் மற்றைய நான்கு தெய்வங்களை நிலைப்படுத்தி வழிபடுகிற பஞ்சாயதன வழிபாடு "சிவபஞ்சாயதனம்" என்று அழைக்கப்படும். ✪

பஞ்சமுக வாத்தியம்

சிவபெருமானுக்கு உரிய வாத்யங்களில் ஒன்று பஞ்சமுக வாத்யமாகும். இதனைக் குடமுழா எனவும் கூறுவர். இது அகன்ற பானை போன்ற உருண்டையான வடிவமும் அதன் மேற்பரப்பில் படத்தில் காண்பதுபோல ஐந்து முகங்களைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது. இதனைப் "பஞ்சானன" முரசு என வடமொழியில் வழங்குவர்.


இதன் ஐந்துமுகமும் சிவபெருமானின் ஐந்து முகங்களைக் குறிக்கிறது என்பர். சிவசந்நிதியில் பாணாசுரன் என்பவர் இடையறாது பஞ்சமுக வாத்யத்தை வாசித்துக் கொண்டிருக்கின்றார் என்பர்.

குடமுழா வாசிக்கும் நந்திகணத்தைச் சேர்ந்த ஒருவரே மாணிக்கவாசகராக அவதரித்தார் என்பர். இதைக் குறிக்கும் வகையில் திருநாவுக்கரசு நாயனார் "குடமுழ நந்தீசனை வாசகனாக் கொண்டார்" என்று தமது தேவாரத்துள் அருளிச் செய்துள்ளார்.

திருத்தினைநகர் முதலான பல சிவாலயங்களில் உள்ள நடராசர் திருவடிவில் வலப்புறம் ஐந்துமுக இசைக் கருவியை இசைக்கும் பாணனைக் காணலாம்.

புராணங்களில் சிவபெருமான் திரிபுரங்களை எரித்தபின் அந்த நகரில் வாழ்ந்த மூன்று அசுரர்களில் இருவரை வாயிற்காவலர்களாகவும் ஒருவனை குடமுழா முழக்குவோனாகவும் கொண்டார் என்று புராணங்கள் கூறுகின்றன.

திருவாரூர்க் கோயிலில் பஞ்சமுக வாத்யம் ஒன்றுள்ளது. இதனை ஆகம முறைப்படித் தியாகராசர் சந்நிதியில் வாசிக்கின்றனர்.



✪ பஞ்சமுக வாத்யம் - திருவாரூர்

இங்குள்ள இப்பஞ்சமுக வாத்தியம் பெரியதும், அமைப்பானதும், ஸ்வர சப்தமுள்ளதும் ஆகும். இதன் முகங்களில் ஒன்றைப் பாம்பு சுற்றினாற்போல அமைந்துள்ளது. மற்ற நான்கு முகங்களில் ஒன்றில் தாமரைப்பூ அடையாளமும், இரண்டாவதில்ஸ்வஸ்திக் அடையாளமும்மற்றவை அடையாளம் இல்லாமலும் உள்ளன. நடுவில் உள்ள முகம் பெரியதாகவும், மான் தோலால் கட்டப்பட்டதாகவும் உள்ளது. இதனை வாசிப்பவர்கள் பாரசைவர்கள் எனப்படுகின்றனர்.

இவ்வாத்தியத்தின் ஒவ்வொரு முகத்திலும் தனித்தனியாக அடிக்கும் பொழுது ஏழு முறையும், ஐந்தினையும் சேர்த்து அடிக்கும்பொழுது முகத்திற்கு ஒன்றாக ஐந்து முறையும் அடிக்கப்படும்.



○ 'பாணாசுரன்' - தில்லைச்சிற்பம்

இவ்வாத்தியம் சதாசிவமூர்த்தியின் ஐந்து திருமுகங்களில் இருந்து வந்தது என்றும் சிவனின் நடனகாலத்தில் நந்திகேசுவரர் இதனை வாசிப்பார் என்றும் கூறப் படுகிறது. பூலோகத்தில் நந்தி வம்சத்த வர்களாகிய பாரசைவர்கள் இதனை இசைக் கின்றனர் என்று "பஞ்சமுக வாத்திய லட்சணம்" என்ற வடமொழி நூல் கூறு கின்றது. இந்நூலில் பாரசைவர்களின் உற்பத்தியும் அவர்கள் மேற்கொள்ள வேண்டிய தீட்சா முறைகளையும் பஞ்சமுக வாத்தியத்தை வாசிப்பதால் உண்டாகும் பயனும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இதைப்போன்ற வாத்தியம் ஒன்று திருத்துறைப்பூண்டி ஆலயத்திலும் உள் ளது. ✪

பஞ்ச பருவத் திருவிழாக்கள்

சிவாலயங்களில் ஐந்து வகையான திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இவை நாள்திருநாள் (நித்திய உற்சவம்); வாரத்திருநாள் (வாரஉற்சவம்); பிறைத் திருநாள் (பட்ச உற்சவம்); மாதத்திருநாள் (மாச உற்சவம்); ஆண்டுத்திருநாள் (வருஷ உற்சவம்) என்பனவாகும்.

நாள்திருநாள் நாள்தோறும் நண் பகலிலும், இரவிலும் சிவபெருமான் உமா தேவியாருடன் எழுந்தருளி பத்து திசை பாலகர்க்கும் அவர்தம் கடமையை உணர்த்தி உலகினைப் புரக்கும் நிகழ்ச்சியை எளிய விழாவாகக் கொண்டாடுவர். இவ்வாறு அவர் உலகிற்குப் படியளக்கும் நிகழ்ச்சியை ஸ்ரீபலி என அழைப்பர். இவ்வாறு ஸ்ரீபலிக்கு எழுந்தருளும் நாயகர் ஸ்ரீபலி நாயகர் என்று அழைக்கப்படுகின்றார். இம்மூர்த்தி சிறுவடிவிலான சந்திரசேகரர் வடிவமாகும். இந்த நாள் திருவிழாவை "ஸ்ரீபலி" என அழைப்பர். கேரளாவில் பேச்சுவழக்கில் இதனை "சீவேலி" என அழைக்கின்றனர்.

தினமும் அர்த்த ஜாமத்தின் போது சிவபெருமானைச் சிறுபல்லக்கில் அமர்த்தி உட்பிரகாரத்தில் வலம்வரச்செய்து பள்ளியறையில் எழுந்தருள வைத்து தீபா ராதனைகள் செய்வர். இது "பள்ளியறை" விழா எனப்படும்.

ஸ்ரீபலி, அர்த்தஜாமம் ஆகிய இரண்டு நிகழ்சியிலும் சுவாமி விழாக்காண்பதை "நித்தியோத்சவம்" என அழைப்பர்.

வார உத்சவம் : திங்கட்கிழமை (சோமவாரம்) புதன்கிழமை முதலான கிழமைகளை அடிப்படையாகக் கொண்டு நடைபெறும் விழாக்கள் வார உத்சவம் எனப்படும்.

பிறைத்திருவிழா (பட்ச உத்சவம்) : இது சதுர்த்தி, அஷ்டமி, பிரதோஷம் முதலான திதிகளின் அடிப்படையில் வரும் விழாக்களாகும். இதில் பிரதோஷநாளில் பெருமான் இடபவாகனத்தில் உட்-பிரகாரத்தில் வலம் வருவார்.

மாதத் திருவிழா (மாச உத்சவம்) : இவை மாதத்தின் முதல் நாளான மாசப்பிரவேசம், அமாவாசை, பௌர்ணமி முதலான மாதத்திற்கு ஒருமுறைவரும் விழாக்களாகும். குறிப்பாக மாதத்தின் முதல்நாளில் சந்திரசேகரரை உலா-வரச்செய்து விழாக் காண்பது தொன்று தொட்டு இருந்து வரும் வழக்கமாகும். இதனைச் "சங்கராந்தி" விழா என்பர்.

ஆண்டுத் திருவிழாக்கள் (வருஷ உத்சவம்): திருவாதிரை, கார்த்திகை தீபம், தைப்பூசம், மாசிமகம், பெருந்திருவிழா முதலியன ஆண்டுவிழாக்கள் ஆகும்.

இவ்வாறு சிவாலயங்களில் ஐந்து-வகைத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இவற்றைப் 'பஞ்சபர்வத்திருவிழாக்கள்' என்று அழைப்பர்.

சில இடங்களில் மாதந்தோறும் நடைபெறும் விழாவைப் "பஞ்சபர்வ திரு விழாக்கள்" என அழைக்கின்றனர். இவை அமாவாசை, பௌர்ணமி, மாசப்பிரவேசம், பிரதோஷம், திங்கட்கிழமை (சோமவாரம்) என ஐந்தாகும்.

பஞ்சபருவ உற்சவங்களை வேறு வகையாகச் சைவபூஷணம் எனும் நூல் விவரிக்கிறது. இதன்படி தேய்பிறை அஷ்டமி, தேய்பிறை சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணமி, மாதப்பிறப்பு என் ஐந்து நாட்களில் வரும் விழாவே "பஞ்சபருவ விழா" வாகும்.

பஞ்ச சபைகள்


சிவபெருமான் நடராசப் பெருமானாக எழுந்தருளி திருநடனம்புரிந்த இடங்கள் சபை எனப்படும்.

இவை ஐந்தெனப் புராணம் கூறும்

1. கனகசபை – சிதம்பரம்
2. சித்திரசபை – குற்றாலம்
3. இரத்தினசபை – திருவாலங்காடு
4. வெள்ளிசபை – மதுரை
5. தாமிரசபை – திருநெல்வேலி

இவை தவிர சிதம்பரம் நடராசப் பெருமான் ஆலயத்தின் உள்ளேயே ஐந்து சபைகள் உள்ளன. இவை சிற்சபை, பொற்சபை, நிருத்தசபை, தேவசபை, ராஜசபை என ஐந்தாகும்.

நடராசப்பெருமான் எழுந்தருளியுள்ள கருவறையே சிற்சபை எனப்படும். அதற்கு முன்னுள்ள மகாமண்டபமே கனகசபையாகும். இதனையடுத்து இரண்டாம் பிராகாரத்தில் தேர்போன்று சக்கரங்களும் குதிரைகளும் கொண்டதாக அமைந்துள்ள மண்டபமே நிருத்த சபையாகும். இதில் ஊர்த்துவ தாண்டவர் எழுந்தருளியுள்ளார். உற்சவர்கள் எழுந்தருளியுள்ள பெருமண்டபமே தேவ சபையாகும். இக் கோயிலின் வடகிழக்கு முனையில் உள்ள ஆயிரக்கால் மண்டபமே ராஜசபையாகும். இத்தேவசபையில் தான் இறைவனே, அடியெடுத்துக் கொடுத்த பெரியபுராணம் அரங்கேற்றப்பட்டது.




ஐவர் அரம்பையர்



ஒரு காலத்தில் மாண்டு கண்ணீச் சுவரர் என்ற முனிவர் வாழ்ந்துவந்தார். ஒரு சமயம் இந்திரன் அவரை போக வாழ்க்கை அறியாதவர் என்று இகழ்ந்தான். உடனே அவர் சிவனருளால் இந்திர உலகத்திற்கும் மேற்பட்டதாக ஒருபோக பூமியை உண்டாக்கினார். இந்திரலோகத்தில் நான்கு அரம்பையர்கள் இருப்பதால் அதற்கும் மேலாக விளங்கும்படியாக தனது உலகில் ஐந்து அரம்பையர்களை உண்டாக்கி அவர்களுடன் இன்பமுடன் வாழ்ந்து காட்டினார்.

அதன் பின்னர் அவர் தம்வழியே சென்றுவிட அவரால் படைக்கப்பெற்ற ஐந்து தேவமாதர்களும், அவரால் காஞ்சீபுரத்தில் அமைத்து வழிபடப்பெற்ற மாண்டு கன்னீச்சுரத்தை வணங்கி அங்கு அன்பர்கள் வழிபாட்டிற்கென ஒருதீர்த்தத்தை உண்டாக்கினர். அதுவே "ஐவர் அரம்பையர்" தீர்த்தம் என இப்போது வழங்குகின்றது.

பின்னாளில் அந்த ஐந்து பெண்களும் மாண்டு கன்னீச்சுவர சிவலிங்கத் திருமேனியில் கலந்து மறைந்தனர். ★



ஐந்து வாநரம் ஒடுங்கிய லிங்கம்

ஒருசமயம் பஞ்சபூதங்களுக்கு அதிபதியான பூதநாதர்கள் ஒரு முனிவரைத் தம் மாயத்தோற்றத்தால் அச்ச மூட்டினர். பூமி அதிர்ந்தும், காற்று புயலெனச் சீறியும்; வானம் இருண்டு இடி இடித்தும், மழை வேகமாகப் பொழிந்தும்; தீ வடவைத் தீ போல கனன்றும் அம்முனிவருக்குத் தங்களின் அளவற்ற வல்லமையைத் காட்ட முயன்றனர்.

சிவனருளால் அவற்றை விலக்கிய முனிவர் கோபமுற்று அவர்களைக் குரங்குகளாகும்படிச் சபித்து விட்டார். அவர்கள் அம்முனிவரைப் பணிந்து வேண்ட அவர் நீங்கள் "சிவபெருமானைப் பணிந்து பாவநீக்கம் பெறுங்கள்" என்று கூறித் தம்வழியே சென்றுவிட்டார்.

பின்னர் அப்பஞ்ச பூதக் காவல் நாயகர்கள் பல இடங்களில் வழிபட்டு குசத்தலையாற்றின் கரையில் உள்ள பெரிய பாளைத்திற்கு வந்து சிவலிங்கமமைத்து வழிபாடு செய்தனர். அக்கோயிலே இந்நாளில் ஐமுத்தீசுவரர் கோயில் என வழங்கப்படுகின்றது.

சிவபெருமான் அவர்களைத் தம் திருமேனியில் ஒடுங்கும்படிக் கூறினார். அதன்படி அந்த ஐந்து குரங்குகளும் அவர் திருமேனியில் ஒடுங்கிப் பாப விமோசனம் பெற்றனர். அவ்வாறு அவர்கள் ஒடுங்கியதைக் குறிக்கும் ஐதீகலிங்கம் ஒன்று ஐமுத்தீச்சுவரர் கோயிலில் உள்ளது. இதன் பாணப் பகுதியில் ஒரு வட்டமும் அதனுள் ஐந்து குரங்கு வடிவங்களும் அமைக்கப்பெற்றுள்ளதைக் காணகிறோம்.

செங்கை மாவட்டத்திலுள்ள திருவள்ளூர்–ஆரணி சாலையில் பெரிய பாளையம் அமைந்துள்ளது. பேருந்து நிலையத்தின் அருகிலேயே ஐமுத்தீசுவரர் கோயில் அமைந்துள்ளது. புகழ்பெற்ற பெரியபாளையத்தம்மன் என்னும் பவானியம்மன் கோயில் இவ்வூரில் உள்ளது. ✪

ஐவேலங்காய்

(பஸ்மாசுரன் கதையும் ஐயப்பன் பிறப்பும்)

"ஐவேலம்" என்பது ஒருவகைக் கொடியாகும். இதன் காய்கள் சிவலிங்கம் போல இருக்கும். இயற்கையான ஐந்து சிவலிங்கம் போல அமைந்த ஐந்து விதைகளைக் கொண்டுள்ள இக்கொடிகள் அபூர்வமாகவே வளர்கின்றன.

பூக்களில் லிங்கத்தைக்கொண்ட நாக லிங்கப்பூவைப் போல, இது இயற்கையாக அமைந்த பஞ்சலிங்கக் காயாகும்.

இவை உண்டானதற்கானப் புராண வரலாறு ஒன்றுள்ளது அது வருமாறு :-

ஒரு முறை பஸ்மாசுரன் என்பவன் சிவபெருமானைக் குறித்து கடும்தவம் மேற்கொண்டான். அவனுடைய தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான் அவனுக்குக் காட்சியளித்து அவனை நோக்கி, "அன்பனே உனக்கு வேண்டியவரங்களைக் கேள் என்றார்".

அவன் சிவபெருமானிடம்,"ஐயனே நான் யார் தலையில் கை வைத்தாலும் அவர்கள் எரிந்துசாம்பலாகிவிடவேண்டும். அத்தகைய வரத்தை எனக்கு அளிக்க வேண்டும்," என்று கேட்டான்.

சிவபெருமானும் அப்படியே ஆகட்டு மென்றார்.

உடனே அசுரன் அவரை நோக்கி பெருமானே! யான் பெற்ற வரத்தின் தன்மையை இப்பொழுதே சோதனை செய்து பார்க்க விரும்புகின்றேன். இங்கு நம்மைத்தவிர வேறு யாருமில்லை ஆகை யால் உங்கள் தலையிலேயே கையை வைத்துப்பார்க்கப் போகிறேன் என்ற கூறி அவர் அருகில் வந்தான்.

சிவபெருமான் அவனை உடனே அழித்திருக்கலாம் என்றாலும் ஒரு திரு விளையாடல் புரியக் கருதி ஓட ஆரம் பித்தார். அசுரனும் அவரைத் தொடர்ந்து ஓடிவந்தான். இவ்வாறு பல இடங்களில் ஓடியபின் பெருமான் ஐவேலங்காயில் புகுந்து சிவலிங்கமாக மாறி யோகத்தில் ஆழ்ந்தார்.

சிவபெருமான் தன் கண்ணிலிருந்து மறைந்த பின்னர் அசுரனின் வெறி அதிகமாகியது.அதனால்அவன் பலரையும் அழிக்கத் தொடங்கினான்.

தேவர்கள் யாவரும் அவன் பெற்றி ருந்த வரத்தின் தன்மை அறிந் திருந்ததால் அவனோடு எதிர்த்து வந்து போர்புரிய மாட்டாமல் திருமாலிடம் சென்று சரணடைந்தனர்.



திருமால் அவர்களை நோக்கி, "தேவர்களே இவனைப்போரில் வெல்ல முடியாது. அதனால் ஒரு சூழ்ச்சியினால் எளிதில் வெல்லுவோம் நீங்கள் கவலைப்படாதீர்கள் என்று கூறினார்.

பின்னர் அவர் "(மோகினி) பேரழகி" வடிவம் தாங்கி அவன் முன்னே தோன்றினார். கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்த அசுரன் அந்த அழகியைக் கண்டதும் குளிர்ந்து போனான். அவளை அடையத் தொடர்ந்து ஓடிவந்தான்.

அப்போது திருமால் அவனை நோக்கி அன்பனே, "ஆடல் போட்டியில் என்னுடன் ஆடி என்னை வென்றால் நான் உனக்கு உரியவளாவேன்," என்றார்.

மோகத்தில் ஆழ்ந்திருந்த அசுரன் அதற்கு உடன்பட்டான். அவளோடு போட்டி நடனம் ஆட முற்பட்டான். மோகினி ஒவ்வொரு பாவமாக ஆடிக்காட்ட அசுரன் அதை ஆடிக்காட்டினான். பின்னர் மோகினி சுழன்றாடி தன் வலக்கரத்தை தன் தலையில் வைத்தாள். அதனைக்கண்ட அசுரன் அதன்படியே ஆடி தன் கரத்தை தன் தலை மீது வைத்தான். உடனே அவன் பெற்றிருந்த வரத்தின்படி அவன் தலையில் கையை வைத்துக் கொண்டதால் அவனே பற்றி எரிந்து சாம்பலாகிப் போனான்.

பின்னர் திருமால் மோகினி வடிவத்துடன் தேவர்கள் புடைசூழ சிவபெருமான் எழுந்தருளிய ஐவேல கொடி சூழ்ந்த இடத்தை அடைந்து வணங்கினர்.

பஸ்மாசுரனின் ஆன்மா ஒளிவடிவம் கொண்டு சிவபெருமானிடம் கலந்து மறைந்தது.

பின்னர் சிவபெருமான் வெளிப்பட்டு ஒருகணம் மோஹினியை நோக்கினார். (திருமால் சிவபெருமானின் தேவியாக விளங்கும் சக்தியின் புருஷவடிவம் என்பதால்) பின்னர் அவளிடம் ஒரு புத்திரன் உண்டாக வேண்டுமென்று எண்ணினார்.

அந்த வினாடியிலேயே திருமாலிடம் சிவ அம்சமான ஒரு குமாரன் தோன்றினார். அவரே அரிஹரன் எனவும் சாத்தன் எனவும் அழைக்கப்படுகின்றார்.

திருநாவுக்கரசரும் இதனைக்குறிக்கும் வகையில் தமது தேவாரத்தில் "சாத்தனை மகனாகக் கொண்டார்" என்று குறிப்பிடுகின்றார் என்பர். அன்று முதல் "ஐவேலங்காய்" தெய்வத் தன்மை உடையதாகப் போற்றப் படுகின்றது.

தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள உப்புவேலூர் எனுமிடத்தில் உள்ள சிவாலயத்தின் எதிரிலேயே ஜகன்மோகினியான திருபுவன சுந்தரிக்கு ஒரு ஆலயம் உள்ளது இங்கு எண்ணத்தக்கதாகும். ★



பஞ்சாமிர்தம்

சிவபெருமானுக்கு உரிய அபிஷேகப் பொருள்களில் தலையானது பஞ்சாமிர்தமாகும். இது வாழைப்பழம், தேன், சர்க்கரை, பால், நெய் ஆகிய ஐந்தும் கலந்ததாகும். காலப்போக்கில் பலவேறு பழங்களையும் வாழைப்பழத்துடன் கலந்து பஞ்சாமிர்தமாகச் செய்கின்றனர்.

சில இடங்களில் வாழைப்பழம், தேங்காய்த்துருவல், தேன், நெய், பால் ஆகிய ஐந்தையும் கலந்து பஞ்சாமிருதம் தயாரிக்கின்றனர்.

"ஐவண்ணன்"
(நிறங்களோர் ஐந்துடையான்)

சிவபெருமான் பளிங்குபோன்று நிற மற்றவர் என்றாலும் பக்தர்கள் உய்யும் வண்ணம் பலவேறு நிறங்களைக் கொண்ட வராகக் காட்சியளிக்கின்றார்.

சிவபெருமான் பொன்வண்ணம் கொண்டவராகக் காட்சியளிப்பதைப் பல திருமுறைபாடல்களால் அறியலாம். சுந்தரர் சிவனைப் "பொன்னார் மேனியனே" என அழைப்பது இங்கு எண்ணத்தக்கதாகும்.

அவர் சதாசிவராக விளங்கும்போது சிகப்பு, குங்கமப்பூ, வெண்மை, கருப்பு, ஸ்படிகம் ஆகிய ஐந்து முகங்களுடன் ஐந்து வண்ணம கொண்டவராகக் காட்சியளிக் கின்றார் என்று சிவாகமங்கள் கூறும்.

மாணிக்கவாசகர் பெருமானை, "நிறங்களோர் ஐந்துடையாய்" என்று குறிப்பிடுவதைக் காணலாம்.

பஞ்சலிங்கங்களை அமைப்பவர்கள் ஐந்து வண்ணங்கள் கொண்ட கற்களால் அமைப்பர்.

மேலும் சில சிவாலயங்களில் எழுந் தருளியுள்ள சிவலிங்கப் பெருமானுக்குப் பஞ்சவர்ணேசுவரர் எனும் பெயர் அமைகின்றது. திருமுறைத் தலங்களான நல்லூர், உறையூர் ஆகியவற்றில் எழுந் தருளியுள்ள பெருமானுக்குப் பஞ்ச வர்ணேசுவரர் என்பது பெயராக அமைந் திருப்பதைக் காணலாம்.

சோழநாட்டுத் திருத்தலங்களில் ஒன் றாகிய நல்லூரில் உள்ள சிவலிங்கம் தினமும் ஐந்து வண்ணங்கள் கொண்டதாக வண்ணம் மாறுகின்றது. ஒருநாள் முழுவதும் இருந்து தரிசிப்பவர்கள் இவ்வாறுவண்ணம் மாறுவதைக் கண்டுகளிக்கலாம் என்பர். இந்த லிங்கத்தில் சில துவாரங்களும் அமைந்திருக்கக் காணலாம் என்பர்.

திருச்சியின் ஒரு பகுதியான உறையூரில் உள்ள மூக்கீச்சுவரம் எனும் தலத்து இறைவனின் பெயரும் பஞ்சவர் ணேசுவரர் என்பதாகும்.


இத்தலத்தில் உதங்கர் எனும் முனிவருக்கு பெருமான் ஐந்து சாமப்பூசையில் ஐந்து வண்ணங்களாகத் திருக்கோலம்காட்டினார் என்றும் அதனால் இப்பெருமானுக்கு பஞ்சவர்ணேசுவரர் என்பது பெயராயிற்று என்று தலபுராணம் கூறுகின்றது.

இங்குள்ள தீர்த்தமும் பஞ்சவர்ண தீர்த்தம் எனஅழைக்கப்படுகின்றது.

பாடல் பெறாத திருவள்ளூர் (ஈக்காடு தாங்கல்) முதலான பல திருத்தலங்களிலும் பெருமானுக்குப் பஞ்சவர்ணேசுவரர் எனும் பெயர் அமைந்துள்ளதையும் காணலாம். ✪



பஞ்சமுக அர்ச்சனை



சிவாலயங்களில் சிவபெருமானுக்குச் செய்யப்படும் அர்ச்சனைகளில் "பஞ்சமுகார்ச்சனை" என்பதும் ஒன்றாகும். ஐந்து பேர்கள், ஐவகை வில்வம் கொண்டு, ஏக காலத்தில் அர்ச்சனை செய்து ஐந்து வகை நிவேதனம் செய்து ஐந்துகிளை கொண்ட ஐந்து ஆரதியால் சிவலிங்கத்தை ஆராதனை செய்யும் நிகழ்சியே பஞ்சமுக அர்ச்சனை எனப்படும். சிவலிங்க மூர்த்தியில் முகம் இல்லா விட்டாலும் அவருடைய ஐந்து முகங்களை பாவனையால் நோக்கி இந்த அர்ச்சனையும் செய்யப்படுகின்றது.

இதைப்போலவே முருகனுக்கு ஆறு பேர்களால் ஷண்முகார்ச்சனையும் பார்வதிக்கு ஒன்பது பேர்களால் நவசக்தி அர்ச்சனையும் செய்யப்படுகின்றன. ✪

பஞ்ச தருக்கள்

பாற்கடலில் தோன்றிய ஐந்து கற்பக மரங்களே பஞ்சதருக்கள் எனப்படும். இவைகள் கற்பக மரம், பாரிஜாதம், ஹரிசந்தனம், சந்தனம், மந்தாரம் ஆகியவையாகும்.

பூலோகத்து கற்பகமரம் பனையாகும் இதனடியில் பரமேசுவரன் எழுந்தருள்கின்றார். இத்தகைய தலங்கள் திருப்பனந்தாள், திருப்பனங்காடு, திருஒத்தூர் முதலியனவாகும்.

பூலோக பாரிஜாதம் பவழமல்லிகையாகும். இதனடியில் இறைவன் மகிழ்வுடன் எழுந்தருள்கின்றார். எனவே இவருக்கு பாரிஜாதவனேசுவரர் என்பது பெயராயிற்று.

பூவுலகில் சந்தனமரம் சிறப்புடன் கொண்டாடப்படுகின்றது. திருக்களர் எனும் தலத்தில் உள்ள இறைவர் பாரிஜாதவனே சுவரர் என்றழைக்கப்படுகிறார். சந்தனமரத்தடியில் பெருமான் எழுந்தருள்கின்றார். சந்தனத்தினாலேயே திருவாஞ்சியம் சிவபுரம் ஆகிய தலங்களில் சிவபெருமானை செய்து வழிபடுகின்றனர். ஹரிசந்தனம், மந்தாரம் ஆகிய இருமரங்களும் முறையே பெருஞ்சேரி, செதலைப்பதி ஆகிய இடங்களில் தலமரங்களாக உள்ளன. ✷

திருஅண்ணாமலை பஞ்சமுக தரிசனம்

திருவண்ணாமலையில் சிவபெருமான் மலைவடிவாக விளங்குகின்றார். இதனால் இம்மலையை வலம்வருவது சிறந்த புண்ணியம் தருவதாக அமைகின்றது. இப்படி வலம் வரும்போது வடகிழக்கு முனையில் இருந்து நோக்கும்போது ஐந்து சிகரங்கள் தோன்றுகின்றன. இவற்றைச் சிவபெருமானின் ஐந்து முகங்களாகக் கொள்கின்றனர். இதனைப் பஞ்சமுக தரிசனம் என்பர். இதனைக் குறிப்பிடும் வகையில் சாலையை ஒட்டி ஆவுடையார் போல அமைந்த மதிலுக்குள் சிறுமண்டமும் அதன் உச்சியில் ஐந்து சிவலிங்கங்களும் அமைத்துள்ளதைக் காண்கிறோம். இந்த இடத்தில் "பஞ்சாட்சர ஜபம்" செய்வது சிறப்பு டையதாகக் கூறப்படுகிறது.

✪✪✪


பஞ்ச கோட்டம்

பண்டைக்காலத்தில் சிவபெருமான் தனித்த நிலையில் வழிபடப்பட்டார். காலப்போக்கில் பலதெய்வ வழிபாடுகள் சிவாலயத்துள் இடம்பெறலாயின. இவற்றை வகைப்படுத்தி எட்டு ஆலயங்களை சிவபெருமானுக்குப் பரிவாரமாக அமைத்தனர். இவையே அஷ்டபரிவாரம் எனப்படும். காலப்போக்கில் இவற்றையும் சுருக்கி ஐந்து மட்டும் இடம்பெறலாம் என வகைப்படுத்தினர்.

பின்னாளில் இத்துணைத்தெய்வங்களுக்கு தனித்தனியே ஆலயங்களை அமைப்பதை விட கருவறையின் புறச்சுவரிலேயே மாடம் அமைத்து அதனுள் நிலைப்படுத்தினர். இந்த ஐந்துமாடங்களும் "பஞ்சகோட்டம்" என்றழைக்கப்படுகின்றது.

கருவறையின் இடம், வலம், பின்புறம் ஆகிய மூன்றிடத்தும் உள் மண்டபத்தின் இடம், வலம் ஆகிய இரண்டிடத்தும் ஆக ஐந்து சுவர்களின் மையப்பகுதியில் இத்தகைய கோட்டங்கள் அமைகின்றன.

இவற்றில் முறையே விநாயகர், தென்முகக் கடவுள், திருமால், பிரமன், துர்க்கை ஆகிய ஐவரும் இடம் பெறுகின்றனர். கோயில் கிழக்கு அல்லது எத்திசை நோக்கியிருப்பினும் வடக்கு நோக்கிய கோட்டங்களில் துர்க்கையும், பிரமனும், தெற்குநோக்கிய கோட்டங்களில் தென்முகக் கடவுளும் விநாயகரும் பின்புற கோட்டத்தில் திருமாலும் இடம் பெறுகின்றனர்.




✪ விநாயகர் - தென்முகக்கடவுள் - லிங்கோத்பவர் - பிரம்மா - துர்க்கை

பின்னாளில் சிலதலங்களில் திருமாலுக்குப் பதில் அண்ணாமலையார் என்னும்லிங்கோற்பவர் இடம்பெறலானார்.

சோழர் காலத்தில் மகாமண்டபத்தின் புறச்சுவர்களிலும் கோட்டங்கள் அமைக்கப்பட்டதுடன் இந்த ஐவருடன் அகத்தியர், பிட்சாடனர், கங்காவிசர்ஜனர், உமையொருபாகர் முதலிய பல திருமேனிகளும் இடம்பெறலாயின.

ஆயினும் நிலையாகத் தமிழக சிவாலயங்கள் அனைத்திலும் பஞ்சகோட்டம் தனிச்சிறப்புடையதாகத் திகழ்கிறது. ✪✪✪

பஞ்ச வாத்தியம்



சிவ வழிபாட்டில் ஐந்து வகையான இசைக்கருவிகள் இடம்பெறுகின்றன. இவை தோற்கருவிகள், துளைக்கருவிகள், நரம்புக் கருவிகள், உலோகக்கருவிகள், இயற்கையாய் தோன்றிய இசைக்கருவிகள் என ஐந்து வகைப்படும்.

தோற்கருவிகள் :- டமருகம், மேளம், உடுக்கு, டமாரம், நகார், சுத்தமத்தளம் முதலியனவாகும்.

துளைக்கருவிகள் :- நாதஸ்வரம், முகவீணை முதலியனவாம்.

நரம்புக்கருவிகள் :- யாழ், வீணை, துந்தணா முதலியனவாகும்.

உலோகக்கருவிகள் – மணி, சேகண்டி, பிரம்மதாளம், தாளம் முதலியனவாகும்.

இயற்கையானகருவி :- சங்கு ஆகும். சிலர் குரலால் பாடும் இசையை இயற்கையானது என்பர். இதனை மிடற்றுக் கருவி எனவும் குறிப்பர்(மிடறு குரல்வளை).

பஞ்சப் பிராகார உற்சவம்


இவ்விழா திருவானைக்காவில் நடைபெறுகின்றது. இது சிவபெருமான் கோயிலின் ஐந்து பிராகாரங்களிலும் வலம் வந்து அன்பர்க்கு அருள்பாலிக்கும் விழாவாகும். திருவையாறு, திருக்கடவூர், திருகற்குடி முதலிய பல தலங்களில் ஐந்துப்பிராகாரங்கள் உள்ளன. திருவானைக்காவலில் நடைபெறும் பஞ்சப் பிராகார விழாவில் சோமாஸ்கந்தருக்குப் பெண் அலங்காரமும் அம்பிகைக்கு சிவ வேடமும் அணிவித்து உலாவருகின்றனர். இப்பஞ்சப் பிரகார விழாவுக்குத் திரளான மக்கள் வருகின்றனர். பிரம்மதேவனே இதனை முதலில் துவக்கினான் என்பர். ✪

ஐந்து வேலித் தியாகேசர்

திருவாரூரில் பெருமான் எழுந்தருளியுள்ள பூங்கோயில், அக்கோயிலுக்கு உரிய குளமான கமலாலயம், அப்பெருமானுக்குச் சாத்தப்படும் செங்கழுநீர்ப் பூக்கள் மலரும் செங்கழுநீரோடை ஆகிய மூன்றும் ஒவ்வொன்றும் தனித்தனியே ஐந்து வேலிபரப்புடையதாகும், இதனை கோயில் ஐந்துவேலி, குளம் ஐந்துவேலி, ஓடை ஐந்து வேலி என்று குறிப்பிடுகின்றனர்.



பஞ்ச ஆவரண பூஜை



பெருந்தெய்வங்களைப் பூசை செய்யும்போது அத்தெய்வங்களுக்குத் துணைத்தெய்வங்களாகவும், ஏவலர்களாகவும், காவலர்களாகவும் உள்ள தெய்வங்களையும் பூசிப்பது வழக்கம். இத்துணைத்தெய்வங்கள் தலைமைத் தெய்வத்தைச் சுற்றி படிப்படியாக அமைந்துள்ள வீதிகள் அல்லது ஆவரணங்களில் வீற்றிருப்பர். இந்த ஆவரணங்களைப் பூசித்து அதன்பிறகு மையத்தில் உள்ள தெய்வத்தைப் பூசிப்பதே ஆவரணாதி பூசை எனப்படும்.

பராசக்தியான தேவியைச் சுற்றி ஒன்பது ஆவரணங்களும், காளியைச் சுற்றி எட்டு ஆவரணங்களும் அமைந்துள்ளதைப் பூசை நூல்கள் கூறுகின்றன. இவை முறையே நவாவரண பூசை, அஷ்டாவரண பூசை என அழைக்கப்படுகின்றன.

சிவபூசையில் பல ஆவரணங்கள் இருந்தாலும் குறிப்பிடத்தக்க ஐந்து ஆவரணங்களை மட்டும் இப்போது நடைமுறையில் பூசை செய்கின்றோம். இதனைப் "பஞ்சாவரண பூசை" என அழைப்பர்.

இனி சிவபெருமானைச் சுற்றி அமையும் இந்த ஆவரணம் எனப்படும் சுற்று வீதிகளையும் அவற்றில் அமைந்துள்ள துணைத்தெய்வங்களையும் காணலாம்.

சிவபெருமானைச் சுற்றி அமைந்துள்ள முதல் ஆவரணம் அணுக்கச் சுற்று எனப்படும். இதில், பஞ்சப் பிரம்மங்களும் ஆறு அங்கங்களும் பூசிக்கப்படுகின்றன. பஞ்சப்பிரம்மங்கள் என்பவர் ஐந்து முகங்களுக்குரிய ஈசானர், தத்புருஷர், வாமதேவர், அகோரர், சத்யோஜாதர் ஆகிய மூர்த்திகளும், ஆறு அங்கங்கள் என்பன.

சிவபெருமானின்

ஹ்ருதயவடிவான ஞானசக்தி;
சிரசுவடிவான ஆதிசக்தி;
சிகையான பராசக்தி;
நேத்திரமான இச்சாசக்தி;
அத்திரமான கிரியாசக்தி;

இவற்றை சுற்றி விளங்கும் கவசம் ஆகிய கவச சக்தி ஆகியவையாகும்.

இரண்டாவது ஆவரணத்தில் நான்கு முகமும் பத்துகைகளும் கொண்டு பத்மாசனத்தில் வீற்றிருப்பவர்களான எண்மர் வீற்றிருக்கின்றனர்.

இவர்களை அஷ்டவித்யேசுவரர் என அழைப்பர். இவர்கள் 1. அனந்தர் 2. சூக்ஷ்மர் 3. சிவோத்தமர் 4. ஏகநேத்திரர் 5. ஏகருத்திரர் 6. திரிமூர்த்தி 7. ஸ்ரீகண்டர் 8. சிகண்டி என எண்மராவர்.

மூன்றாவது ஆவரணத்தில் கிழக்கில் நந்திதேவரும், தென்கிழக்கில் மகாகாளரும், தெற்கில் பிருங்கியும் தென்மேற்கில் விநாயகரும், மேற்கில் விருஷபரும், வடமேற்கில் ஸ்கந்தரும், வடக்கில் தேவியும், வடகிழக்கில் சண்டேசுவரரும் எழுந்தருளியுள்ளனர்.

நான்காவது ஆவரணத்தில் தசதிக்பாலகர்கள் எழுந்தருளியுள்ளனர். கிழக்கில் இந்திரனும், தென்கிழக்கில் அக்னியும், தெற்கில் யமனும், தென்மேற்கில் நிருதியும், மேற்கில் வருணனும், இவ்விருவர்களுக்கு இடையில் பிரமனும், வடமேற்கில் வாயுதேவனும், வடக்கில் குபேரனும், வடகிழக்கில் ஈசானனும் அவருக்குத் தெற்கில் விஷ்ணுவும் எழுந்தருளியுள்ளனர்.

ஐந்தாவது ஆவரணத்தில் தசாயுதங்கள் வைத்து பூசிக்கப்படுகின்றன. இவை வஜ்ஜிரம் (கிழக்கு), சக்தி (தென்கிழக்கு), தண்டாயுதம் (தெற்கு) கத்தி (தென்மேற்கு), பாசம் (மேற்கு), கொடி (வடமேற்கு), கதை (வடக்கு), திரிசூலம் (வடகிழக்கு), பத்மம் (கிழக்கு வடகிழக்கிற்கு நடுவில்), சக்கரம் (தென்மேற்கு மேற்கிற்கு இடையில்) எனப்பத்தாகும்.

இந்த ஐந்து ஆவரணங்களை கும்பாபிஷேகம் முதலான சிவவேள்விச் சாலையில் மந்திரப்பூர்வமாகவழிபாடு செய்கின்றனர். யாகசாலைகளில் இத் தேவர்களின் முழு உருவங்களை வைப் பதற்குப்பதில் பூரண கும்பங்களை வைத்து வழிபடுவர் சில சிவபூஜாதுரந்தரர்கள் நித்திய பூசையிலும் பஞ்சாவரணங்களை மந்திரப்பூர்வமாகப் பூசைசெய்கின்றனர். ✪

ஐந்து அடையாளம்

சிவாச்சாரியர்களின் பஞ்சமுத்திரை (அல்லது) ஐந்து அடையாளம் என்பது விபூதி, ருத்ராக்ஷம், உபவீதம், உத்தர்யம், தலைச்சீலை ஆகியவையாகும். ✪

பஞ்ச ரிஷிகள்



ஆதியில் சிவபெருமானின் ஐந்து முகங்களில் இருந்து ஐந்து ரிஷிகள் தோன்றினர். இவர்களின் வழியில் வந்தவர்களே இப்போது சிவாகம முறைப்படி சிவாலயங்களில் பூசை செய்து வரும் சிவாச்சாரியர்களாவர். இவ்வைந்து ரிஷிகள் முறையே

1. துருவாசர், 2. அகத்தியர், 3. ததீசி, 4. புலத்தியர், 5. வசிட்டர் என்போராவர். சிலர் புலத்தியருக்குப் பதில் கௌதமரைச் சொல்லுவர். திருவண்ணா மலையில் துருவாசர், அகத்தியர், கௌதமர், ஆகிய மூவருக்கும் தனித்தனிச் சிற்றாலயங்கள் உள்ளன. இங்கு ததீசி, வசிட்டர் ஆகியோருக்கும் முன்நாளில் கோயில்கள் இருந்தன என்றும் கூறுகின்றனர்.

அம்பிகை சிவபூசை செய்ய திருவண்ணாமலைக்கு வந்தபோது கௌதமரிஷி அவளுக்கு சிவதீட்சை அளித்து சிவலிங்கத்தை அளித்தார் என்று கூறப்படுகிறது. திருவண்ணாமலையில் மலைச் சுற்றும் பாதையின் மேற்குப் பகுதியில் கௌதம ரிஷி வசித்த இடத்தில் மண்டபம் கட்டப்பட்டுள்ளது. அந்த இடத்தில் கௌதமரிஷிக்கு ஆலயம் அமைத்துள்ளனர். வசிட்டரும் அகத்தியரும் ஒரே கலசத்தில் இருந்து பிறந்தவர்கள் வசிட்டர் மூத்தவர். அகத்தியர் இளையவர் என்று புராணங்கள் கூறுகின்றன.

பஞ்ச குமாரர்கள்



வீரபத்திரர் - சுப்பிரமணியர் - விநாயகர் - ஐயப்பன் - வைரவர்

சிவபெருமானுக்கு உலக உயிர்கள் யாவுமே குழந்தைகள் என்றாலும் புராணங்களின்படி ஐவர் சிவகுமாரர்களாகப் போற்றப்படுகின்றனர். இவர்களில் மூத்த பிள்ளையாராகக் கொண்டாடப்படுபவர் விநாயகர், இளைய பிள்ளையாராகப் போற்றப்படுபவர் முருகப் பெருமான், கோபப் பிள்ளையாராக வீரபத்திரரும், காவற் பிள்ளையாராக வைரவரும் திகழ்கின்றனர். விஷ்ணுவிடத்தில் தோன்றிய பிள்ளையார் சாத்தனாராவார். இவர்கள் ஐந்துபேரும் சிவகுமாரர்களாவர். சிவாலயங்களில் இவர்களுக்கு தனித்தனி சந்நிதிகள் அமைக்கப்பட்டு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. விநாயகருக்கு (தென்மேற்கான) நிருதி மூலையிலும், முருகனுக்கு வடமேற்கான வாயு மூலையிலும், வைரவருக்கு வடகிழக்கான ஈசான மூலையிலும், வீரபத்திருக்கு தென்கிழக்கான அக்னி மூலையிலும், சந்நிதிகள் அமைக்கப்படுகின்றன. ஐயப்பன் சப்தமாதர்களோடு வீற்றிருக்கின்றார்.

பஞ்ச பூதத் தத்வ பூஜை


சிவ பூஜையில் பயன்படுத்தப்படும் வழிபாட்டுப் பொருள் களை ஐவகையாகப் பிரிப்பர். இவை ஐவகைப் பூதங்களிலிருந்து தோன்றும் தத்துவங்களை குறிப்பதாக அமைகின்றன.

சந்தனம், கிழங்கு, பழம் முதலியவற்றைக் கொண்டு வழிபடுவது பூமி மூல உபசாரமென்றும்; பால், தயிர், தண்ணீர், இளநீர் முதலியவற்றை அபிஷேகித்தும், நிவேதித்தும் வழிபடுவது அப்பு மூல உபசாரமென்றும்; ரத்தினம், கற்பூரம், தீபம், முதலியவற்றைக் கொண்டு ஆராதிப்பது நெருப்பு மூல உபசாரமென்றும்;

தூபமிடுதல், சாமரம், விசிறி, மயிற்பீலி முதலியவற்றைக் கொண்டு வீசுவது முதலியன காற்று மூல உபசாரமென்றும், மணிஒலித்தல், பாடுதல், வாத்தியம் வாசித்தல் முதலியன ஆகாச மூல உபசாரமென்றும் கூறுவர். இப்படி சிவபெருமானை வழிபடுவதன் மூலம் பஞ்சபூதங்களால் நாம் இறைவனை வழிபட்ட பயனைப் பெறுகின்றோம்.



பஞ்ச தட்டு, குடம் தீபாராதனை



தீபாராதனைகளின் வரிசையில் குறிப்பிடத்தக்கது பஞ்சதட்டு குடம் என்னும் தீபாராதனையாகும்.

இதிலுள்ள ஐந்து தட்டுகளும் சிவபெருமானின் ஐந்து முகங்களின் பெயரால் அழைக்கப்படுகின்றன. இவைகளுக்கு பூசையின் போது தூப தீபம் காட்டி பஞ்சப் பிரம்ம மந்திரத்தால் மலர்சூட்டி, முத்திரைகள் காட்டுவர். பிறகு ஒவ்வொன்றாக எடுத்து இறைவன் முன் காட்டுவர். இறுதியாகக் குடதீபம் எனப்படும் கும்பாரத்தி சுழற்றிக் காட்டப்படும்.

தமிழகத்தின் வட மாவட்டங்களிலுள்ள ஆலயங்களில் காட்டப்படும் பஞ்சதட்டுகளில் ஒவ்வொரு தீபம் மட்டுமே ஏற்றிக் காட்டப்படுகின்றது.

தென்மாவட்டங்களிலும் கேரளாவிலும் காட்டப்படும் பஞ்ச தட்டுகளில் முதல் தட்டில் ஒரு தீபமும், இரண்டாவது தட்டில் மூன்று தீபங்களும், மூன்றாவது தட்டில் ஐந்து தீபங்களும், நான்காவது தட்டில் ஒன்பது தீபங்களும் ஐந்தாவது தட்டில் பதினோறு தீபங்களும் அமைந்துள்ளன.

முற்காலங்களில் பூசையின் போது அருச்சகருக்கு இந்தத் தட்டு தீபங்ளை எடுத்துக் கொடுக்கவும் கும்ப தீபத்தை எடுத்துக் கொடுக்கவும், தனித்தனியே பணிப் பெண்கள்இருந்தனர்.இவர்கள் தட்டு எடுப்பவர், குடமெடுப்பவர் என்று அழைக்கப் பட்டனர்.

இதிலுள்ள குடம் இந்தப் பேரண்ட வெளியையும் அதன் மீது எரியும் தீபம் அண்டத்தை ஆளும் பரசிவத்தையும் குறிக்கிறது என்பர். பஞ்ச தட்டுக்கள் பஞ்சகலைகளையும், அதில் எரியும் தீபங்கள் தத்துவேசர்கள் எனப்படும் உலகை இயக்கும் தேவர்களையும் குறிக்கிறதென்பர்.

பஞ்ச புராணம்



சிவாலயங்களில் பூஜாகாலங்களில் தமிழ்வேதமான பன்னிரு திருமுறைகளை வரிசையாக ஓதுவது மரபாகும். காலப்போக்கில் இவற்றில் ஐந்தினை மட்டுமே பாடும்நிலை வந்தது. தேவாரத்தில் ஒன்று, திருவாசகத்தில் ஒன்று, திருவிசைப்பாவில் ஒன்று, திருப்பல்லாண்டில் ஒன்று, பெரிய புராணத்தில் ஒன்று ஆக ஐந்து பாடல்களைத் தேர்ந்தெடுத்து பாடுவதே பஞ்சபுராணம் ஓதுதல் என்று அழைக்கப்படுகின்றது.

சிவாலயங்களில் நடைபெறும் தீபாராதனையின் முடிவில் பஞ்சபுராணம் பாடுதல் தொடர்ந்து கடைப்பிடிக்கப் பட்டு வருகின்றது.


பஞ்சாட்சரப் படிகள்

தில்லை சிற்றம்பலத்தில் நடராசப் பெருமான் எழுந்தருளியிருக்கும் கருவறையான சிற்றம்பலத்தை யும், அதன் முன்னுள்ள மகாமண்டபமாகிய (கனக சபையாகிய) பொன்னம்பலத்தைம் இணைக்கும் வகையில் ஐந்து படிகள் உள்ளன. இவையே பஞ்சாட்சரப் படிகள் என அழைக்கப்படுகின்றன.

இவற்றின் இரண்டு புறமும் யானை வடிவங்கள் இருப்பதால் இதனைக் களிற்றுப்படி எனவும் அழைப்பர்.

சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கில் ஒன்றாகிய திருக்களிற்றுப்படியார் இந்தப் படியின் பெயராலேயே அழைக்கப்படுகிறது. இந்நூலை இயற்றிய திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனார் இந்த நூலின் ஏட்டுப் பிரதியை இப்படியில் வைக்க அப்படிகளின் பக்கவாட்டில் இருந்த கல்யானை உயிர் பெற்றுத் தன் துதிக்கையால் அந்நூலை எடுத்து நடராசப் பெருமானிடம் அளித்து மீண்டும் பழைய நிலை எய்தியது என்பர். அதனால் அந்நூல் திருக் களிற்றுப்படியார் என்று பெயர் பெறுவதாயிற்று.

பஞ்ச நாதம்



சிவபெருமான் நாதன் எனும் பெயரில் எழுந்தருளிய தலங்கள் ஐந்தாகும். இவை பஞ்சநாதம் என அழைக்கப்பெறும். இவை

1. விசுவநாதம் (காசி), 2. சோமநாதம் (சோமநாதம்), 3. இராமநாதம் (இராமேசுவரம்), 4. வைத்ய நாதம் (வைத்தியநாதம்), 5. ஜகன் நாதம் (பூரி) என்பனவாகும்.

ஜகன்நாதமான பூரியில் இன்று அமைந்திருப்பத கிருஷ்ணன், பலராமன், சுபத்திரை ஆகிய மூவருக்குமான கோயிலாகும். இது முன்நாளில் சிவாலயமாக இருந்ததென்றும் பின்னாளில் பௌத்தக் கோயிலாக மாற்றப் பட்டதென்றும் அதன்பிறகு கண்ணன், பலராமன் கோயிலாக மாறியதென்றும் வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

பஞ்சகம், பஞ்ச ரத்தினக் கீர்த்தனைகள்

இறைவனின் பெருமைகளை ஐந்து பாடல்களில் அமைத்து பாடுவது பஞ்சகம் எனப்படும் சிவபெருமானின் பரத்துவத்தை நிலைநாட்ட ஹரதத்தர் பாடிய நூல் சுலோக பஞ்சகம் என்று அழைக்கப்படுகிறது. சிவபஞ்சகம், சக்தி பஞ்சகம், முதலான அனேக பஞ்சகங்கள் வழக்கத்தில் உள்ளன. இது போன்று எட்டு பாடல்களில் பாடுவது அஷ்டகம் என்றும் பத்து பாடல்களில் பாடுவது பதிகம் என்றும் அழைக்கப்படுகின்றன.

ஸ்ரீ ராமபிரானையே சதாசர்வ காலமும் பாடிப் பரவிய ஸ்ரீமத் தியாகைய்யர்வாள் கோவூர் சுந்தரேசுவரர் மீது ஐந்து இசைப் பாடல்களைப் பாடியுள்ளார். இவை ரத்தினம் போன்ற ஐந்து கீர்த்தனங்களாக இருப்பதால் கோவூர் பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் என்று அழைக்கப்படுகின்றன.

ஐயாறப்பர்

தஞ்சை மாவட்டத்திலுள்ள ஐயாறு எனும் தேவாரத்தலம் இந்நாளில் திருவையாறு என்று அழைக்கப்படுகின்றன. இத்தலத்தில் சூரிய புஷ்கரணி சந்திராமிர்த புஷ்கரணி, இறைவனுடைய சடைக் கங்கை, அம்பிகையின், திருமுலைப்பால், திருநந்திதேவரின் வாய் நூரை ஆகிய ஐந்தும் ஆறாகப் பெருகிஓடி காவிரியில் கலந்தது என்று தலபுராணம் கூறும். இதையொட்டி இத் தலம் ஐயாறு (பஞ்சநதம்) என்று அழைக்கப்படுகிறது. இறைவன் பஞ்சநதீசுவரர், என்றும், பஞ்ச நதிவாணன் என்றும் போற்றப்படுகிறார்.

காசி நகரிலும் பஞ்சநதீசுவரர் ஆலயம் உள்ளது. காசியில் கிரணா, தூதபாபா, ஸரஸ்வதி, யமுனா, கங்கா, ஆகிய ஐந்து நதிகளின் கூறுகள் சிறு ஆறுகளாக விளங்கின. இவை ஒன்றுகூடி கங்கையில் சங்கமம்ஆயின. அந்த சங்கமத்துறையில் பெருமான் பஞ்ச நதீசுவரராக எழுந்தருளியுள்ளார். இங்குள்ள பஞ்ச நதி தீர்த்தத்தின் பெருமைகளைக் காசிக்கண்டம் விரிவாகக் கூறுகிறது. கிரணாவும் தூதபாபாவும் கணவன் மனைவிகளாவர்.

பஞ்சாக்கினி மத்தியில் தவம்



சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்பவர்கள் பஞ்சாக்கினியின் மத்தியில் இருந்து தவம் செய்வர். அம்பிகை, அருச்சுனன், இராவணன், முதலிய அனேகர், பஞ்சாக்கினியின் மத்தியில் நின்று தவம் செய்ததைப் புராணங்கள் கூறுகின்றன.

சுற்றி நான்கு புறத்திலும் அக்கினி மூட்டி உச்சியில் விளங்கும் சூரியனை ஐந்தாவது தீயாகக் கொண்டு தவம் செய்வதையே பஞ்சாக்கினி மத்தியில் நின்று தவம் செய்வதாகப் புராணங்கள் கூறுகின்றன. சிவனடியார்கள் பஞ்சாக்கினியின் மத்தியில் நின்று சிவபெருமானைக் குறித்து தவம் செய்வதையே பெருமையாகக் கொள்கின்றனர்.

குறிப்பாக பார்வதிதேவியார் காஞ்சீபுரத்திலும், மாங்காட்டிலும் பஞ்சாக்கினியின் மத்தியில் ஊசியை நாட்டி அதன் மீது காலின் கட்டை விரலையூன்றி கடும் தவம் செய்ததாகப் புராணங்கள் குறிப்பிடுகின்றன.

சென்னை அடுத்த மாங்காட்டில் தபஸ் காமாட்சியம்மன் அழகிய உலாத்திருமேனி உள்ளது. பட்டீசுவரத்தில் தவம் செய்யும் அம்பிகைக்கு தனிச் சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது.

ஒரு துதி நூல் "அழகிய ஜடாபாரத்துடன் மாமரத்தடியில் பஞ்சாகினி மத்தியில் ஊசியை நாட்டி அதன்மீது கட்டை விரலை ஊன்றி ஜபமாலைக் கொண்டு ஐந்தெழுத்தை ஓயாது ஓதி ஜபம் செய்யும் தபஸ்காமாட்சியை வணங்குகிறேன்" என்று போற்றுகிறது.

பாசுபத அஸ்திரம் பெற வேண்டி அருச்சுனன் பஞ்சாக்கினி மத்தியில் நின்று தவம் செய்தான் என்று மகா பாரதம் கூறுகிறது. அவனுடைய தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான் அவனுக்கு அந்த அத்திரத்தை அளித்தார்.

பஞ்சபட்ச யாக சாலை

பெரிய கும்பாபிஷேகங்களில் அமைக்கப்படும் யாகசாலைகளில் மையத்திலுள்ள வேதிகையைச் சுற்றி ஐந்து யாககுண்டங்களை அமைத்து வழிபாடு செய்வர். இதனைப் பஞ்சபட்ச யாகசாலை என அழைக்கின்றனர். இவற்றில் இறைவனின் பஞ்சதேக மூர்த்தங்களான ஈசானன், தத்புருஷன், வாமதேவன், அகோரன், சத்யோஜாதன், ஆகிய ஐவரும் பூசிக்கப்படுகின்றனர். வேதிகை (மேடை) யின் நான்கு புறங்களிலும் நான்கு குண்டங்களும் ஈசான்யத்தின் ஒரு குண்டமும் அமைகின்றன. இவற்றில் கிழக்கில் உள்ளது. சதுரமாயும் தெற்கில் உள்ளது. அரைவட்டமாகவும் மேற்கில் உள்ளது. வட்டமாயும் வடக்கில் உள்ளது. தாமரை வடிவாகவும் வடகிழக்கில் உள்ளது எண்கோண வடிவமாகவும் அமைகின்றன. (இதனை அக்னீசுவரர் மலரில் விரிவாகக் காணலாம்.

பஞ்ச ஔஷதங்கள்

செங்கழுநீர்க் கிழங்கு, குமிழ், கல்யாண முருங்கை, ஓரிதழ்தாமரை விஷ்ணுக்கிரந்தி ஆகியவற்றைப் பஞ்ச ஔஷதங்கள் என்று சைவபூஷணம் கூறுகிறது. சிவவேள்விகளில் இவற்றைக் கொண்டு யாகம் செய்கின்றனர். குறிப்பாக மருத்துஞ்சய வேள்விகளில் இவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

இந்தலைப் பாம்பு ஏந்திய பரமன்



சிவபெருமான் ஐந்து தலைகளையுடைய பாம்பை ஏந்தி நடனம் புரிகின்றார். இப்பாம்பு யோகத்தைக் குறிப்பதாகும். இதன் ஐந்து தலைகளும் பஞ்சாட்சரத்தைக் குறிக்கின்றன. யார் ஒருவர் பஞ்சாட்சர ஜபத்தால் யோகத் தீ எழுப்பி மனதைக் கட்டுப்படுத்தி உடலையும் உயிரையும் ஆளும் தன்மை கொண்டிருக்கின்றாரோ அவரே சிவபெருமானோடு ஒத்தவராகிறார்.

இங்கு யோகம் என்பது வாசியோகம் ஆகும். வாசி என்றால் காற்று. அதாவது மூச்சுக்காற்றை பஞ்சாட்சரத்தால் கட்டுப் படுத்தி ஆளுவதையே சிவபெருமான் பாம்பு ஏந்தி நின்றாடுவது குறிக்கின்றது என்பர் தத்துவ அறிஞர்.

"சிவபெருமான் ஐந்து தலை அரவம் கொண்டாடுவதை திருமுறை ஆசிரியர்கள், ஐந்தலை அரவு கொண்டு அரைக் கசைத்தான் என்றும், ஐந்தலை ஆடவரம் அசைத்தான் என்றும், ஐந்து தாலைப்பாம்பு அரையில் சுற்றியவர் என்றும் குறிக் கின்றனர்.


சிவபெருமானுக்கு அணிவிக்கப்படும் நாகாபரணங்களை பொதுவாக ஐந்து தலையுடைய பாம்புகளாகவே அமைக்க வேண்டும். ஆனால் வழக்கத்தில் ஏழு, ஒன்பது, பதினொன்று தலையுடைய பாம்புகளையும் அமைக்கின்றனர். ✪

ஐவகை ஆலயங்கள்

சிவபெருமானுக்குரிய ஆலயங் களின் அடித்தளத்தை ஐந்து வகையாக அமைக்கின்றனர். இவை (1). ஆமைவடிவில் அமைந்தது, (2). பத்மவடிவில் அமைந்தவை, (3). சங்குவடிவில் அமைந்தவை, (4). சக்ரவடிவில் அமைந்தவை, (5). சதுரவடிவம் கொண்டவை என ஐந்தாகும்.

ஆமையின் ஓட்டைப்போல நீள் வட்டமாக அமைந்த அடித்தளத்தைக் கொண்டது காஞ்சீபுரம் ஜ்வரஹரேசுவரர்





வட்டமான சக்கரம் போன்ற ஆலயங்கள் கேரளாவில் அதிக அளவில் உள்ளன. பன்றிக்கோடு மகாதேவர் கோயில் இத்தகையதாகும்.

தாமரைப்பூப் போன்ற ஆலயங்களும் கேரளாவில் ஓரிரண்டு மட்டுமே உள்ளன.

சதுரமான கோயில்கள் தமிழக மெங்கும் காணப்படுகின்றன.

சங்குவடிவில் அமைந்த கோயில்கள் ஆற்றங்கரைகளையொட்டி அமைந்துள்ளன. பாலாறு கடலோடு கலக்குமிடத்தை ஒட்டியுள்ள நத்தம் கயிலாயநாதர்; திருக்குற்றாலம் கோயில் குற்றாலநாதர் கோயில் முதலியன சங்குவடிவக் கோயில்களாகும்.

கோயிலாகும். இதன் அடிமுதல் உச்சிவரை நீள்வட்டமாகவே அமைந்துள்ளது. தென்னகத்தில் இதுபோன்று அமைந்த கோயில் வேறெங்கும் இல்லை.

பஞ்ச தீபம்


சிவாலயத்தின் கருவறையில் ஐந்து தீபங்கள் ஒரே வரிசையில் அமைகின்றது. இது கலாதீபம் எனப்படும் இவை, பிரதிஷ்டாகலை, நிவர்த்திகலை, வித்யாகலை, சாந்திகலை, சாந்தியாதீதகலை என ஐந்து கலைகளாகும். திருப்பெருந்துறை ஆத்மநாத சுவாமி ஆலயத்தின் கருவறையில் இந்த கலாதீபம் சிறப்புடன் விளங்குவதைக் காணலாம். இந்த ஐந்து கலைகளும் ஆன்மாவில் சிவத்தை எழுந்தருளிவைத்து அதை சிவமாகவே ஆக்குகின்றன.

பஞ்ச சயன மேடை

ஆகமங்கள் சிவபெருமான் பள்ளி கொண்டு அருளும் பலவகையான சயன மேடைகளைப் பற்றிப்பேசுகின்றன. கும்பாபிஷேகத்திற்கு முன்பு பிரதிஷ்டை செய்ய வேண்டிய திருவடிவத்திற்கு சயனாதிவாசம் செய்யவேண்டுவது அவசியமாகும். இப்படிச் சயனம் கொள்ளும் (பள்ளி கொள்ளும்) திருமேனிக்கு அமைக்கும் சயனமேடையாகிய கட்டில் பலவகைப்படும். இதனை பஞ்சசயன்வேதிகை எனவும் அழைப்பர். 1) முதலில் எட்டு மரக்கால் நெல்லைப்பரப்பி 2) அதன்மீதுநான்கு மரக்கால் அரிசியைப் பரப்பி அதன்மீது; 3) இரண்டு மரக்கால் எள்ளைப் பரப்பி அதன்மீது; 4) பருத்தி, பட்டு கம்பளி-யாலான விரிப்புகளையும் அதன்மீது; 5) தருப்பை, மலர்களாலான படுக்கையை அமைப்பர் அதன்மீது குடமுழுக்கு செய்ய வேண்டிய சுவாமியை தலை கிழக்கிலும் முகம் வானத்தை நோக்கியிருக்கும்படியும் படுக்க வைத்து பூசை செய்ய வேண்டும்.

★★★

பஞ்ச கங்கை



ஸ்ரீ கயிலாயத்திலுள்ள மகா மண்டபத்தில் அரிய ஐம்முக லிங்கம் உள்ளது. இதன் ஐந்து திருமுடிகளிலுள்ள சடாபாரங்களில் இருந்தும் ஐந்து கங்கை நதிகள் பொங்கிப் பெருகுவதாகச் சிவ ரகசியம் கூறுகிறது. (கிழக்கு பக்கமுகத்தின் முடியிலிருந்து) ரத்ன கங்கையும், (மேற்கு நோக்கிய முகத்தின் சடையிலிருந்து) தேவகங்கையும் (வடக்கு நோக்கிய முகத்தின் சடையிலிருந்து) கயிலாயகங்கையும் (தெற்கு திருமுகத்தின் திருமுடியிலிருந்து) உக்கிர கங்கையும் (நடுவில் மேலே உள்ள முகத்தின் திருமுடியிலிருந்து) பிரம்ம கங்கையும் உற்பத்தியாகி கயிலைமலையைச் சூழ்ந்து ஓடுவதாகக் கூறப்படுகிறது. இந்த ஐந்து கங்கைகளும் சிவ அமுதசாகரம் எனும் கடலில் கலக்கின்றன.

இந்தப் பஞ்சகங்கை ஆற்றின் கரையிலுள்ள பிரணவாகார மண்டபத்தில் பார்வதி தேவியுடன் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார்.

சிலதலங்களில் பஞ்சகங்கைத் தீர்த்தம் எனும் பெயரில் குளங்கள் உள்ளன. காஞ்சி காமாட்சி அம்மன் ஆலயத்தில் உள்ள உலகாணி தீர்த்தத்திற்குப் பஞ்சகங்கை என்பதும் பெயராகும்.

பஞ்சோதகம்

சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்யும்போது ஐந்துவகையான பொருட்கள் ஊறிய நீரை அபிஷேகிப்பர் இவை வில்வம், ஊறிய நீர், இரத்தினங்கள் இட்ட நீர், வெட்டிவேர் பச்சைகற்பூரம் முதலான வாசனைத் திரவியங்கள் கலந்தநீர், தர்பைப்புல் இட்டுவைத்த நீர், பழச்சாறு கலந்த நீர் என்பதாகும். இவை முறையே வில்வோதகம், ரத்னோதகம், கந்தோதகம் குசோதகம், பலதோகம் என்றழைக்கப்படுகின்றன.

பஞ்ச வில்வம்

சிவபெருமானை பூசிக்கத்தகுந்த பத்திரங்களுள் தலையானது வில்வமாகும். இவை கூவிளம், நொச்சி, விளா, மாவிலங்கை, கிளுவை என ஐந்து ஆகும். பஞ்சமுக அர்ச்சனையின் போது இந்த ஐந்து இலைகளாலும் சிவபெருமானை அர்ச்சிக்க வேண்டும்.


பஞ்சநாத தத்துவ பூஜை



சிவபெருமானை ஐந்து வகை ஓசையால் வழிபடுகிறோம். "ஓசை உலகெல்லாம் ஆனாய்" என்று புகழப்படும் சிவபெருமானை ஐந்து வகையான ஒலியால் வழிபடுவதை "பஞ்ச நாத" உபசாரமென்பர்.

இதில் மரத்தால் செய்து தோலால் மூடப்பட்ட மத்தளம் முழவு முதலியன பூமி சம்பந்தம் கொண்டவைகளாகவும், சங்கு முதலிய ஜலசம்பந்தமான பொருள்களால் உண்டாகும் ஒலி நீர்சம்பந்தம் கொண்டவையாகவும், உருக்கி வார்க்கப்பட்ட செம்பு, பித்தளை முதலியவற்றால் செய்த சேகண்டி, பூரி, திருச்சின்னம், ஆகியன நெருப்பு சம்பந்தம் கொண்டவைகள் என்றும் மூங்கிலால் செய்யப்பட்ட புல்லாங்குழல் முதலியன வாயு சம்பந்தம் கொண்ட வைகள் என்றும், வாயால் பாடப்படும் மந்திரம் பாடல் முதலியன ஆகாய சம்பந்தம் உடையன என்றும் கருதப்படும். இந்த ஐவகை ஒலியாலும் இறைவனை வழிபடுவதைப் பஞ்சநாத உபசாரம் என்று ஸ்ரீ காரணாகமம் குறிப்பிடுகிறது.

ஐந்து குடுமித் திருநிலை விமானம் - பஞ்ச கலச விமானம்



பொதுவாக சிவாலயங்களில் உள்ள கருவறையின்மீது அமையும் ஸ்ரீ விமானம் ஒற்றைக் கலசம் கொண்டதாகவே அமையும். சில இடங்களில் விமானத்தின் சிகரத்தில் நான்கு திசைகளையும் நோக்கி அமையும் நான்கு மகா நாசிகள் எனும் வளைவு முகப்புகளையும் முன்னால் வளர்த்திக் கட்டி அவற்றின் மீதும் கலசங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஸ்ரீ விமானங்கள் மீதில் ஐந்து கலசங்கள் அமைகின்றன. இவற்றிற்கு மங்கள விமானம் என்பது பெயராகும்.

சூரியன் பூசனை புரிந்த திருத்தலங்களில் இத்தகைய ஸ்ரீ விமானங்கள் அமைந்துள்ளன என்பர். திருப்பூவணம் முதலான அனேக திருத்தலங்களில் இத்தகைய ஸ்ரீ விமானங்களைக் காணலாம்.

இதைப் போலவே சுவாமி உலா வருவதற்கு ஐந்து கலசங்களைக் கொண்ட விமானமும் உள்ளது. இதனை மங்களகிரி விமானம் என அழைப்பர். இதற்குப் பன்னிரண்டு கால்கள் உள்ளன. இவை பன்னிரண்டும் பன்னிரு ஆதித்தியர்களைக் குறிப்பிடுகின்றன என்பர்.

சிவபாஞ்சராத்திரம்

பாஞ்சராத்திரம் என்றதும் நமக்கு வைணவ ஆகமங்களில் ஒன்றே நினைவுக்கு வருகின்றது. ஆனால் சிவராத்திரிகள் ஐந்தினைப் பாஞ்சராத்திரம் என்பதும் மரபாகும்.

இவை மாத சிவராத்திரி, மகா சிவாராத்திரி, நித்ய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, யோக சிவராத்திரி, என ஐந்தாகும். (விரிவை சிவராத்திரி மலரில் காண்க.) இவற்றில் கண் விழித்து சிவபூஜை செய்வது உயர்ந்த பலனை அளிப்பதாகும். ஆற்றங்கரையில் வீற்றிருந்து பஞ்சாட்சர ஜபம் செய்தால் எளிதில் முக்தி கிடைக்கும்.

கார்த்திகை மாதத்து முதல் தேதி பௌர்ணமி, அமாவாசை, மாத சதுர்த்தசி, பட்ச சதுர்த்தசி ஆகிய ஐந்து இரவுகள் விழித்திருந்து சிவபூசை செய்வது உயர்ந்த பலன் தருமென்று காசிக்கண்டம் கூறுகிறது. இதுவும் பஞ்சராத்ர விரதமாகும்.

ஐந்தொழில் தலைவர்கள்

பரம் பொருளான சிவபெருமான் உலக இயக்கத்தின் பொருட்டு ஐந்தொழில் புரியத் தன்னிலிருந்து தன்னைப் போலவே ஐவரை உண்டாக்கியருளினார். அவர்களில் முறையே :- பிரமன் : படைப்புத் தொழிலையும், திருமால் : காத்தல் தொழிலையும், உருத்திரன்:அழித்தல் தொழிலையும், மகேசுவரன் : மறைத்தல் தொழிலையும், சதாசிவன் :அருளல் தொழிலையும் இயற்றிவருகின்றனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே உலகம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பஞ்சப்பிரம்ம மந்திரம்

இது சிவமந்திரங்களுள் ஒன்றாகும். இதன் தேவதை அகோரமூர்த்தியும் அகோரேஸ்வரியும் ஆவார். இதைத் தியானிப்பவர்களுக்கு விரும்பியதெல்லாம் கைகூடும்.

ஐந்து குடுமி நாதர்

சிவபெருமான் ஒரு முறை ஐந்து குடுமிகளுடன் கூடிய பாலகனாக தாமரை மலர் மீது வீற்றிருந்தார். அவரைக் கண்டு கோபித்த இந்திரன் அவர்மீது வஜ்ராயுதத்தை எய்தான். அது அக்குழந்தையை ஒன்றும் செய்யாது அடங்கி நிற்பதைக் கண்டு திகைத்தான். அங்கு வந்த பிரமன் தன்ஞானத்தால் சிவபெருமானை உணர்ந்து போற்றினான். இந்திரனின் கர்வத்தை அடக்க இறைவன் ஆடிய திருவிளையாடலாக இது குறிக்கப்படுகிறது. இக்காட்சியை விளக்கும் பெரிய சிற்பம் காஞ்சீபுரம் கயிலாயநாதர் ஆலயத்தில் உள்ளது.

காளத்தியிலுள்ள லிங்கத்தின் மேற்பகுதியில் ஐந்து முடிச்சு போன்ற அமைப்பு உள்ளது. இதையொட்டி பெருமான் ஐங்குடுமித் தேவர் என்று அழைக்கப்பட்டார். இது பின்னாளில் குடுமித் தேவர் என வழங்கியது. பெரிய புராணத்தில் காளத்தி நாதர் குடுமித் தேவர் என்றே குறிக்கப்படுகிறார்.

கிராமிய தெய்வங்களில் அஞ்சுசடைசாமியும் ஒருவராவர். கோபிசெட்டிப்பாளையத்தை அடுத்த பருவாச்சிக்கு அருகில் பெரிய பந்திக் கோயில் உள்ளது. இதில் மிகப்பெரிய வடிவில் அஞ்சுசடைச் சாமி சுதை உருவில் வீற்றிருக்கின்றார். இவர் சிவனுடைய அம்சமாகத் தோன்றியவர் ஆவார்.

வீரசைவர்களின் பஞ்சலிங்கமும் பஞ்ச ஆசாரியார்களும்

சைவ சமயத்தில் மிகத் தொன்மையானதும் பல சிறப்புகளை உடையதுமான பிரிவு வீரசைவமாகும். இதில் ஐந்து குருமார்கள் சிறப்புடன் போற்றி வணங்கப்படுகின்றனர். இவர்களைப் பஞ்சாரியார்கள் என அழைப்பர். இவர்கள் ஐவரும் ஐந்து ஜோதிலிங்கங்களில் இருந்து தோன்றி வீரசைவ நெறிபரப்பிய பின்னர் அதே லிங்கங்களில் ஐக்ய மானார்கள். இவ்வைந்து குரு பிரான்களைப் பற்றிய செய்திகளை இனிக் காணலாம்.

1. ஜகத்குரு ரேணுகாசாரியார்

1. இவர் கொல்லிப்பாகை எனும் தலத்தில் உள்ள சோமலிங்கத்தில் சுத்த பால்குணம் 13ம் நாளில் உற்பவித்தார். இவர் இலங்கைக்கு வான்வழியே சென்று முதன்முதலாக வீரசைவத்தைப் பரப்பினார். 2. விபீஷணனுக்கு வீரசைவ உபதேசம்செய்து அவனது வேண்டுகோள்படி ஒரே நேரத்தில் மூன்று கோடி லிங்கங்களைப் பிரதிஷ்டை செய்தார். 3. ஆதி சங்கரருக்குச் சந்திரமௌலீசுவரர் எனும் லிங்கத்தை அளித்தார். 4. அகத்தியருக்கு அங்கியோகத்தையும் வீரசைவத்தையும் போதித்தார். 5. கோரக்ஷன் எனும் அசுரனை நொடியில் அழித்தார். 6. பூதங்களை எரித்தார். 7. காஞ்சி வரதராஜர் முதலான சரிந்த விக்ரகங்களை கை தொட்டு நேராக்கினார். 8. தனக்கு வாரிசாகக் காஞ்சீபுரம் ஏகம்பர் சந்நிதியில் ஸ்ரீ உருத்திர புரீசுவரர் என்பவரைப் பூமியின் கர்ப்பத்திலிருந்து தோற்றுவித்தார். 9. 1400 ஆண்டுகள் வீர சைவ நெறியைப் பரப்பியபின் தாம் தோன்றிய சோம லிங்கத்திலேயே இரண்டறக்கலந்தார்.

இவருடைய இந்த ஒன்பது செயல்களையும் வீரசைவர்கள் நவலீலைகள் எனப் போற்றுகின்றனர். இவருடைய வரலாற்றைக் கன்னட மொழியில் உள்ள சித்தாந்த சிகாமணி எனும் நூல் விரிவாகக் கூறுகின்றது. இவர் பெயரால் இலங்கையில் ரேணுகாச் சிரமம் எனும் அமைப்பு இயங்கி வருகின்றது.

2. ஜகத்குரு தாருகாசாரியார்

இவர் வடவிருக்ஷசித்தேசுவரம் எனும் இடத்திலுள்ள சித்த லிங்கத்தில் இருந்து தோன்றி ததீசி முனிவருக்கு வீரசைவத்தைப் போதித்தார். பின்னர் கொல்லபுரத்தை ஆண்டுவந்த கொடுங்கோல் மன்னனான மாயன் என்பனை அடக்கினார். தனக்கு வாரிசாக மல்லிகார்ச்சுன சிவயோகியை நியமித்து சித்தேஸ்வர லிங்கத்திலேயே இரண்டறக் கலந்தார்.

3. ஏகோராம ஆராத்யர்

இவர் திராட்சாராமத்தில் உள்ள ராமலிங்கத்தில் இருந்து அவதாரம் செய்து வியாசமுனிவருக்கு வீரசைவத்தை உபதேசித்தார். கௌதமேந்திரன் எனும் அரசனை வீரசைவ நெறிப்படுத்தினார்.

பல அருளாடல்களைப் புரிந்த பின்னர் மீண்டும் இராமநாத லிங்கத்திலேயே கலந்தருளினார்.

4. பண்டித ஆராத்தியர்

இவர் ஸ்ரீசைலம் மல்லிகார்ச்சுன லிங்கத்தில் தோன்றினார். இவர் சனந்தன முனிவருக்கு வீரசைவ தீட்சை செய்வித்து வீரசைவம் வளர்ந்தோங்க அருள் பாலித்தார். அனேக அற்புதங்களைச் செய்தபின் தான் தோன்றிய அதே லிங்கத்தில் கலந்தருளினார்.



ஜகத்குரு ரேணுகாசாரியார்
கொல்லிப்பாகை எனும் தலத்திலுள்ள சோமலிங்கத்திலிருந்து சுத்த பாலகுணம் பதிமூன்றாம் நாளில் உற்பவித்தல

5. விஸ்வ ஆராத்தியர்

இவர் காசிவிஸ்வநாத லிங்கத்தில் இருந்து தோன்றியவர். தூர்வாசரைத் தன் சீடனாகக் கொண்டவர். சிந்து, நேப்பாள காஷ்மீர மன்னர்களைச் சீடர்களாக ஏற்று வீரசைவ உபதேசம் செய்தவர். நெடுங்காலம் வீரசைவ நெறி பரப்பிய இவர் தாம் தோன்றிய லிங்கத்திலேயே கலந்தருளினார்.

இவர்கள் ஐவரும் முறையே கர்னாடக வட்டம் ரம்பாபுரி (பாளேஹண்ணூர்) ஆந்திரமாநிலம் பெல்லாரி வட்டம் உஜ்ஜெனி, இமயமலைச் சாரல் கேதாரம், ஸ்ரீ சைலம், காசி ஆகிய ஐந்து இடங்களில் குரு பீடங்களை நிறுவினர் அம்மடங்கள் இன்றுவரையில் வீரசைவ நெறியைப் பரப்பி வருகின்றன.

பஞ்ச லிங்க வழிபாடுகள்

சிவபெருமான் உலகினை உற்பத்தி செய்து வழி நடத்த ஐந்து திருமேனிகளைத் தாங்குகின்றார். இந்தமூர்த்திகளைப் பஞ்சப் பிரம்மங்கள் என்று அழைக்கின்றனர். ஈசானர், தற்புருஷர், வாம தேவர்கள், அகோரர், சத்யோஜாதர் என்பன இவர்களது பெயர்களாகும். இவர்கள் வழிபட்ட லிங்கங்கள் இவர்கள் பெயரால் ஈசான லிங்கம், தத்புருஷ லிங்கம், சத்யோஜாதலிங்கம், அகோரலிங்கம், வாமதேவ லிங்கம், என்று அழைக்கப்படுகின்றன. இவர்கள் தாங்கள் அமைத்த லிங்கத்தின் உள்ளேயே ஒடுங்கி இருந்து யோகம் புரிகின்றனர். தொழிற்படும் காலத்தில் வெளிப்பட்டு உலகினை வழி நடத்துகின்றனர்.

சிவதீட்சை அளிக்கப்படும் போது அன்பர்கள் இந்த ஐந்து லிங்கங்களை வழிபடுகின்றனர் சிவதீட்சை பெற்றவர்களை இந்த லிங்கங்களின் பெயரால் வாமதேவசிவம் சத்யோஜாத சிவம், ஈசான்ய சிவம், அகோரசிவம், தத்புருஷ சிவம் என்று அழைக்கின்றனர்.திருவாரூர் காஞ்சிபுரம் முதலிய சில தலங்களில் பஞ்சப் பிரம்மங்களை குறிக்கும் ஐந்து லிங்கங்கள் உள்ளன.

சிவாலயங்களில் தொண்டாற்றும் பஞ்சாச்சார்யார்கள்

சைவ ஆகம பூஜாபத்தி நூல்கள் சிவவழிபாட்டில் தலைமை ஏற்று பூசைகளை வழி நடத்தும் ஆசார்யர்கள் ஐவரைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இவர்களைப் பஞ்சாச்சார்யார்கள் என்று அழைக்கின்றனர். இவர்கள் சாதகாச்சாரியார் (பூஜைகளை செய்யத் துணைசெய்வர்), போதகாச்சார்யர் (ஒவ்வொருவர் செய்யும் பூஜைகளையும் கண்காணிப்பவர்) அர்ச்சகாச்சார்யார் (பூசைகளைச் செய்பவர்) அலங்காரச்சார்யார் (இறைவடிவங்களை அலங்கரிப்பர்) உற்சவாச்சார்யார் (தினம் வார, மாத, உற்சவங்களை நடத்தி வைப்பவர் எனப்படுகின்றனர் கல்வெட்டுக்கள் சிலவற்றில் பஞ்சாச்சார்யம் செய்வார்கள் பட்டுடையார்கள் என்று இவர்கள் குறிக்கப்பட்டுள்ளனர்.

பஞ்ச மார்க்கம்



ஸ்ரீ மாணிக்கவாசகர்

இறைவனை அடையும் வழிகள் பலஆயிரம் ஆகும் என்றாலும் அவைகளை ஐந்தாக வகைப் படுத்தியுள்ளனர். இவை தாஸ மார்க்கம் (அடிமைத் தொழில் வழி) சத்புத்திரமார்க்கம் (நன்மகன் வழி), ஸக மார்க்கம் (நட்பின் வழி), சன்மார்க்கம் (அன்பு வழி), சண்டமார்க்கம் (வலிந்து கொள்ளும் வழி) என்பனவாகும்.


இவற்றில் தாஸமார்க்கம் என்பது இறைவனை ஆண்டானாகவும், பக்தன் தன்னை அடிமையாகவும் எண்ணிக் கொள்ளும் நிலையாகும் இத்தகைய பக்தி செலுத்தியவர் அப்பரடிகள் ஆவார். சத்புத்திரமார்க்கம் என்பது இறைவனைத் தந்தை யாகவும் தன்னை மகனாகவும் எண்ணி பக்தி செலுத்துவதாகும். இந்நிலையிலான பக்தியைச் செலுத்தியவர் திருஞான சம்பந்தநாயனார் ஆவார். ஸகமார்க்கம் என்பது இறைவனைத் தன் தோழனாக எண்ணும் நிலையாகும். இத்தகைய பக்தி நெறி நின்றவர் சுந்தர மூர்த்திகளாவார். இதனால் இவருக்குத் தம்பிரான் தோழர் என்பது பெயராயிற்று. சன்மார்க்கம் என்பது உயர்ந்த நெறியாகும். இதில் ஆன்மா சிவநிலையைப் பெற்று அவருடைய நிழலில் நிலைபெற்று சிவமாகவே விளங்குவதாகும். இவ்வழி நின்றவர் மணிவாசகப் பெருமானாவார். இவை நான்கும் தவிர ஐந்தாவது நிலையொன்று உண்டு. அதுவே தண்டமார்க்கம் எனப்படும். இவ்வகையில் பக்தி செலுத்தியவர் சண்டேசுவர நாயனார் ஆவார். சிவ வழிபாட்டிற்கு ஊறு செய்பவர் களைக் கொன்றாலும் கூடப்பாவம் சேராது என்பது இவர்கள் கொள்கையாகும். மூர்க்க நாயனார், கோட்புலியார் முதலான நாயன் மார்கள் மேற்கண்ட நெறியும் இதுவேயாகும்.

பஞ்ச பூத லிங்கங்கள்

உலகிற்கு ஆதாரமாகத் திகழ்பவை நிலம், நீர், தீ, காற்று, ஆகாசம், என்ற ஐந்தாகும். இவற்றைப் பஞ்ச பூதங்கள் என்பர். இவை ஐந்தையும் சிவலிங்க வடிவில் அமைத்து வழிபடும் வழக்கம் நீண்டகாலமாக இருந்து வருகின்றது. இவற்றைப் பஞ்ச பூதலிங்கம் என்று அழைப்பர். சிவபெருமான் காஞ்சியில் மண் ணாலும், திருவானைக்காவில் நீராலும் காளத்தியில் காற்றாலும், திருவண்ணாமலையில் அக்னியாலும், சிதம்பரத்தில் ஆகாய வடிவிலும் ஆன லிங்கமாக இருக்கிறார் என்று புராணங்கள் கூறுகின்றன. இவற் றைப் பஞ்ச பூதத் தலங்கள் என்று அழைக்கின்றனர்.

காஞ்சிபுரத்தில் அம்பிகை கம்பையாற்றங் கரையில் மாமரத்தின் கீழ் வெண் மணலால் சிவலிங் கம் அமைத்து வழிபட்டாள் என்றும், அந்த லிங்கத்தி லிருந்து சிவபெருமான் வெளிப்பட்டு அவளுக்கு அருள்புரிந்தார் என்றும் காஞ்சிப் புராணம் கூறுகிறது.

இதுபோன்று அவள் காவிரி நீரைத் திரட்டிச், சிவலிங்கமாக்கி வழிபட்ட தலம் திரு ஆனைக்கா ஆகும். இந்த லிங்கத்தை அன்பர்கள் அப்பு லிங்கம், நீரானார் எனப் பலபெயர்களில் அழைக்கின்றனர். சிவபெருமான் பிரமனும் திருமாலும் தமது அடிமுடி தேடிக் காணமுடியாத அழல் (நெருப்பு) மலையாக நின்ற தலம் திருவண்ணாமலையாகும். பின்னர் தேவர் களின் விருப்பத்தின்படி அக்னி மலையின் அருகில் அவர் நெருப்பு லிங்கமாக எழுந்தருளினார். இதனால் அண்ணாமலை லிங்கம் அக்னிலிங்கம் என்றும் தேயு லிங்கம் என்றும் போற்றப்படுகிறது.



இதுபோன்றே காளத்தியில் காற்று (வாயு) திரண்டு லிங்கமானதென்றும், சிதம்பரத்தில் ஆகாசத்திலுள்ள மந்திரக் கூட்டங்கள் திரண்டு லிங்கமானதென்றும் கூறப்படுகிறது. சிதம்பரத்தில் ஆகாசலிங்கம் சிற்சபை யைச் சுற்றி அமைந்துள்ள திருமாளிகையின் இரண் டாம் அடுக்கில் அமைந்துள்ளது.


பஞ்ச பூத லிங்கங்களைப் போற்றும் வகையில் பெரிய ஆலயங்களில் ஐந்து லிங்கங்களை ஒரு சேர வைத்து வழிபடப்படுகின்றனர். திருவண்ணாமலை, திருஒற்றியூர் முதலிய தலங்களில் ஐந்து லிங்கங்கள் அமைந்த ஐந்து தனிச் சந்நிதிகள் உள்ளன. காஞ்சி புரத்தில் பஞ்ச பூதலிங்கங்களுக்கான தனித் தனி ஆலயங்கள் அமைந்துள்ளன.

பஞ்ச பாண்டவர்கள் வழிபட்ட பஞ்சலிங்கங்கள்

பாரத தேசத்தின் இதிகாசமான மகாபாரதத்தின் கதாநாயகர்கள் பஞ்ச பாண்டவர்கள் இவர்களின் மனைவி திரௌபதி, பாண்டவர்கள் கிருஷ்ணனின் மைத்துனர்களாக இருந்தபோதிலும் மிகுந்த சிவபக்தர்களாக விளங்கினர். அனேக தலங்களில் இவர்கள் சிவவழிபாடு செய்துள்ளனர். இவற்றில் இலுப்பைப்பட்டு, என வழங்கும் பழமண்ணிப் படிக்கரை காஞ்சிபுரம், நல்லூர் (தென்னாற்காடு மாவட்டம்)ஆகியவை தனிச்சிறப்பு கொண்டவைகளாகும். பாடல்பெற்ற தலமான இலுப்பைப்பட்டில் ஒரே மதிலுக்குள் ஐந்து சிற்றாலயங்கள் உள்ளன. இவை பாண்டவர்கள் வழிபட்டு பேறுபெற்ற சிவாலயங்களாகும். இங்குள்ள வலம்பரி விநாயகரை திரௌபதி அமைத்து வழிபட்டதாகக் கூறுகின்றனர்.

தென்னாற்காடு மாவட்டத்தில் கோமுகி மயூரநதி, பெண்ணையாறு, ஆகிய மூன்றும் கூடுமிடத்தில் நல்லூர் உள்ளது. இங்குள்ள நல்ல நாயகர் ஆலயம் பாண்டவர்கள் வழிபட்ட கோயிலாகும். இங்கு அவர்கள் வழிபட்ட லிங்கங்கள் தனித்தனி சந்நிதிகளில் அவர்கள் பெயராலேயே அமைந்துள்ளன. காஞ்சிபுரத்தில் ஒரே மதிலுக்குள் தருமேசர், வீமேசர், அர்ச்சுனர், நகுலசகாதேவேசர் திரௌபதீசர் என்ற ஐந்து லிங்கங்கள் அமைந்திருந்தன என்று தலபுராண வரலாற்றுக் கையேடு கூறுகிறது. இந்நாளில் இவற்றைக் காணமுடியவில்லை.

பஞ்சவேல் பரமேசுவரர்



வேல் என்றதும் நமக்கு முருகப் பெருமானே நினைவுக்கு வருகின்றார். ஆனால், ஐந்து வேல்களை நட்டு அவற்றையே பரமசிவனாக எண்ணி வழிபடும் வழக்கம் கொங்கு மாவட்டங்களில் காணப்படுகின்றது.


இத்தகைய கோயில்களின் மூலஸ் தானத்தில் ஐந்து வேல்கள் நடப்பட்டுள்ளன. அவற்றிற்கு ஆடைகளும் மாலைகளும் அணிவித்து வணங்கப் படுகின்றன.

இக்கோயில்களைப் பரமசிவன் கோயில் என் அழைக்கின்றனர். இத்தகைய கோயில்களில் ஒன்று கோவைமாவட்டம் பொள்ளாச்சிவட்டம் கப்பளாங்கரை என்னும் கிராமத்தில் உள்ளது. கல்பிளந்தான் கரை எனப்புராணத்தில் அழைக்கப்படும் இவ்வூரில் கொங்கு வேளாளர் மரபில் மாடகுலத்தில் உதித்த கந்தசாமிக் கவுண்டர் என்பர் சிவபெருமானின் அருள் பெற்றவர். அவர் சிவனாணைப்படி இங்கு ஐந்து வேல்களை நட்டு அவற்றைச் சிவபெருமானின் திவ்யமூர்த்தமாகக் கொண்டு கோயில் அமைத்துள்ளார். இங்கு சிவபெருமானின் ஆணையால் உண்டான மாமாங்க தீர்த்தம் எனும் தீர்த்தம் உள்ளது.

இத்தகைய ஐந்து வேல்களைக் கொண்ட பரமசிவன் கோயிலை இம் மாவட்டத்தில் பலபகுதிகளில் காணலாம். ★

பாண்டியநாட்டுப் பஞ்சபூதத்தலங்கள்

தென்னிந்தியாவில் உள்ள சிதம்பரம், திருவண்ணாமலை, காஞ்சீபுரம், காளத்தி, திருவானைக்காவல் ஆகிய வற்றைப் பஞ்சபூதத்தலங்கள் என்ற ழைப்பது போலவே ஒவ்வொரு நாட்டுப்பிரிவிலும் பஞ்சபூதத்தலங்கள் உள்ளன. இவ்வகையில் பாண்டியநாட்டு பஞ்சபூதத் தலங்களாக விளங்குபவை சங்கரன் கோயில் (மண்), தாருகாபுரம் (நீர்), கரிவலம்வந்தநல்லூர் (தீ), தென்சேரிமலை (காற்று), தேவதானம் (ஆகாயம்) என்பனவாகும். இவை ஐந்தையும் வழிபடுவதன் மூலம் பஞ்ச பூத நாயகனான சதாசிவப்பெருமானை வழிபட்ட புண்ணியம் கிடைக்கும் என்பர். ★



ஒரே சிற்பி செய்த ஐந்து நடராசர்

பாண்டியநாட்டில் உள்ள கட்டாரி மங்கலம், கரிசூழ்ந்த மங்கலம், கருவேலங்குலம், செப்பறை ஆகியவற்றுடன் நடுநாட்டுத்தலமாகிய சிதம்பரம் ஆகிய ஊர்களிலுள்ள சபையில் எழுந்தருளியுள்ள நடராஜப்பெருமான் திருவடிவங்களை ஒரே சிற்பி செய்து வைத்தான் என்ற நம்பிக்கை நிலவுகிறது. ★

வீரசைவர்களின் ஐவகை ஒழுக்கம்

வீரசைவர்கள் ஐவகை ஒழுக்கங்களை கைபிடிக்கவேண்டும் என்று வீரசைவ நெறி வற்புறுத்துகின்றது.

இவை 1. இலிங்க ஒழுக்கம் (லிங்காசாரம்) 2. தனினிருத்தல் ஒழுக்கம் (சதாசாரம்), 3. சிவஒழுக்கம் (சிவாசாரம்), 4. தாழ்வெனும் சைவ ஒழுக்கம் (பிருத்யாசாரம்), 5. கூட்டமைப்பு ஒழுக்கம் ஒழுக்கம் (கணாசாரம்) என்பனவாகும்.

1. இலிங்க ஒழுக்கம்

இந்த முதல் ஒழுக்கத்தில் லிங்கம் என்ற சொல் ஒளியைக் குறிக்கின்றது. வீரசைவர்கள் தாம் ஞான ஒளியுடன் திகழ்வது போலவே இந்த உலகத்தையும் சிவ வழிபாடு எனும் ஒளியுடன் சிறக்கச் செய்ய வேண்டும். இவ்வொழுக்கத்தில் தான் பயணம் செய்வதுடன் உலகினையும் ஈடுபடுத்த வேண்டும். சிலர் சிவலிங்கத்தை வழிபடுவதே இலிங்க ஒழுக்கம் என்பர்.

2. தனினிருத்தல் ஒழுக்கம்

வீரசைவன் தன் முயற்சியில் தக்கதொரு வேலையைச் செய்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில்தான் வாழ வேண்டும். அவன் தன் உழைப்பினால் கிடைத்த செல்வத்தைப் பிறருக்கும் வழங்கவேண்டியது கடமையாகும். அவன் வீரசைவ சங்கமர்கள், சமயச் சான்றோர்கள், கல்விவழிகாட்டும் ஆசிரியர்கள், பணியாளர்கள் ஆகியோர்களுக்கு உணவு, உடை வழங்கி அவர்களை ஆதரித்து சைவநெறியில் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும். தான் வாழ்வதுடன் தன்னைச் சார்ந்தவரையும் நிலை நிறுத்துதல் செய்வதை வற்புறுத்துவதால் இவ் வொழுக்கம் தனினிருத்தல் சதாசாரம் எனப்பட்டது.

இதனால் அறியப்படும் உண்மை யாவது. சிவநெறியில் நிற்கும் ஒருவன் உழைத்து வாழவேண்டுமே தவிர ஏமாற்றிப் பொருள் சேர்த்தல், சுரண்டுதல் முதலியவற்றைச் செய்யக் கூடாது. சிக்கனமாக வாழவேண்டும். அன்பளிப்பு என்ற பெயரில் எவர் எதைத் தந்தாலும் அளவுக்கு மீறி அதை வாங்கிச் சேர்த்தல் கூடாது. இதனை சத்+ஆசாரம் என்று பிரித்துப்பொருள் காண்பர். சத் என்றால் சத்தியம் உண்மை, வாய்மை எனப் பொருள்படும். சத்தியம், உண்மைவழி ஒழுகுதலே சதாசாரம் ஆயிற்று என்பாரும் உண்டு.

3. சிவ ஒழுக்கம்

சிவம் என்பதற்கு வீரம் என்பது ஒரு பொருள். வீரசைவர்கள் வீரஒழுக்கம் மேற்கொள்ளவேண்டும். நாட்டுக்கு ஊருக்கு, கூட்டத்திற்கு இதில் எதற்கு கேடு ஏற்பட்டாலும் வீரசைவன் அதனை நீக்கும் பணியில் உடனே ஈடுபடவேண்டும். எடுத்துக்காட்டாக பாற்கடலில் நஞ்சு பிறந்தது அனைவரும் ஓடி ஒளிந்தனர். உடனே சிவபெருமான் அதனை உண்டு உலகினைக் காத்தார். அதுபோலவே வீரசைவனும் தன் பலத்தால் உலகிற்கு ஏற்படும் கேடுகளை நீக்கி காக்க வேண்டும்.

4. தாழ்வெனும் தகைவு

உலகில் உள்ள பொருள்கள் யாவற்றையும் சிவமாகவே பாவிக்கும் வீரசைவன் தன்னை அவற்றின் பணியாளனாகவே கருதவேண்டும். இப்படி அவன் பணியாளனாக தாழ்வுடன் தன்னை எண்ணிக் கொண்டால் மட்டுமே அவனால் அவையாவற்றையும் சிவமாகக் காண முடியும்.

5. கூட்டமைப்பு ஒழுக்கம்

வீரசைவர்கள் எப்போது அதே கருத்துள்ளவர்களிடமே பழக வேண்டும். இப்படிப் பழகுவதால் அவர்களுடைய கொள்கைப் பிடிப்பு வளர்கிறது. இதனால் தன்னலம் கருதாமையோடு கூட்டமைப்பு ஒழுக்கம் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது.

இவ்வாறு பேசப்படும் ஐந்து ஒழுக்கங்களும் வீர சைவ நெறியில் காலம்காலமாகப் போற்றப்பட்டு வந்தாலும் இடைக்காலத்தில் அதில் தொய்வு ஏற்பட்டது. இந்தப் பஞ்சா சாரத்துக்கு புதிய உயிர்ப்பாற்றலைக் கொடுத்து அதை வளர்த்தவர் பசவராவார். இதனால் கன்னடநாட்டுப் பச வண்ணரை 'பஞ்சாசார-மூர்த்தி-பிரம்மம்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கின்றனர். ✪

ஐவகை விபூதி

சிவபெருமானின் ஐந்து முகங்களில் இருந்தும் தோன்றியது ஐந்து வகை விபூதியாகும். இவை முறையே

விபூதி, (விரும்பிய செல்வத்தை அளிப்பது)

பசிதம், (பரசிவத்தை விளக்கி அதோடு ஒன்றவைப்பது)

பஸ்மம், (பாவங்களை நீக்குவது)

சாரம், (துன்பங்களை நீக்குவது)

ரக்ஷை, (தீமைகள் அணுகாது காப்பது) என்று அழைக்கப்படும்.

சிவபெருமானின் அருளாக ஐம்முகங்களில் இருந்து தோன்றிய இந்த ஐந்து விபூதிகளை அவருடைய ஐம்பெரும் சக்தியாகிய தேவியர் அன்பர்களுக்கு அருள்கின்றனர். (இதன் விரிவான செய்தியை விபூதி எனும் மலரில் காண்க) ✪



கயிலை மலையின் பஞ்சநாதம்

கயிலை மலையில் அமைந்துள்ள ஏராளமான சிகரங்களில் ஐந்து சிகரங்கள் முக்கியமானதாகும். இவை சிவபெருமானின் ஐந்து வடிவங்களாகப் போற்றப்படுகின்றன. இவற்றைப் பஞ்சநாதம் என அழைப்பர்.

இவை கேதாரநாதம், பத்ரிநாதம், பசுபதிநாதம், அமரநாதம், கயிலாயநாதம் என்ற ஐந்தாகும்.

பனிபடர்ந்த மலைகளில் விளங்கும் இவற்றைத் தரிசிப்பவர் சிவலோகத்தில் இடையறாது இன்பமுடன் வாழ்வர். ✪

பஞ்ச நந்திகள்



பெரிய சிவாலயங்களில் ஐந்து வகையான நந்திகள் அமைந்திருப்பதைக் காணலாம். இவை முறையே இந்திர நந்தி, வேதநந்தி (எனும் பிரம்மநந்தி) ஆத்மநந்தி (கொடிமரத்தின் அருகில் உள்ளது) மால் விடை (மகாமண்டபத்தில் இருப்பது), தருமநந்தி என்றழைக்கப்படும்.

ஒரு சமயம் இந்திரன் இடபவடிவம் கொண்டு சிவபெருமானைத் தாங்கினான். போகங்களின் அதிபதியாகிய இந்திரன் வடிவாக விளங்கும் இந்த நந்தியைப் போகநந்தி என்றும் இந்திரநந்தி என்றும் அழைக்கின்றனர். இந்த நந்தியை கோயிலுக்கு வெளியே சற்று தொலைவில் கருவறையை நோக்கியவாறு அமைக் கின்றனர்.

பின்னும் ஒருமுறை பிரமதேவன் நந்தி வடிவம் கொண்டு சிவபெருமானைத் தாங்கினான். வேதனான பிரமன் நந்தி வடிவம் தாங்கியமையால் இந்த நந்தியை வேதநந்தி, வேதவெள்விடை, பிரம்மநந்தி என்று பலபெயர்களால் அழைக்கின்றனர். பிரம்மம் என்பதற்கு 'அளவிட முடியாத பெருமைகளை உடையது' என்பது பொருளாகும். அதற்கேற்ப இந்த நந்தியை மிகப் பெரியதாகவும் கம்பீரமானதாகவும் அமைப்பர். இந்த நந்தியைச் சுதையினாலும் சுண்ணாம்புச் சாந்தினாலும் மிகப் பெரிய அளவில் அமைக்கின்றனர். ராமேஸ்வரம், காஞ்சீபுரம் முதலான தலங்களில் இத்தகைய பிரும்மாண்டமான வேத வெள்விடையை பெரிய மண்டபத்துள் காணலாம்.

மூன்றாவதாக ஆலயத்தில் கொடி மரத்தையொட்டி தலைமை நந்தியாக அமையும் நந்தி 'ஆன்ம நந்தி' எனப்படும். இது உலக உயிர்களான (பசுக்கள் எனப்படும்) ஆன்மாக்கள் பதியாகிய சிவபெருமானைச் சார்ந்து அவனுடைய நினைவில் நிலைபெற்றிருக்க வேண்டிய தன்மையை உணர்த்துகிறது. சிவாலயத்தில் பிரதோஷக் காலங்களில் இந்த நந்திக்குத்தான் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகிறது.

இனி நான்காவதான மால் விடையைக் காணலாம். ஒருசமயம் திரிபுராதிகளை வெல் லுவதற்காக தேவர்கள் சிவபெருமானுக்கு சிறந்ததொரு தேரினைச் செய்து கொடுத்தார்கள். தாங்கள் அளிக்கும் இந்தத் தேர் இல்லாமல் சிவபெருமானால் முப்புரங்களை வெல்ல முடியாது என எண்ணினர். அதை உணர்ந்த சிவ பெருமான் அந்தத்தேர் தட்டின் மீது தன் வலக்காலை ஊன்றி ஏறினார். அவ்வாறு அவர் ஊன்றி போதே அத்தேரின் அச்சு மள மள வென்று முறிந்தது. தேவர்கள் தாங்கள் செய்தளித்த ஒப்பரிய தேர் பெருமானின் ஒரு கால

அழுத்தத்தைக் கூட தாங்க மாட்டாமல் முறிந்தது கண்டு அஞ்சி பெருமானைத் தொழுதனர். அப்போது திருமால் இடப வடிவம் கொண்டு சிவபெருமானைத்தாங்கி அவரை மகிழ்வித்தான். இந்நினைவு நீங்காது இருக்கும் பொருட்டு தானும் நந்தி வடிவம் கொண்டு அவர் சன்னதியில் நிலையாக எழுந்தருளினான். இந்த நந்தி சக்தி பதமான இரண்டாவது ஆவரணத்துள் அமைந் துள்ளதாகும். இதனை மால்விடை, மால்வெள்விடை என்று பலவாறு அழைப்பர்.

ஐந்தாவதாக மகா மண்டபத்தில் அமையும் சிறு நந்தியே தரும நந்தி என்பதாகும். உலகம் சிவபெருமானிடத்தே ஒடுங்குகின்ற சங்கார காலத்தே உலகம் யாவும் அழியும். பிரளய வெள்ளம் பொங்கிப் பெருகி வானளவு எழுந்து உலகினை அழிக்கும் அந்த சங்கார காலத்தில் யாவும் சிவபெருமானிடம் ஒடுங்கும். அப்போது தருமம் மட்டும் நிலைபெற்று இடபவடிவம் கொண்டு சிவபெருமானைத் தாங்கும். இவ்வாறு தன்னைத் தாங்கும் இடபத்தை பெருமான் ஆரத்தழுவிக் கொள்ளவான். இவ்வகையில் தரும நந்தியானது இறைவனைப்பிரியாது அவனுடனேயே இருக்கும். இதை உணர்த்தும் வகையில் இந்த நந்தி இறைவனுக்கு அருகாமையில் மகா மண்டபத்திலேயே எழுந்தருளி யிருக்கின்றது.

பெரிய ஆலயங்களில் இத்தகைய ஐந்து நந்திகள் இருப்பதைக் காண்கிறோம். திருவண்ணாமலை, காஞ்சீபுரம் முதலான தலங்களில் பஞ்ச நந்திகள் சிறப்புடன் போற்றப்படுகின்றன.

இவை தவிர உட்கோபுர வாயிலின் உட்பகுதியில் வடக்கு நோக்கியவாறு அதிகார நந்தியும், கருவறைக்கு பின்புறம் விருஷபர் என்கின்ற நந்தியும் இருக்கக் காணலாம். ஆதலின் பூரணமான சிவாலயத்தில் ஏழு நந்திகளை அமைக்க வேண்டும் என்பது தெரியவருகிறது. ✪

பஞ்சத்திரவியம் : சிவபெருமானுக்கு திருமுழுக்காட்டும் நீரில் ஏலம், இலவங்கம் அதிமதுரம், கோட்டம், சண்பகமொட்டு ஆகியவற்றை இட்டு ஊறவைத்து அந்நீரில் திருமுழுக்காட்டுவர். இந்த ஐந்து பொருளும் சேர்ந்தது பஞ்சத்திரவியம் எனப்படும். **(சைவபூஷணம்)**

பஞ்சபட்டை : இவை நாவல், அத்தி, மா, அரசு, ஆல் ஆகிய ஐந்து மரங்களின் பட்டைகளாகும். இவற்றை சிவவேள்வியில் இடவேண்டும். இவற்றின் தளிர்கள் ஊறிய நீரால் கும்பாபிஷேக காலங்களில் சிவபெருமானை திருமுழுக்காட்டவேண்டும்.

பஞ்சபல்லவம் : அரத, அத்தி, இரளி, மா, வெள்ளைநொச்சி ஆகியவற்றின் தளிர்களை நீரில் இட்டு அவற்றால் சிவபெருமானை முழுக்காட்டுவர். இவற்றால் அர்ச்சிப்பது பஞ்சபல்லவ அர்ச்சனை எனப்படும்.

ஐவகை வண்ண உருத்திராக்கம் : சிவபெருமானின் ஐந்து முகங்களின் நெற்றிக்கண்ணில் இருந்தும் உதித்த உருத்திராக்கம் வெண்மை, கபில, சிவப்பு, பொன்னிறம், கருப்பு என்ற ஐவகை வண்ணங்களில் உள்ளது.

உ
சிவமயம்



காவாய் கனகத்திரளே போற்றி!
கயிலை மலையானே போற்றி! போற்றி!!

திருக்கயிலாயம்

உலகின் உச்சியாகவும் சிவபெருமானின் திருக்கோயிலாகவும், பனிபடர்ந்த மலையாகவும், விளங்குவது திருக்கயிலாயமாகும். இதனால் இது சைவர்களுக்கு உரிய புனிதமிக்க இடமாகப் போற்றப்படுகிறது.

இங்கு சிவபெருமான் தன் தேவியோடு, விநாயகர், முருகன், நந்தி, கணநாதர்கள், பிரம்ம விஷ்ணுக்கள், தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள், வித்யாதரர்கள் முதலான எண்ணிலடங்காதவர்கள் போற்றிப்பணிந்து கொண்டிருக்க ரத்தினமயமான சிம்மாசனத்தில் கொலு வீற்றிருக்கின்றார்.

இந்த உலகமும் அண்ட சராசரங்களும் அவனுடைய உடைமைப்பொருளாக இருந்தாலும் அவனுக்கே உரியதாக விளங்குவது ஸ்ரீகயிலாயம் என்னும் இத்திருத்தலமேயாகும். இதுவே அவனது ஆலயமும், சிவராஜதானியும் ஆகும். இந்த ஸ்ரீகயிலாயமலை என்பது மத்திம உலகமாகிய இந்த உலகத்தில், ஜம்புத்வீபம் (நாவலந்தீவு) என்று அழைக்கப்படும் பாரத நாட்டின் வடபகுதியில் உள்ள நெடிய மலைத்தொடரில் அமைந்துள்ளது ஆகும். இம்மலைத்தொடர் இந்நாளில் இமாலயம் என்று அழைக்கப்படுகிறது. இதன் நடுவில் ஸ்ரீகயிலாயம் அமைந்துள்ளது.

இங்கு பெருமான் வெள்ளிப் பனிமலையில் அருவுருவமாக இருந்து தனது சிவராஜதானியை நடத்திக்கொண்டிருக்கிறார். அவனருள் பெற்ற வருக்கே அங்குள்ள காட்சிகள் இயல்பாகத் தெரியும் மற்றவர்கள் அங்குள்ள வெள்ளிப் பனிமலையின் பேரழகைக் கண்டு அதனையே சிவபெருமானாக பாவனை செய்து தரிசித்து திரும்ப வேண்டியதுதான்.

சிவனடியார்கள் இந்த கயிலாயத்திற்கு யாத்திரை மேற்கொள்ளும் வழக்கம் நெடுங்காலமாகவே இருந்து வருகிறது. அன்பர்கள் உறைபனியையும், கடுங்குளிரையும் பொருட் படுத்தாது பசி, தாகம் ஆகியவற்றைத் துறந்து இப்புனிதப் பயணத்தை மேற்கொள்கின்றனர். இந்தப் பனிமால் வரையைக் கண்களால் கண்டு பேரின்பமடைவது வாழ்க்கையில் கிடைத்தற்கரிய அருமையான பேறுகளில் ஒன்றாகும்.

இன்று நாம் பனிமலையின் வடிவாக இந்தக்கயிலைமலையை தரிசித்து வணங்கினாலும் அங்குள்ள இயல்பான வடிவத்தைக் கண்டுகளித்த ஞானிகளும், முனிவர்களும் அங்குள்ள அழகிய காட்சிகளை மற்றவர்கள் உணரும் வண்ணம் விளக்கியுள்ளதைப் பலவேறு புராணங்களால் அறிய முடிகிறது. இந்த வகையில் கயிலை மலையின் சிறப்பையும் அழகையும் சிவமகாபுராணம், ஸ்காந்தம் முதலான பழம் பெரும் புராணங்களாலும் சிவரகசியம் முதலான நூல்களாலும் அறிந்து கொள்ள முடிகிறது.

இந்த மலரில் கயிலைமலையின் தனிச் சிறப்பை புராணங்கள் கூறுவதன் மூலமாகவும் அதற்கு இணையான தென்னிந்திய திருத் தலங்களைப் பற்றியும் கயிலை மலையோடு தொடர்புடைய அடியார்கள் அவருடைய வரலாறு சிற்பங்கள் ஓவியங்கள் ஆகியவற்றையும் கண்டு மகிழலாம்.


❋❋❋

சிவரகசியம் காட்டும் கயிலைமலை

இப்போது நாம் இமயமலைச்சாரலில் காணும் ஸ்ரீகயிலாயம் பனிபடர்ந்த மலையாக உள்ளது. ஆனால் இங்கு அருவ வடிவில் 'சிவராஜதானி' விளங்குகின்றது. இங்கு எண்ணிலாத தேவர்களும், முனிவர்களும், சிவபெருமானைப் போற்றி பணிந்து கொண்டிருக்கின்றனர். சிவபெருமான் தானே அருள் செய்து அங்குள்ள காட்சிகளை நமக்குக் காட்டினாலன்றி நம்மால் காணஇயலாது என்றாலும் முன் செய்த புண்ணியத்தின் பயனாக இப்பனிமலையை மட்டுமாவது காணும் பேறாவது கிட்டுகிறது. இனி சிவரகஸ்யத்துள் சொல்லப் பட்டுள்ளதும் அருவ வடிவாக விளங்குவதுமான சிவராஜதானியைச் சற்று காண்போம்.

இமய பர்வதத்தின் பின் பகுதியில் கயிலாயம் உள்ளது. அதில் குபேரன் அளவற்ற செல்வங்களோடு யக்ஷராஜனாக விளங்குகின்றான். இம்மலைச்சாரலில் உள்ள ஒரு குளத்தில் இருந்த மந்தாகினி என்ற ஆறு உற்பத்தியாகிறது. அதன் கரையில் சந்தன மரக்காடுகள் வளர்ந்துள்ளன. அதனையொட்டி சுவேலம், சந்திரப்பிரபை எனும் மலைகள் உள்ளன. அவற்றின் அருகில் அச்சோதை எனும் குளமும் அதில் இருந்து பிறந்து ஓடும் அச்சோதை எனும் நதியையும் காணலாம். இவ்வாற்றின் கரைநெடுக சைத்ரரதம் எனும் வனங்கள் உள்ளன. இங்குள்ள சந்திரப்பிரபை எனும் மலையில் மாணிபத்திரன் எனும் யக்ஷசேனாதிபதி தன் பரிவாரங்களுடன் விளங்குகின்றான்.

அதனையடுத்து சபலபர்வதம் எனும் பெருமலையும் இம்மலைக்கு அருகில் சூர்யப்பிரபை எனும் பெரிய வனம் உள்ளதையும் காண்கிறோம். அதன் நடுவில் லோகிதம் எனும் குளம் அமைந் துள்ளது. அதிலிருந்து லௌகித்யநதி பிறந்து ஓடுகின்றது. இதன் கரையில் தேவவனம் உள்ளது. இந்த வனத்தில் மாணிதரன் எனும் யக்ஷன் இயக்கர்களுடன் வசிக்கின்றான்.



ஸ்ரீகயிலாயம் தெற்கு முக தரிசனம்

கயிலாயத்திற்கு மேற்கில் குருமந்தம் என்கின்ற பர்வதம் உண்டு. அதன் அருகில் உள்ள சரோவத்தில் இருந்து சரயுநதி உற்பத்தியாகின்றது. அதன் கரையில் உள்ள வைபிராஞ்சம் எனும் வனத்தில் குபேரன் வசிக்கின்றான். இதன் அருகிலேயே பிரகேதியின் குமாரனான பிரம்மதானன் வசிக்கின்றான்.

அதற்கு அருகில் அருணம், முசவந்தம் ஆகிய மலைகளும் அதன் அருகில் சைலோத்த தடாகமும் அதிலிருந்து பெருகிவரும் சைலோநதியும் உள்ளன.

இனி கயிலாயத்திற்கு வடக்கில் உள்ள கௌரபர்வதத்தையும் அதில் உள்ள காஞ்சனவாலுகம் எனும் பூந்தடாகத்தையும் காணலாம். இந்த தடாகம் அபிந்துசரோவரம எனப்படும். இதன் கரையில் தான் பகீரதன் அனேக காலம் தவம்செய்து கங்கையை வரவழைத்தான். அவள் ஏழு நதிகளாகப் பிரவகித்தாள். இவை ஏழும் நளினி, அலாதனி, பிலாவனி, சீதா, சட்சு, சிந்து, பாகீரதி எனும் கங்கைளாகும்.

இவற்றையடுத்து வஸ்வோகசாரம் எனும் நதியையும் அதன் கரையில் சுரபிவனத்தையும் அதில் குபேரனின் தோழனான இரண்ய சிருங்கன் பிரம்ம ராட்சசர்களோடு வசிக்குமிடத்தையும் காணலாம்.

அடுத்துள்ள ஹேம கூட பர்வதத்தின் மீது சர்பசரஸ் எனும் நாகக்குளம் உள்ளது. இதிலிருந்து சரஸ்வதி நதி பெருகி ஓடுகின்றது. இதன் அருகில் உள்ள நிஷதபர்வதத்தில் உள்ள விஷ்ணு பதத்தில் இருந்து சரசிநதியும் அதன் கிளை நதிகளான காந்தாரி, குலயுநதிகளும் பெருகி ஓடுகின்றன.

இனி மேருவின் பக்கத்தில் உள்ள சந்திரப்பிரபை எனும் குளத்தையும் அதிலிருந்து உற்பத்தியாகும் ஜாம்பு நதியைக் காணலாம். அந்த

இடத்தில் புண்டரீகபயோதம் என்ற குளம் உள்ளது. அதில் மேகங்கள் உண்டாகின்றன.

இமயமலைக்கு வடக்கில் மானசமடு உள்ளது. அதிலிருந்து அமுதகாந்தை உண்டாயிற்று. பின்னும் குருதேசம், வைஜயம் எனும் 2 மடுக்கள் உள்ளன. இவற்றில் இருந்து சாந்தி, சந்தியை எனும் இரண்டு நதிகள் உற்பத்தியாகின்றன. இங்கு கிம்புருஷம் முதலான எட்டு வருஷங்கள் மழைபொழியாது. அப்போது இங்குள்ள நதிகளே மிகுந்த பயன்தரும்.

அதனையடுத்து பெரிய கடல் உண்டு. இதனுள் ருஷப, மைநாக, பாலம், வச்சிர சந்திர காந்த, துரோண, சக்கிர, சுமந்து, உதிசர, நாரத, ஜிமூதே, திராவண் ஆகிய மலைகள் மூழ்கியுள்ளன. இங்குள்ள வஜ்ர, மைநாக எனும் பர்வதங்களுக்கு இடையில் சம்வர்த்தகம் எனப்படும் அக்கினி மலை உள்ளது. அது கடல் எல்லாவற்றையும் குடித்துவிடும் ஆற்றல் உடையது.

அதற்கும் வடக்கே தேவர்களின் இருப்பிடமான மகாமேருமலை உள்ளது. இது கீழே பதினாறு கிளைகளாகவும் மேலே முப்பத்தியிரண்டு கிளைகளாகவும் உள்ளது. இது மகாகயிலாயத்திற்கு முன்பு மிகச்சிறியதேயாகும்.

இனி இவற்றின் மையத்தில் பலகடல்கள் மதில்கள், வீதிகள் சூழ அமைந்துள்ள மகா-கயிலாயத்தைக் காணலாம்.

கயிலாயம் அடிமுதல் சிகரமீறக லட்சம் யோசனை உயரம் உடையது. அதனுள் ஏழு மலைகளும், நூறு பிரகாரங்களுடன் கூடிய கோபுரங்களும் உள்ளன. இந்தப் பிராகாரங்களுக்கு இடையில் சமுத்திரங்களோடு கூடிய ஏழு தீவுகள் உள்ளன. இம்மலை ஒருகோடி யோசனை அளவு வெள்ளியால் செய்த மலையாக ஜொலிக்கின்றது. இம்மலையைச் சுற்றி குமுதம், பாரியாத்தம், மைநாகம், தற்சரம், மலையம், விந்தம், உதயம், சுஸ்தம், முஞ்சம், நீலம், தட்சண கயிலாயம், இமவான் ஆகிய பன்னிரண்டு மலைகள் உள்ளன. இவற்றில் தேவர்கள் வசிக்கின்றனர்.

இதனைச் சூழ்ந்து பாற்கடல் முதலான அனேக கடல்கள் உள்ளன. இங்குள்ள பாற்கடலில் உள்ள த்வீபத்தில் திரிமூர்த்திகளும் நன்னீர் கடலில் த்வீபத்தில் பிரதமகணங்களும் வசிக்கின்றனர்.


அதனைக் கடந்தால் ரத்தினங்கள் இழைத்த பிராகாரம் உள்ளது. இங்கு பத்மராகத்தால் ஆன மலைகள் உள்ளன. அதனையடுத்து சந்திரகாந்த மணிகளால் ஆன மதிலும், அதனையடுத்து வஜ்ஜிரமலையும் அதனையொட்டி இந்திர மணிமலையும், அதனையடுத்து பவளமலையும், அதனையடுத்து கோமேதகம் இழைத்த மதிலும் அதனுள் குருவிந்தமணிமலையும், அதனையடுத்து புஷ்பராகம் இழைத்த பிரகாரமும் முத்துமலையும், அதற்கப்பால் நவரத்தின மலையும் உள்ளன. இந்த நவரத்ன மலையின் மீது எண்ணிலாத ஆலயங்களில் சிவலிங்கம் எழுந்தருளி வைக்கப்பட்டு தேவர்களால் வணங்கப்பட்டு வருகின்றது. இதன் மையப்பகுதியில் தேவர்கள் அனைவரும் கூடி வணங்கிப்போற்றும் மகாலிங்கம் உள்ளது.

இந்த ஆலயத்தின் வடக்கில் அமைந்துள்ள ஒரு ரத்தின மண்டபத்தில் ஐந்து முகலிங்கம் ஒன்றுள்ளது. இதன் ஐந்து முகங்களின் மேல் விளங்கும் ஜடாபாரங்களில் இருந்து ஐந்து கங்கைகள் பெருகி சிவஅமுதசாகரம் எனும் கடலில் கலக்கின்றன. இவை முறையே (கிழக்குமுகத்தில் இருந்து) ரத்தினகங்கை, (மேற்குமுகத்தில் இருந்து) தேவகங்கை, (வடக்குமுகத்தில் இருந்து) கயிலாய கங்கை (தெற்கில் இருந்து) உக்கிரகங்கை (நடுவில் இருந்து) பிரம்ம கங்கை என அழைக்கப்படுகின்றன.

இந்த பஞ்சகங்கைக் கரையில் உள்ள பிராணவாகார மகாமண்டபத்தின் நடுவில் உள்ள ரத்தின மயமான சிம்மாசனத்தில் பார்வதி தேவியுடன் சிவமூர்த்தி எழுந்தருளியுள்ளார்.

மேற்சொன்ன மலைப்பிராகாரங்களில் கணங்கள் வசிக்கின்றனர். கிழக்கு வாயிலில் நீலரத்னத்தால் ஆகிய கோபுரமும், அங்கு நந்தீசுவர ஆலயமும் உள்ளது. இங்குள்ள இந்திர நீல ரத்தினமயமான லிங்கத்தை நந்தீசுவரரும் நந்தி கணங்களும் பூஜை செய்கின்றனர். இதனையொட்டி ஹேமகூடம், நிஷதம் என்ற இரண்டு மலைகள் உள்ளன.

அடுத்து அக்கினி திக்கில் சுகேசேச்சுவரர் எனும் சிவலிங்க மூர்த்தியை சுகேசன் என்னும் கண



ஸ்ரீகயிலாசம் கிழக்கு முக தரிசனம்

நாயகன் பூசை செய்து கொண்டிருக்கின்றான். அதற்குத் தெற்கில் நீலம், மந்தரம் எனும் இரண்டு மலைகள் உள்ளன. இங்குள்ள பெரிய ஆலயத்தில் எழுந்தருளியுள்ள சண்டீசுவர லிங்கத்தை சண்டேசுவரர் பூஜை செய்கின்றார். இதுபோன்றே நிருதிதிக்கில் பாணசூரன் பாணலிங்கத்தை பூசிக்கிறார். மேற்கில் அஸ்தாத்திரி, பாரியாத்திரி எனும் மலைகள் உள்ளன. இங்கு உள்ள விமானத்தில் பிருங்கீசுவர லிங்கத்தை எழுந்தருளிவைத்து பிருங்கீசர் வணங்குகின்றார். இதுபோலவே வாயுதிக்கில் ரூடீசுவரர் எனும் லிங்கத்தை வணங்கிக் கொண்டு ரூடீ என்பவன் எழுந்தருளியுள்ளான். வடக்குப்பிரகாரத்தில் துந்துபி, மந்தரம், ரைவதம் எனும் மூன்று மலைகள் உள்ளன. இங்குள்ள விமானத்தில் எழுந்தருளியுள்ள காலருத்ரரை வணங்கிக் கொண்டு காலாக்னி ருத்திரர் வீற்றிருக்கின்றார்.

வடகிழக்கு முனையில் உள்ள பெரிய ஆலயத்தில் வீரபத்ரலிங்கத்தை வணங்கிக் கொண்டு நீலருத்திரர் உள்ளார். அதனையடுத்து மகேசர் ஆலயம் உள்ளது. அதன் கிழக்கில் உள்ள பாற்கடல் மத்தியில் உள்ள தத்புருஷலிங்கத்தை பூசித்துக் கொண்டு தத்புருஷரும், தெற்கில் உப்புக்கடல் மத்தியில் உள்ள இரும்புக்கோட்டையில் உள்ள அகோர லிங்கத்தைப் பூசித்துக்கொண்டு அகோரரும், மேற்கில் தயிர்க்கடல் மத்தியில்உள்ள புஷ்பராகத் கோட்டையில் உள்ள சத்யோசாத லிங்கத்தை சத்யோசாதரும், வடக்கில் நெய்க்கடல் மத்தியிலுள்ள கோமேதக மணிக்கோட்டையில் உள்ள வாமதேவலிங்கத்தை பூசித்துக்கொண்டு வாமதேவரும், கயிலாயத்திற்கு மேலே ஸ்படிக மயமான கோட்டையில் உள்ள வஜ்ரமணியாலான ஈசான லிங்கத்தை ஈசானரும் பூசித்துக் கொண்டிருப்பார்கள்.

இவ்வாறு எண்ணிலாதவர்கள் சிவ பெருமானை வணங்கியபடி எழுந்தருளியுள்ளனர். இத்தகைய அதிசய காட்சிகளுடன் கயிலாயம் சிறப்புடன் விளங்குகிறது.

***

தட்சண கயிலாசங்கள்

வடக்கில் உள்ள கயிலைமலைக்கு இணையான சிறப்புமிக்கத் சிவத்தலங்கள் தென்நாட்டில் பல உள்ளன இவற்றைத் தட்சணகயிலாயங்கள் என அழைக்கிறோம். இனி இத்தலங்கள் தோன்றிச் சிறப்புப் பெற்ற நிலையைக் காணலாம்.

பூவுலகில் சிவபெருமான் இமயமலைச் சாரலில் உள்ள ஸ்ரீகயிலைமலையில் திருவோலக்கம் கொண்டருளியுள்ளார். இங்கு இறைவன் வெண்பனி மலையாகிய லிங்கவடிவில் காட்சியளிக்கின்றான். இங்கு அவன் இருந்தாலும் அவனுடைய அரசாட்சியின் பரப்பு தென்னகமேயாகும். அதனால்தான் அவரை அடியவர்கள் 'தென்னாடுடைய சிவனே' போற்றி என்று போற்றிப் பரவுகின்றனர்.

சிவபெருமான் தென்னாட்டில் கயிலைக்கு இணையாக சிறப்புடன் கொலுவீற்றிருக்கும் தலங்களையும் கயிலாயம் என்றே அழைக்கிறோம். வடக்கே ஒரு கயிலாயம் இருப்பதால் அதனின்று இவற்றை வேறுபடுத்திக்காட்ட 'தென்' என்ற அடைமொழி சேர்த்து இவற்றைத் தென்கயிலாயம் அல்லது தட்சணகயிலாயம் என்றழைக்கின்றனர்.

இத்தகைய தென்கயிலாயங்கள் உண்டானதற்கான காரணங்களைப் பலவகையாகப் புராணங்கள் கூறுகின்றன. அவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்.




★ காளத்திநாதர் - காளாஸ்திரி

முதலாவது வகையில் வழங்கும் கதையாவது.

1. ஒரு சமயம் வாயுதேவனுக்கும், ஆதிசேடனுக்கும் இடையில் தங்களில் யார் பெரியவர் என்ற சர்ச்சை எழுந்தது. அதனை யாராலும் தீர்க்க முடியவில்லை. இறுதியில் ஆதிசேடன் கயிலாயமலையைத் தன் ஆயிரம் பணாமுடிகளாலும் மூடிக்கொண்டு அதனைத் தன் உடலால் சுற்றி வளைத்துப் பற்றிக் கொள்ளவேண்டும். வாயுதேவன் எவ்வாறாவது அம்மலையை ஆதிசேடனிடமிருந்து விடுபடச் செய்யவேண்டும். இப்போட்டியில் யார் வெல்கிறார்களோ? அவர்களே பெரியவர் என்று தீர்மானிக்கலாம் என்று அனைவரும் கூறினார்.

அதன்படியே ஆதிசேடன் தன் ஆயிரம் பணாமுடிகளாலும், நீண்ட வலிய உடலாலும் கயிலைமலையைப் பற்றிப் போர்த்தி மூடிக்-கொண்டான். இதனால் கயிலைமலையே தெரியவில்லை. வாயுதேவன் பலமுறை முயன்றும் அவனால் மலையைப் பார்க்கக் கூடமுடியவில்லை. இப்படி ஓராயிரம் ஆண்டுகள் ஆயின. வாயுபகவான் பலமாகக் காற்றை வீசியும், அடக்கியும், ஆடியும் பார்த்து ஓய்ந்தான். அப்போது பல ஆண்டுகள் தன்னைத்தான் கட்டுண்டு கிடந்ததால் ஆதிசேடன் தன் உடலை நெளித்துக்கொள்ள தன் ஓரிரு தலைகளைத் தூக்கினான். அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி வாயுதேவன் கயிலைமலையின் மூன்று சிகரங்களைப் பெயர்த்தெடுத்து வீசினான். இவை தென்னாட்டில் வீழ்ந்து தனித்தனிமலைகளாயின. இவற்றையே நாம் தென்கயிலாயம் என்கிறோம். இந்தப் புராண வரலாற்றை ஸ்காந்தம் முதலிய பெரும் புராணங்களாலும் செவ்வந்திப்புராணம் ஸ்ரீதக்ஷிண கைலாசபுராணம் முதலிய தல புராணங்களாலும் அறியலாம்.

திருச்சி சிராமலை, ஸ்ரீகாளத்திமலை, இலங்கையில் உள்ள திரிகோணமலை ஆகிய மூன்றுமே இப்படி வீழ்ந்த கயிலைமலையின் சிகரங்களென்றும் இவைகளே தட்சிண கயிலாயமென வழங்கப்படுகிறதென்றும் கூறுவர்.



இவ்வாறு மலைகள் வீழ்ந்து தென்கயிலாயம் உற்பத்தியான நாள் வசந்தகாலம், சித்திரைமாதம், வளர்பிறை, ஞாயிற்றுக்கிழமை, அஸ்தநட்சத்திரம், விருத்தியோகம், தைதுலகரணம், பௌர்ணமி தினம், குருஓரை, சனி மகரராசியில் பிரவேசித்த நிலை, ரிஷபலக்ன சுபமுகூர்த்தவேளை என்று ஸ்ரீதட்சண கைலாச புராணம் எனும் திரிகோணமலைப் புராணம் கூறுகிறது.

2. இரண்டாவது வகையில் அகத்திய முனிவருக்கு உமாதேவியாரும் சிவபெருமானும் இமயமலைச்சாரலில் நடைபெற்ற தங்களுடைய திருமணக் கோலத்தைத் தென்னிந்தியாவில் காட்டிய திருத்தலங்கள் யாவும் தென்கயிலாயங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த வகையில் பிரான்மலை, திருமறைக்காடு, திருவேற்காடு முதலான தலங்கள் தட்சண கயிலாயங்கள் என்று அழைக்கப் படுகின்றன.

3. மூன்றாவது வகையில் பெருமன்னர்கள் தாங்கள் சிவபெருமானுக்கென கட்டிய கோயில்கள் வடிவாலும், வனப்பாலும் கயிலைக்கு இணையாக உள்ளன என்ற பொருளில் இருந்ததால் அவற்றிற்குக் கயிலாயங்கள் எனப்பெயரிட்டனர். எடுத்துக் காட்டாக காஞ்சிக்கயிலாயம், திருவெரும்பூர் தென் கயிலாயம் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறு பல காரணங்களை அடிப் படையாகக் கொண்டு தட்சணகயிலாயங்கள் தோன்றியுள்ளதை அறியமுடிகிறது. ❋

கயிலாயச் சக்கரவர்த்தி

நமக்கு கயிலை மன்னன் என்றதும் நினைவுக்கு வருபவர் சிவபெருமானேயாவார். ஆனால் இப்போது சொல்லப்போகும் கயிலை மன்னன் வேறொருவராவார். இவர் சிவபெருமானின் மனத்தில் இருந்து அவர் தியானிக்கும்போது உற்பத்தியானார். பத்து யுகங்கள் கடுந்தவம் புரிந்து சிவபெருமானிடம் மலைகளின் அரசனாகும் வரத்தைப் பெற்றவர். அதனால் கிரீந்திர சக்ரவர்த்தி என்றழைக்கப்பட்டார். பிறகு பெரிய மலையுருக் கொண்டு 'கயிலாசபர்வதம்' எனப்பெயர் பெற்றார். தன்மீது சிவபெருமானும் அவருடைய கணங்களும் என்றும் நீங்காது மகிழ்ச்சியுடன் எழுந்தருளியிருக்க வேண்டும் என்ற வரத்தைப் பெற்றார். அதுமுதல் கயிலாய பர்வதம் சிவபெருமானின் இருப்பிடமாயிற்று. சிவகணங்கள் எண்ணிலடங்காத சிவலிங்க மூர்த்திகளை இம்மலைமீது அமைத்து வழிபாடு செய்து வருகின்றனர்.


ஒருசமயம் இம்மலை மன்னனுக்கு சிவமூர்த்தியைத் தாங்கும்பேறு நமக்கு மட்டுமே உள்ளது. இதனால் நம்மை விட உயர்ந்தவர் எவருமில்லை என்ற எண்ணமும் அதன் பயனாய் கர்வமும் உண்டாயிற்று. இதனை உணர்ந்த சிவபெருமான் இராவணன் கயிலையைத் தூக்கியபோது கால்விரலால் ஊன்ற அவனுடன் சேர்ந்து இம்மலையரசனும் துன்புற்றான். அப்போதுதான் அவனுக்குத் தான் சிவபெருமானின் கட்டைவிரல் அழுத்தத்தைக் கூட தாங்கமாட்டோம். பெருமானின் பரமகருணையின் காரணமாகவே அவர்தன்மீது எழுந்தருள்கின்றார் என்ற எண்ணம் உண்டாயிற்று. அதனால் அவனுடைய கர்வம் மறைந்தது. அவன் முன்னிலும் பரம பக்தனானான்.

பஞ்ச, சப்த, அஷ்ட, நவ கயிலாசங்கள்

முன்னே குறித்த தட்சண கயிலாய புராணக்கதைகள் மூலம் திருச்சி, ஸ்ரீகாளத்தி, திரிகோணமலை ஆகிய மூன்று தென் கயிலாயங்களைக் கண்டோம். இவை த்ரைகயிலாசம் எனப்படும். இனி மற்ற புராணங்களின் அடிப்படையில் அமைந்த பஞ்ச, சப்த, நவ கயிலாசங்ளைப் பற்றிய விவரங்ளைக் காணலாம்.

பஞ்ச கயிலாயங்கள்

காஞ்சீபுரத்திலுள்ள கயிலாய நாதர் கோயிலை மையமாகக் கொண்டு நான்கு திக்கிலும் நான்கு கயிலாய நாதர் கோயில்கள் அமைந்துள்ளன என்பர். இவை ஐந்தும் பஞ்சகயிலாயங்கள் என்றழைக்கப்படும். இவை காஞ்சி, ஐயங்கார்குளம், கீழ்க்கதிர்ப்பூர், ஏகாட்டூர், ஐயன்பேட்டை ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. இவற்றில் முதலாவதான ஐயங்கார் குளத்து கயிலாசநாதர் கோயில் காஞ்சீபுரத்திற்கு தெற்கே செல்லும் வந்தவாசி சாலையில் உள்ள அப்துல்லாபுரம் என்னும் ஊரில் இருந்த அடுத்த ஊரான ஐயங்கார்பாளையம் செல்லும் வழியில் அமைந்துள்ளது. இதன் அருகில் கயிலாசதீர்த்தம் என்னும் சிறுகுளம் உள்ளது. ஐந்தாவதான கருக்குப்பேட்டையில் அமைந்த கயிலாயநாதர் கோயில் வாலாஜாபாத் காஞ்சீபுரம் சாலையில் உள்ள கருக்குப்பேட்டையில் சாலை ஓரத்தில் அமைந்துள்ளது.



சப்த கயிலாயங்கள்

ஒருமுறை பார்வதி தேவியார் காஞ்சீபுரத்தில் சிவபூஜை செய்துவிட்டு திருவண்ணாமலைக்குப் பயணம் மேற்கொண்டார். அவ்வாறு செல்லும்போது இளைப்பார வழியில் ஒரு இடத்தில் அவர் தங்கினார். அப்போது உச்சிவேளைப் பூசைக்கான நேரமாக இருந்தது. அந்த இடத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை தண்ணீரே இல்லை. எனவே முருகப் பெருமானிடம் பூசைக்கு வேண்டிய தண்ணீர் கொண்டுவருமாறு கூறினார். தாயின் சொற்படியே முருகன் தன் கையில் உள்ள வேலாயுதத்தை மேற்கு நோக்கி வீசித் தண்ணீரைக் கொண்டு வரும்படி அதற்கு ஆணையிட்டார். அந்த வேல் ஏழு மலைகளைத் துளைத்துச் சென்று ஜவ்வாது மலைத் தொடரில் குத்தி நின்றது. அங்கிருந்து ஒரு நீர்த்தாரை பெருகி வேல்துளைத்துச் சென்ற வழியிலேயே ஒரு ஆறாகப் பெருகி ஓடிவந்தது. அந்த ஆறு சிவப்பு நிறமாக இருந்தது. பார்வதி தேவியார் முருகனை நோக்கி மகனே 'உனது வேல் ஏழுமலைகளைத் துளைத்துச் சென்றபோது அதில் தவம் செய்து கொண்டிருந்த ஏழு முனிவர்களை அழித்துவிட்டது. உனதுவேல் தொட்ட காரணத்தால் அவர்கள் உடனே மோட்சம் அடைந்து விட்டார்கள். ஆனால் உனக்கு அவர்களைக் கொன்றபாவம் வந்து சூழ்ந்துவிட்டது. அவற்றைப்போக்க நீ இந்த ஆற்றின் கரையில் ஏழு இடங்களில் ஏழு சிவலிங்கங்களை அமைத்து சிவபூசை செய்து வருவாய் என்றார். அதன்படியே முருகன், காஞ்சி, கடலாடி, மாம்பாக்கம், மகாதேவமங்கலம், எலத்தூர், பூண்டி, விண்ணுலாம்பட்டு ஆகிய இடங்களில் சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்தார். அந்த லிங்கங்கள் இந்நாளில் கரைகண்டேஸ்வர லிங்கங்கள் என

அழைக்கப்படுகின்றன. இந்த ஏழு சிவாலயங்களையும் சப்தகரைகண்ட க்ஷேத்திரங்கள் என அழைப்பர். அதே சமயம் வேல்பட்டு மோட்சம் சென்ற முனிவர்கள் முருகப்பெருமானின் சிவபூசையைக் கண்டு வணங்கிய பின், அவருக்கு நன்மையுண்டாக வேண்டுமென்று அதே ஆற்றங்கரை கரைகண்ட க்ஷேத்திரங்கள் அமைந்ததற்கு எதிர்க்கரையில் ஏழு சிவலிங்கங்களை அமைத்து வழிபாடு செய்தனர். இவை ஏழும் சப்த கயிலாயங்கள் என்றழைக்கப்படுகின்றன. இவை முறையே வாசுதேவன்பட்டு, அருகாரிமங்கலம், தாமரைப்பாக்கம், கயிலாயம், நார்த்தாம்பூண்டி, பில்லூர், ஆனைவாடி என்பனவாகும். (ஆனால் இப்போது இவற்றின் பெயர்கள் பல மாறியுள்ளன).

சேயாகிய குமரனால் உண்டாக்கப்பட்டதால் அந்த ஆறு 'சேயாறு' என்று பெயர் பெற்றது. இது சம்புவராயர் மாவட்டத்திலுள்ள செங்கத்திற்கு மேற்கில் உள்ள ஜவ்வாது மலைத்தொடரில் உற்பத்தியாகி செங்கம் வட்டத்தில் ஓடி வாழைப்பந்தல், சேயாறு, பெருநகர் முதலிய இடங்கள் வழியே பாய்ந்து இறுதியில் காஞ்சிபுரத்திற்கு கிழக்கில் உள்ள திருமுக்கூடல் எனும் ஊரில் பாலாற்றுடன் கலந்து விடுகின்றது.

அஷ்டகயிலாசங்கள்

முன்சொன்ன காஞ்சியில் உள்ள பஞ்சகயிலாச திருத்தலங்களுடன் அருகில் உள்ள செவிலிமேடு, பெருங்கட்டூர், தென்கழனி முதலிய மூன்று ஊர்களில் உள்ள கயிலாசநாதர் கோயில்களை சேர்த்து அஷ்டகயிலாசம் என வழங்குதல் மரபு.

நவகயிலாயங்கள்

பாண்டிய நாட்டில் ஒன்பது கயிலாயத்தலங்கள் உள்ளன. இவற்றை ஒன்றாக இணைத்து நவகயிலாயம் என வழங்குவர். இவை முறையே 1. ஸ்ரீவைகுண்டம் 2. தென் திருப்பேரை 3. முறப்பநாடு 4. சேந்த மங்கலம் 5. ராஜபதி (இதன் இப்போதைய பெயர் தெரியவில்லை) 6. பாபநாசம் 7. சேரன்மாதேவி 8. கோடகநல்லூர் 9. குன்னத்தூர் என்பனவாகும்.

சிலர் இவ்வரிசையில் பின்னால் உள்ள ஐந்து தலங்களை விலக்கிவிட்டு அதற்குப் பதிலாக 5. பிரமதேசம் 6. அரியநாயகிபுரம் 7. சிந்துபூந்துறை 8. கீழ்நத்தம் 9. கங்கைகொண்டான் ஆகியவற்றைக் கூறுவர்.

எது எப்படியாயினும் பாண்டியநாட்டில் ஒன்பது கயிலாயங்களை வணங்கும் மரபு நெடுங்காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருவதை உணரமுடிகிறது. ❋❋❋



மெய்கண்ட சிவம்

'திருக்கயிலாய பரம்பரை'

திருக்கயிலாயத்தில் வீற்றிருந்தருளும் பரமசிவன் நந்தியம் பெருமானுக்குச் சிவாகம சாரமாகிய 'சிவஞானத்தை' அருளிச்செய்தார். அவர் வழியாக சனந்தனருக்கும் அவர் மூலம் சத்தியஞான தரிசிகளுக்கும் அவர் மூலம் பரஞ்சோதி முனிவருக்கும் இந்த மெய்ஞானம் அருளப்பட்டது. பின்னர் இத்தத்துவத்தை அவர் பூமியில் மெய்கண்டதேவருக்கும் அருளிச் செய்தார். அவர் வழியாக பரம்பரை பரம்பரையாக இந்த ஞானம் உபதேசிக்கப் படுகிறது. இவ்வழியில் திருக்கயிலாய ஞானபரம்பரை தோன்றி செயல்பட்டு வருகின்றது. இவ்வகையில் முதலில் தோன்றிய ஆதீனம் திருவாவடுதுறை ஆதீனமாகும். அதனைத் தொடர்ந்து தருமையாதீனம் தோன்றி வளர்ந்தது. இம்மரபினர் திருக்கயிலாய ஞான பரம்பரையினர் என்று அழைக்கப்படுகின்றனர்.

வெள்ளியங்கிரி

கயிலாயமலை வெள்ளியை வார்த்து விட்டது போன்று வெண்மையாகக் காட்சி யளிக்கின்றது. வெள்ளிப் பனிப் படர்ந்து அதைனை மூடியுள்ளது. இதனால் அதற்கு 'வெள்ளியங்கிரி' என்பது பெயராயிற்று.

இதனை நினைவு கூறும் வகையில் கோவை மாவட்டத்தில் உள்ள பூண்டியை ஒட்டி அமைந்த ஒரு மலைக்கு வெள்ளியங்கிரி என்று பெயர் சூட்டியுள்ளனர். இதன்மீது ஏறிச்செல்வது கடினம் என்றாலும் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இம்மலையின் மீது புனிதப் பயணம் மேற்கொண்டு இறைவனை வணங்கி வருகின்றனர். இம்மலையில் எழுந்தருளியுள்ள இறைவன் வெள்ளியங்கிரி ஆண்டவன் என்று அழைக்கப்படுகிறார். எனவே

கொங்கு நாட்டில் அன்பர்கள் பலரும் வெள்ளியங்கிரி எனும் பெயரைச் சூட்டிக் கொள்கின்றனர்.

இம்மலை மீது பயணம் மேற்கொள்வோர் (கயிலயங்கிரிக்கு பயணம் மேற்கொள்வோர் கூறான இரும்புத்தடியை எடுததுச் செல்வது போன்று) ஒரு மூங்கில் தடியை தன்னுடன் எடுத்துச் சென்று திரும்புகின்றனர். பின்னர் அதனைப் பூசையில் வைத்துக் கொள்கின்றனர். இந்தத்தடியைக் கொண்டு நீவினால் உடலில் தோன்றும் சுளுக்கு, பிடிப்பு முதலியவை குணமாகும் என்ற நம்பிக்கை நிலவுகிறது.

இது கொங்கு நாட்டில் காமதேனு பூசித்த முப்பத்தியிரண்டு திருத்தலங்களுள் முதன்மைத் தலமாகும். இம்மலை மீது ஏராளமான மூலிகைச் செடிகள் உள்ளன. பலவகையான அபூர்வமரங்களும் உள்ளன. அடர்ந்த காட்டுப் பகுதியும் ஏராளமான சுனைகளும் உள்ளன. பாண்டவர்களோடு தொடர்புடைய அனேக இடங்கள் இங்குள்ளன. உச்சியில் மூன்று சிவலிங்கங்கள் உள்ளன.

பலவேறு கயிலை மலைகள்

பொதுவாக நாம் இமயமலைச் சாரலில் உள்ள வெண்பனி மலையையே ஸ்ரீகயிலாயம் என்கிறோம். இதனைத்தூக்கியே ராவணன் படாதபாடுபட்டான். இதன் மீது சூட்சும வடிவில் பெருமானும் தேவர்களும் உறைந்து அருள் பாலிக்கின்றனர்.

இது தவிர மந்திர மலையில் உள்ள மந்திர கைலாசம், மேருமலைச்சாரலில் உள்ள மேரு கயிலாயம் எனப் பல கயிலாயங்கள் உள்ளன.



இவை பிரகிருதிக் (உலகியல்) கயிலாசங்கள் எனப்படும். இதற்கும் மேலே அப்பிரகிருதிக் கயிலாயம் உள்ளது. இதுவே சிவலோகம் எனப்படும். இதுவும் இதன் மேலுள்ள தலங்கள் யாவும் சிவபெருமானுக்கு உரியனவாகும். சிவபக்தர்கள் இதனை அடைந்து சுகமாக வாழ்கின்றனர்.

இவற்றை நோக்க சிவபெருமான் எங்கு எழுந்தருள்கின்றாறோ அதுவே கயிலாயமாகும் என்பதை அறிய முடிகிறது.

கையிலை நாதர்

மேருமலையும்-கயிலைமலையும்

சமய இலக்கியங்களில் மலைகளில் தலைசிறந்ததாகக் கயிலைமலை போற்றப்பட்டு வருகின்றது என்றாலும் சில புராணங்களின்படி அதனினும் பெரிய மலையாக விளங்குவது மேருமலையாகும். கயிலை மலையானது பனி மயமானது, வெள்ளி மயமானதென்றால் மேருமலை பொன்மயமாக விளங்குகின்றது. இதுவும் சிவபெருமானுக்கு உரிய இடங்களில் ஒன்றாகும்.


இமயம், மேரு, கயிலாயம் ஆகியவை மூன்று தனித்தனி மலைகள் என்றாலும் சமய இலக்கியங்களில் இவற்றை ஒன்றெனவே கூறும் மரபு பல இடங்களில் காணப்படுகின்றது. உமாதேவி ஹிமயபர்வதத்தின் மகளாகப் பிறந்தபோது, பார்வதி என்றும் மேரு மலைக்குப் பிறந்தபோது கௌரி என்றும் அழைக்கப்பட்டாள்.

பெருமான் திரிபுரசம்ஹாரத்தின் போது மேருமலையை வில்லாக வளைத்தார் என்று புராணம் கூறும். ஆனால் சங்க இலக்கியமான கலித்தொகை சிவபெருமான் இமயமலையை வில்லாக வளைத்தார் என்பதை, 'இமயவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்' என்று கூறுவதால் அறியலாம். இதைநோக்க இமயம் மேரு என்பதெல்லாம் ஒரே மலையின் பலவேறு துணைப்பகுதிகள் என்பது புலனாகும்.

வெள்ளியங்கிரி விமானம்

சென்னையின் தென்பகுதியில் உள்ள திருவான்மியூரில் அமைந்துள்ள மருந்தீசர் ஆலயத்தில் திருவிழாவின் 12ஆம் நாளில் உலாவருவதற்கு வெள்ளியங்கிரி விமானம் என்ற விமானம் உள்ளது. இது தலைசிறந்த கலைப்படைப்பாகும். இதில் அடுக்கடுக்கான படிபோன்ற அமைப்புகளும் அதில் கண்கவர் பதுமைகளும் அமைந்துள்ளன. கந்தவர்கள், பிரமன், திருமால், அஷ்டதிக்பாலகர்கள், பிருங்கி, நாரதர், வசுக்கள், தும்புரு காமதேனு முதலிய திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மரத்தால் செய்து தங்க ரேக்குகளால் பூசி அமைக்கப்பட்ட சிறந்த கலைப் படைப்பாகும். இந்த மரசிற்பங்கள் மிகுந்த வனப்புடையவையாகும். ஐந்து அடுக்கு களில் நூற்றுக்கும் மேற்பட்ட சிற்பங்களால் அமைக்கப்பட்ட இந்த விமானம் வெள்ளிப்பனிமலையாகிய கயிலை மலையை நினைவூட்டுவதால் வெள்ளி யங்கிரி விமானம் என்றழைக் கப்படுகிறது

இதில் ஏராளமான ரசமணிகளும்,



✪ வெள்ளியங்கிரி விமானம், திருவான்மியூர்.
(படம் உதவி: S. சிகாமணி, தனம் லேசர், திருவான்மியூர்.)

கண்ணாடி விளக்கு டூம்களும் ரசகுண்டுகளும் கட்டி அலங்கரிப்பர். இதில் சுவாமியை வைத்து அலங்கரித்து உலாவருவது கயிலைமலையே அசைந்து வருவதுபோல இருக்கும்.

பொதுவாக கயிலைமலை வாகனம் என்பதில் இராவணன் உருவம் இடம் பெறவேண்டும் என்பதாலும், அப்படி அமைக்கும்போது ராவணன் உருவமே பெரும்பாலான இடத்தை அடைத்துக் கொண்டு மற்றைய உருவங்கள் முக்கியத்துவம் பெறாமல் போய்விடுவதாலும் இத்தகைய வாகனங்களை அமைத்தனர் என்பர். இதுவும் கயிலாய மலையைக் குறிப்பதென்றாலும் இதன் தனித்தன்மையைக் காட்ட இதனை 'வெள்ளியங்கிரி விமானம்' என அழைக்கின்றனர். இந்நாளில் இதனை இந்திரவிமானம் எனவும் அழைக்கின்றனர்.

இத்தகைய மற்றோர் விமானம் இவ்வூர் மீனவர் குடியிருப்புப் பகுதியில் உள்ள வேம்புலியம்மன் கோயிலில் உள்ளது.

ஸ்ரீகயிலாசமும் சமண, பௌத்த சமயங்களும்

இமயமலையின் மையத்தில் உள்ள ஸ்ரீகயிலாயத்தில் புத்தர் தமது 500 சீடர்களுடன் வசித்து வருவதாக பௌத்த நூல்கள் கூறுகின்றன. அவ்வகையில் இது பௌத்தர்களின் புனித மலையாக போற்றப் படுகின்றது. அவர்கள் இம்மலையை வலம் வருவதையும் விழாக்கள் கொண்டாடுதலையும் புனிதச் செயலாக எண்ணுகின்றனர். 108 முறை இம்மலையை வலம் வந்து மந்திரங்களை ஜெபித்த பின்னரே லாமாக்கள் எனும் பௌத்த துறவிகளுக்கு சிறப்பு கிடைக்கிறது. இம்மலையை பௌத்தர்கள் அடி மேல் அடி வைத்து வலம் வருகின்றனர். எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் ஒரு நமஸ்காரம் செய்கின்றனர்.

ஜைனர்களின் முதல் தீர்த்தங்கரரான ஸ்ரீஆதிநாதர் கயிலாசகிரியில் தான் வீடுபேறு பெற்றார் என்று ஜைன புராணங்கள் கூறுகின்றன. ஆனால் அவர்களிடத்தில் கயிலை மலையை பிறரைப் போல போற்றும் வழக்கம் காணப்படவில்லை. ஸ்ரீபுராணத்தில் சகர சக்கரவர்த்தி இம்மலையை அஷ்டாபதகிரி என அழைத்து இதன் மீது 24 தீர்த்தங்கரர் களுக்கும் அவர்களுடைய உயரம் வண்ணம் கொண்டதாக சிலைகளை அமைத்து அத்திருமேனிகளுக்கு ஆலயம் அமைத்தார் என்று கூறுகின்றது.

கயிலையே மயிலை

சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயிலில் "கயிலையே மயிலை" "மயிலையே கயிலை" என்ற வண்ண விளக்கு அலங்காரத்தைக் காணலாம். மயிலாப்பூரைக் கயிலாயமாகக் சொல்லும் மரபு நெடுங்காலமா இருந்து வருகின்றது.

இமயவல்லி

சிவ சயிலநாதனுக்கு மனைவியாகவும், பர்வதராசனுக்கு மகளாகவும் இருப்பதால் உமாதேவியாருக்கு சைலஜா, கிரிஜா, சைலபுத்திரி போன்ற பெயர்கள் அமைகின்றன.

பனிமலையின் புதல்வியாதலின் இவளைப் பனிமலைப்பாவை என்றும், ஹிமயமன்னனின் புதல்வியாதலின் இமயமடக்கொடி, இமயவல்லி எனவும் அழைக்கின்றனர்.

கைலாச சம்ஹிதை

சிவமகாபுராணத்தின் மூன்றாவது பகுதி கயிலாய சம்ஹிதை என்றழைக்கப்படுகின்றது. இதில் கயிலாய வர்ணனை சிறப்பாகப் பேசப்படுகின்றது. இதில் பரமேசுவரன் பார்வதி தேவிக்கு சிவமந்திர தீட்சை செய்து பிரணவப் பொருள் உண்மையை உரைத்த நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது. மேலும் பஞ்சாவரண பூஜை, பஞ்சாசன பூஜை, ஆச்சார்ய அபிஷேகம் ஆகியனவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

சிவசைலம்

கயிலாயமலைக்கு உரிய பெயர்களில் ஒன்று சிவசைலம் என்பதாகும். இதனை நினைவு கூறும் வகையில் தென் இந்தியாவில் சிவசயிலம் என்ற பெயரில் பல மலைகள் அமைந்துள்ளன.

இவற்றில் குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சிவசைலம் தனிச்சிறப்புடன் திகழ்கிறது. இங்குள்ள பெருமானின் திருநாமம் சிவசைலநாதர் என்பதாகும். அம்பிகை பரமகல்யாணி என்றழைக்கப்படுகின்றாள்.

இத்திருத்தலம் அம்பாசமுத்திரம்-செங்கோட்டை சாலையில் உள்ள ஆழ்வார்குறிச்சி எனும் ஊரில் இருந்து ஆறு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இத்தலத்தின் அருகில் வெள்ளி மலை என்ற மலையுள்ளது. (திருக்கயிலாயத்திற்கு வெள்ளிமலை என்ற பெயரும் உள்ளது என்பது இங்கு நோக்கத் தக்கதாகும்.) இந்த வெள்ளிமலையில் இருந்து கருணையாறு எனும் சிற்றாறு ஓடிவருகின்றது, இதன் கரையில் தான் சிவசயிலம் உள்ளது.

ஒரு காலத்தில் இப்பகுதி கடம்பமரங்களால் சூழப்படிருந்ததால் இதற்குக் கடம்பவனம் என்பதும் பெயராகும். இவ்வூர்த் தலபுராணத்தில் இப்பெயரைக் காண்கிறோம்.

இங்கு அகத்தியரின் அறிவுரைப்படி பூஜை செய்து வந்த அத்திரி மகரிஷிக்கு சிவபெருமான் திருக்கயிலைக் காட்சியைக் காட்டிய இடம் இது என்பர். அதனால்தான் இது சிவசயிலம் என்றும் சுவாமி சிவசயிலநாதர் என அழைக்கப்படுகின்றார் என்பர் பார்வதிதேவியார் எப்படி இமயமலையில் பர்வதராஜனுக்கு மகளாகப் பிறந்து வளர்ந்து பரமேசுவரனை மணந்து கொண்டாளோ அப்படியே அவள் இங்கு அத்திரி மகரிஷிக்கு மகளாகப் பிறந்து வளர்ந்து பெருமானை மணந்து கொண்டாள் என்பர். இதனால் இவளுக்கு 'பரமகல்யாணி' என்ற பெயர் உண்டாயிற்று (ஆனால் இந்த வட்டாரக்கதை இங்கு வழக்கில் இல்லை)



ஸ்ரீ சைலநாதர்

அம்பிகை பிறந்து வளர்ந்த இடமான அத்திரி மகரிஷியின் தவச்சாலை இருந்த இடம் இக் காலத்தில் ஆம்பூர் என்றழைக்கப்படுகிறது, அம்பிகை பிறந்த ஊர் அம்பாவூர் என்றாகி ஆம்பூர் என ஆகிவிட்டதென்பர். இன்றும் ஆம்பூர் மக்கள் அம்பிகையைத் தங்கள் ஊருக்கு மூன்று நாட்கள் எழுந்தருளிவைத்து வசந்தவிழா கொண்டாடு கின்றனர். இதைப்போலவே ஆழ்வார் குறிச்சி மக்கள் பெருமானைத் தங்களூர் சுவாமியாகப் பாவித்து பன்னிரண்டு நாட்கள் விழா கொண்டாடுகின்றனர்.

(இந்த ஊர் நந்தி பலசிறப்புகளைப் பெற்றிருக்கின்றர் இவருடைய பெருமைகளை நந்தீசுவரர் எனும் மலரில் காணலாம்)

இப்பெருமானின் கருவறையில் மூன்று பக்கங்களிலும் ஜன்னல் வைக்கப்பட்டுள்ளது காணத் தக்கதாகும்.

இக்கோயிலும் தட்சணகயிலாயத்தில் ஒன்றாகப் போற்றப்படுகின்றது. ❋❋❋

சமய இலக்கியங்கள் காட்டும் திருக்கயிலை

சைவ சமய இலக்கியங்களில் குறிப்பாகப் புராண இலக்கியங்களில் திருக்கயிலை மலையின் எழில்மிகு காட்சிகள் சிறப்புடன் பேசப்படுகின்றன. பெரிய புராணம், அருணாசல புராணம் ஆகியவற்றில் வரும் திருமலைச்சிறப்பு என்ற பகுதிகள் இதற்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. இனி திருமுறைகளில் கூறப்படும் திருக்கயிலைக் காட்சிகளைப்பற்றிய ஆய்வுச்செய்திகளைக் காணலாம். மேலும் கயிலைமலையோடு தொடர்புடைய சில இலக்கியங்களைப்பற்றிய குறிப்புகளையும் அறிந்து கொள்ளலாம்.

மூவர் முதலிகளும் கயிலைமலைத் திருப்பதிகங்களும்

கயிலை மலையில் இறைவன் தேவியுடன் சகல தேவர்கள் புடைசூழ வீற்றிருக்கும் நிலையை தேவார ஆசிரியர்கள் பலநூறு பாடல்களில் விளக்கியுள்ளனர். மேலும் கயிலை மலையின் தனிச்சிறப்பை மட்டுமே விளக்கும் (கயிலைமலைப்) பதிகங்கள் தேவாரத்துள் ஆறு இடம் பெற்றுள்ளன. தேவார ஆசிரியர்கள் மூவரும் பிறதலங்களுக்குச் சென்று அங்கிருந்து வழிபட்டுப் பாடியது போன்று இவற்றைப் பாடவில்லை. கயிலையை தன் மனக்கண்ணால் கண்டு வழிபட்டே இப்பதிகங்களைப் பாடியுள்ளனர். ஆகையால் இவற்றில் கயிலை-மலையை நாம் காணும் பனிமட்டுமே படர்ந்த சிகரங்களாகச் சித்தரிக்காமல் அம்மலையின் அழகைத் தென்னகத்து குறிஞ்சிநில மலைச் சாரலில் உள்ள இயற்கைக் காட்சிகளைக் கொண்டதாகவே பாடியுள்ளனர்.

திருஞானசம்பந்தப் பெருமான் கயிலையை குறித்து இரண்டு பதிகங்கள் அருளியுள்ளார். ஒன்றில் கயிலைமலையானைச் சிறப்பித்தும், மற்றதில் கயிலைமலையைச் சிறப்பித்தும் பாடியுள்ளார்.

அப்பரடிகள் கயிலைமலையானைப் போற்றிப்பரவும் வகையில் இரண்டு போற்றித் திருத்தாண்டகங்களை அருளியுள்ளார். இவை சிவபெருமானின் மேலான பெருமைகளைத் தெரிவிக்கின்றன. இவை கயிலைமலையானை அர்ச்சிப்பதாகவே அமைகின்றன. மேலும் திருவையாற்றில் கயிலைக்காட்சியைக் கண்டு ஒரு பதிகத்தையும் அருளிச் செய்தார்.

மேலும் திருத்தலக்கோவையில் கயிலாய நாதனை எங்கெல்லாம் கண்டேன் என்று சொல்லி அத்தலங்களைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார்.

மூன்றாமவராகிய சுந்தர மூர்த்தி சுவாமிகள் திரு அஞ்சைக்களத்துக்கு எழுந்தருளியிருந்தார். அப்போது சிவபெருமான் அவருடைய பூவுலக



வாழ்க்கை முடிந்து விட்டதென்றும், இனி கயிலைக்குத் திரும்பலாம் என மொழிந்து கணங்களையும் வெள்ளையானையையும் அனுப்பினார். அதனையறிந்த சுந்தரமூர்த்திகள் 'தான் என்னை முன்படைத்தான்' எனத்தொடங்கிப் பதிகம் பாடினார். இப்பதிகத்தில் கயிலைமலையை 'நொடித்தான் மலை' என்று அவர் குறிப்பிடுகின்றார். இதன் ஒவ்வொரு பாட்டிலும் இறைவன் தன்னை அழைத்துவர யானையை அனுப்பிய செய்தியைக் குறிக்கின்றார். இதுவே அவருடைய இறுதிப்-பதிகமாகும். இதன்பின்னர் அவர் கயிலைக்குத் திரும்பி பழையபடியே இறைவனின் அணுக்கத் தொண்டராகின்றார்.

தேவார முதலிகள் என்றழைக்கப்பட்ட இந்த மூவர் முதலிகளில் முதலாமவரான ஞானசம்பந்தப் பெருமான் பிறதலங்களைப் போலவே கயிலையை ஊனக்கண்ணால் தரிசிக்காத போது அதைப் பாடி மகிழ்வதுடன் நின்றுவிடுகின்றார். அடுத்தவரான திருநாவுக்கரசுப் பெருந்தகையார் கயிலை மலையில் ஏறிச்செல்ல முயலும்போது சிவபெருமான் அவரைத் தடுத்து ஒரு பொய்கையில் மூழ்கவைத்து விடுகின்றார். அவர் திரும்ப எழுந்தபோது அது திருவையாறாக இருக்கக் காண்கிறார். திருவையாறே அவருக்குக் கயிலைமலையாகக் காட்சி யளிக்கின்றது.

மூன்றாமவரான சுந்தரமூர்த்தி சுவாமிகளை இறைவனே யானையை அனுப்பி திருக்கயிலைக்கு அழைக்கின்றான். அவர் இறுதியாக கயிலை மலையை பூமியில் இருந்தே பாடிவிட்டு கயிலைமலையை அடைந்து இறைபணியில் ஈடுபட்டு விடுகின்றார். இவ்வகையில் மூவருமே கயிலைமலையைத் தரிசித்து அங்கு பாடிய பாடல்கள் என்று எதுவும் பூமிக்குக் கிடைக்கவில்லை.

சேரமான் பெருமாளும் காரைக்கால் அம்மையாரும்

அறுபத்து மூன்று நாயன்மார்களில் இருவர் கயிலைமலைக்குச் செல்வதுடன் அங்கு பெருமானைத் தரிசித்து பாடல்பாடி மகிழ்கின்றனர். அவர்களில் முதலாமவர் காரைக்காலம்மையார் ஆவார். இரண்டாமவர் சேரமான் பெருமாள் நாயனார் ஆவார்.

இவர்கள் இருவருக்கும் ஒரு தனிச்சிறப்பு இருக்கின்றது. சேரமான் பெருமாள் நாயனார் இறைவனை தரிசித்து அங்கேயே தமது பாடலை அரங்கேற்றி விட்டு தங்கிவிடுகின்றார். ஆனால் காரைக்காலம்மையாரோ மீண்டும் பூவுலகம் திரும்பி வருகின்றார். திருவாலங்காட்டிற்கு வந்து இறைவன் திருவடிக்கீழ் நிலைபெறுகின்றார். ஆதலின் கயிலையை விட பூவுலகேயே விரும்பி அவர் ஏற்கின்றார். அங்கிருந்தே பெருமானின் பாடல்களை பாடி மகிழ்கின்றார். அவர் பாடல்கள் மூத்த திருப்பதிகம் எனப்பெயர் பெறுகின்றது. இதனால் திருவாலங்காடும் பெருங்கயிலை என்று அழைக்கப்படுகிறது.


காரைக்கால் அம்மையார்

'திருக்கயிலாய ஞானவுலா'

உலா இலக்கியங்களில் முதன் முதலாகத் தோன்றியது என்பதால் இதனை 'ஆதியுலா' என்பர். இதனை இயற்றியவர் சேரமான் பெருமாள் நாயனார் ஆவார். அவர் இதனை கயிலைமலையில் இறைவன் சந்நிதியில் அரங்கேற்றுவித்தார். அதனை பிடவூரில் எழுந்தருளியுள்ள சாத்தனார் பூமிக்குக் கொண்டுவந்து வெளிப்படுத்தினார் என்பர். பன்னிரு திருமுறைத்தொகுப்பில் இது பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது.

பெரியபுராணத்தில் வெள்ளானைச் சருக்கத்தில் இந்த நூலின் வரலாறு இடம்பெற்றுள்ளது. சுந்தரருடன் கயிலையை அடைந்த சேரமான் பெருமாள் நாயனார் இறைவனை வணங்கி நின்றார். அப்போது சிவபெருமான் சேரமானை நோக்கி உம்மை நாம் அழைக்காமலேயே இங்கு ஏன் வந்தீர் என்றார். அதற்கு நாயனார், 'பெருமானே! ஆரூரரின் கழல் பற்றி இங்கு வந்தேன். நின் கருணை வெள்ளத்தால் தங்கள் முன்பு வந்து வணங்கி நிற்கின்றேன் எனக்கு ஒரு விண்ணப்பம் உள்ளது' என்றார். அது உங்கள் மீதுள்ள அன்பால் திருஉலாப்புறம் ஒன்று பாடியுள்ளேன். அதனைத் தாங்கள் கேட்டருள வேண்டும் என்பதாகும் என்றார். சிவபெருமான் உவந்து அதனைச் சொல்லும் என்றார். அதன்படி அங்குள்ளவர்கள் மகிழும் வண்ணம் சேரமான் பெருமான் நாயனார் தாம் இயற்றிய 'உலாப்புறத்தை' அரங்கேற்ற சிவபெருமான் அதனைத் தமது திருச்செவியால் கேட்டு அருளினார். திருக்கயிலாயத்தில் அரங்கேற்றப்பட்டதால் இதனைத் 'திருக்கயிலாய ஞானவுலா' எனவும் அழைப்பர். மண்ணிலிருந்து விண்ணிற்குச் சென்ற பெருமையுடைய நூல் இது ஒன்றே. இதனை 'தெய்வீக உலா' எனவும் அழைப்பர்.

கயிலைபாதி காளத்திபாதி திருஅந்தாதி

பூலோக கயிலாயம் எனப்படுவது காளத்திமலையாகும். இதனைத் தட்சணகயிலாயம் எனவும் அழைப்பர். இங்கு வழிபட்டு வடநாடு சென்ற அப்பரடிகள் அரன் அருளால் ஒரு குளத்தில் மூழ்கித் திருவையாற்றில் உள்ள குளத்தில் இருந்து வெளிப்பட்டு திருவையாற்றினையே கயிலாயமாகக் கண்டார் என்பது புராணச் செய்தியாகும். வடக்குப் பனிமலை வரையான ஸ்ரீகயிலாயத்தையும் தென்-கயிலாயமாகிய ஸ்ரீகாளத்தியையும் இணைத்துப்-பாடிய நூலே கயிலைபாதி காளத்திபாதி அந்தாதியாகும். இதனை இயற்றியவர் நக்கீரதேவ நாயனார் ஆவார்.

இது அந்தாதித் தொடையலாக 100 பாடல்களைக் கொண்டதாகும். இதனை 1892 ஆம் ஆண்டில் திரு. சம்பந்த முதலியார் உரையுடன் வெளியிட்டுள்ளார். மீண்டும் இந்நூலினைப் பழைய உரையுடன் சிலகட்டுரைகளைச் சேர்த்து 1951 ஆம் ஆண்டில் திருஆவடுதுறை ஆதீனத்தினர் வெளியிட்டுள்ளனர்.

இதில் ஒற்றைப்படை எண்ணில் வரும் பாடல்கள் கயிலை மலையையும் இரட்டைப்பட எண் கொண்ட பாடல்கள் காளத்தியையும் சிறப்பிக்கின்றன.

இது பன்னிருதிருமுறையில் பதினோராம் திருமுறையுள் சேர்க்கப்பட்டுள்ளது.

கயிலையும் காளத்தியும்

ஸ்ரீகயிலாயத்தில் இருப்பது போலவே பஞ்சமுகலிங்கம், (சுவர்ணமுகி எனப்படும்) சுவர்ணகங்கை அகண்ட வில்வம் ஆகியன காளத்தியிலும் உள்ளன.

விநாயகர் அகவல் பிறந்த கதை

சுந்தரமூர்த்தி சுவாமிகளும், சேரமான் பெருமான் நாயனாரும் திருக்கயிலாயத்திற்குச் செல்வதைத் தன் யோகசக்தியால் அறிந்த ஔவையார் தானும் உடனே அங்கு செல்ல விரும்பினார். அப்போது அவர் விநாயகருக்குப் பூசை செய்து கொண்டிருந்ததால் அந்தப் பூசையை வேக-வேகமாகச் செய்யத் தொடங்கினார். உடனே விநாயகர் ஔவைப்பாட்டியை நோக்கி, 'அன்ப! நீ அவசரப்படாதே! அவர்களுக்கு முன்பாகவே உன்னைக் கயிலைக்குக் கொண்டு சேர்க்கின்றேன். எனவே நீ வழக்கம் போல நிதானமாகவே பூசை செய் என்றார். அதன்படியே பாட்டியும் மிக நிதானமாக சிறப்புடன் வழிபட்டு முடித்தாள்.

பிறகு விநாயகர் தன் துதிக்கையால் பாட்டியை எடுத்து ஒருகணத்தில் கயிலையில் சேர்த்துவிட்டார். இந்த அதிசயத்தைக் கண்டபாட்டி மகிழ்ந்து விநாயகர் பெருமானின் பூசையால் எதனையும் எளிதில் அடையலாம் என்று உணர்ந்தாள். அப்போது அவள் பாடியதே 'விநாயகர் அகவல்' என்பர். இவ்வரலாற்றைக் குறிக்கும் தனிப்பாடல் ஒன்று உள்ளது. அது வருமாறு.

மதுரமொழி நல்உமையாள் சிறுவன் மலரடியை
முதரவல்லார்க்கு அரிதோ! முகில்போல் முழங்கி
அதிரவருகின்ற யானையும் தேரும் அதன்பின்வரும்
குதிரையும் காதம் கிழவியும் காதம் குலமன்னனே.

தனக்கு முன்னமே அங்கு சேர்ந்த ஔவைப்பாட்டியை நோக்கி சேரமான் பெருமாள் நாயனார் மிகவும் ஆச்சர்யமடைந்து கயிலைக்கு எல்லோருக்கும் முன்னே விரைவாக எப்படி வந்த சேர்ந்தீர்கள் என்று கேட்க அதற்குப்பதிலாக இப்பாடலைப் ஔவையார் பாடினார் என்பர்.

(இதன் பொருள். சேரமன்னனே! மதுரமான மொழிகளைப்பேசும் உமையவள் குமாரனாகிய விநாயகப்பெருமானை வணங்குவார்க்கு எதுவும் எளிதே.! அதிரவருகின்ற யானையும் குதிரையும் எல்லாம் ஒரு நாழிகைக்கு காதவழி கடந்தால், நடக்க வியலாத இக்கிழவியும் கணபதியின் அருளால் ஒரு நாழிகையில் காதவழி கடந்திடுவாள்



என்பதை அறிவாயாக என்பதாகும். இவ்வாறு அவ்வைப்பாட்டியை விண்ணுலகிற்கு ஏற்றிய கணபதியை கயிலாச விநாயகர் என அழைப்பர்.)


கயிலை மணிகள்

கயிலைமலைக்குச் செல்பவர்களை இறைவன் தனக்கு உறவினர் என்றே குறிக்கின்றான். சுந்தரரை, 'நம்தமர் ஊரன்', என்றும் காரைக்கால் அம்மையாரை 'அம்மா' என்றும் அழைத்தார் என்று புராணங்கள் கூறுவதாலும் இதனை அறியலாம்.

இந்நாளில் ஹிமயமலையாகிய கயிலாய மலையைக் கண்டு வணங்கி மீள்பவர்கள் தங்களைக் 'கயிலை மணி' என்று அழைத்துக் கொள்கின்றனர். தருமையாதீன 25வது குருமகா சந்நிதானம் கயிலையைத் தரிசித்துத் திரும்பியதன் நினைவாக 'கயிலை குருமணி' என்று புகழப்பெற்றார்.

தருமையாதீனக் குருபிரான் திருக்கயிலையை தரிசித்து மீண்டதை குறிக்கும் நினைவு வளைவு ஒன்றை தருமபுரத்துள் அமைத்துள்ளனர். இதில் திருக்கயிலாயம், அமர்நாத், கேதார்நாத் ஆகிய இடங்களில் குருபிரான் சிவலிங்க மூர்த்தியை வழிபடும் காட்சிகள் சுதைச் சிற்பங்களாகச் செய்யப்பட்டுள்ளன. இதைப் போலவே கோவை பேரூர் ஸ்ரீசாந்தலிங்க ராமசாமி அடிகளார் கயிலைகண்டு வந்ததன் நினைவாக ஒரு வளைவு அம்மடாலயத்தின் வாயிலின் மீது அமைக்கப்பட்டுள்ளது.

கச்சிக் கயிலாயம்



காஞ்சீபுரம் ஸ்ரீகயிலாய நாதர் கோயில்

கல்விக்கரையிலா கச்சியைப் பாடிய திருநாவுக்கரசு சுவாமிகள் "கச்சி ஏகம்பத்தும், பலதளியும் கயிலாய நாதனையே காணலாமே" என்று குறிப்பிடுகின்றார். அவருக்குக் கச்சியம்பதியே கயிலாயமாகக் காட்சியளித்திருக்கின்றது.

பின்னாளில் காஞ்சியை ஆண்ட பல்லவ மன்னரும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்தில் வாழ்ந்தவரும், பூசலார் நாயனாரைக் கண்டு வணங்கியவருமாகிய காடவர்கோன் கழற்சிங்க நாயனார் எனும் வேந்தர் காஞ்சியில் கயிலாயநாதருக்கு ஒரு பெரிய சிவாலயத்தை எழுப்பினார். அதுவே இந்நாளில் உலகப்புகழ் பெற்ற கயிலாயநாதர் கோயிலாக விளங்குகின்றது.

வரலாற்றில் மூன்றாம் ராஜசிம்மன் என்றழைக்கப்பட்ட இப்பெருவேந்தன் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகப் போற்றப் படுகின்றார்.


ஸ்ரீகயிலாயத்தில் பரமேசுவரன் வீற்றிருக்கும் இடத்தைச் சுற்றியுள்ள அனேக மலைகளில் அனேக தேவர்களும், முனிவர்களும், யக்ஷர்களும், பூதகணங்களும் அனேக சிவலிங்கங்களைப் பூஜை செய்து வருகின்றனர். அதை நினைவு கூறும் வகையில் இக்கோயிலின் மையத்தில் ஸ்ரீகயிலாய நாதரும் அவர் சந்நிதியைச் சுற்றி 50க்கும் மேற்பட்ட சிற்றாலயங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இச்சிற்றாலயங்களில் உமாதேவியோடு பரமசிவன் எழுந்தருளியுள்ளார். இக்கோயிலில் பிரமன், சப்தமாதர், ஏகாதசருத்ரர், மகேசுவர மூர்த்தங்கள் துர்க்கை, சாத்தன் முதலிய அனேக தேவர்களின் திருவுருவங்கள் பிராகாரங்களில் அமைக்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். ஸ்ரீகயிலா யத்தில் தெற்கு நோக்கியே தலைவாயில் அமைந்திருப்பதால் இங்கும் தெற்கு நோக்கியே திருவாயில் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு ஸ்ரீகயிலாயத்தில் இருப்பதுபோலவே பெருமான் உமாதேவியாரோடும் கந்தனோடும் சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்றார். பின்புறம் பிரமதேவனும் திருமாலும் வழிபட்டு நிற்கின்றனர். பல்லவர்கள் கண்ட கலைக் கோயிலாக இது திகழ்கின்றது.

அப்பர் கண்ட கச்சிக்கயிலாசம்

அப்பரடிகள் பலதலங்களையும் தரிசித்து வணங்கியபின் அத்தலங்களை வரிசைப்படுத்தி திருத்தலக்கோவை எனும் பதிகங்களைப் பாடியுள்ளார். இப்பதிகங்களின் ஈற்றடியில் 'கயிலாயநாதனைக் காணலாமே' என்ற குறிப்பு உள்ளது. அவர் தான் கண்டு வணங்கிய இடங்களில் எல்லாமே அவர் கயிலாயநாதனையே கண்டு மகிழ்ந்ததால் இப்பாடலை உருகிப்பாடிச் சிறப்பித்துள்ளார் என்று ஆன்றோர் கூறுவர். இதில் கச்சிப்பலதளியும் ஏகம்பத்தும் கயிலாய நாதனையே காணலாமே என்று காஞ்சீபுரமே கயிலாயமாகக் காட்சியளிப்பதை குறிக்கின்றார்.

கயிலையில் சிவபெருமான் உமாதேவியாருடன் தேவர்கள் புடைசூழ வீற்றிருப்பதை நினைவு கூறும் வகையில் காஞ்சீபுரத்துக் கோயில்கள் பெரும்பாலானவற்றில் மூலத்தானத்தில் சிவபெருமான் உமாதேவியார் அவர்களுக்கு இடையில் குமாரன் இருபுறமும் பிரம்ம விஷ்ணுக்கள் எழுந்தருளியிருப்பதாகக் காட்டப்பட்டுள்ளனர். ஏகாம்பரநாதர் கச்சபேசுவரர், கயிலாயநாதர், முத்தீசுவரர், மதங்கேசுவரர், அமரேசுவரர் முதலான கோயில்களில் மூலஸ்தானத்தில் லிங்கத்திற்குப் பின் புறத்தில் இவ்வடிவைக் காணலாம். இதனால் அப்பரடிகளும் அவர் பின் தொடர்ந்து வந்தவர்களும் காஞ்சியையே கயிலாயமாகக் கண்டு வணங்கிய நிலையைக் காணலாம்.



பல்வர்கால சோமாஸ்கந்தர் எனப்படும் கயிலாசநாதர்

திருக்கயிலாயநாதர் சிற்பங்கள்

திருஞானசம்பந்தப் பெருமானும், திருநாவுக்கரசப் பெருமானும் தாம் அருளிய பதிகங்கள் ஒவ்வொன்றிலும் இராவணன் கயிலைமலையைப் பெயர்த்தெடுக்க முயன்றதையும் அதனால் கயிலைமலை நடுங்க உமையவள் அஞ்சி இறைவனைத் தழுவிக் கொண்டதையும் அதன் காரணமாக இறைவன் தன் வலதுபாதக் கட்டை விரலை ஊன்ற அதன் அழுத்தத்தைத் தாளாது அவன் அலறி சாமவேதம் இசைத்து அருள் பெற்றதையும் குறித்துள்ளனர். திருநாவுக்கரசர் கனகமாவாயிரம் எனத்தொடங்கும் கயிலைத் திருப்பதிகத்தில் உள்ள ஒவ்வொரு பாடலிலும் இராவணன் கயிலை மலையை எடுத்து அதனால் அவன் பட்டபாட்டை விரிவாகக் கூறியுள்ளார்.

இத்தகைய காரணங்களால் நமக்கு கயிலை என்றதும் இராவணனே நினைவுக்கு வருகின்றான். எனவே கயிலைக்காட்சியை படைத்த அனைவரும் மலையின்மேல் இறைவன் உமையுடன் வீற்றிருக்க மலையின்கீழ் இராவணன் கீதம்பாடும் வகையிலேயே அமைத்துள்ளனர். இவ்வாறு சிற்பங்களை அமைக்கும் முறையே காலங்காலமாக நிலவிவருகின்றது. காஞ்சியில் உள்ள, மதங்கேசர், அமரேசர், கயிலாயநாதர் கோயில்களிலும் மதுரை கம்பத்தடி மண்டபத்திலும் எல்லோரா கயிலாயநாதர் கோயிலிலும் இக்காட்சியை சிற்பமாகக் காணலாம்.

சென்னை அரண்மனைக்காரன் தெருவில் உள்ள கச்சாலீசுவரர் கோயிலில் நுழைவாயிலைக் கடந்ததும் தரிசிக்கத்தக்க வகையில் கயிலாயபார்வதக் காட்சி அமைக்கப்பட்டுள்ளது. இது அப்பரடிகள் கண்ட கயிலைக் காட்சியை

நினைவூட்டும் வகையில் அமைந்துள்ளது. பெரிய மலை போன்ற அமைப்பின் மீது இறைவனும் இறைவியும் வீற்றிருக்கின்றனர். மலையை இராவணன் அசைத்தெடுப்பதுபோல் அமைந்துள்ளான். மலையில் மான், மயில், முயல், பசுக்கள் யாவும் இணை இணையாகக் காட்டப்பட்டுள்ளன. இக்காட்சியை கண்டு மகிழ்வது போல அப்பருடைய திருவடிவம் அமைக்கப்பட்டுள்ளது.

'மாதர்பிறைக் கண்ணியானை' எனத்- தொடங்கும் அப்பர் தேவாரச் சொல்லோவியத்தின் சுதை வடிவமாக இது காட்சியளிக்கின்றது.

திருக்கயிலாய பர்வத வாகனம்



சென்னை மயிலாப்பூர் ஸ்ரீகபாலீஸ்வரர் கயிலாசபர்வத வாகனத்தில் பவனி வரும் உன்னதக் காட்சி

சிவாலயங்களில் ஒன்பதாம் நாள் இரவு கயிலாச பர்வத வாகனம் எனும் வாகனத்தில் இறைவன் உலா வருகின்றார். இறைவனை மலைமீது அமர்த்தி விழாக்காண்பது இந்திய சமயங்களில் பொதுமரபாகும்.

சிவபெருமானை மலைமீது அமர்த்தி விழாக்காண்பதை இராவணன் கதையோடு தொடர்பு படுத்தி விழாக்கொண்டாடுகின்றனர். பெரிய மலை போன்ற அமைப்பினை இராவணன் தாங்குவது போலவும், அவ்வாறு தாங்கும் ராவணன் (ஒன்பது தலைகளுடன் பத்தாவதாகிய தன் தலையைப் பறித்து கரத்தை அதில் இணைத்து செய்த) வீணையை வாசிப்பது போலவும் அமைக்கப் படும். (இதன் விரிவை இரண்டாவது மலரில் காண்க). இது ராவணன் கயிலை மலையை பெயர்த் தொடுப்பதையும் இறைவன் அவனைக் கட்டைவிரலால் அலரும்படி அழுத்துவதையும் இது குறிக்கின்றது. காலப்போக்கில் மலையை விட்டு விட்டு இராவணனை மட்டும் பெரிய அளவில் அமைக்கும் வழக்கம் வந்து விட்டது.

காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் வெள்ளியாலாகிய கயிலாயவாகனமும், இராமேசுவரம் ஆலயத்தில் தங்கத்தாலான கயிலாய வாகனமும் உள்ளன.

உத்திர கயிலாசமும் தட்சிண கயிலாசமும்

வடக்கே உள்ள இமயமலையின் வடக்குச் சாரலில் அமைந்துள்ளது கயிலாய மலையாகும். அதனையொத்த சிறப்புடன் தென்னாட்டில் சில தலங்கள் விளங்குகின்றன. இவைகளைத் தென்கயிலாயம் என அழைப்பர். இவை இரண்டையும் நினைவு கூறும் வகையில் ஒரே ஊரில் அல்லது ஒரே கோயிலின் வளாகத்துள் இரண்டு சிவாலயங்களை கருவறையின் வடக்கிலும், தெற்கிலுமாக அமைத்துள்ளதைக் காண்கிறோம். இவை முறையே உத்திரகயிலாயம் அல்லது வட கயிலாயம் என்றும், தட்சண கயிலாயம் அல்லது தென் கயிலாயம் என்று போற்றப்படுகின்றன.

கோவை நகரின் ஒரு பகுதியாக விளங்கும் பேரூரில், ஊரின் வடபகுதியில் ஒன்றும் தென்பகுதியில் ஒன்றுமாக இரண்டு கயிலாயங்கள் அமைந்துள்ளன. இவை முறையே வடகயிலாயம், தென்கயிலாயம் என்று போற்றப்படுகின்றன.

அப்பரடிகள் திருக்கயிலாயக் காட்சியைக் கண்டருளிய திருவையாற்றுக் கோயிலுக்குள் வடக்குப்பிராகாரத்தில் உத்திரகயிலாயம் எனும் தனி கோயிலும், தெற்குப் பிராகாரத்தில் தட்சிண-கயிலாயம் எனும் கோயிலும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவற்றை இரட்டைக் கயிலாயங்கள் என்பர்.


★ தென் கயிலாயம் - திருஐயாறு

ஊர்க்கோட்டம்

2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கடைச் சங்ககாலத்தில் தோன்றிய இலக்கியமான சிலப்பதிகாரத்தில் சிவவழிபாடும், சிவனின் பெருமைகளும் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. பூம்புகார் நகரில் சிவபெருமானுக்கு கோயில் இருந்ததை இதனால் அறியலாம். இந்நூலில் அந்நகரில் இருந்த ஆலயங்கள் வரிசையாகக் கூறப்பட்டுள்ளன. இவை அமரர் தருக்கோட்டம், வெள்ளானைக் கோட்டம் பலதேவன் கோட்டம், சூரியன் கோட்டம், வேல்கோட்டம், ஊர்க்கோட்டம், வச்சிரக்கோட்டம், ஐயனார் கோயில் அருகன் கோட்டம், நிலாக் கோட்டம் என்பனவாகும்.

இவற்றில் ஊர்க்கோட்டம் என்பதற்கு உரையாசிரியர் ஸ்ரீகயிலாயம் நிற்கும் கோயில் என்று உரைவகுத்துள்ளார். அந்நாளில் ஊரின் மத்தியில் இருந்த சிவன் கோயில் ஊர்க்கோட்டம் எனப்பட்டது. அதுவே ஸ்ரீகயிலாயம் எனப்பட்டது என்பர்.

இந்நாளிலும் கோயிலூர் என்ற பெயரில் பல ஊர்களைக் காண்கிறோம். இந்த இடங்களில் முதலில் பெரிய சிவாலயங்கள் அமையப் பெற்று அவற்றைச் சுற்றி ஊர் உண்டானதால் இவை கோயிலூர் என்று பெயர் பெற்றதென்பர். இவற்றை நோக்க கோயில் என்ற சொல்லே ஸ்ரீகயிலாயத்தைக் குறிக்கும் என்பது அறியப்படுகிறது.

சுந்தரரும் – சேரமான் பெருமான் நாயனாரும் கயிலைமலைக்குச் செல்லும் காட்சிகள்



கயிலைக்கு எத்தனையோ நாயன்மார்களும், பக்தர்களும், சித்தர்களும் சென்று சிவபெரு-மானைக்கண்டு பேரின்பவெள்ளத்தில் திளைத்து மகிழ்ந்துள்ளனர் என்றாலும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும், சேரமான் பெருமான் நாயனாரும் கயிலைக்குச் சென்ற காட்சியை மட்டுமே காலங்காலமாக ஓவியங்களாகவும் சிற்பங்களாகவும் அமைக்கும் வழக்கம் இருந்து வருகின்றது.

சுந்தரமூர்த்தி சுவாமிகளே தனது நொடித்தான் மலைப்பதிகத்தில் தான் கயிலைக்குச் செல்லும் காட்சியைச் சொல்லோவியமாகத் தீட்டியுள்ளார். அது வருமாறு :-

கயிலைமலையில் இருந்து அமரர்களும், சிவனடியார்களும், இந்திரன் முதலான அஷ்ட திக்பாலகர்களும் இறைவன் ஆணைப்படியே வெள்ளையானையை அழைத்துக்கொண்டு சுந்தர மூர்த்திகளை அழைத்துச் செல்ல வருகின்றார்கள். அந்த யானையை சிவ-பூஜாதுரந் தரனான பாணன் என்பவன் அழைத்துவந்து, சுந்தரமூர்த்திகள் அதன்மீது ஏறத்துணை செய்கின்றான். கடல் அரசன் மலர்களைக் கொண்டுவந்து இறைஞ்சுகின்றான். ஆகமம்வேதம், தோத்திரம் ஆகியன ஒலிக்கின்றன, இத்தகைய சிறப்புகளுடன் கயிலைமலையை நோக்கி வரும் சுந்தரரைக் கண்டு அதிசயித்து முனிவர்களும், தேவர்களும் சிவபெருமானிடம் இவ்விதம் வரும் இவர் யார் என்று கேட்க இவன் நமக்கு உறவினன். கயிலை மலைக்குக்குரியவன் என்று மொழிந்தார். இச்சொல்லோவியத்தின் இறுதியில் ஆழிக்கடல் அரசனை நோக்கி தான் அஞ்சைக்களத்து இறைவனிடமும் அடியவர்களிடமும் விண்ணப் பிக்காமல் செல்வதால் அவரிடம் தன் பயணத்தைப் பற்றி அறிவிக்குமாறு கூறிவிட்டுச் செல்கின்றார்.

இந்த காட்சியை மனதிற்கொண்டும் சேரமான் பெருமான் நாயனார் வரலாற்றைக் கருத்திற் கொண்டும் பல ஓவியங்களும் சிற்பங்களும் தமிழகத்தில் வடிக்கப் பட்டுள்ளன. இவற்றில் சுந்தரர் யானைமீது அமர்ந்தவாறு செல்கின்றார். அவருக்கு முன்பாக வெள்ளைக்குதிரையில் சேரமான் பெருமான் நாயனார் செல்கின்றார். அதற்கு முன்னும் பின்னும் தேவர்களும் முனிவர்களும் விருதுகளை ஏந்தி பூதகணங்களும் கந்தர்வர்களும் புடைசூழ்ந்து செல்கின்றனர்.

தஞ்சாவூர் பெரியகோயிலில் இக்காட்சி வண்ண ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. இதில் கடல்மீது குதிரையும் யானையும் செல்வதாகக் காட்டியுள்ளனர். கடலில் மீன்களும் மற்ற உயிரினங்களும் காட்டப்பட்டுள்ளன. இது இவ் வோவியத்தின் தனிச்சிறப்பாகும். இறுதியில் சுந்தரரும் அமரர்குழாமும் கடல் அலைகள் மீது பயணம் செய்ததை இது குறிக்கிறதென்பர்.

கொங்கு நாட்டுக் கோயில்கள் பலவற்றில் யானை மீது சுந்தரரும் குதிரை மீது சேரமான் பெருமாள் நாயனாரும் செல்லும் காட்சி புடைச்சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. அவிநாசி, அன்னூர், பேரூர், திருமுருகன், பூண்டி முதலிய இடங்களில் இத்தகைய சிறு சிற்பங்களைக் காணலாம்.

திருவிடைமருதூர் கயிலாயநாதன்

சோழநாட்டு மகாலிங்கத்தலமான திருவிடைமருதூர் ஆலயத்தின் மேற்கு உள்சுற்றில் ஒரு கட்டுமலையும் அதன்மீது சோமாஸ்கந்த மூர்த்தமும் அமைந்துள்ளன. இம்மலையானது ஸ்ரீகயிலாயம் என்பதைக் குறிக்க அதன் கீழே அதனை இராவணன் தாங்குவதுபோல அமைக்கப்பட்டுள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவர் மருதவாணர் என்றும் தேவி அன்பிற்பிரியாள் என்றும் அழைக்கப்படுகின்றனர். கயிலைக் காட்சியாக பெருமான் எழுந்தருளியுள்ள இம்மலைக்கு ஏறிச்செல்ல குறுகலான படிக்கட்டுகள் உள்ளன. திருவிடைமருதூர்க்கு மத்திய கயிலாயம் என்ற பெயரும் உண்டு என்பது இங்கு எண்ணத்தக்கதாகும்.

உத்திரமேரூர் கயிலாயநாதர்

காஞ்சீபுரத்துக் கயிலாய நாதர் கோயிலைப்போலவே சிறப்புமிக்க மற்றுமொரு கோயில் இதேமாவட்டத்தில் காஞ்சீபுரத்திற்கு அருகிலுள்ள உத்திர மேரூரிலும் அமைந்துள்ளது. இக்கோயிலைக் கல்வெட்டுகள் ஈசானத்து பெருந்தேவர் கோயில் என்று குறிக்கின்றன. இந்நாளில் மிகுந்த இடிபாடுகளுடன் காணப்படும் இக்கோயில் வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். இதில் பலகல்வெட்டுகள் காணப்படுகின்றன.

கயிலை மலையின் பல்வேறு பெயர்கள்

ஸ்ரீசைலம், ஸ்ரீகிரி, ஸ்ரீபர்வதம், நொடித் தான்மலை, வெள்ளியங்கிரி, கனக மால்வரை, பொன்மலை, கனமாமலை, வெள்ளிப்பனிமலை, வெள்ளி வெற்பு, ரஜித கிரி, வடமலை, திருமலை, ஸ்ரீகைலாயம்.

இரத்தின மலைகள்

தட்சிண கயிலாயங்கள் தோன்றியதற்கான வரலாற்றில், ஆதிசேடனுக்கும் வாயுவுக்கும் ஏற்பட்ட போட்டியும் அதன் காரணமாக ஆதிசேடனால் பாதுகாக்கப்பட்ட கயிலைமலையின் மூன்று சிகரங்களை வாயு பிடுங்கி வீசிஎறிய அவை தென்னகத்தில் வீழ்ந்து தென்கயிலாயமாக மாறிய நிகழ்ச்சியையும் கண்டோம். அவ்வாறே மலைச்சிகரங்கள் வந்து வீழ்ந்தது போலவே ஆதிசேடனின் பணாமுடியில் இருந்து சில நாகரத்தினங்களும், நாகமாணிக்கங்களும் சிதறி வீழ்ந்தன. அவைகளும் மலைகளாயின. அவைகளே ரத்தினகிரி, ரத்தினாசலம், மாணிக்க மலை என்று பலவாறு அழைக்கப்படுகின்றன என்பர்.

இத்தகைய மலைகளில் குறிப்பிடத்தக்கது திருமுறைகளில் வாட்போக்கி என அழைக்கப்படும் சிவாயமலையாகும். இதன் அருகில் சிவாயம் எனும் ஊர் இருப்பதால் இதனை இந்நாளில் சிவாயமலை என அழைக்கின்றனர். இது வழக்கில் ஐயர்மலை என்றும் அழைக்கப்படுகிறது.

செந்திலே சிவகைலாசம்

ஐமுகச் சிவனான பரமேஸ்வரன் எழுந்தருளியுள்ள மலை கைலாசம் எனப்படுவது போலவே அருமுகச் சிவனான முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள திருத்தலங்களும் கயிலைமலை எனவே போற்றப்படுகிறது. இவ்வகையில் திருச்செந்தூர் ஒரு தென் கயிலைத் தலமாகும். இதனைக் குறிக்கும் வகையில் அருணகிரிநாதர் சுவாமிகள் 'கயிலை மலை அனைய செந்திற்பதி' என்று திருச்செந்தூர் திருப்புகழில் பாடி அருளியுள்ளார்.

வடாற்காடு மாவட்ட கைலாசகிரிகள்

வடாற்காடு மாவட்டத்தில் குடியாத்தத்திற்கு மேற்கே கைலாசகிரி என்ற மலையும் அதனை ஒட்டிய ஊரும் உள்ளன. இதே மாவட்டத்தில் உள்ள பர்வத மலைக்கும் தென் கயிலாயம் என்று பெயர் வழங்குகிறது.



ஆதிசங்கரரின் திருக்கயிலை விஜயம்

பல தலங்களையும் வணங்கிய ஆதிசங்கர பகவத்பாதர் காஷ்மீரம் முதலியவற்றைக் கடந்து ஸ்ரீ கயிலாயத்தை அடைந்தார். அங்கு அவர் உமாமகேசுவரதைத் தரிசனம் செய்து அங்கு வீற்றிருக்கும் சிவபெருமானின் எழிலைச் 'சிவாபாதாதி கேசாந்த ஸ்துதியாக விரிவாகப் பாடியுள்ளார். இதில் ஸ்ரீகயிலாயவர்ணனை விரிவாக இடம்பெற்றுள்ளது.

எங்குபார்த்தாலும் கற்பகவிருட்சங்கள், அவற்றிக்கு இடையே எண்ணிலாத மலர்ச்செடிகள் அவற்றில் உள்ள மலர்களை தேவமாதர்கள் சிவபெருமானின் புகழைப்பாடியபடி பறித்து மாலைகள் தொடுக்கின்றானர். ரிஷிகளும், தேவர்களும் சாரி சாரியாக இன்னிசை பாடியபடியே செல்கின்றனர். ரிஷப தேவரின் ஹுங்கார ஒலியும் குமரனின் மயில் அகவும் ஓசையும். விநாயகப் பெருமானின் பிளிறலும் மலைகளில் பட்டு எதிரொலிக்கின்றன. மேலும் ஐயனார் தன் வெள்ளைக் குதிரைக் குளம்போசை லயமிட வேட்டையாடி மகிழ்கின்றார்.

இப்படி படிப்படியாக ஸ்ரீமலையின் அழகும் அங்கு எழுந்தருளியுள்ள தேவர்களின் சிறப்பும் தொடர்கின்றன.

இங்கு ஸ்ரீஆதிசங்கரர் உமாமகேசுவரைத் தரிசித்து அவரிடம் இருந்து ஐந்து சிவலிங்கங்களைப் பெற்றுக் கொண்டு பூமிக்குத் திரும்பினார். இவ்வாறு அவர் கயிலை மலைக்குச் சென்று மீண்டதை சங்கர விஜயம் முதலான நூல்கள் சிறப்புடன் குறிப்பிடுகின்றன.

(அவர் கொண்டு வந்த லிங்கங்களைப் பற்றிய செய்தியை 'பஞ்சலிங்கம்' எனும் மலரில் காண்க).

திருக்கயிலாய யாத்திரையை விரிவாகக் கூறும் இரண்டு நூல்கள்

1. திருக்கயிலாய யாத்திரை.

இந்நூல் 1960 ஆண்டு தருமையாதீனத்தின் 473 வது வெளியீடாக வந்துள்ளது. இம்மடாலயத்தில் 25வது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அடியவர்களுடன் திருக்கயிலாய யாத்திரையை மேற்கொண்டதை சுமார் 700 பக்கங்களில் இந்நூல் தெளிவாக விளக்குகின்றது. இடையிடையே ஆகம புராண இதிகாசங்களில் உள்ள கயிலைமலையின் சிறப்பு பேசப்படுகின்றது. 1959 ஆம் ஆண்டில் இந்த யாத்திரை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2. திருக்கயிலாய யாத்திரை

இந்நூல் சுவாமி சித்பவானந்தர் கயிலை மலையைத் தரிசித்து தன் அனுபவங்களை எழுதியதாகும். 1954 ஆம் ஆண்டில் ஐந்தாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. வெளியிட்டோர் ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை-4.

திருக்கயிலை யாத்திரை

பூலோக கயிலாயம், பிரகிருதி கயிலாயம் என்று பலவாறு அழைக்கப்படும். கயிலாசகிரி பர்வதம், திபெத் நாட்டின் மேற்குப் பகுதியில் ஒரு தனித்த இடத்தில் மலைத் தொடர்களுக்கிடையில் அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து இதன் உயரம் 22,028 அடிகளாகும்,

திபெத் முன்நாளில் சுதந்திர நாடாக இருந்த போது இந்தியாவிலிருந்து நேரடியாக மக்கள் ஆண்டுதோறும் கயிலாயகிரி யாத்திரைக்குச் சென்று வந்தனர். பின்னால் திபெத் சீனாவின் ஆளுகைக்கு உட்பட்டது. அதன் பின்னர் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்ட போரினால் இந்தியர் கயிலாய யாத்திரை மேற்கொள்வது தடை செய்யப்பட்டது. சுமார் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக இத்தடை நீடித்தது 1981 ஆம் ஆண்டில் சீனாவுடன் இந்தியா செய்து கொண்ட உடன்படிக்கையின்படி தேர்ந்தெடுக்கப்பட 200 முதல் 300 பேர் கொண்ட குழுவினர் தகுந்த பாதுகாப்புடன் கயிலையாத்திரைக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

ஆண்டு தோறும் ஜுன்-செப்டம்பர் இடைவெளியில் இந்த யாத்திரை நடைபெறுகிறது. இதற்கான விளம்பரம் இந்திய வெளியுறவு இலாக்காவினால் வெளியிடப்படுகிறது. இதன்படி விண்ணப்பம் செய்துகொண்டவர்களின் பெயர்கள் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. பின்னர் அவர்களுக்கு மருத்துவ சோதனைகள் செய்து அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 200-ல் இருந்து 300 பேர்களே பயணத்திற்கு அனுமதிக்கப் படுகின்றனர்.

இப்படி அனுமதிக்கப்பட்டவர்கள் 7 முதல் 10 குழுக்களாக பிரிக்கப்பட்டு டெல்லியிலிருந்து முறையான அறிவுரைகளுடன், நோய் வந்தால் காத்துக்கொள்ள உதவும் மருந்துகளையும் தந்து அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

டெல்லியிலிருந்து இவர்களுடைய கயிலாய யாத்திரைப் பயணம் தொடங்குகிறது. இந்த பயணத்தினை உத்திரப்பிரதேச அரசு ஏற்பாடு செய்கிறது. டெல்லியிலிருந்து பஸ் கிளம்பி மொராதாபாத், ராம்பூர், ருத்ரபூர் ஆகியவற்றைத் தாண்டி தனக்பூர் என்ற இடத்தை அடைகிறது. இது இமயமலையின் அடிவாரமாகும்.

இவ்வூரிலிருந்து 5 மைல் சென்றதும் இமயமலைத்தொடரில் மலைப்பகுதி ஆரம்பிக்கிறது. இங்கிருந்து தான் மலை ஏற்றம் தொடங்குகிறது. பஸ் மலை மீது செல்லும் போது இயற்கை அழகு நமது மனதை கொள்ளை கொள்கிறது.

மலையேறுவதில் தொடங்கிய முதல் நாள் பயணம் சம்பாவாட் எனும் மலைப்பிரதேச நகரில் முடிகிறது. இங்கு உத்திரபிரதேச மாநில வாரியத்தின் (நிகமின்) டூரிஸ்ட் பங்களா உள்ளது. இங்கு பக்தர்கள் தங்கவைக்கப்படுகின்றனர்.

இரண்டாம் நாள் பயணம் அங்கிருந்து தொடங்கி பித்தோராகாட் எனுமிடத்தில் மதிய உணவு கொள்வதுடன் தொடர்ந்து இரவு தார்சூலாவை அடைவதுடன் முடிகிறது. இந்த இடத்தில் காளிந்தி நதியை காண்கிறோம். இதன் ஒரு புறம் இந்தியாவும் மறுபுறம் நேபாளமும் அமைந்துள்ளது. தார்ச்சுலாவில் அன்பர்கள் கூடாரங்களில் தான் தங்க வேண்டிள்ளது.

மூன்றாம் நாள் தார்ச்சுலாவிலிருந்து தொடங்கும் பஸ் பயணம் தவாக்காட் எனுமிடத்தில் முடிகிறது. இதற்கு மேல் பஸ்கள் செல்லாது. நடந்து செல்ல வேண்டியது தான்.

அங்கிருந்து பாங்கு என்ற ஊரை அடைகிறோம். அங்கு போதுமான வசதி இல்லாததால் கிடைத்த இடத்தில் தங்க வேண்டியுள்ளது. இந்தியாவைச் சேர்ந்த நாராணசாமி என்பவர் இங்கு ஒரு ஆசிரமம் கட்டியுள்ளார். அவருக்குபின் அதனை ஒரு பெண்மணி இப்போது நிர்வகித்து வருகின்றார். இவர்கள் கயிலாயயாத்திரைக் குழுவினரை அன்புடன் உபசரிக்கின்றனர்.

இங்கிருந்து காலை 5 மணிக்கு புறப்பட்டு பயணம் தொடர்ந்து ஷிர்காவில் இரவு தங்கிவிட்டு மீண்டும் பயணம் செய்து ஜிட்டி எனும் ஊரை அடைகிறோம். போகும் வழியெல்லாம் அற்புத மரங்கள் வண்ணவண்ண பூக்கள் கண்ணுக்கு விருந்தளிக்கின்றன. பூக்களின் பள்ளத்தாக்கு என்ற

ஒரு இடமே உள்ளது. இங்கு ஏராளமான மூலிகைகளும் உள்ளன. ஜிப்டியில் நூற்றுக்கு மேற்பட்ட தமிழர்கள் வாழ்கின்றார்கள். நமது நடை பயணத்திற்கு இந்த நடை தூரமே அதிகமாகும். சுமார் 17 மைல் நடக்கவேண்டியுள்ளது.

அங்கிருந்து மறுநாள் மால்பா அங்கிருந்து புத்தி மால்வாவிலிருந்து புத்தி 19 கி.மீ. புத்தியிலிருந்து குன்ஜி 16 கி.மீ. தொலைவும் உள்ளன அங்கிருந்து குன்ஜியை அடைகிறோம். இந்த குன்ஜிக்கு அருகில் வியாசர் பள்ளத்தாக்கு என்ற இடம் உள்ளது. குன்ஜியில் வியாசருக்கு ஒரு கோயில் உள்ளது. அங்கு அவருக்கு வருடாவருடம் திருவிழா நடத்துகின்றனர்.

தர்மா பள்ளத்தாக்கு என்ற இடமும் உள்ளது. குன்ஜிக்கு 30 கி.மீ. தொலைவில் சோட்டா கயிலாஷ் என்ற மலை உள்ளது. இதுவும் கயிலாயம் போன்றே பனி மூடிய சிகரமாக காட்சியளிக்கின்றது. இதையொட்டி ஒரு பெரிய ஏரியும் உள்ளது. இதனை பார்வதி தடாகம் என்கின்றனர். கயிலாய மலையை தரிசிக்க முடியாதவர்கள் இதனை தரிசித்தால் அதே பலன் உண்டாகும் என்று நம்புகின்றனர்.

புத்தியிலிருந்து குன்ஜி வரும் வழியில் கர்பியாங் எனும் கிராமத்தில் இந்தியாவின் வடகோடி கடைசியில் அமைந்த அஞ்சலகத்தைக் காணலாம்.

இனி குன்ஜியை விட்டு காலாபானி என்ற இடத்தை நோக்கி மலையை நோக்கி பயணமாகிறோம். இந்த வழியில் ஒரு வென்னீர் நீர் ஊற்று இருக்கிறது.

காலாபானிக்குள் நுழைவதற்கு முன்னர் ஒரு காளி கோயிலைத் தரிசிக்கிறோம். இந்த இடத்திலிருந்து தான் காளிந்தி நதி உற்பத்தியாகிறது. இந்த காளிந்தி நதி கரையிலே நாம் பயணம் செய்கிறோம். காலாபானியில் கூடாரம் அமைத்து தங்கிவிட்டு மறுநாள் நவிதாங் என்ற இடத்தை அடையலாம்.

நவிதாங் என்ற இந்த இடமே இந்திய எல்லையின் கடைசி பகுதியாகும். அதனைக் கடந்து லிபு கணவாய் எனும் கணவாயை அடைகிறோம். இதன் அடுத்த பகுதி சீன எல்லையாகும். இங்கு எப்போதுமே பனி பொழிந்து மூடியவாறுள்ளது.

இந்த கணவாயின் தொடக்கத்தில் சீனர்கள் நமது பயணப் பொறுப்பை ஏற்றுக்கொள்கின்றனர். நமது விசா முதலியவை சரிபார்க்கப்படுகிறது. அவர்கள் வரும்போது நமது சரக்குகளை ஏற்றிச் செல்ல யாக் எனும் சடை எருமைகளை ஓட்டிவருகின்றனர். நடக்க முடியாதவர்கள் அந்த எருமைகளில் பயணம் செய்யலாம்.

இங்கிருந்து சுமார் 2 கி.மீ. ஐஸ் பகுதி முடியும் வரை நடத்தி அழைத்து செல்கின்றனர். பிறகு 22 கி.மீ. மட்டக்குதிரையில் பயணம் செய்து தக்லக்கோட் என்ற ராணுவத்தளத்தை அடையலாம்.

இங்கிருந்து அதிகாலை பயணம் தொடங்குகிறது. குழுவினரை இரண்டாகப்பிரித்து ஒரு குழுவினரை கயிலைமலைக்கும் மற்றொரு பிரிவினரை மானசரோவர் ஏரிக்கும் லாரியில் ஏற்றி அனுப்புகின்றனர்.

கயிலை மலையை வலம் வருவதற்கான குழு ஏறிய வண்டி தார்ச்சிங் என்ற முகாமில் பக்தர்களை இறக்கிவிடுகிறது. இங்கிருந்து தான் அன்பர்கள் கயிலை மலையை வலம் வரத் தொடங்குகின்றனர்.

கயிலை மலையை வலம் வர மூன்று நாட்கள் ஆகின்றன. மொத்தம் 55 கி.மீ. முதல் நாள் 20 கி.மீ. இரண்டாவது நாள் 20 கி.மீ. மூன்றாவது நாள் 15 கி.மீ.

கைலாச மலையைப் பிரதட்சிணம் செய்வதற்கு டார்ச்சின் அடித்தள முகாமிலிருந்துதான் (15,100 அடி உயரம்) கிளம்புவது வழக்கம். நாம் தெற்கிலிருந்து புறப்பட்டு முதலில் மேற்குப்புறத்தைத் தரிசிக்கிறோம். டார்ச்சிங்கிலிருந்து மலையேற ஆரம்பித்தவுடன் மாந்தாதா மலைத் தொடர், ரட்சஸ்தால், பார்க்கா சமவெளி ஆகியவற்றைப் பார்த்துக் கொண்டே போகலாம். இங்கிருந்து நான்கு மைல் நடந்தவுடன் ஷெர்ஷுங் என்ற இடத்தில் டார்போக் என்ற புத்தகக் கொடி மரத்தைக் காண்கிறோம். வைகாசி பௌர்ணமி தினத்தில் இங்கு கொடியேற்றப்படுகிறது. அதையொட்டி பெரிய விழா கொண்டாடுகின்றனர்.

பகவான் தெற்குப் பக்கம் பார்த்து இருக்கிறார். சிகரத்தின் நடுவில் படிகள் போன்ற அமைப்பு மலையை இரு பாதியாகப் பிரிப்பது போல உள்ளது. இக்காட்சி வலப்பக்கம் அம்பாளாகவும், இடப்பக்கம் சிவனாகவும் மொத்தத்தில் அர்த்தநாரீஸ்வரராகக் காட்சியளிக்கிறது. ஒரு கோணத்தில் பார்த்தால் நந்தி அமர்ந்திருப்பது போல இருக்கிறது

என்கின்றனர். சிலர், மூன்று கோடுகளைப் பார்த்து அது விபூதிப்பட்டை என்று நினைக்கிறார்கள். ஆக, யார் யார் எந்தெந்த நோக்கில் பார்க்கிறார்களோ அந்த வடிவத்தில் கயிலைநாதன் காட்சியளித்துக் கொண்டிருக்கிறான்.

இதன் வடமேற்கே உள்ள சிகரத்துக்கு ராவண சிகரம் என்று பெயர். லாகூ என்று ஒரு சின்ன ஆறு. இதைத் தாண்டினால் இரண்டு, மூன்று மைல் பயங்கர ஏற்றம். டோல்மாலா கணவாய் 18,600 அடி உயரம். இங்கு முழுக்க முழுக்கப் பனி பொழிந்து மூடியுள்ளது. தவறி வழுக்கி விழுந்தால் உயிருக்கே ஆபத்தானது. டோல்மாலா கணவாயிலிருந்து இரண்டு பர்லாங் தூரம் கீழே நேராக இறங்கி கௌரிகுண்டத்தை அடைகிறோம். இது கைலாசத்திற்குக் கிழக்குப் பக்கமாகவும், ஈசனுக்கு இடப்பக்கமாகவும் அமைந்திருக்கிறது. இங்கே பார்வதி தவம் செய்து பகவானை அடைந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

கைலாயத்தை ஒரு முறைவலம் வந்தால் ஒரு முறை வந்தால் ஜன்மத்துப் பாபங்கள் போய்விடுகிறது என்றும், பத்து முறை வலம் வந்தால் ஒரு கல்பத்தில் செய்த பாபங்கள் அகலும் என்றும், 108 முறை வலம் வந்தால் இந்த ஜன்மத்திலேயே அனைத்தும் கிட்டும் என்றும் நம்பிக்கைகள் இருந்து வருகின்றன.

கைலாசத்தின் வடக்குப் பகுதியில் விபூதி மலை என்ற ஒரு மலை உள்ளது. அந்த மலையின் மண்ணை சிவப்பிரசாதமாக எடுத்துக் கொள்கின்றனர். அதுபோல், மற்றோர் இடத்தில் சிவப்பு மண்ணும் கிடைக்கிறது. அதைக் குங்குமப் பிரசாதமாக எடுத்துச் செல்கின்றனர்.

மூன்றாம் நாள் கௌரி உட்யார் என்ற இடத்தை அடைகிறோம். இது குர்லா மாந்தாதா மலைத்தொடருக்கருகில் உள்ளது. இங்குதான் மஹாகணபதி பிறந்ததாகக் கூறுகிறார்கள். இந்த இடத்திலிருந்து இறுதியாகக் கைலாய மலையைத் தரிசனம் செய்ய முடிகிறது. இதற்குப் பின்னர் வேறு மலைகள் குறுக்கிடுவதாலும் நாம் பள்ளத்தாக்கை நோக்கிச் சென்று விடுவதாலும் கைலாசம் நம் கண்களுக்குப் புலப்படுவதில்லை. கைலாச தரிசனம் முடிந்து திரும்பப் போகிறோமே என்ற ஒரு பிரிவாற்றாமை மனத்தில் சூழ, நீண்ட நேரம் அங்கே நின்று கண்களில் நீர் மல்கக் கை தொழுது வணங்கி திரும்ப மனம் இல்லாமல் திரும்புகிறோம்.

கயிலைமலை யாத்திரை முடிந்து மீண்டும் டார்ச்சிங் ராணுவத்தளத்தை அடைகிறோம். அங்கிருந்து ஒரு லாரியில் ஏற்றி நம்மை மானசரோவர் ஏரிக்கரையில் விடுகின்றனர்.

இந்த ஏரிக்கு போகும் வழியில் மேற்கே மூன்று அல்லது நான்கு மைலுக்குள் 'ரட்சஸ்தால்' ஏரி இருக்கிறது. இந்த ஏரி ராவண ஸரோவர், ராட்சஸ ஸரோவர் என்றும் அழைக்கப்படுகிறது.

கைலாயத்தை ராவணன் பெயர்த்து இலங்கைக்கு எடுத்துச் செல்ல முயற்சித்தபோது ஏற்பட்ட வியர்வை நீர் தான் இந்த ஏரி என்கிறார்கள். வேறுசிலர் ராவணன் தவம் செய்த இடம் என்றும் அப்போது அவன் வேள்வித்தீயில் தன்னுடைய தலைகளை ஒன்றன்பின் ஒன்றாக அறுத்து சிவபெருமானுக்கு காணிக்கை அளித்தபோது சிந்திய ரத்தம்தான் இப்படி ஏரியாக மாறியுள்ளது என்று கூறுகின்றனர்.

ரட்சஸ்தால் ஏரி, மானஸசரோவரை விடப் பெரியது. இது கைலாச மலைக்கு நேர் தெற்கில் இருக்கிறது. இந்தத் தண்ணீரைக் குடித்தால் வயிற்றுப் போக்கு ஏற்படுமென்றும் இதில் குளித்தபோதெல்லாம் உடல் வலி ஏற்பட்டதென்றும், இது ஒரு விஷத் தன்மை வாய்ந்த நீர் என்றும் கூறினார்கள். இதில் பேய்களும் பூதங்களும் வாழ்வதாக திபெத்திய நூல்கள் கூறுகின்றன.

ரட்சஸ்தால் ஏரியிலிருந்து மானஸசரோவர் ஏரியை வந்தடைகிறோம். இது 15,000 அடி உயரத்தில் மிக்க அமைதியோடு விளங்கும் மிகப் பெரிய ஏரியாகும். இதன் சுற்றளவு 54 மைல்களாகும். ஏறத்தாழ 200 சதுர மைல் பரப்பளவு உள்ளது. புராணங்களின்படி இது பிரம்மாவின் மனத்திலிருந்து படைக்கப்பட்டதால் இதற்கு மானஸசரோவர் என்று பெயரிடப்பட்டதாக கூறுவர்.

"இந்த மகத்தான தடாகம் இருந்த இடத்தை அடைந்தவர்களும், அதில் நீராடியவர்களும் பிரம்மலோகமான சொர்க்கத்தை அடைவார்கள்" என்று ராமயணத்தில் இந்த ஏரியைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. மேலும் மானஸசரோவர் ஏரியின்

நீரை அருந்துபவர்கள், மனிதப் பிறப்பாக இருந்தாலும் அல்லது விலங்குப் பிறப்பாக இருந்தாலும் நூறு பிறவியில் செய்த பாவங்கள் நீங்கப் பெற்று சொர்க்கத்தை அடைவார்கள் என்றும் கூறுகிறது. ஏரியின் கரையில் நாகராஜாவின் அரண்மனை இருப்பதாகவும், அங்குள்ள தோட்டத்தில் ஏழு வரிசைகளாக அமைந்திருக்கும் தெய்வீகமான நாவல் மரங்களின் பழங்கள் மானஸசரோவரில் விழுவதாகவும், தேவர்களும் ரிஷிகளும் சித்தர்களும் அந்த நாவற்பழங்களைத் தேடி எடுத்துச் கொள்வதாகவும் திபெத்திய புராணங்கள் கூறுகின்றன. இதனால் தான் மானஸசரோவர் ஏரியின் தெற்கேயுள்ள நமது பாரத தேசத்திற்கு ஜம்பூ (நாவல்) த்வீபம் என்ற பெயர் ஏற்பட்டதென்பர்.

இந்த ஏரியின் தண்ணீர் மிகவும் குளிர்ச்சியாகவும், சுவை, கல்கண்டைப் போலவும் தித்திக்கிறது. வேண்டும்போதெல்லாம் தண்ணீரை வாரி வாரிக் குடிக்கலாம். இதில் அவசர அவசரமாக முழுக்குப் போட்டுவிட்டு உடனே ஓடி வர வேண்டியிருக்கிறது. குளித்த பிறகு மார்பைத் திறந்து போட்டுக் கொண்டு இருக்கக்கூடாது என்று எச்சரிக்கிறார்கள்.

பனிக் காலத்தில் மானஸசரோவர் பகுதியில் மீன்கள், வாத்துகள், ஆட்டுக்குட்டிகள், குதிரைகள், பனியிலும் பனிப்புயலிலும் சிக்கி மாண்டுவிடுமாம். ஆனால், பனி கரைந்து மீண்டும் ஏரியில் தண்ணீர் வந்தவுடன் மீன்களும், வாத்துகளும் குடியேறி விடுகின்றன. இவை எப்படி, எங்கிருந்து வருகின்றன என்பது யாருக்கும் புரியவில்லை.

மானஸசரோவரைச் சுற்றிலும் பல சிறிய ஏரிகளும், குளங்களும் இருக்கின்றன. வடக்குப் பக்கமாக இருக்கும் குர்க்யால்-சுங்கோ என்னும் ஏரி, மானஸசரோவரின் தலைப் பாகம் எனக் கருதப்படுகிறது. தேவர்களும் தேவதைகளும் இங்கே வந்து குளிப்பதாக ஒரு நம்பிக்கை இருந்து வருகிறது.

தெற்கிலிருந்து கங்கை, மேற்கிலிருந்து சட்லெஜ், வடக்கிலிருந்து சிந்து, கிழக்கிலிருந்து பிரம்மபுத்திரா நதிகள் உற்பத்தியாகி ஏரியை உள்ளுக்குள்ளேயே ஏழு முறை வலம் வந்த பின்னர் பல்வேறு திசைகளுக்குச் செல்கின்றன என்று கூறுகிறார்கள். ஓர் இடத்தில் மானஸசரோவரிலிருந்து தண்ணீர் வெளியே ரட்சஸ்தாலுக்குப் பாய்கிறது. அந்த நதியின் பெயர் தான் 'கங்கா சு' இதுதான் ரட்சஸ்தானல் ஏரியில் கலக்கிறது என்று கூறுவர்.

ஏரியிலும் அதன் கரைகளிலும் சிறியதும் பெரியதுமாகப் பலவிதமான பறவைகள் காணப்படுகின்றன. வெள்ளை நிறத்திலும், தங்க நிறத்திலும் வாத்துகள் உள்ளன.

இந்த ஏரியின் கரையில் கூழாங்கற்கள் பல நிறங்களில், பல்வேறு உருவங்களோடு காட்சியளிக் கின்றன. கரைகளில் மூலிகைகளும் கிடைக்கிறது. மானஸசரோவர் ஏரிக்குள் கற்பக விருட்சம் இருப்பதாகக் கூறுகிறார்கள். அதனால் மானஸசரோவர் ஏரிக்கரையில் கிடக்கும் கூழாங்கற்களை வீட்டுக்கு எடுத்துவருகிறார்கள். இதனால் அதிர்ஷ்டமும் நிம்மதியும் கிடைக்கிறதாம்.

மானஸசரோவர் ஏரியை வலம் வரும்போதும் நிலை வெளிச்சத்தில் பார்க்கும்போதும் சொர்க்கபுரியில் இருப்பது போல ஓர் அனுபவம். உண்டாகிறது. அதிலும் பௌர்ணமி நிலவில் சந்திரனின் கிரணங்கள் ஏரியின் நீரில் பட்டுப் பிரதிபலிக்கும் காட்சி வர்ணிக்க முடியாத அற்புதமாகும்.

மானஸசரோவர் ஏரியை வலம் வருவதற்கு 3 நாட்கள் ஆகின்றன. இங்கும் கூடாரங்களில் தங்க வேண்டியுள்ளது. ஏரியை வலம் வந்த பிறகு மீண்டும் லாரியின் மூலம் பேஸ்கேம்ப் எனப்படும் தக்லக்கோட்டைக்கு திரும்புகிறோம்.

பின்னர் சென்ற வழியிலேயே திரும்பி டெல்லிக்கு வருகிறோம்.

கற்பனை கடந்த ஜோதி கருணையே உருவமாகி வெண்பனித் திரளாக மோனத் தவம் இருக்கும் இக் கயிலாயக் காட்சியைக் கண்டு உவந்து பெருமானின் அருளாக விளங்கும் அன்னை பராசக்தியின் வடிவாக விளங்கும் கௌரிகுண்டத்தில் மூழ்கி குமாரன் அறுமுகச் சிவனாக எழுந்த சரவணப் பொய்கையாம் மானஸரோவரத்தில் புகுந்து ஆடி இம் மானிடப் பிறவியின் பயனை பெற்று மகிழ்கிறோம்.

கயிலை மலைத்தரிசனம் - சிறுகுறிப்புகள்

★ கயிலை மலையின் உயரம் 22,028 அடிகள்.

★ வலம் வருவதற்கு மூன்று நாட்களாகும். மொத்தம் 55 கிலோ மீட்டர். முதல்நாள் 20 கி.மீட்டரும் இரண்டாவது நாள் 20 கி.மீட்டரும் மூன்றாம் நாள் 15 கி.மீட்டரும் பயணம் செய்கிறோம். இவ்வாறு வலம் வரும்போது வழியில் உள்ள இடங்கள். தார்ச்சினில் இருந்து நந்திகும்பா - 5 மைல், அங்கிருந்து தேராஃபூக் - 7 மைல், தொடர்ந்து கௌரிகுண்டம் - 4 மைல், அங்கிருந்து சுண்டல் ஃபூக் - 9 மைல், அங்கிருந்து தார்ச்சின் ஏறத்தாழ - 9 மைல், ஆக மொத்தம் 32 மைல்கள் (கிலோமீட்டரில் 53 மைல்).

★ கயிலை மலையை வலம் வருவதற்கு இரண்டு முறைகள் உண்டு. முதலாவது இப்போது அனைவரும் பயன்படுத்தும் வழியாகும். இதில் கயிலை மலையினையும் கௌரி குண்டத்தையும் சேர்த்து வலம் வருகிறோம். இதற்கு வெளிப் பரிக்கிரமா என்று பெயர் (பரிக்கிரமா - வலம் வருதல்)

★ இரண்டாவது வகை உட்பரிக்கிரமா அல்லது உட்சுற்றாகும். இதில் கயிலை மலையை மட்டுமே சுற்றிவருகிறோம். அதுமில்லாமல் வெளிப்பரிக்கிரமா செய்யும்போது கயிலை மலையினை தொலைவில் இருந்தே சுற்றி வருகின்றோம். உட்பரிகிரமா செய்யும்போது கயிலையின் அடிவரையை தொட்டுக் கொண்டே வலம் வரலாம்.

★ ஆனால் உட்பரிகிரமா செய்வது மரணத்தின் விளிம்பில் நின்றே பயணம் செய்வதாகும். ஆயிரம் அடிக்கும் மேற்பட்ட மலையில் இருந்து விழும் பனித்துண்டுகள், கற்கள் ஆகியவற்றை மரணத்தை ஏற்படுத்துகின்றன. என்றாலும் பலர் இதனையும் ஏற்றுக்கொள்கின்றனர். இம்மலையின் அடிவாரத்தில் நீண்ட குகைகள் உள்ளன. இவை கயிலை மலையைத் தூக்க ராவணன் தன் கைகளைக் கொண்டு அகழ்ந்த இடங்கள் என்கின்றனர்.

★ கயிலைமலையைச் சுற்றிலும் 20க்கும் மேற்பட்ட மலைகள் உள்ளன. விநாயகர்மலை, இராவணன்மலை என்று பல மலைகள் உள்ளன.

★ இங்குள்ள மலைகள் யாவும் திண்மையற்ற மணற்கல் படிவங்களால் ஆனது எனவே அடிக்கடி சரிந்து விடுகின்றன.

★ இங்கு சுற்றியுள்ள மலைகளில் ஓரளவு பனி படர்ந்துள்ளது என்றாலும் கயிலைமலை மட்டுமே முழுக்க முழுக்க பனிமலையாகக் காட்சியளிக்கின்றது. அச்சிறப்பு அதற்கு மட்டுமே உண்டு.

★ இமயமலைத் தொடரில் கயிலைமலையை விட உயரமான சிகரங்கள் பல உள்ளன. அவற்றில் பலர் ஏறி சாதனை புரிந்துள்ளனர். ஆனால் கயிலைமலை மீது யாரும் ஏறிச் சென்றதுமில்லை செல்ல முயன்றதுமில்லை.

★ கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் ஒரு சில குட்டைத் தாவரங்களை விட வேறெதுவும் இல்லை. சில பூக்கள் இலைகள் கூட இல்லாமல் பூத்திருக்கின்றன.

★ கயிலை யாத்திரை பனி படர்ந்த இடத்தில் நடைபெறுவதால் பக்தர்கள் பனிச்சரிவு கடுங்குளிர் மலைச்சரிவுகள் பனிப்புயல் ஆகியவற்றை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

★ முறையான பாதையோ வழிகாட்டுதலோ இல்லாமையால் தனித்து செல்வது ஆபத்திலேயே முடியும் எனவே கூட்டத்தைவிட்டுப் பிரியாமலும் கையிலுள்ள ஊன்றுகோலைப் பிரியாமல் இருப்பதே பாதுகாப்பானது.

★ இமயமலையின் பனிநாய்களின் தொல்லையும் அதிகம் அவற்றிடம் தனியாக சிக்கினால் கடித்துக் குதறிவிடும்.

★ கயிலைமலையை வலம் வருபவர்கள் அதிக உணவு எடுத்துக் கொண்டால் நடப்பது சிரமமாகிவிடும். எனவே மாவுருண்டைகள் உலர்ந்த பழங்கள் ரெடிஉப்புமாவு வைட்டமின் மாத்திரைகள் ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. தென்னிந்தியர் ஊறுகாய், அரிசி, பருப்பு ஆகியவற்றை அபூர்வமாக எடுத்துச்சென்று உணவு சமைத்து உண்கின்றனர். பொதுவாக அங்கு உணவு சமைப்பது கடினம் கடுங்குளிரில் எதுவும் சரியாக வேவதில்லை.

★ பயணம் மேற்கொள்ளும்போது சீன

இராணுவ வீரர்கள் குழுவின் முன்புறமும் நடுவிலும் பின்புறம் இருந்தும் கண்காணிப்பதுடன் ஒயர்லெஸ் கருவி மூலம் மேலிடத்திற்கு நமது பயணச் செய்திகளை உடனுக்குடன் தெரிவிக்கின்றனர்.

குளிரைத்தாங்க போர்வைகளும் ஊன்றி நடக்க இரும்புக் கூர்முனையுள்ள கழியும் அவசியம் தேவை. பனியின் வழுக்குதலில் இருந்து விழாமல் நமக்கு இந்த ஊன்றுகோல் துணைபுரிகிறது.

பனிப்பாறைகள் திடீரென்று உருகுவதால் காட்டாறுகளைச் சந்திக்க வேண்டியுள்ளது.

கயிலையின் நான்கு திக்கிலும் வழிபாடு செய்கின்றனர். கயிலைமலையில் இருந்து கயிலைநதி உற்பத்தியாகிறது. இதன் கரையில் நடக்கிறோம்.

திபெத்தியர் 500 போதிசத்வர்களுடன் புத்தர் பெருமான் அங்கு இருப்பதாக எண்ணுவதால் வலம் வரும் போது ஒவ்வொரு அடிக்கும் ஒரு நமஸ்காரம் செய்து இம்மலையை வழிபடுகின்றனர்.

நூறு முறை கயிலைமலையைச் சுற்றிவந்தால் தான் பௌத்த லாமாவாக முடியும் என்கின்றனர்.

சிலர் கயிலைமலைக்கு யாக் எருமைகளை பலியிட்டு வணங்கியதையும் அங்காங்கு காணலாம்.

கயிலை மலை யாத்திரைக்கு விண்ணப்பிப்பவர்கள் பாஸ்போர்ட் வாங்கி வைத்திருக்க வேண்டும்.

யோகநெறிவழியே கயிலையை அடைந்த பெருமிழலைக் குறும்பர்

இறைவன் ஆணைப்படியே சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருக்கயிலை சென்றதும் அவருடைய நண்பரான சேரமான் பெருமாள் நாயனாரும் தனது குதிரையுடன் திருக்கயிலையை அடைந்தார். அவருடைய பயணத்தைக் கேட்ட அவருடைய ஏவலர்கள் தன் ஊன் உடலை விடுத்து உயிர்பிரித்து அவர்களைத் தொடர்ந்து கயிலை சென்றனர்.

இவ்வாறு இவர்கள் சென்றதை தமது யோக சித்தியால் அறிந்த மூவர் தாமும் கயிலை செல்ல விரும்பினர். இவர்களில் முதலாமவரான ஔவையார் வினாயகப்பெருமானை வேண்ட அவர் தனது துதிக்கையினால் அவரை கயிலைக்கு எடுத்து அனுப்பினார்.

இரண்டாமவரான சுந்தரரின் மனைவியான பரவைநாச்சியாரும் (ஔவையார் போலவே) கணபதியை வேண்டி அவரால் கயிலைக்கு அனுப்பப்பட்டார்.

இந்த வரிசையில் மூன்றாமவராக இருந்தாலும் யாவருக்கும் முன்பாகவே கயிலை சென்றவர் பெருமிழலைக் குறும்ப நாயனார் ஆவார். இவர் தஞ்சை மாவட்டத்தில் உள்ள பெருமிழலை எனும் ஊரில் வாழ்ந்து வந்தவர். அந்நாட்டினை ஆளும் குறும்பர் மரபில் வந்தவர். எனவே பெருமிழலைக் குறும்பர் என்றழைக்கப்பெற்றனர்.


இவர் சிவயோக சாதனையில் நின்றொழுகியவர். சுந்தரமூர்த்தி நாயனாரையே தனது வழிபடு கடவுளாகக் கொண்டு வாழ்ந்தவர். இதன் பயனால் அவருக்கு அட்டமாசித்திகள் கைகூடின.

இப்படி இவர் இருக்கும் நாளில் சுந்தரர் பலதலங்களையும் வழிபட்டு கேரள நாட்டில் உள்ள திருக்கொடுங்கோளூரை அடைந்தார். பின்னர் அருகிலுள்ள அஞ்சைக்களம் சென்று திருஅஞ்சைக் களத்தப்பரை வணங்கும்போது அவர் எண்ணத்தில் இந்தப் பூவுலக வாழ்க்கையை விடுத்து திருக்கயிலை செல்லவேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று.

அவர் அவ்வாறு அங்கு எண்ணும்பொழுதே பெருமிழலையில் வாழ்ந்த குறும்பர் மனத்திலும் அந்த எண்ணம் தெரிந்தது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் நாளை கயிலைக்குச் சென்ற பிறகு இப்பூலகில் என்னால் வாழ இயலாது. ஆதலின் எனது யோக சாதனையால் இன்றே கயிலை செல்வேன் என்று உறுதிபூண்டார்.

உடனே யோகாசனத்தில் அமர்ந்து பிரம்மநாடி வழியே பிராணவாயுவை மதிமண்டலத்தில் செலுத்தி பிரணவத்தால் திறக்கப்பட்ட கபால வாயிலின் மூலம் இறைவனை அடைந்தார். சுந்தரர் கயிலை செல்வதற்கு முன்பாகவே அங்கு சென்றார். அங்கு கணத்தலைவராக இருந்து காலம் கனிந்ததும் இறைவனோடு இரண்டறக் கலந்தருளினார்.

இவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் 23 ஆவதாக வைத்து வழிபடப்படுகின்றார். சிவபெருமானின் திருப்பெயரேயன்றி அடியவர்கள் பெயர்கள் கூட மந்திரமாக விளங்கி அட்டமாசித்திகள் அருளி இறுதியில் சிவனடி சேர்க்கும் என்பதை இவருடைய வரலாறு விளக்குகின்றது.



திருக்கயிலைமலை அமைப்பு


△ இக்குறி இமயமலையின் பலவேறு சிகரங்களைக் குறிக்கிறது. இம்மலையில் பிறந்து ஓடும் பல ஆறுகளையும் காண்கிறோம். முன்னாளில் இதில் காட்டியபடி தீர்த்தகுடி, ஞானிமா மண்டி, பார்க்கா முதலிய பல வழித்தடங்களில் மக்கள் திருக்கயிலைமலைப் பயணத்தை மேற்கொண்டனர். ஆனால் இப்போது அரசு நிர்ணயித்த வழியில் மட்டுமே பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப் படுகிறது.................. இப்புள்ளிப் பாதைகள் வெளிப் பரிக்கிரமா வழிகளையும் உட்பரிக்கிரமா வழிகளையும் காட்டுகிறது.


திருக்கயிலை யாத்திரை வழி

திருக்கயிலைக்கு மேற்கொள்ளப்படும் யாத்திரை வழியை இது சுட்டுகிறது.

நன்றி.

இவ்வரைபடங்கள் தருமையாதீனத்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் சுப்பிரமணிய தேசிகர் பரமாசாரியர் சுவாமிகள் திருக்கயிலை யாத்திரை மேற்கொண்டதை விளக்கும் திருக்கயிலாய யாத்திரை எனும் நூலில் இருந்து திரட்டப்பட்டதாகும்.




Delhi—Kailash Route
Not to the scale
டெல்லியிலிருந்து கைலாயத்திற்கு செல்லும் பாதையைக் காட்டும் வரைபடம்
டெல்லி - (160கி.மீ.) மொராதாபாத் - (27கி.மீ.) ராம்பூர் - (45கி.மீ.) ருத்ரபூர் - (13கி.மீ.) கிச்சா - (29கி.மீ.) சிதார்கஞ்ச் - (27கி.மீ.) கத்திமா - (28கி.மீ.) தானக்பூர் - (75கி.மீ.) சம்பாவாட் - (76கி.மீ.) பித்ராகாட் - (96கி.மீ.) தார்ச்சுலா - (19கி.மீ.) தவாகாட் (இதுவரை உள்ளது சமதள்ப்பாதை - இனி செல்ல இருப்பது மலையேறும் பாதை) -(9கி.மீ.) பாங்க் - (8கி.மீ.) சிர்கா - (17கி.மீ.) ஜிப்டி - (8கி.மீ.) மால்பா - (8கி.மீ.) புத்தி - (17கி.மீ.) குஞ்சி - (10கி.மீ.) காலாபானி - (9கி.மீ.) நபிதங் - (6 கி.மீ.) லிபு பாஸ் - ராட்சதல், மானசரோவர் ஏரிகள் - கைலாஷ்.
நன்றி : குமாயூன் மண்டல் விகாஸ் நிகம் லிமிடெட்-1984.
(இட்டினரி பார் கைலாஷ் மானசரோவர் - 1984)
KAILASH
RAKASTAL
4590 M
MANSAROVAR
4603 M
Lipu Pass 5334M
6 Kms.
Nabidhag 3600M
9 Kms
Kalapani 3370M
10 Kms.
Gunji 3500M
17 Kms.
Budhi 2740M
8 Kms.
Malpa 2018M
8 Kms.
Jipti 2378M
17 Kms.
Sirkha 2440M
8 Kms.
Pangu 2250M
9 Kms
Tawaghat 914M
19 Kms.
Dharchula 615 M
96 Kms.
Pithoragarh
76 Kms.
Champawat
75 Kms.
Tanakpur
28 Kms.
Khatima
27 Kms
Rampur
27 Kms.
Kichha
13 Kms
DELHI
Moradabad
160 Kms.
Rudrapur
45 Kms.
Sitarganj
29 Kms
INDEX
MOTOR ROAD
TREKKING ROUTE
COMFORT NIGHT



மகாசிவராத்திரி

சிவபெருமானுக்குரிய சிறப்பான எட்டு விரதங்களுள் ஒன்று மகாசிவராத்திரியாகும். இது சைவர்களால் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. இந்த சிவராத்திரி விரதத்தை எண்ணிலாதவர்கள் கடைப்பிடித்துப் பலனடைந் திருக்கிறார்கள்.

மாசி மாத தேய்பிறைச் சதுர்த்தசியை ஒட்டிக் கொண்டாடப்படும் மகாசிவராத்திரி இந்தியாவெங்கும் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது. அன்று இரவு முழுவதும் பூஜைகளும், பஜனைகளும், கலைநிகழ்ச்சிகளும் நடை பெறுகின்றன.

சிவபூசையைச் செய்ய விரும்புபவர்கள் சிவராத்தியின் மூன்றாவது காலத்தில் உரிய குருவின் மூலம் சிவலிங்கத்தையும் மந்திரதீட்சையையும் பெற்று பூசையைத் தொடங்குவது சிறப்புடையது என்று ஆன்றோர் கூறுவர்.

சிவராத்திரி விரதத்தை அதன் பயன் தெரியாது எதிர்பாராது தற்செயலாக அனுஷ்டித்த போதும் அன்பினால் ஆசாரங்கள் குறைந்த நிலையில் அனுஷ்டித்தபோதும் மேலான பலன்களை சிவபெருமான் அளித்தருள்கிறார். விரதங்களுள் தலையானது சிவராத்திரி விரதமேயாகும்.

சிவமஞ்சரியின் பத்தாவதாகிய இந்த மலரில் சிவராத்திரி தோன்றிய வரலாறு விளக்கும் புராணக்கதைகள், அந்த விரதத்தை தெரிந்தும் தெரியாமலும் கடைபிடித்து வணங்கி பேறுபெற்றோர், சிவராத்திரிக்குரிய சிறப்புமிக்க தலங்கள், சிறப்பு வழிபாடுகள், ஆகியவற்றை விரிவாகக் காணலாம்.

புராணங்கள் காட்டும் சிவராத்திரி தோன்றிய வரலாறு

மகாசிவராத்திரி விரதம் கொண்டாடப் படுவதற்கான காரணத்தைப் பல புராணநூல்கள் விரிவாகக் கூறுகின்றன. அவற்றுள் சிலவற்றை இப்பகுதியில் காணலாம்.



பார்வதி சிவபூஜை செய்தல்

1. பார்வதி இயற்றிய சிவராத்திரி

ஒரு காலத்தில் உலகம் அழிந்து, யாவும் சிவபெருமானுள் ஒடுங்கியது. அந்தகாரம் சூழ்ந்த அந்த இருளில் பார்வதிதேவியார் சிவபெருமானை ஆகமங்களில் கூறியுள்ளபடி நான்கு காலம் வழிபட்டாள். அவ்வாறு அவளால் வழிபடப்பட்டதின் நினைவாகத் தொடர்ந்து சிவராத்திரி கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த இருளில் பார்வதிதேவியார், பரமனை நோக்கி இந்நாளில் நான் எவ்வாறு வழிபட்டேனோ அப்படியே வழிபடுபவர்களுக்கு இம்மையில் செல்வமும் மறுமையில் சொர்க்கம் இறுதியில் மோட்சமும் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். பரமசிவனும் அப்படியே ஆகட்டும் என்று அருள்பாலித்தார். அதன்படியே அன்று முதல் சிவசக்தி வடிவான சிவராத்திரி சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

2. பிரமதேவனும் திருமாலும் போற்றிய சிவராத்திரி

ஒரு சமயம் பிரமனின் பகற்காலமான சதுர்யுகம் முடிந்து அவன் உறங்கப்போனான். அதனால் உலகம் ஒடுங்கியது. சந்திர சூரியர் விண்மீன்கள் யாவும் அழிந்தன. தேவர்கள் யாவரும் அழிந்தனர். பெரும்பிரளயமானது திரண்டு சகலபுவனங்ளையும் அழித்தது. அப்போது சனலோகம் மட்டும் நிலைபெற்றிருக்க அதில் முனிவர்கள் மட்டும் பாதுகாப்பாகத் தங்கினர். அந்த அந்தகாரம் சூழ்ந்த இரவில் பிரமன் தூங்கினான். திருமாலும் பொங்கிய வெள்ள நீரில் மிதந்து வந்த (வடவால விருட்சத்தின்) ஆல்இலை மீது அழகிய குழந்தை வடிவுடன் உறங்கினார். இவ்வாறு ஆயிரம் சதுர்யுகங்ளைக் கொண்ட பிரம தேவனின் இரவுப்பொழுது முடிந்து பகற்பொழுது தோன்றியது. அப்போது சனலோகத்தில் இருந்த முனிவர்கள் திருமாலை வழிபட்டனர். ஆலிலையில் துயின்று கொண்டிருந்த பெருமாள் தம் உறக்கம் கலைந்து எழுந்தார்.

பிறகு திருமால் முன்போலவே உலகினைப் படைக்க எண்ணினார். அந்தக் கணமே பெருகிய வெள்ளம் வடிந்து கடல்கள் அதனதன் இடத்தில் முன்போல் நின்றன. அப்போது திருமால் தாம் படைத்த உலகினைக் காணாது வருந்தி ஒருகணம் யோகத்தில் ஆழ்ந்து அது கடலின் அடியில் இருப்பதைக் கண்டார்.

உடனே தான் ஒரு வலிய வெள்ளைப் பன்றியாக வடிவம் கொண்டு கடலுக்கு அடியில் புகுந்து அதனைக் கலக்கி, தம் வலிய கொம்புகளினால் உலகத்தினை இடந்து மேலே கொண்டு வந்தார். பரந்து விரிந்த உலகத்தை நிலைப்படுத்திய பின்னர் தம்மைவிட இச்செயலை ஒருவராலும் செய்ய முடியாது என்ற இறுமாப்பு கொண்டார். பின்னர் ஓய்வெடுக்கக் கருதி பாற்கடலுக்குச் சென்று இரவு பகல் பாராது அறிதுயில் கொள்ளலானார்.

அவருக்குப் பின் எழுந்த பிரமதேவன் உலகில் அளவற்ற அசுரர், தேவர், மனிதர், விலங்குகள், முதலான 84000 லட்சம்

ஜீவராசிகளையும் படைத்தான் இந்திரன் முதலான திக்பாலகர்களையும் படைத்து உலகினை நடைபெறச் செய்தான். பின்னர் அவன் ஒருசமயம் தான் படைத்த உலகினைச் சுற்றிப்பார்க்க அதனை வலம் வந்தான்.

இந்த உலகம் "நான் உறங்கினால் அழிந்து விடுகின்றது. நான் விழித்து எழுந்தால் தான் மீண்டும் படைக்கப்படுகின்றது". அதனால் நானே கடவுள் என்னைவிட மேலானவன் எவனுமில்லை," என்று கர்வம் கொண்டான். அப்படியே வலம் வரும் போது பாற்கடலில் இதே எண்ணத்துடன் உறங்கும் திருமாலையும் கண்டான். உடனே அவனுக்குக் கோபம் உண்டாயிற்று. என்னைவிட இவன் வலியவனா? என்று தனக்குள் கேட்டுக்கொண்டே அவர் அருகில் சென்று ஓங்கி அவர் மார்பில் அடித்தான். அவர் துணுக்குற்று எழுந்தார்.

அப்போது திருமால் கண்விழித்து பிரம்மனை நோக்கி, "அன்பான மகனே ! நான்தான் உன்னைப்படைத்தவன். உன் தந்தை" என்று கனிவுடன் கூறினார். அதைக் கேட்ட பிரமன் மேலும் கோபம் கொண்டான்.

அவரோடு வாய்ப்போரில் ஈடுபட்டான். "திருமாலே! உன்னை நீயே பிரம்மமென்று கூறிக்கொள்கின்றாய். பத்து அவதாரங்களுக்கு மேல் எடுத்தவன் நீ. அப்போதெல்லாம் உன்னைப் படைத்தவன் நான். ஆதலின் உன்னையும் படைக்கும் ஆற்றல் உடையவனான என்னைப் பார்த்து வீண்வார்த்தை பேசாதே !" என்றான்.

அப்போது திருமால் அவனைச் "சீறி, எனது உந்திக் கமலத்தில் உதித்த நீ என்னைவிடப் பெரியவனா?" என்றார்.

பிரமன் மேலும் சினம்கொண்டான். "மாயனே ! விறகில் தீ உண்டாவதால் தீயினுக்கு விறகு தந்தையாகி விடுமா? அதுபோல நீயும் நரசிம்ம அவதாரத்தில் தூணில் இருந்து தோன்றினாய். அதற்காகத் தூண் உனக்குத் தந்தையாகுமா?

உன் கொப்பூழ் தாமரையில் உதித்த என் தத்துவத்தை உணராது பிதற்றுகின்றாய்? என்று கேட்டான். இவ்வாறு இருவரும் சொற்போரிட்டு, இறுதியில் இது ஆயுதப்போராக முடிந்தது.

திருமால் சரமாரியாக பாணங்களைப் பிரமன் மேல் விடுத்தார். பிரமனும் சளைக்காமல்



நடுவில் பெருந்தூணாக சிவபெருமான் நிற்க இருபுறமும் பிரமனும், திருமாலும் நிற்பது

ஆயுதங்களைத் தொடுத்தான்.

திருமால் தம்முடைய நாராயண அஸ்திரத்தை ஏவ, பிரமன் அவர்மீது பிரம்மாஸ்திரத்தை ஏவினான். அவை இரண்டும் பயனற்றுப்போயின. பிறகு திருமால் சிவபெருமானிடமிருந்து பெற்ற பாசுபதாஸ்திரத்தை ஏவினான். பிரம்மன் மஹேஸ்வராஸ்திரத்தை ஏவினான். இரண்டு அஸ்திரங்களும் மோதிக் கொள்ளாமல் சிவபெருமானிடம் சென்று ஒடுங்கிவிட்டன.

தேவர்கள் அனைவரும் கூடி இவர்கள் இருவரும் மோதிக்கொண்டு தாம் அழிவது மட்டுமின்றி உலகினையும் அழித்துவிடுவார்கள் என்று அஞ்சி சிவபெருமானிடம் சென்று சரணடைந்தனர்.

சிவபெருமான் அவர்களுக்கு அபய

அடிமுடிதேடல்

பிரமனும் மாலும் பிரானே நான் என்ன
பிரமன் மால் தங்கள் பேதமையாலே
பரமன் அனலாய் பரந்து முன் நிற்க
அரன்அடி தேடி அரற்றுகின்றாரே.
- திருமந்திரம்.

மளித்து அவர்களுடன் யுத்தம் நடக்கும் இடத்திற்கு வந்தார். அவர்கள் இருவருக்கும் இடையே பெரிய ஒளிபொருந்திய நெருப்புத் தூணாக நின்றார். அதன் திடீர்ப் பிரவேசத்தையும் அதன் கோடிசூர்யப் பிரகாசத்தையும் கண்ட இருவரும் தம் சண்டைகளை விட்டுவிட்டு மிகவும் ஆச்சரியம் அடைந்தனர்.

அப்போது திருமால் பிரம்மனை நோக்கி "நமக்கு இடையில் அதிமகிமை பொருந்திய மூன்றாவது ஒருவனும் இருக்கிறான். அவனாலேயே இது உண்டாக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் இதன் அடியையும் முடியையும் முதலில் அறிவோம் என்று முடிவு செய்தனர்.

அதுவும் சரியே என்ற பிரமன் அன்ன வடிவம் தாங்கி மேலே பறந்து சென்று அதன் உச்சியைக் காண விரைந்தான்.

திருமால் வலிய கொம்புகளையுடைய பன்றியாகி, பூமியை அகழ்ந்து சென்று அதன் மூலத்தைக் காண முயன்றார்.

மேலே சென்ற பிரமன் பெருங்காற்று வீசுவது போலச் சிறகுகளை வீசிக்கொண்டு விரைந்து பறந்தான்.

திருமால் பூமியைப் பிளந்து விடுவது போல ஆழமாகத் தோண்டிக் கொண்டே சென்றார்.

ஆண்டுகள் பலவாயின. அவர்களால் எதையும் காணமுடியவில்லை. உடலும் சோர்ந்து உள்ளமும் சோர்ந்து களைப்படைந்தார்கள்.

பிரமன் மனம் கலங்கி தன் அகங்காரம் அழிந்து தனக்கு ஏற்பட்ட ஞானத்தால் சிவபெருமானை உணர்ந்து அவரைத் தியானித்தான். அதுபோலவே திருமாலும் உடலும் உள்ளமும் சோர்ந்து சிவபெருமானைத் துதித்தார்.

இருவரும் தங்களின் தோல்வியை ஒப்புக்கொண்டு பழையபடி பூமியை அடைந்தனர்.

அப்போது திருமால் இடப்பக்கமும் பிரமன் வலப்பக்கமும் நின்று சிவபெருமானைப் போற்றித் துதித்தனர்.

அவர்களோடு சேர்ந்து தேவர்களும், முனிவர்களும் சிவபெருமானின் எல்லையில்லாச் சிறப்புகளைப் போற்றிப்பாடியும், ஆடியும், நெஞ்சு நெகிழ்ந்து பலவாறு துதிசெய்தனர்.

பின்னர் சிவபெருமான் அந்த நெருப்புத் தூணின் மையத்தில் மான், மழு, அபய, வரத முத்திரை தாங்கியவராய்த் தோன்றினார். அவர்களை நோக்கி இனிமையுடன், "வேண்டிய வரங்களைக் கேளுங்கள்" என்றார்.

அவர்கள் மீண்டும் மீண்டும் பெருமானை வணங்கித் தங்களின் பழைய படைத்துக்காக்கும் தொழிலையும் போரில் வெந்து அழிந்து போன தங்களுடைய ஆயுதங்களையும் மீண்டும் தரவேண்டுமென்று வேண்டினர்.

சிவபெருமான் அவர்கள் கேட்டபடியே வேண்டியவற்றை நல்கியதுடன், "அன்பர்களே! இன்று நான் உங்கள் முன்னே தோன்றி அருள்பாலித்த நாள் சிவராத்திரியாகும். இதுபோல் முன்னம் ஒரு சிவராத்திரி நாளில் தேவியும் என்னை அர்ச்சித்துப் பேறுபெற்றாள்" என்றார்.

"இந்நாளில் ஆகமங்களில் கூறியுள்ளபடி பூசை செய்தால் நினைத்த நல்லவைகள்யாவும் நடக்கும். இது பாவங்களைத் தீர்த்து சிவகதி காட்டும் மேலான பூசையாகு",. என்று சொல்லி அஸ்வமேதம் முதலான யாகங்களைச் செய்வதைக் காட்டிலும் நூறுமடங்கு அதிக பலனை இது தரும் என்று சொல்லி கயிலை மலையை அடைந்தார். இந்த சிவராத்திரி தினம் மாசி மாசத்து தேய்பிறை சதுர்த்தசி நாளாகும். இதனையே உலகத்திலுள்ளோர் சிறப்புடன் கொண்டாடி வருகின்றனர்.

இதனை சிவமகாபுராணம் பூர்வபாகம், உபமன்யு பக்தவிலாசம், மகாஸ்காந்தம், நாரதம், லிங்கபுராணம், முதலியன விரிவாகவும் சிற்சில மாறுதலுடனும் கூறுகின்றன. தமிழில் உள்ள கந்தபுராணம், அருணகிரிபுராணம், சிவராத்திரி புராணம், அருணாசலபுராணம் ஆகியவற்றிலும் காணலாம்.

பொதுவாக முன் சொன்ன இவ்விரண்டு கதைகள் வழக்கத்தில் இருந்தாலும், சிவராத்திரி உண்டானதற்கான காரணத்தை மேலும் பல புராணக் கதைகளைக் கொண்டும் அறியமுடிகிறது. அவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்.

I

ஒரு சமயம் பார்வதிதேவியார் விளையாட்டாக சிவபெருமானின் இரண்டு கண்களையும் பொத்தினாள். அதனால் உலகில் இருள் சூழ்ந்து கொண்டது. காலமல்லாத காலத்தில் கொடிய இருள் சூழ்ந்ததனால் உயிர்கள் யாவும் வருந்தின. அப்போது உருத்திரர் தலைமையில் பதினொரு கோடி உருத்திரர்களும் சிவபெருமானை அர்ச்சனை புரிந்தனர். அதனை நினைவு கூரும் வகையில் சிவராத்திரி கொண்டாடப்படுகிறது என்பது சில நூல்களில் குறிக்கப்பட்டுள்ளது.

II

ஒரு சமயம் சிவபெருமான் பாற்கடலில் தோன்றிய விஷத்தை அருந்தி மயங்கியது போலக்கிடந்து திருவிளையாடல் புரிந்து திரயோதசி நாளில் மாலை வேலையில் சந்தியா நடனம் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்த சதுர்த்தசி இரவு நான்கு யாமங்களிலும் தேவர்கள் அவரை அர்ச்சித்துப் போற்றினர். அதுவே சிவராத்திரி எனப் போற்றப்படுகிறது என்பர் சிலர்.

III

பார்வதி தேவியார் ஒருசமயம் விளையாட்டாக சிவபெருமானின் கண்களைப் பொத்தினாள். உலகிற்கு ஒளிவழங்கும் சூரிய சந்திரர்களான அவருடைய கண்கள் மூடப்பட்டதால் உலகம் இருண்டு எங்கும் காரிருள் சூழ்ந்தது. உலகம் கலங்கி நிலையிழந்தது. உடனே பெருமான் நெற்றியில் உள்ள அக்னிமயமான மூன்றாவது கண்ணைத் திறந்தார். இந்த நெருப்புச் சுவாலைகள் தெரிக்கும் கண்ணொளி கண்டு அனைவரும் மேலும் பயந்தனர். அப்போது உமையவள் பரமேஸ்வரனை தொழுது பணிந்தாள். அவள் பூசையில் மகிழ்ந்த சிவபெருமான் அச்சுடர் ஒளியை தன் ஒளியாக்கி அருள்புரிந்தார். அந்நாளை சிவராத்திரி என்று சில நூல்கள் கூறும்.



இதனை உணர்த்தும் தேவாரப்பாடல் ஒன்றை அப்பர்சுவாமிகள் அருளிச் செய்துள்ளார்.

நலமலி மங்கை நங்கை விளையாடி ஓடி
நயனத் தலங்கள் கரமா
உலகினை ஏழும் முற்றும் இருண் மூடமூட
இருள்ஓட நெற்றி ஒருகண்
அலர்தர வஞ்சி மற்றை நயனம் கைவிட்டு
மடவாள் இறைஞ்ச மதிபோல்
அலர்தரு சோதிபோல அலர்வித்த முக்கண்
அவனா நமக்கோர் சரனே.

இப்படி பலவகையில் புராணச் செய்திகள் சிவராத்திரியைக் குறித்து விளக்கினாலும் திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிச் சோர்ந்து அர்ச்சித்த வரலாறே மிகுதியாக வழக்கத்தில் கூறப்பட்டு வருகிறது.

சிவராத்திரியும் தாழம்பூவின் கதையும்

பின்னாளில் தோன்றிய பல சிவராத்திரி புராணக்கதைகளில் தாழம்பூவின் கதையும் இடம்பெற்றுள்ளன. அருணகிரிபுராணம், சிவமகாபுராணஉத்தரபாகம், கந்தபுராண உத்தரபாகம் ஆகியவற்றில் தாழம்பூ பொய்சாட்சி சொன்னக் கதை சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் அடிமுடியே காணமுடியாத இறைவனின் வடிவத்தில் தாழம்பூ இருந்து விழுமாயின் அந்தப்பூ இருந்த இடம் உச்சி என்றும் அது ஒரு வரையறைக்கு உட்பட்ட இடமாகவும் ஆகிவிடும்.

அளவே இல்லாத இறைவனுக்கு இதனால் அளவொன்று இருப்பதைக் கூறியதாகிவிடும். எனவே இக்கதையை சிவபரத்துவத்தை உறுதியாக நம்புபவர்கள் ஏற்பதில்லை. பழம்புராணங்களிலும் இக்கதைகள் இல்லை. எனவே இது இடைச்செருகல் என்று கூறுகின்றனர். என்றாலும் அன்பர்கள் அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக அந்தக் கதையின் பகுதியும் கீழே தரப்படுகிறது.

முன்பு சொல்லப்பட்ட பிரமனும், திருமாலும் ஒளிப்பிழம்பாக நின்ற சிவபெருமானின் அடியையும் முடியையும் தேடிச்சென்றபோது திருமால் நெருப்பின் அடியைக் காணமுடியாது திரும்பிவிட்டார். ஆனால் பிரமனுக்கோ தன் தோல்வியை ஒப்புக்கொள்ள மனம் இடம் தரவில்லை. அவன் அவ்வாறு கலங்கி நின்றபோது ஒரு தாழம்பூ வேகமாக விழுவதைக் கண்டான். அத்தாழம்பூவை நோக்கி, ''நீ எங்கிருந்து வருகிறாய்'' என்று கேட்டான். அதற்கு அம்மலர் பிரமனே "நான் சிவபெருமானின் முடியில் இருந்து விழுந்துகொண்டிருக்கிறேன் நான் விழத் தொடங்கிய காலத்தில் இருந்து இதுவரை உன்னுடன் 14 பிரமதேவர்கள் தோன்றி மறைந்து விட்டனர். உன்னால் அந்த இடத்தை அடைய முடியாது. ஆதலால் உன் முயற்சியை விடுக" என்றது. அதனால் மனம் கலங்கிய பிரமன் அத்தாழம்பூவை நோக்கி மலரே எனக்காக ஒரு உதவி செய். நான் தான் உன்னை இந்த ஒளிப்பிழம்பின் முடியைக் கண்டு அங்கிருந்து உன்னை அழைத்து வந்தேன் என்று பொய் சாட்சி சொல்லுவாய்'' என்று வேண்டினான். அதுவும் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டது.

பின்னர் இருவரும் பூமியை அடைந்தனர். சிவபெருமான் அந்த நெருப்பு லிங்கத்திடையே தோன்றினார். பிரமன் சிவபெருமானிடம் உச்சியைக் கண்டதாகவும் அதற்குச் சாட்சியாக அங்கிருந்து தாழம்பூவை அழைத்து வந்ததாகவும் கூறினான். திருமால் மட்டும் தாம் தோற்றுவிட்டதாக ஒப்புக்கொண்டார். சிவபெருமான் பிரமனை நோக்கி நீ பொய் சொன்னதால் பூமியில் உனக்கு கோயிலும் பூசையும் இல்லாது போகட்டும் என்று கூறினார். தாழம்பூவை நோக்கி இனி நீ எந்த பூசைக்கும் உதவாது போவாய் என்றும் மொழிந்தார். பிரமனும் தாழம்பூவும் தம் பிழையைப் பொறுக்க வேண்டும் என்று பல காலும் அழுது தொழுதனர்.

அவர் பிரமனை நோக்கி அன்புடன் நான் சொன்ன எதுவும் மாறாது. எனவே பிராமணர்களை நோக்கி செய்யும் பூசைகள் யாவும் உனக்கே ஆகட்டும் என்றும், தாழம்பூவை நோக்கி சிவபூசைக்கு தவிர மற்ற தேவர்யாவர் பூசைக்கும் உரியவனாவாய் என்றும் அருள்பாலித்தார்.

மீண்டும் அழுது தொழுதது. பின்னர் அதற்கு இரங்கி லிங்கோத்பவ காலத்தில் மட்டும் அதனைச் சூடுவதாக அதற்கு அருள்புரிந்தார். பின்னர் திருமாலுக்கும் எல்லோருக்கும் பலவகையான அருளைப் புரிந்து தேவர்கள் யாவரும் சூழ கயிலை மலையை அடைந்தார்.

அவ்வாறு அவர்களால் துதிக்கப்பட்ட சமயமே சிவராத்திரி என்பர். பின்னாளில் இந்தக் கதையை ஒட்டி லிங்கோத்பவ மூர்த்தியை அமைத்தவர்கள் லிங்கம் அதன் மத்தியில் சிவபெருமான் கீழே பன்றி வடிவில் திருமால் மேலே அன்னத்தின் வடிவில் பிரமன் ஆகியவற்றுடன் நீண்ட தாழம்பூவையும் அமைக்கத் தொடங்கினர். இச்சிற்பங்களை பின்நாளில் பரவலாக காணமுடிகிறது.

லிங்கோற்பவர்

உமாமகேசுவர விரதகாலத்தில் உமா மகேசுவரரையும், திருவாதிரையில் நடராசரையும், திரிசூலவிரதத்தின்போது அஸ்திரதேவரையும், வழிபடுவதுபோலவே சிவராத்திரியின் மூன்றாவது காலத்தில் லிங்கோற்ப மூர்த்தியை வழிபட வேண்டும். இதனால் சிவராத்திரியின் மூன்றாவது காலம் லிங்கோற்பவ காலம் என்றே அழைக்கப் படுகிறது. இக்காலத்தில் சிவபெருமான் நெருப்புத்தூண் நடுவில் இருந்து மான், மழு அபய வரத முத்திரைகளுடன் உருவம் தாங்கி அருள்பாலித்தார். லிங்கம் என்ற சொல்லுக்கு உருவம் என்பது பொருள். உருவம் தாங்கி சிவபெருமான் வெளிப்பட்டு அருள்பாலித்ததால் இது லிங்கோத்பவம் என அழைக்கப்படுகிறது.

290-ம் பக்கம் முதல் கூறப்பட்டுள்ள புராணக்கதைகளின் அடிப்படையில் அமைந்ததே லிங்கோற்பவ மூர்த்தி வடிவமாகும். இது சிவலிங்க மூர்த்தியின் மையத்தில் அழல் போன்ற பிளவில் (கேவல) தனித்த சந்திரசேகரமூர்த்தி எழுந்தருளியிருக்க லிங்கத்தின் வலப்புறம் பிரமதேவனும், இடப்புறம் திருமாலும் கைகூப்பி நிற்கின்ற நிலையாகும். பிளவினைச் சுற்றி அக்கினிச் சுடர்கள் காட்டப்படுகின்றன. பெருமானின் பாதமும், உச்சியும் காட்டப்படுவதில்லை. இதன் மூலம் முதலும் முடிவற்ற நிலையில் அவர் இருப்பது சுட்டப்படுகின்றது.

லிங்கத்தின் கீழ்ப்பகுதியில் பன்றி வடிவில் திருமாலும், உச்சியில் அன்ன வடிவில் (அல்லது அன்னத்தின் மீது அமர்ந்தவா்று) பிரமதேவனும் பெருமானின் அடிமுடிதேடும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளனர். மேலும் வலப்பகுதியில் பிரமதேவனும் இடப்புறம் திருமாலும் அவரை வழிபடும்பாவனையில் கூப்பியகரங்களுடன் உள்ளனர். இம் மூர்த்தியை புராணங்களும் கல்வெட்டுகளும் *"லிங்கபுராணமூர்த்தி"* என்றே குறிப்பிடுகின்றன.

சிவாலயத்தில் இவருக்கான இடம் கருவறையின் பின்புறம் அமையும் மாடமாகும். ஆலயத்தின் மற்ற இடங்களில் லிங்கோற்பவ மூர்த்தியை வைக்கும் வழக்கம் இல்லை. இச்சிலையமைப்பில் காலப்போக்கில் ஏற்பட்ட சிலபுராண மாறுதல்களால் லிங்கத்தின் இடைப்பகுதியில் தாழம்பூவும் உச்சியில் கொன்றை மலர்க் கட்டும் காட்டப் படுகின்றன.

"லிங்கபுராணத் தேவரான" லிங்கோற் பவரை கல் திருமேனியாக எழுந்தருளிவைப்பதே வழக்கமாகும். என்றாலும் தஞ்சாவூர் பெரிய



கோயிலில் ராஜராஜ சோழனின் மனைவியால் செய்தளிக்கப்பட்ட உலோகத் திருமேனியிருந்ததை கல்வெட்டு குறிக்கின்றது. இதில் புராணக்கதையை விளக்கும் வகையில் லிங்கம் அதில் தோன்றும். சிவபெருமான், அவரை வழிபட்டு அருள் பெறும் பிரமன், திருமால் ஆகிய மூர்த்திகள் அவர்களின் அவதாரமான பன்றி, அன்னம் ஆகிய வடிவங்களைக் கொண்டிருந்ததால் இம் மூர்த்தம் இலிங்க புராணதேவர் என்றே அழைக்கப்பட்டது.

சிவராத்திரியின் மூன்றாம் காலத்தில் இந்த மூர்த்திக்கு நெய்பூசி, வெந்நீரால் அபிஷேகம் செய்து, கம்பளித் துணிகள் அணிவித்து தாழைமடல்களால் அலங்கரித்து, எள்ளன்னம் நிவேதிக்க வேண்டும் என்பர்.

ஆகமங்களில் சொல்லப்பட்ட வகையில் லிங்கோற்பவரை பல்லவர்கள் கண்ட காஞ்சிக் கலைக்கோயில்கள் அனைத்திலுமும், வட ஆற்காடு மாவட்டம் குடிமல்லூரிலும் காணலாம்.

லிங்கோற்பவ மூர்த்தம் திருவண்ணாமலைத் தலத்தோடு தொடர்புடையதால் திருவண்ணாமலையில் உள்ள அருணாசலேசுவரர், ஏகாம்பரேசுவரர் ஆலயங்களில் இந்த மூர்த்தத்தைச் சற்று கலைநயத்துடனும் காவியநயத்துடனும் அமைத்துள்ளனர்.

இக்காட்சியில் பின்னணியில் அண்ணா மலையும், அதன் மீது தீபமும் காட்டப்பட்டுள்ளன. அதிலிருந்து வெளிப்பட்டு தேவியுடன் கூடியவாறு இடபம் பின் நிற்க பெருமான் காட்சியளிக்கின்றார். இத்தகைய அமைப்பான லிங்கோற்பமூர்த்தியை எங்கும் காணமுடியவில்லை.

பொதுவாக லிங்கோத்பவ மூர்த்தியில் உள்ள சிவபெருமானை நான்கு கரங்களுடன் அவற்றில் மான், மழு, அபய, ஊரு முத்திரைகள் கொண்டவராகவே அமைப்பது வழக்கம். ஆனால் காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலில் எட்டு கரங்களுடன் கூடிய லிங்கோத்பவரைக் காண்கிறோம். இவ்வடிவமும் வேறெங்கும் இல்லாததாகும்.

பிள்ளையார் பட்டியில் உள்ள லிங்கோத்பவர் இரண்டு கரங்களுடன் காட்டப்பட்டிருப்பதும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

எது எவ்வாறாயினும் சிவாலயங்களில் கருவறைக்குப் பின் உள்ள கோட்டத்தில் லிங்கோத்பவரை அமைப்பதென்பது சிறப்புடன் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

சிவராத்திரி புராணம்

சிவராத்திரியின் பெருமைகளை விளக்கும் இப்புராணத்தை காசி வரதராசக் கவிராயர் என்பவர் இயற்றியுள்ளார். இதற்கு உடுப்பிட்டி ஸ்ரீகுமார சூர்யபிள்ளை என்பவர் பதவுரை எழுதியுள்ளார்.

சிதம்பரத்தில் வாழ்ந்த அன்பர்கள் பலரும் கேட்டுக்கொண்டதன்படி இந்நூலாசிரியர் இப்புராணத்தை வடமொழியில் உள்ள ஸ்காந்த புராணம், மத்சபுராணம், சிவபுராணம் ஆகிய புராணங்களின் துணை கொண்டு இதை எழுதியதாக குறிப்பிட்டுள்ளார்.

இது கடவுள் வாழ்த்து தற்சிறப்புப்பாயிரம், சிவராத்திரி உற்பவ சருக்கம், சிவராத்திரி மான்மிய சருக்கம் ஆகியவற்றுடன் மேலும் ஏழு சருக்கங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.

நைமிசாரண்ய முனிவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சூத முனிவர் சொன்னதாக இப்புராணம் அமைந்துள்ளது.

இப்புராணத்திற்கு பிரம்மஸ்ரீ சிவானந்த சாகர யோகீஸ்வரர் அவர்களுடைய மாணாக்கர் மா. நமசிவாயம் பிள்ளை என்பவர் அரும்பிரயோக உரையும் வசனமும் எழுதி வெளியிட்டுள்ளார்.

மேலும் நெல்லை நாதர் என்பவரால் இயற்றப்பட்ட சிவராத்திரி புராணமும் அச்சிடப்பட்டுள்ளது. இந்நூல், 1881-ஆம் ஆண்டில் வே. சதாசிவம் பிள்ளை என்பவரால் வெளியிடப்பட்டதாகும். இது மேற்குறித்த நூலைத் தழுவியும் பல புதிய கதைகளை உள்ளடக்கிய தாகவும் உள்ளது.

சிவராத்திரி புராணத்தை உரைநடை வடிவில் யாழ்ப்பாணத்து வட்டு நகர் குருமூர்த்தி ஐயர் என்பவர் 1939-ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்டுள்ளார்.

மோட்ச சாதனம் சிவராத்திரியே . . .

மோட்சத்திற்குச் சாதனமாக இருப்பவை நான்காகும். அவை, 1. சிவார்ச்சனை, 2. உருத்திரபாராயணம், 3. அஷ்டமி, சோமவாரம், தேய்பிறைச் சதுர்த்தசி (சிவராத்திரி) ஆகிய மூன்று நாள் உபவாசம், 4. காசியில் மரணமடைதல் ஆகியவையாகும். இவை நான்கிலும் சிறந்தது சிவராத்திரி விரதமேயாகும். சிவராத்திரி இரவில் சிவபுராணம் கேட்டல், சிவாலய தரிசனம் செய்தல் ஆகியவை மோட்சத்திற்கு எளிய சாதனமாகும்.

- சிவமகாபுராணம்.

லிங்கபுராணக் குறுந்தொகை

சிவபெருமான் அன்பெனும் பிடியுள் அகப்படுபவர். ஆனால் பிரமனும், திருமாலும் அவரைத் தங்கள் ஆற்றலால் காணமுயன்று தோற்றனர். அவர்களுடைய அறியாமையைக் கண்டு இரங்கிய பரமன் அவர்களுக்கு நான் இங்கிருக்கின்றேன் என்று லிங்கத்தில் இருந்து வெளிப்பட்டு அருள்பாலித்தான். இறைவனை பக்தி எனும் வலையால் பிடிக்கலாமேயல்லாது ஆங்காரத்தால் அவனை அடைய முடியாது என்பதை வலியுறுத்தி பக்தர்கள் மேற்கொள்ள வேண்டிய செயல்களைக் பட்டியலிட்டுக் காட்டுக்கின்றார் அப்பரடிகள். இதில் ஒவ்வொருபாடலிலும் இருவர் இருவர் என்றே கூறி இறுதிப்பாடலில் அவ்விருவர் செங்கண்மாலும் பிரமனும் என்று காட்டுவது குறிப்பிடத்தக்கதாகும். இப்பதிகம் லிங்கபுராணக் குறுந்தொகை என்று குறிக்கப்படுகின்றது. இப்பாடல் கூறும் கருத்தானது.

1. சிவபெருமானை அடைந்து மணமிகுந்த மலர்களைக் கொய்து அர்ச்சனை புரிதல்,
2. அவரை நன்னீரால் திருமுழுக்காட்டி பூக்களால் அலங்கரித்து வலம் செய்தல்,
3. சிவலாயங்களை சாணமிட்டு மெழுகி, நீர்தெளித்து, பெருக்கி, கபாலியின் வேடத்தை நினைத்தல்,
4. பயனற்ற வார்த்தைகளைப் பேசாது, நெய்யும் பாலும் கொண்டு அழல் மேனி அம்மானை அபிஷேகித்தல்,
5. சிவலிங்க மூர்த்திக்கு ஆடைகள் உடுத்தி, எருக்கு மலர்களாலான தலைமாலையை அணிவித்தல்,
6. ஒளிநிறைந்த பெருமானுக்காக குடம் குடமாக நீர் சுமந்து தருதல், மரங்களில் ஏறி மலர்களைக் கூடை கூடையாகப் பறித்து தருதல்,
7. சிவதண்டமாகிய கட்டங்கம், கபாலம் ஏந்தி, அவன்புகழ்பாடியாடி எட்டுறுப்பும் தோய வணங்குதல்,
8. நல்ல மலர்மாலைகளைப் பூண்டு விபூதி அணிந்து பெருமானைப் போற்றுதல்,
9. மன்மதனை எரித்த சிவபெருமானின் திருவடிகளில் குவளைமலர்களைக் கட்டி மாலையாக அணிவித்தல்,



இலிங்கபுராணம்

அடிசேர்வன் என்ன எம்ஆதியை நோக்கி
முடிசேர் மலைமகனார் மகளாகி
திடமாதவம் செய்து தேவர்அறியப்
படியார அர்ச்சித்து பத்திசெய்தாளே
- திருமந்திரம்

10. உருத்திராக்கங்களை அணிதல், சிவ சந்நிதியில் சங்கங்களை ஊதுதல்.

ஆகியவை சிவனடியார்களுக்கு உரிய செயல்களாகும். இவைகளைக் கடைப்பிடித் தொழுகினாலேயே சிவதரிசனம் எளிதில் கிடைக்கும்.

ஆனால் இவற்றை ஒன்றையும் மேற்கொள்ளாது திருமாலும், பிரமனும் தம் அகங்காரத்தால் பெருமானின் அடியையும் முடியையும் பல ஆண்டுகள் காணமுயன்று தோற்றனர். அவர்களுடைய நிலை கண்டு இரங்கிய பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியாகிய சிவபெருமான் ஏன் வீணாக அலைந்து வருந்துகிறீர்கள் என்று கேட்டு சிவலிங்கத்தின் மத்தியில் "இங்குற்றேன்" என்று தோன்றி அவர்களுக்கு அருள்பாலித்தான்.

சிவராத்திரியின் மூன்றாவது காலமான லிங்கோத்பவ காலத்தில் இப்பதிகத்தை ஓதுதல் எண்ணிறந்த பலனைத் தரும் என்பர்.

பலவகையான சிவராத்திரி வழிபாட்டுக் காலங்கள்



சிவராத்திரியானது மாதசிவராத்திரி, யோகசிவராத்திரி, நித்யசிவராத்திரி, பக்ஷ சிவராத்திரி, மாகசிவராத்திரி, (மகாசிவராத்திரி) என ஐந்து வகைப்படும்.

1. மாகசிவராத்திரி என்பது மாசிமாதத் தேய்பிறைச் சதுர்த்தசியில் வருவதாகும். இதனை வருஷ சிவராத்திரி என்றும் மகாசிவராத்திரி என்றும் அழைப்பர்.

2. யோக சிவராத்திரி என்பது திங்கட்கிழமை காலை முதல் 60 நாழிகை அமாவாசை இருப்பது அல்லது திங்கட்கிழமை அஸ்தமனம் முதல் செவ்வாய் காலை வரை தேய்பிறை சதுர்த்தசி இருப்பதுமாகும். இதனை வார சிவராத்திரி எனவும் கூறுவர். திங்கட்கிழமை இரவு நான்காம் சாமத்தில் அரைநாழிகை தேய்பிறை சதுர்த்தசி இருந்தாலும் அதுவே யோகசிவராத்திரியாம். இதனை அனுஷ்டிப்பதால் மூன்றுகோடி சிவராத்திரியை அனுஷ்டித்த பலன் கிடைக்கும்.

3. நித்ய சிவராத்திரி என்பது ஓராண்டு முழுவதும் உள்ள வளர்பிறைத் தேய்பிறை சதுர்த்தசி நாட்களில் வரும் இரவுகளாகும்.

4. பக்ஷசிவராத்திரி என்பது தைமாதத்திய தேய்பிறைப் பௌர்ணமி நாளில் தொடங்கி பதின்மூன்று நாட்கள் ஒரு வேளை உணவுண்டு 14ஆம் நாளாகிய சதுர்த்தசியில் முழுமையாக இரவு கண்விழித்து உபவாசம் இருந்து நோற்பதாகும்.

5. மாதசிவராத்திரி என்பது ஒவ்வொரு மாதமும் வெவ்வேறு திதிகளை ஒட்டி அனுஷ்டிக்கப்படும் சிவராத்திரி விரதமாகும். இதன்படி ஒவ்வொரு மாதமும் சிவராத்திரி தினங்கள் மாறி மாறி வரும் அதனை கீழ்வரும் பட்டியலில் காணலாம். இவ்வாறு வரும் ஒவ்வொரு மாத சிவராத்திரியிலும் ஒவ்வொரு வகையான தேவர்கள் சிவபிரானை அர்ச்சித்து அருள் பெற்றுள்ளார்கள்.

சிவபெருமான் நந்தியம் பெருமானுக்கு சிவராத்திரியின் பெருமைகளை உபதேசிக்க அதை அவர் மற்றவர்களுக்கு உபதேசிக்க அதனைக் கடைபிடித்து பேறு பெற்றவர்களின் பட்டியலை மாதசிவராத்திரியுடன் காணலாம்.

மாதம்	பட்சம்	திதி	வழிபட்டோர்
சித்திரை	தேய்	அஷ்டமி	உமாதேவியார்
வைகாசி	வளர்	அஷ்டமி	சூரியன்
ஆனி	வளர்	சதுர்த்தசி	ஈசானன்
ஆடி	தேய்	பஞ்சமி	முருகன்
ஆவணி	வளர்	அஷ்டமி	சந்திரன்
புரட்டாசி	வளர்	திரயோ	ஆதிசேஷன்
ஐப்பசி	வளர்	துவாதசி	இந்திரன்
கார்த்திகை	வளர்	சப்தமி	சரஸ்வதி
கார்த்திகை	தேய்	அட்டமி	"
மார்கழி	வளர்	சதுர்த்தசி	லட்சுமி
மார்கழி	தேய்	சதுர்த்தசி	"
தை	வளர்	திருதியை	நந்திதேவர்
மாசி	தேய்	சதுர்த்தசி	தேவர்கள்
பங்குனி	வளர்	தருதியை	குபேரன்

சிறப்புமிக்க சிவராத்திரி காலங்கள்

மார்கழி மாதத்து வளர்பிறைச் சதுர்தசி திருவாதிரை நட்சத்திரத்தோடும் மாசி மாதத்து தேய்பிறை சதுர்த்தசி செவ்வாய் (அ) ஞாயிறோடு சேர்ந்து வரும் நாளில் நோற்கப்படும் சிவராத்திரி விரதம் 3 1/2 கோடிப் பயன் தருவதாகும்.

சிவராத்திரி தினத்தை தீர்மானிப்பது எப்படி?

சிவராத்திரி என்பது சதுர்த்தசி திதியை அடிப்படையாகக் கொண்டு கடைபிடிக்கின்ற விரதமாகும். திதி என்பது ஒரு நாள் முழுக்க இருப்பதில்லை. ஆதலின் சிவராத்திரி தினத்தைத் தீர்மானிப்பதற்கு சில கருத்துக்களை ஆன்றோர் கூறியுள்ளனர். சதுர்த்தசித் திதியானது ஒரு நாளில் இடம்பெற்றிருக்கிற நேரத்தைப் பொருத்து சிவராத்திரி மூன்று வகையாக அழைக்கப்படுகிறது. இவை உத்தமசிவராத்திரி, மத்திமசிவராத்திரி, அதமசிவராத்திரி என்பனவாகும்.

உத்தமசிவராத்திரி

சூரியன் அஸ்தமிக்கும்போது திரயோதசி நீங்கி சதுர்த்தசி வந்து, அந்தத் திதி அன்றிரவு முழுவதுமும் நீடித்திருந்து மறுநாள் பகல்முழுவதும் தொடர்ந்து இருப்பின் அதுவே உத்தம சிவராத்திரியாகும்.

சூரியன் அஸ்தமித்த பின்னும், இரவின் பத்துநாழிகைக்கு முன்னும் சதுர்த்தசி வந்தாலும் அது உத்தம சிவராத்திரியாகும்.

மத்திம சிவராத்திரி

காலை தொடங்கி, மறுநாள் உதயம் வரை அதாவது அறுபதுநாழிகை அளவும் சதுர்த்தசி நிலவுதல், சூரியன் அஸ்தமனத்திற்கு முன்னரே வரும் சதுர்த்தசி, இரவின் பத்துநாழிகைக்குப் பின்னர் வரும் சதுர்த்தசி ஆகிய இரவுகள் மத்திம சிவராத்திரி என்றழைக்கப்படும்.

அதம சிவராத்திரி

இரவின் இருபது நாழிகை அளவு சதுர்த்தசி இருந்து, அதன் பின்னர் அமாவாசை வந்தால் அந்த இரவு அதம சிவராத்திரி ஆகும். இதனை வழிபாட்டிற்கு ஏற்கக் கூடாது. இந்நாளில் விரதம் அனுட்டித்தால் புண்ணியத்திற்கு பதில் பாவமும், நரகமும் வந்து சேரும்.

சிறப்பான சிவராத்திரிகள்

திங்கட்கிழமை அமாவாசை வருவதைத் தவிர மற்ற கிழமைகளில் அமாவாசை வந்து சதுர்த்தசியுடன் சேர்ந்துவிடுமேயானால் அந்த நாளை விலக்கி விட்டு அதற்கு முந்தின நாளான திரயோதசியுடன் கூடிய சதுர்த்தசி நாளையே சிவராத்திரியாகக் கொள்ளவேண்டும்.

திரயோதசியைச் சக்தி வடிவமாகவும் சதுர்த்தசியை சிவபெருமானாகவும் கொள்ளுவர். இத்திதிகள் சேர்ந்த இரவு சிவலிங்க வடிவமானதாகும்.

அமாவாசையோடு கூடிய சதுர்த்தசி வைதீகர்களுக்கும், சன்னியாசிகளுக்கு மட்டுமே உரியது. இந்நாளில் சுத்தசைவர்கள் விரதமிருக்க மாட்டார்கள்.

அமாவாசையைத் தொட்ட சதுர்த்தசி திருவோண நட்சத்திரத்துடன் கூடி வந்தால் அது குற்றமுடையது அல்ல.

திரயோதசி, சதுர்த்தசி, அமாவாசை ஆகிய மூன்றும் ஒரே நாளில் வந்தாலும் அது திங்கட்கிழமையோடு வந்தாலும் குற்றமுடையது அல்ல.

இரவின் 15 நாழிகைக்கு மேல் சதுர்த்தசி வந்து அடுத்த நாள் இரவு 15 நாழிகையளவு இருந்தாலும் அதனை விலக்கி விட்டு அதற்கு முன்னாளையே சிவராத்திரியாகக் கொள்ள வேண்டும்.

சிவதீட்சை பெறுவதற்குரிய காலம்

சிவதீட்சை பெறவும் சிவலிங்க பூஜையை குருவிடமிருந்து ஏற்றுக் கொண்டு சிவபூசை செய்யத் தொடங்கவும் உரியநாள் சிவராத்திரியாகும். மற்றநாளில் சிவதீட்சை ஏற்பதைவிட சிவராத்திரியன்று ஏற்கும் சிவதீட்சையே பலமடங்குப் பலனுடையதாகும். திருஆவடுதுறை ஆதீனத்தில் ஆண்டு தோறும் சிவராத்திரியில் தகுதி உடையவர்களுக்கு சிவதீட்சையும், சிவலிங்க பூஜையும் அளிக்கப்பட்டுவருகிறது.

சிவராத்திரிக்கே உரிய சிறப்புமிக்க திருத்தலங்கள்

அனைத்து சிவாலயங்களிலும், சிவத் தலங்களிலும் சிவபெருமானைச் சிவராத்திரியில் வழிபாடுசெய்தால் இம்மை, மறுமைப் பயன்களை எளிதில் பெறலாம் என்றாலும் சிவராத்திரிக் கதைகளோடு தொடர்புடையதாகவும் சிவராத்திரிக்கே உரியதாகவும் சில தலங்கள் சிறப்புடன் பேசப்படுகின்றன. அவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்.

திருஅண்ணாமலை

பிரமனும் திருமாலும் அடிமுடிதேட அழல்மலையாய் நின்ற பெருமான், மானிடர் உய்யும் பொருட்டு கல்மலையர்க நின்ற இடமே திருஅண்ணாமலையாகும். அவர் அந்நாளில் ஜோதி வடிவாய் நின்றதை விளக்கவே இந்நாளில் மலையுச்சியில் கார்த்திகை தீபம் ஏற்றப்படுகிறது என்று அருணாசலபுராணம் கூறும். இங்கு சிவராத்திரி பெருஞ்சிறப்புடன் கொண்டாடப் படுகிறது. இது மாசிச்சிவராத்திரிக்கு உரியதலமாயினும், இந்நாளில் கார்த்திகை தீபத்தாலேயே மிகப்பெருமை அடைந்துள்ளது.

திருக்கடையூர்

இது மார்க்கண்டேயன் எமனை வெல்லும் பொருட்டு சிவபூசைசெய்த இடம். மூன்றாம் ஜாமத்தில் இங்குள்ள லிங்கத்திலிருந்து சிவபெருமான் வெளிப்பட்டு அவனுக்காக எமனை உதைத்து வீழ்த்திய இடம். சிவபெருமான் காலசம்ஹாரராக பெரிய திருச்சபையில் எழுந்தருளியுள்ளார். உதைபட்ட எமன் காலடியில் கிடக்கும் நிலையிலும் பின்னர் அருள்பெற்று வணங்கும் நிலையிலுமாக இரண்டு உலாத் திருமேனிகளாக அமைந்துள்ளான்.

காஞ்சி

சிவபெருமானின் கண்களைப் பார்வதிதேவி விளையாட்டாக மூட அதனால் உலகத்தில் இருள் சூழ, பெருமான் தனது மூன்றாவது கண்ணைத் திறந்தார். அதன் வெப்பத்தால் உலக உயிர்கள் வருந்தின அப்பாவம் நீங்க சிவனை பார்வதிதேவி பூசித்த இடம் இதுவாகும். உலகம் இருண்ட அந்த காரமான இரவில் உருத்திரர்கள் இங்கு பூசித்தனர். அந்த உருத்திரர்கள் பூசித்த ஆனந்தருத்ரேசம், மகாருத்ரேசம் உருத்திர கோடீசம் முதலிய பல ஆலயங்கள் இவ்வூரில் உள்ளன. காஞ்சிப் புராணத்தில் இவ்வூரின் ஒருபகுதி உருத்திரசோலை என வழங்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீசைலம்

சிவமகாபுராணத்தில் சொல்லப்பட்டுள்ள மான், வேடன் கதை நடந்த இடம் இது என்பர். ஆந்திர மாநிலத்தில் பெரிய அளவில் சிவராத்திரி வழிபாடு நடைபெறும் இடம் இதுவாகும். மல்லிகை மலர்களைச் சூடுவதால் இப்பெருமான் மல்லிகார்ச்சுனர் என்றழைக்கப்படுகிறார்.

திருவைகாவூர்

இதுவும் சிவராத்திரித்தலமாகும். இதனை சிவராத்திரி கதைப்பகுதியில் காண்க. இது ஞானசம்பந்தரால் பாடல்பெற்ற பதியாகும். இவ்வூர்த் தலபுராணத்தில் சிவராத்திரி மகிமை எமனை உதைத்தது எமன் அருள்பெற்றது ஆகியன விரிவாக பேசப்பட்டுள்ளன.

ஓமமாம்புலியூர்

சிதம்பரத்தையடுத்து 24 கி.மீ. தொலைவில் உள்ள இத்தலத்திலும் திருவைகாவூர் புராணத்தை யொட்டிய வேடன் புலிக்கதை கூறப்படுகிறது. சிவபெருமான் பிரணவப் பொருளை தேவிக்கு உரைத்த இடம். பிரணவ வியாக்ரபுரம் எனவும் அழைக்கப்பெறும்.

திருக்கழுக்குன்றம்

கோடி உருத்திரர்கள் சிவராத்திரி காலத்தில் பூசித்த இடம். இந்தத் தலம் உருத்திரகோடி என்றும் அழைக்கப்படும்.

இவை தவிர ஸ்ரீகாளத்தி, திருக்கேதீச்சரம் திரிகோணமலை, மதுரை முதலியனவும் சிவராத்திரிக்கு உரிய தலங்களாகும்.

அண்ணாமலை எம் அண்ணா போற்றி
கண்ணாரமுதக் கடலே போற்றி





ஸ்ரீகனகிரி ஈஸ்வரர் - பெரியநாயகி. தேவிகாபுரம்.

சிவராத்திரியில் பார்வதிதேவி பூசித்த தேவிகாபுரம்

சிவராத்திரிக்கு உரிய பல தலங்களில் வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள தேவிகாபுரம் தனிச்சிறப்புடையதாகத் திகழ்கிறது.

ஒரு சமயம் உலகம் ஒடுங்கிய ஊழி இரவில் உலகம் வெள்ளத்தில் அமிழ இங்குள்ள மலைமட்டும் பொன் போல பிரகாசித்து மிதந்தது. இம்மலைமீது தேவியார் சிவலிங்கம் அமைத்து நான்கு கால பூசையைச் செய்தாள். அவள் பூசை செய்யும் சிறப்பையும் நேர்த்தியையும் காண சிவபெருமான் அவள் அருகில் சுயம்புலிங்கமாக எழுந்தருளினார். அவளுடைய அன்பையும், பக்தியையும் கண்டு அவளுக்குத் தரிசனம் தந்து அவளைத்தன் இடப்பாகத்தில் சேர்த்துக் கொண்டார்.

இத்தகைய திருத்தலமே தேவிகாபுரமாகும். இது வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஆரணிக்கும் போளூருக்கும் இடையில் அமைந்துள்ளது.

இங்குள்ள மலைமீது அழகிய சிவாலயம் உள்ளது. இந்த ஆலயத்தின் கருவறையில் அம்பிகை அமைத்து வழிபட்ட தேவீச்சரரும் அவள் பூசையைக் காண எழுந்த சுயம்புலிங்கமான கனககிரீசுவரரும் எழுந்தருளி உள்ளனர். இப்போது தேவிபூசித்த லிங்கம் காசிவிசுவநாதர் என்றழைக்கப் படுகிறது. இதுவே கருவறையின் மையத்தில் உள்ளது. அதன் வடமேற்கில் சுயம்புலிங்கம் அமைந்துள்ளது. இது போன்று பிரதிஷ்டா லிங்கமும், சுயம்புலிங்கமும் ஒரே கருவறையில் இருப்பது ஒரிரு தலங்களில் மட்டுமேயாகும்.

இங்கு சிவராத்திரி சிறப்புடன் கொண்டாடப் படுகிறது. சிவபெருமான் சிவராத்திரியில் பூசித்த தேவிக்கு இவ்வூரில் பிரதானம் கொடுத்து பெரியநாயகி எனும் பெயரில் கோயில் கொண்டு அருள அருள்பாலித்தார். அவள் பெயராலேயே இவ்வூர் தேவிகாபுரம் என்றழைக்கப்படுகிறது.

மலையின் அடிவாரத்தில் அமைந்த தேவிகாபுரத்தின் மையப்பகுதியில் பெரியநாயகி கோயில் அமைந்துள்ளது. தேவியின் ஆன்மாவில் சிவமூர்த்தி எழுந்தருளியிப்பதால் இங்கு தனியாக லிங்கம் இல்லை. தேவிக்கே முதன்மை அளிக்கப்பட்டு பெரிய ஆலயம் கட்டப்படுள்ளது.

விஜயநகரப் பேரரசர்கள் காலத்தில் இக்கோயிலுக்கு வரிவான திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன. இப்போதைக்கு திருப்பணி செய்ய வேண்டிய நிலையில் உள்ளதும் நினைக்கத்தக்கதாகும்.

இத்தலத்தில் இன்றும் சிவராத்திரி காலங்களில் அம்பிகை பூசை செய்வதாக ஐதீகம். எனவே சிவராத்திரி இரவின் நான்கு யாமங்களும். இங்கு வழிபடுவது நாமும் அம்பிகையோடு சேர்ந்து வழிபடுவதாகவே கருதப்படும்.

கனககிரீசுவரருக்கு நெய்க்காப்பும் வென்னீர் அபிஷேகமும் சிறப்புடையதாகப் போற்றப் படுகின்றது.

மார்கண்டேயரும் சிவராத்திரியும்

இந்நூலின் முன்பகுதியில் சிவராத்திரியின் பெருமைகளை விளக்கும் கதைகளைப் பல புராண நூல்களின் அடிப்படையில் கண்டோம். நாட்டுப்புற நம்பிக்கைகளின்படி மார்கண்டேயருக்காக சிவபெருமான் யமனை அழித்து அருள்செய்த காலமும் ஒரு சிவராத்திரியேயாகும்.

மிருகண்டு என்பவரின் புதல்வராகத் தோன்றியவர் மார்க்கண்டேயர். இவருக்கு பதினாறு வயசுதான் ஆயுட்காலம் என்று முடிவாகியிருந்தது. அதனைத் தனது தந்தையின் மூலம் அறிந்த மார்க்கண்டேயர் சிவபெருமானைக் குறித்து சிறந்த பூசனைகளை இயற்றினார். பதினாறு வயது முடியும் நாள் வந்தது. அன்று முழுவதும் மார்க்கண்டேயர் சிவபூசை செய்து மகிழ்ந்தார். பகல் முடிந்து இரவும் வந்தது. சிறுவன் பூசையைத் தொடர்ந்தான் முதல் ஜாமம் முடிந்தது.

சித்ரகுப்தனின் கணக்குப்படி ஆயுசு முடிந்துபோன மார்க்கண்டேயனைப் பிடித்து உயிரைப் பறித்துச் செல்ல எமதூதர் வந்தனர். அவனுடைய பூஜாபலத்தின் மகிமையினால் அத்தூதுவர்களால் அவனைத் தொடக்கூட முடியவில்லை. எனவே திரும்பிச்சென்று தமது இயலாமையை எமதர்மனிடம் முறையிட்டனர். அவன் பலரையும் தொடர்ந்து அனுப்பினான். அவர்கள் ஒருவராலும் மார்க்கண்டேயனைப் பிடிக்கமுடியவில்லை. இறுதியில் எமனே நேரில் வந்தான். அதற்குள் மூன்றாம் ஜாமம் தொடங்கிவிட்டது. மார்க்கண்டேயன்மீது எமன் தனது பாசக்கயிற்றை வீசினான். அதை அறிந்த முனிகுமாரன் லிங்கத்தை ஆரத்தழுவிக் கொண்டான். இதனால் எமன் வீசிய பாசக்கயிறு அவனுடன் சிவலிங்கத்தையும் சுற்றி வளைத்தது.

அப்போது சிவபெருமான் லிங்கத்தைப் பிளந்து கொண்டு தோன்றி எமனை உதைத்து வீழ்த்தினார். அதுவும் ஒரு லிங்கோத்பவ காலமாகும். பின்னர் தேவர்களின் வேண்டுகோளின் படி எமனை எழுப்பி முன்போலவே பணிசெய்ய அருள்புரிந்தார். அந்த இரவும் சிவராத்திரி என்பது ஒரு வரலாறாகும்.

எனவே சிவராத்திரியில் திருக்கடையூரில் இருத்தல், மார்கண்டேயன் கதையைக்கேட்டல் ஆகியன சிவபுண்ணியச் செயல்களாகக் கருதப்படுகின்றன.

மார்கண்டேயன் கதைப்பாடல்

தென்பாண்டி நாட்டில் சிவராத்திரி விரதமிருப்பவர்கள், இரவு முழுவதும் விழித்திருக்கவும், சிவசம்பந்தமான புராணங்களைக் கேட்டு மகிழவும் சிவபெருமானின் பெருமையை உணரவும் மார்கண்டேயன் கதையைக் கேட்பது வழக்கமாகும்.

இதற்காக மார்க்கண்டேயன் வரலாறு தொடர்புடைய நூல்கள் இயற்றப்பட்டன. இவ்வகையில் மார்க்கண்டேயன் அம்மானை, மார்க்கண்டேயன் கதைப்பாடல் முதலியன இயற்றப்பட்டன.

இதில் மார்க்கண்டேயர் பிறத்தல், சிவபூசையின் பெருமை, அது தரும்பலன், சிவராத்திரி மகிமை, எமன் பிறப்பு, எமனுக்கு பட்டாபிஷேகம் செய்தல், யமலோகவர்ணனை, நரகவர்ணனை, சித்ராகுப்தர் வரலாறு, மார்க்கண்டேயருக்காக சிவபெருமான் லிங்கத்திலிருந்து தோன்றி யமனை உதைத்தது, பின்னர் யமனுக்கு அருள் புரிந்தது, மார்க்கண்டேயருக்கு என்றும் பதினாறு இருக்க அருள் புரிந்தது, ஆகியன விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இந்தப்பாடலில் சிவன் விடமுண்ட பின்னர் தேவர்கள் இடைவிடாது இரவு முழுவதும் அர்ச்சித்த சதுர்த்தசி நாளே சிவராத்திரி என்பது குறிக்கப்பட்டுள்ளது.

சிவராத்திரி இரவில் இந்தக் கதையைக்கேட்கும் சிறுவர், சிறுமியர்களுக்கு காணம், துவரை, பயறு முதலியவற்றை அவித்துச் சுண்டலாக்கிக் கொடுப்பது மரபு. மார்கண்டேயன் கதைப்பாடலை விவரமாக பல சுவடிகளை ஒப்புநோக்கி திரு. டாக்டர் தசரதன் அவர்கள் பெரிய நூலாகப் பதிப்பித்துள்ளார்கள். இது ஏறத்தாழ 2700 வரிகளைக் கொண்ட நெடும்பாடலாகும். அதற்கு விளக்கமான உரையும், சொல்லகராதியும் இணைக்கப்பட்டுள்ளன.

சிவராத்திரி விரதத்தை தன்னையறியாமலேயே மேற்கொண்ட போதிலும் அது தரும் பயன்களை விளக்கும்

சிவராத்திரி விரத புண்ணியக் கதைகள்

சிவராத்திரியின் சிறப்பை விளக்கும் புராணக்கதைகள் பல இருப்பினும் இந்தியா வெங்கும் வழங்கும் சிறப்பான கதை வேடன் கதையாகும். அதனை இனிகாணலாம். இக்கதையை சிவராத்திரிபுராணம், சிவமகாபுராணம், முதலிய புராணங்களினாலும், திருவைகாவூர், ஓமமாம்புலியூர், திருப்புறம்பயம் முதலிய தலங்களின் வரலாறுகளினாலும், செவிவழி வரலாற்றுச் செய்திகளாலும் அறியலாம். இந்நூல்களில் இந்தக்கதை சிறுசிறு மாறுதல்களுடன் பரவலாகக் கூறப்பட்டு வருகின்றது. இங்கு சிவராத்திரி புராணத்தில் இடம் பெற்றுள்ள கதையை முதலில் காணலாம்.

1. வேடன் அருள் பெற்ற கதை

சாகரபுரம் என்னும் நகரின் ஓரத்தில் உள்ள காட்டில் அங்குலன் என்று வேடுவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். ஒருநாள் அவன் வழக்கப்படியே வேட்டைக்குப் புறப்பட்டான். அன்று நெடுநேரம் முயன்றும் அவனுக்கு மிருகங்களோ, பறவைகளோ கிடைக்கவில்லை. வீட்டில் மனைவியும் குழந்தைகளும் பசியாக இருப்பார்கள் அவர்களுக்கு எதுவும் உண்பதற்கு வேட்டையாடிக் கொண்டு போகாமல் வெறுங்கையோடு எப்படித் திரும்புவது என்று எண்ணியபடியே காட்டினுள் வெகுதூரம் வந்துவிட்டான்.

பகல் முடிந்து இரவும் வந்து விட்டது.

அவன் அப்போதுதான் தான் நெடுந்தொலைவு வந்து விட்டதை உணர்ந்தான். அப்போது அவன் ஒரு குளத்தைக் கண்டான். இரவில் தண்ணீர் குடிக்க மிருகங்கள் ஏதாவது இங்கு வரலாம் அவற்றை நாம் வேட்டையாடலாம் என்று எண்ணினான். அதே சமயம் இரவில் புலி, சிங்கம் முதலியன வந்து விட்டால் என்ன செய்வது என்று எண்ணி அருகில் இருந்த வில்வமரத்தின் மீது ஏறி வசதியாக அமர்ந்து கொண்டான்.

அம்மரம் தழைத்து வளர்ந்திருந்ததால் அம்புவிடும் போது, அவற்றின் தழைகள் தடுக்குமென்று கருதி தன் கத்தியால் அவற்றை அரிந்து கீழே போட்டான். பின்னர் நெடுநேரம் கடந்தது. ஒரு மிருகமும் அங்கு வரவில்லை, அவனுக்கு பகல் முழுவதும் அலைந்து திரிந்த களைப்பால் உறக்கம் வந்தது. உறங்கினால் கிளையிலிருந்து கிழே விழுந்து விடுவோம் என்ற அச்சம் தோன்றியது. அதனால் உறக்கத்தை நீக்கும் பொருட்டு வில்வமரத்தில் இருந்து ஒவ்வொரு இலைகளாகக் கிள்ளி கீழே போட்டுக் கொண்டே இருந்தான். இரவு கழிந்து பொழுதும் விடிந்தது.

வேடன் மரத்தில் இருந்து கீழே இறங்கினான். அந்த நாள் சிவராத்திரி புண்ணிய தினமாகும். அந்த மரத்தின் கீழே ஒரு ரிஷியால் வேத விதிப்படி அமைக்கப்பட்ட சிவலிங்கம் ஒன்று அமைந்திருந்தது. வேடன் கத்தியால் அரிந்து எறிந்த வில்வ இலைகளும், தூக்கத்தை விரட்ட பறித்துப் போட்ட இலைகளும், அதன் மீது நிறைந்திருந்தன. வேடன் தன் மனம் விரும்பி வில்வ இலைகளைக் கொண்டு லிங்கத்தைப் பூசைசெய்யாவிட்டாலும், சிவராத்திரி முழுவதும் வில்வ இலைகளை சிவலிங்கத்தின் மீது போட்டுக் கொண்டே இருந்ததால் அவன் மனதில் அன்புணர்ச்சி கூடியது. அதனால் அவன் வீடு திரும்பியது முதல் மூங்கிலரிசி, தினையரிசி முதலியவற்றையே உண்டு வாழ்ந்து வந்தான். நெடிது நாள் வாழ்ந்து முடிந்த பிறகு அவன் இறந்தான். அவனை யமதூதர் பற்றிச் செல்லவந்தனர் அப்போது, சிவபெருமான் அருளினால் பூதகணங்கள் வந்து வேடனை அழைத்துச் சென்றனர். அதன்படியே வேடன் கயிலை சென்று சிவபெருமானைப் பணிந்து அருள் பெற்றான்.

யமதூதர்களால் இதனைக் கேள்வியுற்ற எமதர்மன் உடனே தன் எருமைக் கடாவின் மீதேறி கயிலை சென்று இறைவனை வணங்கினான். ஐயனே! இவன் உயிர்களைக் கொன்று தின்றே வாழ்ந்தவன். இவன் ஒருநாளும் சிவபூசை செய்தானில்லை. மிருகங்களுக்கு அஞ்சி, மரத்தின் மீதேறிக் கொண்டு தூக்கம் வராமலிருக்க இலைகளைப் பறித்துப் போட்டானே தவிர உண்மையான பக்தியால் இதனைச் செய்யவில்லை. இவன் சிவலோகம் வரக் காரணம் என்னவென்றான்.

பெருமான் அவனை நோக்கி, "யமதர்மனே!, சிவராத்திரிவேளையில் சிவலிங்கத்தைத் தரிசிப்பது,

அதன் மீது நீர்வார்ப்பது, வில்வம் முதலான பச்சிலைகளைப் போடுவது யாவும், தெரிந்தோ, தெரியாமலோ செய்தாலும் அது சிவபுண்ணியமே. அந்த வகையில் அவன் இங்கு வந்து சுகமாக இருக்கின்றான். இது சிவராத்திரி விரதத்தின் மகிமை என்றார். அவனும் அதனை அறிந்து தனது உலகம் மகிழ்வுடன் மீண்டான்.

இக்கதை சிவராத்திரி புராணத்தில் சூத முனிவர் நைமிசாரண்ய முனிவர்களுக்குச் சொல்லியதாகக் கூறப்பட்டுள்ளது.

சிவமகா புராணத்தில் உள்ள "வேடன் சிவராத்திரி பலன் பெற்றது எனும் கதை"

ஒரு சமயம் நைமிசாரண்யத்திற்கு எழுந்தருளிய சூதமுனிவரை நோக்கி அங்கு தவம் செய்து கொண்டிருந்த முனிவர்கள் சிவராத்திரி விரதத்தைக் கடைப்பிடிப்பதால் உண்டாகும் பயனைக் கூறியருள வேண்டுமென்று கேட்டனர். மேலும் அவர்கள் இந்த விரதத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாமல் இயன்றவரை கடைப் பிடித்தாலும் பலன் தருமா? என்றும் கேட்டனர்.

சூதமுனிவர் மிகவும் மகிழ்ச்சி கொண்டு முனிவர்களை நோக்கி "அன்பர்களே! சிவராத்திரி விரதத்தைத் தன்னை அறியாமலேயே கடைப்பிடித்து வேடனொருவன் சிறப்பெய்திய ஒரு பழையவரலாறு ஒன்றுள்ளது. அதை உங்களுக்கு இப்போது கூறுகின்றேன்" என்று சொல்லி, அதனைக் கூறத்தொடங்கினார்.

ஒரு காட்டில் மிகுந்த பலசாலியும் பெரிய குடும்பத்தை உடையவனான ஒரு வேடன் வாழ்ந்து வந்தான். அவன் பறவைகளைக் கண்ணிவைத்துப் பிடித்தும், மிருகங்களை வேட்டையாடியும், தன் வாழ்நாளை நடத்திவந்தான். ஒரு சமயம் அவனுடைய குடும்பத்தினர் அவனிடம் சில நாட்களாகப் போதுமான உணவு கிடைக்கவில்லை. எனவே, இன்று அதிக அளவு வேட்டையாடிக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர்.

வேடன் உடனே வில்லையும், அம்பு கூட்டையும் எடுத்துக் கொண்டு காட்டிற்குள் சென்றான். அன்று பகல் முழுவதும் அவன் கண்ணில் மிருகங்களோ, பறவைகளோ படவே இல்லை. அவனுக்குப் பசியும், தாகமும் உண்டாயிற்று. மாலைக்காலமும் வந்து சேர்ந்தது.

அலைந்து திரிந்த சோர்வினாலும், பட்டினியால் உண்டான களைப்பாலும் அவன் மிகுந்த வருத்தமடைந்தான். பசியோடு தன்னை எதிர்நோக்கிக் காத்திருக்கும் மனைவி தாய், தந்தையார், குழந்தைகள் வருந்துவார்களே, என்று எண்ணி மேலும் துக்கமடைந்தான்.

வெறுங்கையோடு வீட்டிற்குச் செல்லவும் அவனுக்கு மனமில்லை. அதனால் அருகினில் இருந்த குளத்தில் தண்ணீரைக் குடித்துவிட்டு தோற்பையில் கொஞ்சம் தண்ணீரை எடுத்துக் கொண்டு அந்தக் குளத்தின் கரையில் தழைத்திருந்த ஒரு வில்வமரத்தின் மீது ஏறி அமர்ந்து கொண்டான். இரவில் தண்ணீர் குடிக்க மிருகங்கள் ஏதாவது வந்தால் அதனை வேட்டையாடலாம் என்பது அவனுடைய எண்ணமாகும்.

இரவின் முதல் ஜாமம் நெருங்கியது. அப்போது ஒரு பெண்மான் தண்ணீர் குடிக்க வந்தது. உடனே வேடன் அம்பைப் பூட்டி, அதற்குக் குறிபார்த்தான். அவன் அசைந்ததால் அவன் தோல்பையிலிருந்து சிறிது நீர் கீழே கொட்டியது வில்லின் முனைபட்டு சில வில்வத்தழைகள் கீழே விழுந்தன.

அந்த மரத்தின் கீழே முனிவர்களால் அமைக்கப்பட்ட சிவலிங்கம் ஒன்று இருந்ததால் தண்ணீரும், தழைகளும் அதன்மீது விழுந்தன. அன்று சிவராத்திரி தினமாதலால் அச்செயல் அவனுக்கு முதல்கால சிவபூஜையின் பலனைத் தந்தது.

அப்போது ஏற்பட்ட சலசலப்பில் மான் வேடனைப் பார்த்து விட்டது. உடனே அது அவனை நோக்கி, "என்னை ஏன் கொல்ல விரும்புகிறாய்"? என்று கேட்டது. வேடன் "மானே, நான் பெரிய குடும்பஸ்தன். நானும் என் குடும்பமும், பட்டினியால் மிகவும் துன்பமடைகிறோம். உன்னைக் கொன்று உன் மாமிசத்தை உண்டால் நாங்கள் பசியாறுவோம்" என்றான்.

அதற்கு மான், "வேடனே, உன் குடும்பத்தின் பசி என்னால் தீருமென்றால் நான் மிகுந்த பாக்கியசாலி, பயனற்ற இந்த உடலின் இறைச்சி உனக்கு உபயோகமாகுமென்றால் எனக்கு மகிழ்ச்சியே. ஆனால் எனக்குக் குட்டிகள் சில

உள்ளன. என்னை இழந்தால் அவை துன்பமடையும். எனவே நான் அவற்றை எனது உடன்பிறந்த பெண்மானிடம் ஒப்படைத்து விட்டு உன்னிடம் திரும்பி வருகிறேன். உனக்கு என்னை இரையாக்கிக்கொள், என்றது.

வேடன், மானிடம் "உன்னை எவ்வாறு நம்புவது? கையில் கிடைத்த பொருளை விடுபவன் மூடனல்லவா?" என்றான்.

மான் அவனுக்குப் பலவித சமாதானங்களை சொல்லியது . வேடன் ஒருவாறு மனம் நெகிழ்ந்து அதனை அனுப்பினான். முதல் ஜாமமும் கழிந்தது.

முன் சென்ற மான் நெடுநேரமாகத் திரும்பி வராததால் அதற்கு இளைய பெண்மான் அதனைத் தேடிக் கொண்டு விரைவுடன் அங்கு வந்தது. அதைக் கண்ட வேடன் வில்லை வளைத்து பாணம் தொடுக்கத் தொடங்கினான். முன் போலவே வில்லின் நுனிபட்டு சில இலைகளும் அவன் பையிலிருந்து கொஞ்சம் நீரும் சிதறி கீழேயுள்ள சிவலிங்கத்தின் மீது விழுந்தன. இதனால் அவன் இரண்டாவது கால சிவபூஜை செய்த பயனைப் பெற்றான்.

இந்த மானும் வேடனைப் பார்த்துவிட்டு வேடனே, "உன்பசிக்கு என் உடல் உபயோகம் ஆகுமென்றால் எனக்கு மிகுந்த மகிழ்சியே ! ஆனால் எனக்கென சிலகடமைகள் உள்ளன. அவற்றை முடித்து விட்டு வருவேன்," என்று பலவாறு சமாதானம் சொல்லி அவனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு திரும்பியது.

இதற்கிடையில் இரண்டாம் ஜாமம் முடிந்து மூன்றாம் ஜாமம் தொடங்கியது. பெண்மான்கள் இரண்டும் சென்று நீண்டநேரம் ஆகியும் திரும்பாதது கண்டு ஆண்மான் அதனைத் தேடி அதே குளத்திற்கு வந்தது.

அதன் வரவைக் கண்ட வேடன் வில்லை வளைத்தான். அதைக் கண்ட மான் அவனை நோக்கி, "ஐயா, என் துணை மான்கள் நீர்குடிக்க வந்து நீண்டநேரமாயிற்று. அதனைக் காணவில்லையே என்று தேடி வந்தேன். எங்கள் குட்டிகள் எங்களைக் காணாது தவிக்கும். ஆதலால் உனக்கு உணவாவதற்கு முன் அவற்றை உரிய இடத்தில் ஒப்படைத்துவிட்டு வருகிறேன். என் சொல்லை நம்பு, சத்தியத்தால் தான் இந்த உலகம் செழித்திருக்கின்றது. நான் சத்தியத்தை நம்புகிறேன். சிவபெருமான் மீது ஆணையாக உடனே திரும்புவேன் எனக்கு அனுமதி கொடு," என்று பலவாறு சொல்லியது.


வேடன், "மானே ! முன்பு இரண்டுமான்கள் இப்படிச் சொல்லி என்னிடமிருந்து விடைபெற்றுச் சென்றன. நீயும் அப்படியே கேட்கிறாய். நான் பட்டினிகிடக்கும் என் குடும்பத்தினர்க்கு எப்படி பதில் சொல்வேன்? சத்தியத்தைப் பேசும் உன்னை நம்புகிறேன். என்னை மோசம் செய்யாதே ! போய் வா" என்றான்.

மான் உடனே தன்னிடத்திற்குத் திரும்பியது.

முன்பின்னாக வந்த மூன்று மான்களும் சந்தித்துக் கொண்டன. பின்னர் வேடனுக்கு உணவாக நான் போகிறேன் என்று சொல்லிக் ஆண் மான் கிளம்பியது. அப்போது அதற்கு பெண் மான்கள் உன்னை இழந்து எப்படி வாழ்வோம். ஆகையால் நாங்கள் போகிறோம் என்றன.

உங்களைக் காக்க வேண்டியது என் கடன் ஆதலால் நானே செல்லுவேன் என்று ஆண் மான் உறுதியாகச் சொல்லியது.

இறுதியில் ஆண் மானும், பெண் மான்கள்



இரண்டும் ஆக மூன்றும் சேர்ந்தே வேடனிடம் சென்று உணவாகி விடுவது என்று தீர்மானித்தன. குட்டிகளை உச்சிமோர்ந்து அன்புடன் நக்கி, தன் இனத்தைச் சேர்ந்த கூட்டத்தில் ஒப்படைத்து காக்கும்படிக் கூறிவிட்டு வேடன் இருக்குமிடத்திற்கு விரைவாக வந்து சேர்ந்தன.

சிறிது நேரம் கழிந்த பிறகு குட்டிகள் தம்முள் நம் தாய், தந்தையரை இழந்து நாம் மட்டும் வாழ்வது முறையா? அவர்களுக்கு நேர்வது நமக்கும் நேரட்டும், என்று சொல்லி வேடன் இருப்பிடத்தைத் தேடி வரலாயின.

மான்கள் ஒன்றாக வரக்கண்டு வேடன் கீழே குதித்தான். அப்போது சில இலைகள் கீழே மீண்டும் விழுந்தன. அவன் தோற்பையிலிருந்து கொஞ்சம் தண்ணீர் சிந்தியது. இவையாவும் சிவலிங்கத்தின்மீது விழுந்தன. ஆதலால் அவன் நான்காவது காலச் சிவபூசை செய்த பயனைப் பெற்றான்.

கீழே இறங்கிய வேடனைக் கண்ட மான்கள் அவனிடம் ஒரே குரலில் தங்களை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டின.

அவைகளின் நேர்மையைக் கண்ட வேடனின் மனம் மாற்றம் பெற்றது. ஐந்தறிவு விலங்குகளாகிய இவைகளே சத்தியம், நேர்மை, ஆகியவற்றைக் கடைப்பிடித்து உயிர்த்தியாகம் புரிய எண்ணும்போது மனிதனாகிய நான் மட்டும் ஏன் இழிந்தவனாக இருக்க வேண்டும் என்று எண்ணினான். சிவராத்திரியில் முறையாகச் சிவபூஜை செய்யாதபோதும், அவனுக்கு சிவபுண்ணியம் கைவந்ததால் ஞானம் பெற்றான். பொழுதுபுலர்ந்தது.

சிவபெருமான், அங்கு தோன்றி வேடனுக்கும், மான்களுக்கும் காட்சியளித்தார். அந்த மான்கள் பேரின்ப நிலையில் சிவலோகம் சேர்ந்தன.

அந்த வேடன் மீண்டும் குகன் என்னும் வேடனாக கங்கைக்கரையில் பிறந்தான். ஆயிரம் படகுகளுக்கு அதிபதியாகி மிகுந்த செல்வாக்குடன் வாழ்ந்தான். ஸ்ரீராமபிரான் காட்டிற்குச் செல்லும்போது அவருக்குப் படகோட்டி கங்கையைக் கடக்க உதவி செய்தான். இவன் மீது கொண்ட அன்பால் ஸ்ரீராமபிரான் இவனைத் தன் தம்பியாக ஏற்றுக்கொண்டார். நெடுநாள் பலசுகங்களை அனுபவித்தபின் சிவலோகம் அடைந்தான். அங்கு சிவபெருமான் அருளினால் நீங்காத பேரின்பத்தில் திளைத்து நின்றார்.

(இக்கதையின் கருத்து வேடனும், மான்களும் தம் மனம் ஒன்று பட்டு சிவராத்திரி விரதத்தை கடைபிடிக்கவில்லை. வேடன் பசியினாலும், துன்பத்தினாலும், அச்சத்தினாலும் மரத்தின்மீது அமர்ந்து விழித்திருந்தான். அவனை அறியாமலேயே தண்ணீர் சிந்தியும், அவனது வில் பட்டு சில தழைகளும் சிவலிங்கத்தின் மீது விழுந்தன. மான்களோ அவ்வேடனின் பசியைப் போக்க வேண்டும் என்ற தியாக உணர்ச்சியாலும் சத்தியத்தை கடைபிடிக்கும் பெரிய மனம் கொண்டிருந்ததாலும் அன்று உண்ணாதும், உறங்காதும் இருந்தன.

இவைகள் சிவசந்நிதியில் தன்னை அறியாமலேயே உண்ணாது உறங்காது சத்தியத்தை நினைத்திருந்ததால் அவைகளுக்குப் பெருமான் மோட்சமளித்தார். சிவராத்திரியில் சிவசந்நிதியில் இருப்பதும் பெருமானின் தூய வடிவான சத்தியத்தை நினைப்பதும் பிறர்க்கு உதவும் தூய சிந்தனையும் செயலும் கொண்டிருப்பதும் கூட மோட்சமளிக்கிறது.

எனவே சிவராத்திரியே தலைசிறந்த உண்மையான விரதமாகும். இதுவே உயிர்க்கு உதவியாகத்திகழ்வதாகும். இதுவே மோட்சத்தின் திறவுகோல்.)



3. திருவைகாவூர்ப் புராணத்தில் உள்ள கதை

பொதுவாக சிவராத்திரி புராணக் கதைகளில் தற்செயலாக வேடன் சிவன் அருள் பெற்ற கதை ஒரே மாதிரியாகவே கூறப்பட்டுள்ளது. இதில் கொஞ்சம் மாறுபாடுடைய கதையைக் கூறுவது திருவைகாவூர்த் தலபுராணமாகும். அதனை இனிக் காணலாம்.

இது கும்பகோணத்திற்கு வடமேற்கில் கொள்ளிடக் கரையில் அமைந்த சிவத்தலமாகும். இவ்வூர்த் தலபுராணத்தில் ஐந்தாம் பகுதியில் சிவராத்திரி மகிமையை விளக்கும் கதை இடம்பெற்றுள்ளது.

ஒருசமயம் வேடன் ஒருவன் ஒரு மானைக் கண்டு வேட்டையாடத் துரத்தி வந்தான். அந்த மான் இவ்வூரில் தவம் செய்து வந்த வன்னியிடம் சரணடைந்தது. அவ்வேடன் வன்னியைக் கொல்ல எத்தனிக்க பக்தர்களைக்காக்கும் சிவபெருமான் ஒரு புலிவடிவம் கொண்டு அவனை ஓட்டினார். அவன் புலி உருவுக்குப் பயந்து ஒரு வில்வமரத்தின் மீதேறி அமர்ந்து கொண்டான். சிவபெருமான் புலிவடிவத்துடன் அம்மரத்தின் கீழே தங்கினார். வேடன் அச்சத்தாலும் புலியை விரட்டவேண்டும் என்பதற்காகவும் வில்வக் கிளைகளை முறித்து அதன்மீது போட்டுக் கொண்டே இருந்தான். அன்றிரவு முடிந்து விடியும் வரை உண்ணாது, உறங்காது இருந்தான். அந்நாள் சிவராத்திரியாதலின் தன்மீது வில்வதளங்களை இட்டு விழித்திருந்த அவனுக்கு சிவபெருமான் மோட்சம் கொடுத்தார்.

இக்கதையை இன்னும் விரிவாக இந்த தலபுராணக்கதை விரிவாகச் சொல்கிறது. திருவைகாவூர்ப் பெருமானே புலியாக வந்து அருள்பாலித்ததால் அவருக்கு வியாக்ரபுரீசுவரர் என்றும் வேடனுக்கு அருள்புரிந்ததால் வியாதேசுவரர் (வியாதன்-வேடன்) என்றும் பெயர் வழங்குவதாயிற்று.



"எறிந்த பைந்தழைகள் யாவும் வியாக்கிரஞ்
சிறந்த கோலச் சிவன் முடி மீதுற
................பூசையாகிப் பொலிந்தன
-திருவைகாவூர்ப்புராணம்

சிவராத்திரி புராண சிற்பங்கள்

சிவமகாபுராணத்தில், சிவராத்திரியன்று வேடன் முக்தி பெற்ற கதை விரிவாக சொல்லப்பட்டுள்ளதால் அனேக இடங்களில் அது சிற்பங்களாக பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வரலாறு நிகழ்ந்த திருவைகாவூரில் பெரிய சுதைச் சிற்பமாக இந்தக் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளது. வண்ணம் தீட்டப்பட்டு பொலிவுடன் விளங்கும் இந்த சிற்பத் தொகுப்பில் வேடன், வில்வ மரம், புலி, சிவலிங்கம் காட்சி கொடுக்கும் உமா தேவியுடன் கூடிய சிவன், அதனைக் கண்டுகளிக்கும் திருமால், பிரமன், முனிவர்கள், அப்சரப் பெண்கள் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

வேலூர் ஜலகண்டேசுவரர் ஆலய கல்யாண மண்டபத் தூணிலும், கோவை மாவட்டம் பெருமா நல்லூர் சிவாலயத்தூணிலும், இதை புடைப்புச் சிற்பமாகக் காண்கிறோம்.

-: பரமனடி தொழுத பாவையர் :-

சோழமாதேவி அபிமான வல்லி

சிவாலயங்களில் லிங்கோற்பவமூர்த்தியை கல்திருமேனியாகவே அமைக்கும் மரபே தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. என்றாலும் அபூர்வமாக உலாத்திருமேனிகளாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

தஞ்சை ராஜராஜேஸ்வரம் என்னும் பெரிய கோயிலில் இத்தகைய லிங்கோற்பவரின் உலாத்திருமேனியிருந்ததை அக்கோயில் கல்வெட்டால் அறிய முடிகின்றது. இதில் லிங்கோற்பவமூர்த்தி லிங்கபுராணத்தேவர் என்று குறிக்கப்பட்டுள்ளார்.

ராஜராஜசோழனின் தேவியான அபிமான வல்லி என்பவள் இத்திருமேனியை செய்தளித்துள்ளாள். இது லிங்கபுராணத்தை விளக்கும் சிற்பத்தொகுதியாகும். இதில் ஒரு கோமுகமும் அதன் மீது பெரியலிங்கம் விளங்க அதன் முன்புறம் சடைமுடியண்ணலாகிய சிவபெருமான் எழுந்தருளியிருந்தார். அவர் வலப்புறமும் நான்கு முகமுடைய பிரமனும் இடப்புறமும் பன்றிமுகம் கொண்ட திருமாலும் அமைந்திருந்தனர். அவள் இத்திருமேனிக்கு முத்துமாலைகள் இரண்டினை அளித்துள்ளாள். சோழ மன்னர்களின் தேவியர் எத்தனையோ வகையான சிவதருமங்களைச் செய்திருந்த போதிலும் இவள் லிங்கபுராணத் தேவரைச் செய்து அளித்ததன் மூலம் தனிச்சிறப்பு பெறுகிறாள். ஆனால் இப்போது இத்திருமேனி இக்கோயிலில் இல்லை.

இதனை தென்னிந்திய கோயிற் சாசனங்கள் (SII Vol. No.44) எனும் நூலில் வெளியாகியுள்ள தஞ்சைப் பெரிய கோவில் கல்வெட்டால் அறியலாம்.

அருப்புக் கோட்டையில் உள்ள சுந்தரரேசுவரர் ஆலயத்தில் உள்ள கல்வெட்டொன்றும் அக்கோயிலில் லிங்கபுராணத்தேவர் எனும் சிற்பம் இருந்ததைக் குறிக்கின்றது.

ஆனால் இப்போது திருநெல்வேலி மாவட்டம் கரிவலம் வந்த நல்லூரில் உள்ள பால்வண்ண நாதேசுவரர் ஆலயத்தில் அழகிய உலாத்திருமேனியாக அமைந்த லிங்கப்புராணத் தேவரைக் காணமுடிகிறது.

சிவராத்திரியின் மூன்றாம்கால பூஜை

சிவராத்திரிக்கு முந்திய மாலைக்காலத்தில் நடராஜமூர்த்தியையும், பிரதோஷ நாயகரையும் வழிபட்டு இரவின் முதல் காலத்தில் சோமாஸ்கந்தரையும், இரண்டாம் காலத்தில் தென்முகக் கடவுளையும், மூன்றாம் காலத்தில் லிங்கோற்பவரையும், நான்காம் காலத்தில் ரிஷபாரூட மூர்த்தி (சந்திரசேகரர்) வழிபட வேண்டும்.

நான்கு காலங்களிலும் மூலவரான சிவலிங்க மூர்த்தியை ஆகமங்கள் சொல்லியபடி வழிபட வேண்டும். சிவலிங்கமூர்த்தியையும் கருவறைக்கு பின்னால் அமைந்த லிங்கோற்பவமூர்த்தியையும் நெய்பூசி வென்னீரால் அபிஷேகம் செய்து கம்பளியால் நெய்த ஆடைகளை அணிவித்து தாழம்பூக்களையும் மலர்களையும் கொண்டு அலங்கரிக்க வேண்டும். இந்த ஒரு காலம் தவிர வேறு சமயங்களில் தாழம்பூவை சிவ பெருமானுக்கே அணிவிக்கலாகாது.

லிங்கோற்பவமூர்த்தியை உருத்திர மந்திரம் கூறி அபிஷேகம் செய்யவேண்டும். ஸ்ரீருத்திரத்திற்கு முன்னால் ஸ்படிகமயமாக விளங்கும் மகாலிங்கமூர்த்திக்கு அபிஷேகம் செய்கிறேன் என்று கூறும் பாடல்கள் உள்ளன. அவற்றைப்பாடி விட்டு ஸ்ரீஉருத்திரத்தையும் சமகத்தையும் கூறவேண்டும்.

நெருப்புச் சுடரின் மையத்தில் தோன்றிய பெருமானை பிரமனும், திருமாலும் ஆயிரம் ஆயிரம் நாமங்களைச் சொல்லி அர்ச்சித்தார்கள். அதனை நினைவு கூறும் வகையில் உருத்திரருக்கு எண்ணில்லாத வணக்கங்களைக் கூறும் உருத்திரத்தை ஓதவேண்டும். மேலும் சிவசகஸ்ர நாமத்தை பாராயணம் செய்ய வேண்டும்.

தமிழ் வேதமான தேவாரத்தில் உள்ள "இருநிலனாய் தீயாகி" எனும் பதிகத்தையும், ''லிங்கபுராணக் குறுந்தொகையும் தவறாது ஓதவேண்டும்.

எள்ளன்னம், சிவந்தபழங்கள், நெல் பொரியையும் வெல்லமும் சேர்த்து செய்த பொரி உருண்டைகள் தான்யங்களை புழுக்கிச் செய்த சுண்டல்கள் ஆகியவற்றை நிவேதனம் செய்யவேண்டும். பதினோரு முறை நமஸ்கரிக்க வேண்டும்.

அடிமுடி காணாத ஆலயம்

சிவபெருமானின் அடியையும், முடியையும் தேடி பிரமனும் திருமாலும் அலமந்த திருத்தலமான திருவண்ணாமலையில் உள்ள அண்ணாமலையார் ஆலயத்தின் இரண்டாம் பிராகாரத்தின் தென்மேற்கு முனையில் கிழக்கு நோக்கியவாறு ஒரு சிற்றாலயம் உள்ளது. இதனை "அடிமுடிகாணாத ஆலயம்" என அழைக்கின்றனர்.

இங்கு அபூர்வமான அண்ணாமலையார் சிலை ஒன்று உள்ளது. இதில் சிவபெருமானும் அம்பிகையும் எழுந்தருளியிருக்க பின்னணியில் இடபவாகனம் நிற்கிறது. அதன் பின்னணியில் அண்ணாமலையும் அதன் உச்சியில் தீபமும் காட்டப்பட்டுள்ளன. மலையின் உச்சியைக் காணமுயல்வது போல் அன்னப்பறவையும், பீடத்தில் பன்றி வடிவமும் காட்டப்பட்டுள்ளது.

இத்தகைய திருமேனிகளை அமைக்கும் முறை ஆகமங்களில் இல்லை. இதே போன்ற அமைப்பை உடைய திருமேனியொன்று இதே ஊரில் உள்ள ஈசான மடத்தின் அருகில் மேற்குநோக்கி அமைந்துள்ள ஆலயத்திலும் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

திருவண்ணாமலையில் நெருப்பு லிங்கத்தின் மத்தியில் சிவபெருமான் தோன்றியதாக புராணங்கள் கூறுவதால் சிற்பநூல்கள் லிங்கத்தின் மத்தியில் சிவபெருமானை மட்டுமே அமைக்கவேண்டும் என்று கூறுகின்றன. ஆனால் தென்நாட்டு மரபின்படி சிவபெருமான் பக்தர்களுக்கு காட்சியளிக்கும்போதெல்லாம் உமையுடன் கூடி விடை வாகனத்தில் காட்சியளித்ததாகவே குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண்கிறோம். அதே அடிப்படையில் இச்சிலையும்



அண்ணாமலை அண்ணலை உண்ணாமுலை நாச்சியாரோடு வடிக்கப்பட்டுள்ளது. இது அபூர்வ சிற்பமே என்றாலும் இலக்கிய மரபை ஒட்டி அமைக்கபட்டிருப்பது கண்டுணரத்தக்கதாகும்.

சிவபெருமானின் அஷ்டநாமம் (எட்டுப்பெயர்கள்)

சிவராத்திரி காலத்தில் சிவபெருமானின் எட்டு பெயர்களை ஓயாது ஜெபிக்க வேண்டும். அப்பெயர்கள் 1. ஸ்ரீபவாய நம: 2. ஸ்ரீசர்வாய நம: 3. ஸ்ரீருத்ராய நம: 4. ஸ்ரீபசுபதயே நம: 5. ஸ்ரீஉக்ராய நம: 6. ஸ்ரீமகாதேவாய நம: 7. ஸ்ரீபீமாய நம: 8. ஸ்ரீஈசாநாய நம:

சிவராத்திரியின் நான்கு காலங்களிலும் பூசனை செய்யத்தக்க பொருட்கள்

சிவராத்திரி பூசையில் சிவலிங்கத்திற்குப் பால், பஞ்சாமிருதம், பழங்கள் முதலிய அனைத்தாலும் அபிஷேகம் செய்தாலும் ஒவ்வொரு காலத்திலும் செய்யவேண்டிய சிறப்பான அபிஷேக அலங்காரம் நிவேதனம் ஆகியவற்றைப் பெரியோர் வகுத்துள்ளனர். இவற்றைக் கொண்டு வழிபாடு செய்வது கூடுதல் நலம் பயப்பதாகும். எனவே அப்பட்டியல் இங்கு இடம் பெறுகிறது.

செயல்	முதற்காலம்	இரண்டாம்காலம்	மூன்றாம்காலம்	நான்காம்காலம்
அபிஷேகம்	பஞ்சகவ்யம்	பஞ்சாமிரும் (தேன், சர்க்கரை தயிர், பால், நெய்)	தேன்	கருப்பஞ்சாறு
மேற்பூச்சு	சந்தனம்	பச்சைகற்பூரம்	அகில்	கஸ்தூரி
பரிவட்டம்	பட்டு	பருத்தி	கம்பளி	மலர்ஆடை
பரிவட்டம் (ஆடை வண்ணம்)	சிவப்பு	மஞ்சள்	வெள்ளை	பச்சை
நிவேதனம்	காய்கறிகள் அன்னம் பலகாரங்கள்	பரமான்னம் லட்டு	மாவு, நெய் சேர்த்த பலகாரங்கள் பாயசம்	கோதுமை, சர்க்கரை, நெய் சேர்ந்த பலகாரங்கள்
வேதம்	இருக்கு	எஜுர்	சாமம்	அதர்வணம்
திருமுறை பஞ்சபுராணத்துடன்	சிவபுராணம்	இருநிலனாய்	லிங்கபுராணக் குறுந்தொகை	போற்றி திருத் தாண்டகம்
தீபம்	விளக்கெண்ணெய்	இலுப்பைஎண்ணெய்	நெய்	நல்லெண்ணெய்
தத்வதீபம்	ரதாரத்தி	ஏகதீபம்	கும்பதீபம்	மகாமேருதீபம்
அட்சதை	அரிசி	யவை	கோதுமை	உளுந்து, பயறு, தினை முதலிய ஏழு தானியங்கள்
மலர்கள்	திருநீற்றுபத்திரி தாமரை, கரவீரம்	தாமரை வில்வம்	அறுகு ஆத்தி, தாழம்பூ	எல்லாவகை மலர்களாலும்
பழங்கள்	வில்வப்பழம்	பலாப்பழம்	மாதுளை	வாழை முதலிய அனைத்துவகைப் பழங்களும்

சிவராத்திரி பெயர் விளக்கம்

"ராத்திர" என்ற சொல்லுக்கு யாவும் செயலற்று ஒடுங்கி நிற்றல் என்பது பொருளாகும். இதனால் உயிர்கள் செயலற்று ஒடுங்கி நிற்கும் காலம் ராத்திரி எனப்பட்டது. உண்மையான ராத்திரி என்பது உயிர்கள் ஒடுங்கி யாவும் செயலற்று விளங்கும் காலமாகும். அதுவே மகாசங்கார காலம், பிரளயகாலம், ஊழிக்காலம் எனப்படும். இந்த வேளையில் பஞ்சபூதங்களும் செயலற்று மாயையில் ஒடுங்கி எங்கும் இருள் செறிந்து காணப்படும். அந்த இருளில் உலகம் செயலற்று எங்கும் அமைதி நிலவும். இந்நிலையில் சிவபெருமான் ஒருவரே செயலாற்றுவார். அவரை அடுத்த தேவி அவருக்குப் பூசனை புரிவாள். அந்த அகண்டாகாரமாகிய இரவே சிவராத்திரி எனப்படும். அதனைக்குறிப்பிட எழுந்ததே சிவராத்திரியாகும்.

"ராத்ர" என்பதற்குப் பூசித்தல் என்பதும் ஒரு பொருளாகும். சிவனை பூசிக்கத்தகுந்த இரவே சிவராத்திரி எனப்படும்.

இயமனும் சிவராத்திரியும்

சிவராத்திரிவேளையில் பெருமானைப் பூசிக்கும் மார்கண்டேயனைப் பிடிக்க வந்த யமன் உதைபடுவது, சிவராத்திரி காலங்களில் கொடுமை நிரம்பிய வேடன் விழித்திருந்து வில்வக்கிளையை உதிர்த்ததால் சிவலோகம் செல்ல அதனைத்தடுக்க வந்த யமன் உதைபடுவது பின்னாளில் அவனுக்கு சிவராத்திரி மகிமை உரைக்கப்படுவது என்பன போன்றவை குறித்த கதைகளில் காணப்படும் பொது அம்சமாகும். திருவைகாவூர்ப் புராணத்தில் முன்னர் யமன் விமோசன சருக்கம் என்ற ஒருபகுதியும் உள்ளது.

இதனை நோக்க சிராத்திரியின் அடிப்படைக் கருத்து ஆன்மாவானது தனது வினைகளை நீக்கிக் கொண்டு யமவாதனையை அகற்றி சிவபெருமானுடன் ஐக்கியமாவதேயாகும். சிவராத்திரியின் நான்காம் காலத்தில் மிருத்துஞ்சய மந்திரத்தை ஓத வேண்டும் என்று பெரியோர்கள் கூறுவதும் இங்கு எண்ணத்தக்கதாகும்.

சிவராத்திரி தத்துவம்

உணவும், உறக்கமும் உயிர்க்குப் பகையாகும். இங்கு உணவு என்பது வினைகள் அதனைச் செய்யச் செய்ய வினைகள் மூண்டு திரும்பத் திரும்ப பிறக்க நேரும். உறக்கம் என்பது மாயைக்குட்பட்டு மயங்குதலாகும். ஆதலின் உணவு நீக்கம் என்பதும் வினைகளை அகற்றிக் கொள்வதும், விழித்திருத்தல் என்பது ஆன்மா தன்னை உணர்ந்து கொள்வதும் ஆகும்.

சிவராத்திரியில் உண், உறக்கம் ஒழிப்பதென்பது உண்மையில் ஆன்மா வினைகளை வென்று தன்னை உணர்ந்து கொள்வதேயாகும்.

சர்வம் லிங்கமயம்

லிங்கத்திலிருந்தே அனைத்தும் உண்டாயின. அதே போலவே இறுதியில் லிங்கத்திலேயே எல்லாம் அடங்குகின்றன. படைப்பு, காப்பு, அழிப்பு ஆகிய யாவும் அதிலேயே அடங்கியுள்ளன. எனவே அது லிங்கம் எனப்பட்டது.

சிவாலய ஓட்டம்



அன்பர்கள் விரதமிருந்து கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள திருமலை, திக்குறிச்சி, திருப்பரம்பு, திருநந்திக்கரை, பொன்மலை, பன்னிப்பாக்கம், கல்குளம், மேலாங்கோடு, திருவிடைக்கோடு, திருவிதாங்கோடு, திருப்பன்றிக்கோடு, திருநட்டாலம் ஆகிய ஊர்களில் உள்ள பன்னிரண்டு சிவலாயங்களை சிவராத்திரி நாளில் தரிசிப்பதை சிறந்த தென்று கருதுகின்றனர்.

"கோவிந்தர்கள்" என்று அழைக்கப்படும் இப்பக்தர்கள் மாசி சிவராத்திரிக்கு ஒரு வாரத்திற்கு முன்பே மஞ்சள் அல்லது சிவந்த உடையும், மாலைகளையும் அணிந்து விரதம் மேற்கொள்கின்றனர். இவர்கள் விரத நாட்களில் பகலில் இளநீர், நுங்கு ஆகியவற்றையும் இரவில் துளசிஇலைத்தண்ணீரையும் உட்கொள்வர். வேக வைத்த பதார்த்தங்களை உண்பதில்லை. இவர்கள் விசிறி, சிறிய பணமுடிப்பு, மின் விளக்கு (டார்ச்) ஆகியவற்றை ஏந்தியவாறு ஒரு குருசாமியின் தலைமையில் ஆயிரக்கணக்கானவர்களாகப் பயணத்தைத் துவங்குகின்றனர். இந்த பன்னிரு சிவாலயங்களில் முதன்மையானது திருமலைமகாதேவர் கோயிலாகும்.

சிவராத்திரியன்று மாலை இக்கோயிலுக்கு அருகேயுள்ள குளத்தில் குளித்து பூஜை முடித்து விட்டுப் புறப்படுவர். திருமலை, திக்குறிச்சி, திற்பரப்பு, திருநந்திக்கரை, பொன்மனை ஆகிய தலங்களை வரிசையாகத் தரிசித்து பொன்மனையிலுள்ள சிவாலயத்தில் இளநீர், வாழைப்பழம் ஆகியவற்றை வாங்கி உண்கின்றனர். இவ்வூரில் உள்ள தேரியம் வீடு என்ற இல்லத்தினர் தினைக்கஞ்சி, பலாக்காய் கறி, மிளகு நீர் ஆகியவற்றை இந்த பக்தர்களுக்கு வழங்குகின்றனர்.

பின்னர் அவர்கள் திருப்பன்னிப்பாகம், கல்குளம், மேலாங்கோடு, திருவிதாங்கோடு, திருவிடைக்கோடு, திருப்பன்றிக்கோடு ஆகிய திருத்தலங்களை வணங்கி நட்டாலம் என்ற பதியை அடைந்து தமது ஓட்டத்தை முடித்துக்கொள்வர். இவ்வரிசையில் முதலில் சொல்லப்பட்ட 11 சிவாலயங்களில் விபூதிப் பிரசாதமும், திருநட்டாலத்தில் சந்தனமும் வழங்கப்படுகின்றன. சிவாலயயாத்திரை முடிந்த பின்னர் பெரும்பாலான பக்தர்கள் சுசீந்திரம் சென்று வழிபடுவர். சுசீந்திரத்தில் எழுந்தருளியுள்ள தாணுமாலய சுவாமி சிவன், திருமால், பிரமன் ஆகிய மும்மூர்த்திகளின் தொகுப்பு சக்தியாக விளங்குவதால் அவரை வணங்கிய பின்னர் இப்புனித யாத்திரையை நிறைவு செய்கின்றனர்.

இச்சிவாலய ஓட்டத்தின் மொத்த தூரம் 70 கி.மீ. ஆகும். இப்பயணத்தின் போது "கோவிந்தா, கோபாலா" என்று அழைத்துக்கொண்டே ஓடுகின்றனர். ஓட்டத்தில் கலந்து கொள்ளும் பக்தர்கள் ஒருவரை ஒருவர் கோவிந்தா என்றே குறிப்பிட்டு அழைக்கின்றனர். இவ்வாறு சிவபக்தர்கள் திருமாலின் பெயரான "கோவிந்தா" என்று கூறி அழைக்கும் வழக்கம் சைவ, வைணவ ஒற்றுமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சிவாலய ஓட்டம்பற்றி எவ்வித வரலாற்றுச் சான்றும் இல்லையெனினும் கி.பி.9 அல்லது 10 நூற்றாண்டில் இவ்வழக்கம் தோன்றி இருக்கலாம் என்று வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். நாஞ்சில் நாட்டில் பெருகியிருந்த சமணர் செல்வாக்கைக் குறைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது சைவர்களும் வைணவர்களும் ஒன்றுபடவேண்டும் என்ற நோக்கத்தில் இது தோற்றுவிக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இப்போது தொன்று தொட்டு நடந்து வரும் இந்த சிவலாய ஓட்டத்தை கவனத்திற்கொண்டு சில அமைப்புகள் தமிழகத்தின் பல பகுதிகளிலும் சிவாலய ஓட்டத்தை நடத்தி வருகின்றன.

(செய்தி மூலம் எம். இராஜகோபாலன், பெசன்ட்நகர், சென்னை-90)

தத்துவ நோக்கில் அடிமுடி தேடிய கதை



சிவபெருமான் நெருப்புத்தூணாக நின்றதும் அவருடைய அடியையும், முடியையும் தேடிப் பிரமனும் திருமாலும், தோற்றகதை நீண்ட நெடுங் காலத்திற்கு முன்பு நடந்த புராணவரலாறாக இருந்தாலும் மனித வாழ்வின் நடைமுறையை ஒட்டி அந்தக் கதைக்குச் சமயச் சான்றோர்கள் தத்துவ நோக்கில் பலவிளக்கங்களை அளித்துள்ளனர். அவற்றில் சிலவற்றைக் காணலாம்.

❒ பிரமன் அறிவுக்கடவுள், திருமால் செல்வத்தின் அதிபதி, சிவபெருமானை அறிவினாலும் செல்வத்தினாலும் அளவிட்டு அறிந்து விட முடியாது என்பதே அடிமுடிதேடிய கதையின் தத்துவமாகும். அறிவு எல்லைமீறும் போது அகங்காரமாகி விடுகின்றது. செல்வம் எல்லையை மீறும் போது செருக்கு வந்து விடுகின்றது. பிரமன் அகங்காரத்தாலும், திருமால் செருக்காலும் தாமே பெரியவர் என்று எண்ணிப் போட்டியிட்ட தாலேயே சிவபெருமானைக் காணமுடியாது போயிற்று. சிவபெருமானை அன்பினாலும் உலக உயிர்களுக்குச் செய்யும் தொண்டினாலுமே எளிதில் அடையமுடியும் என்பதை உணர்த்துவதே சிவராத்திரியின் தத்துவமாகும்.

❒ சிவபெருமானின் சடைமுடி என்பது காடாக உருவகம் செய்யப்படுகின்றது. இலக்கியங்களிலும் அது சடைக்காடு என்று குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அதில் காட்டுப்பூவான கொன்றை மலர்களும் மண்டை ஓடுகளும், நச்சுப் பாம்புகளும் உள்ளன. பெருமானின் திருவடிகள் தாமரை மலர்களாகும். இதனால் அது தாமரைச் சேவடி என்றும் அழைக்கப்பட்டது. அன்னம் தாமரையில் வாழ்வது, பன்றி காட்டில் வசிப்பது, இந்தப்புராணக் கதையில் தாமரையை நாடவேண்டிய அன்னம் சடையாகிய காட்டைத் தேடி ஓடுகின்றது. காட்டில் வாழ வேண்டிய பன்றி திருவடியாகிய தாமரை மலரை நோக்கிச் செல்கின்றது. இப்படி இயற்கைக்கு மாறான வடிவத்துடனும் குணத்துடனும் செயல்பட்டதனாலேயே பிரமனும் திருமாலும் அடிமுடி தேடிச் சோர்ந்தனர். இயற்கையின் நியதிக்கு மாறான காரியங்கள் சோர்வைத் தரும் என்பதே இக்கதையின் பொருளாகும்.

ஒரு பொருளின் தன்மையை ஆன்மா அறிந்து அதன்வசமாகி ஆனந்தத்தைப் பெறுவதே சிவராத்திரி வழிபாட்டின் பொருளாகும்.

❒ இறைவனுடைய அருளின் வடிவமாக விளங்குபவை அவனுடைய திருவடிகள் ஆகும். இதுபோலவே அவனுடைய திருமுடி சிவஞானத்தின் வடிவமாகும். உயிர்கள் சிவபெருமானின் அடிமுடியைக் காண்பது என்பது திருவருளைப் பெற்றுச் சிவஞானமயமாகி வீடுபேறு பெறுவ தாகும். அதனை நூலறிவினாலோ செல்வச் செழிப்பினாலோ பெற்றுவிட முடியாது என்பதை உணாத்துவதே பிரமனும், திருமாலும் அடிமுடிதேடிச் சோர்ந்து வீழ்ந்த கதையாகும். அன்பர்கள் நெறியான வாழ்க்கையால் அவற்றை இருந்த இடத்திலிருந்தே அவற்றை அடைந்து விடுகின்றனர் என்பதைப் புராணங்கள் விளங்குகின்றன.

சிவபெருமானின் திருமுடியும், திருவடியும் முறையே அருளும், ஞானமுமாக விளங்குகின்றன என்பதையும் அதை அடைவதே முக்தி நெறி என்பதையும் திருமூலர் திருமந்திரத்தில் குறித்துள்ளதைக் காணலாம். அது

காலுந் தலையும் அறியார் கலதிகள்
காலந்தச் சக்தி அருளென்பர் காரணம்
பாலொன்று ஞானமே பண்பார் தலை உயிர்
காலந்த ஞானத்தைக் காட்ட வீடாமே".

இதன்பொருள் : காலாகிய அந்தம், சத்தியாகிய அருளின் வடிவம் என்பர். தலையின் உச்சி சிவஞானமாகும். காலையும், தலையும் அறிதல் என்பது சிவஞானத்தை அடைந்து வீடுபேறு பெறுவதே யாகும் இதுவே உயர்ந்த வழியாகும்.

பதினான்கும் சிவராத்திரியும்

பதினான்கு என்ற எண் ஞானத்தோடு தொடர்புடையதாக உள்ளது. ஞானவிளக்க நூல்களான சைவ சித்தாந்த சாத்திரங்களும், வேதாந்த சாத்திரங்களும் பதினான்கு என்ற எண்ணிக்கை அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க தாகும். ஆகம நூல்களும் பதினான்கின் இரட்டிப்பான இருபத் தெட்டு என்ற எண்ணிக்கையில் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

உயிர்களுக்கு ஞானத்தை அளிக்கும் இரவாகிய சிவராத்திரி, அமாவாசையின் பதினான்காம் நாளாகிய வளர்பிறை சதுர்த்தசி திதியும் பௌர்ணமியை அடுத்த பதினான்காம் நாளாகிய தேய்பிறை சதுர்த்தசி திதியுமான இரவு நேரங்களேயாகும்.

ஆண்டுதோறும் கொண்டாடப்படும் மாத சிவ ராத்திரிகளின் எண்ணிக்கையும் பதினான்காக அமைந் துள்ளதைக் காண்கிறோம். இதனையொத்ததாக மகாசிவராத்திரியன்று பதினான்கு சிவலிங்கங்களைத் தரிசிப்பது கோடி மடங்கு புண்ணியம் என்று புராணங்கள் கூறுகின்றன.


காசி நகரில் மாதசிவராத்திரி எனப்படும் பதினான்கு நாட்களிலும் நித்திய சிவராத்திரி என்றழைக்கப்படும் வளர்பிறை, தேய்பிறைகளில் வரும், சதுர்த்தசி ஆகிய பதினான்கு நாட்களிலும் பதினான்கு சிவாலயங்களுக்குச் சென்று வழிபடும் வழக்கம் உள்ளது. இதற்கு சிவராத்திரி யாத்திரை அல்லது சதுர்த்தசி யாத்திரை என்பது பெயராகும்.

காசிக் கண்டம் என்ற நூலில் இந்த சதுர்த்தசி யாத்திரை சிறப்பாகக் கூறப்பட்டுள்ளதைக் காண்கின்றோம். சதுர்த்தசி திதியில் காசி நகரில் தரிசிக்க வேண்டிய பதினான்கு சிவலிங்கங்களின் பெயரைப் பல நூல்கள் பலவாறு குறிப்பிடுகின்றன. அவற்றில் மூன்று வகையான தொகுப்பைத் தனிச் செய்தியில் காணலாம். சிவராத்திரி யாத்திரையினை மேற் கொள்ள முடியாதவர்கள் அந்த இரவில் கண் விழித் திருந்து இந்தச் சிவலிங்கங்களின் பெயரைச் சொல்லி அர்ச்சித்தாலும் மகாபுண்ணியம் கிடைக்கும்.

காசிநகரில் சிவராத்திரியில் தரிசிக்கவேண்டிய பதினான்கு சிவலிங்கங்கள்

1) அமிர்தேசுவரர்	1) சைலேசுவரர்	1) ஓங்காரேசுவரர்
2) தாரகேசுவரர்	2) சங்கமேசுவரர்	2) த்ரிலோசனேசுவரர்
3) ஞானேசுவரர்	3) ஸ்வலீயனீசுவரர்	3) ஆதி மகாதேவர்
4) கருணேசுவரர்	4) மத்யமேசுவரர்	4) கிருத்திவாசேசுவரர்
5) மோட்ச த்வாரேஸ்வரர்	5) ஹிரண்யகர்பேசுவரர்	5) ரத்னேசுவரர்
6) சுவர்கத் துவாரேஸ்வரர்	6) ஈசானேசுவரர்	6) சந்திரேசுவரர்
7) பிரம்மேசுவரர்	7) கோப்ரேக்ஷேசுவரர்	7) கேதாரீசுவரர் (கௌரி சங்கர்)
8) லாங்கலீசுவரர்	8) விருஷபத்துவஜேஸ்வரர்	8) தர்மேசுவரர்
9) விருத்தகாளேசுவரர்	9) உபசாந்தசிவம்	9) வீரேசுவரர்
10) விருக்ஷேசுவரர்	10) ஜேஷ்டேசுவரர்	10) காமேசுவரர்
11) சண்டீஸ்வரர்	11) நிவாசேஸ்வரர்	11) விசுவகாமேசுவரர்
12) நந்தீகேசுவரர்	12) சுக்ரேசுவரர்	12) மணிகர்ணிகேசுவரர்
13) மகேசுவரர்	13) வியாக்ரேசுவரர்	13) அவிமுக்தேசுவரர்
14) ஜோதிரூபேசுவரர்	14) ஜம்புகேசுவரர்	14) விசுவேசுவரர்

பஞ்ச முகார்ச்சனை



★ காரணாகமம் சிவராத்திரியின் நான்கு காலங்களிலும் பஞ்சவில்வங்கங்களைக் கொண்டு சிவலிங்கத்திற்குப் பஞ்சமுகார்ச்சனை செய்ய வேண்டும் என்று கூறுகின்றது. அது இயலாதபோது லிங்கோற்ப காலமான மூன்றாவது காலத்திலேனும் சிவமூர்த்திக்குப் பஞ்சவில்வங்களைக் கொண்டு பஞ்சமுகார்ச்சனை செய்து பஞ்சமுக ஆரத்தியால் தீபாராதனையும் ஐந்து வகை அன்னத்தால் நிவேதனமும் செய்ய வேண்டும்.

சிவராத்திரி பெயர் விளக்கம்

ராத்ரா என்ற சொல்லிலிருந்து ராத்திரி என்ற சொல் வந்தது. ராத்ரா என்பதற்கு மூலச் சொல் ரா. தன என்பதாகும். இதற்கு அளித்தல் என்பது பொருளாகும். உழைத்துக் களைத்து ஓய்ந்த உயிர்களுக்கு சுகத்தையும், ஓய்வையும் தரும் நேரமே ராத்திரி எனப்பட்டது.

மேலும் இதற்குரிய நுண் பொருள் விளக்கம் உலக உயிர்களுக்கு ஒப்பற்றதாகிய மோட்சத்தை அளிப்பது என்பதாகும். இப்படி அளிப்பவர் சிவபெருமான் ஆதலின் அவர் பெயரால் இது சிவராத்திரி என்று அழைக்கப்படுகிறது. சிவராத்திரி வழிபாட்டின் பயன் இவ்வுலகில் வாழும் போது அனைத்து நன்மைகளை அடைவது: அதை தொடர்ந்து சிவலோக வீடுபேறு பெறுவதுமே ஆகும்.

லிங்கோற்பவ காலம்

சிவராத்திரி இரவின் மூன்றாம் பகுதியே லிங்கோற்பவ காலமாகும். இதுவே சிவபெருமான் சிவலிங்கத்தினின்று திருவுருவம் கொண்டு வெளிப்பட்டு அருவுருவமாக நின்று அன்பர் களுக்கு அருள் பாலித்த நேரமாகும்.

இந்த வேளையில் சிவதீட்டை பெற்றுக் கொள்ளுதல், சிவலிங்க பூசையை ஏற்றுக் கொள் ளுதல் ஆகியன அதிகப் சிறப்பைத் தருவதாகும். குருவான அன்பரின் உள்ளத்தில் உள்ள அறி யாமை இருளை நீக்கி அங்கு ஞான ஒளியை ஏற்றித் தீட்சை செய்விக்கின்றார். அப்போது சிவபெருமான் அன்பர் மனத்தில் எழுந்தருளி அவருக்கு அருள்பாலிக்கின்றார். அன்பருள் ளத்தில் பெருமான் எழுந்தருளும் நிகழ்ச்சியும் லிங்கோற்பவம் என்றே குறிக்கப்படுகிறது.

சிவராத்தியில் செய்ய வேண்டிய பூசா விதிகளை விளக்கும் நூல்கள்

மகாசிவராத்திரி மாதசிவராத்திரி, திங்கட்கிழமைகளில் வரும் சோமசிவராத்திரி ஆகியவற்றில் மேற்கொள்ள வேண்டிய நியமங்களையும் பூசனை விதிகளையும் விளக்கி சிதம்பரம் கண்கட்டி மடம் மறைஞான சம்பந்தர் மூன்று நூல்களை அருளிச் செய்துள்ளார். இவை திருவாவடுதுறை ஆதினத்தின் வெளியீடுகளாக வெளிவந்துள்ளன. இந்த ஆசிரியர் சந்தானக் குரவர்களில் மூன்றாமவராவார்.

மகா சிவராத்திரி கற்பம் : இந்நூல் 39 குறட்பாக்களைக் கொண்டதாகும். இதில் சிவராத்திரி உண்டான கதை சிவபெருமான் லிங்கோற்பவராகக் காட்சி தருதல், சிவராத்திரிக்கு உரிய காலத்தை வரையறுத்தல், சிவராத்தியன்று, நான்கு காலங்களிலும் சிவபெருமான் செய்ய வேண்டிய உபசாரங்கள் முதலியவற்றை ஆகம நூல்கள் உள்ளபடி விளக்கி கூறப்பட்டுள்ளது.

மாத சிவராத்திரி கற்பம் : இந்நூல் பதினான்கு குறள்களைக் கொண்டது. இதில் மாதந்தோறும் வரும் சிவராத்திரிகளில் சிவபெருமானைப் பூசிக்க வேண்டிய முறைகள், குறிக்கப்பட்டுள்ளன.

சோம சிவராத்திரி கற்பம் : இது பதினேழு குறட்பாக்களால் ஆனது. இந்நூலில் திங்கட்கிழமையில் வரும் சிவராத்திரியின் மகிமைகளைபற்றி விவரிக்கப்பட்டுள்ளன. (சிலநூற்கள் சோம சிவராத்திரியை, யோக சிவராத்திரி என்றும் குறிக்கின்றன.)

சிவராத்தரியன்று சிவபெருமானுக்குச் செய்யவேண்டிய உபசாரங்கள் -2

பக்கம் 310ல் சிவராத்திரி வழிபாட்டிற்குரிய பொருட்களின் பட்டியல் குறிக்கப்பட்டுள்ளது. மேலும் சில நூல்களில் கீழ்காணும் பட்டியல் உள்ளது. அதுவும் அன்பர்களுக்கு அளிக்கப்படுகின்றது.

செயல்	முதற்காலம்	இரண்டாம் காலம்	மூன்றாம் காலம்	நான்காம் காலம்
அபிஷேகம்	பஞ்சகவ்யம்	பஞ்சாமிர்தம்	பால்	கரும்புச்சாறு
ஆடை	செம்பட்டு	மஞ்சள்பட்டு	வெண்பட்டு	நீலப்பட்டு
அர்ச்சனை	வில்வம்	குருந்தை	கிளுவை/விளா	சிறுசெண்பகம்
வாசனைப்பூச்சு	பச்சை கற்பூரம் சேர்ந்த சந்தனம்	அகில் சந்தனம் சேர்ந்த சந்தனம்	கஸ்தூரி சேர்ந்த சந்தனம்	புனுகு கலந்த சந்தனம்
நிவேதனம்	பால் பொங்கல்	பாயசம்	எள்சாதம்	சுத்ந்தான்னம்
புகை	சாம்பிராணி	அகில்	கருங்குங்லிகம்	கற்பூரம்
வேள்விப் பொருள்	சந்தனக்கட்டை	அகில்கட்டை	எள்	லவங்கம்
தீபம்	புஷ்பதீபம்	நட்சத்திரதீபம்	பஞ்சமுகதீபம்	வில்வதீபம்

நன்றி, திருஆவடுதுறை ஆதின வெளியீட்டான சைவச் சிறு நூல்கள் 1954 ஆசிரியர் கண்கட்டி மடம் மறைஞான சம்பந்தர்

சிவராத்தரியன்று சிவபெருமானுக்குச் செய்யவேண்டிய உபசாரங்கள் - 3

சித்ததந்திரம் என்ற நூலில் சிவராத்திரியன்று மேற்கொள்ள வேண்டிய விதிமுறைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அதனை அடியொட்டியும் ஆகம நூல்களை அடியொட்டியும் சிவராத்திரி மகாபுராணத்தில் இச்செய்திகள் குறிக்கப்பட்டுள்ளன. அதன் பட்டியலை இங்குக் காணலாம்.

செயல்	முதற்காலம்	இரண்டாம் காலம்	மூன்றாம் காலம்	நான்காம் காலம்
அபிஷேகம்	பஞ்சகவ்யம்	பஞ்சாமிர்தம்	தேன்	கரும்புச்சாறு
மேற்பூச்சு	சந்தனம்	அகில்	பச்சைகற்பூரம்	குங்குமம்
அர்ச்சனை	வில்வம்	தாமரை	சிறுசெண்பகம்	நந்தியாவர்த்தம்
பூமாலை	தாமரை	துளசி	மூன்றுதளவில்வம்	நீலோற்பலம்
நிவேதனம்	பயறு, சாதம்	பாயசம்	எள்சாதம்	சுத்தான்னம்
வேதம்	ரிக்	யஜுர்	சாம	அதர்வணம்

★ **சிவராத்திரியில் செய்ய வேண்டிய தானங்கள்:** சிவராத்திரியன்று சிவலிங்கம், உருத்திராக்கம், விபூதிப்பை நவரத்தினம், பொற்காசுகள், வெள்ளிக்காசுகள், பசு, பூமி, இவற்றைக் தானமளிக்க வேண்டும்.

★ சிவராத்திரியில் வாசனை ஒட்டிய குளிர்ந்த நீரைக் கொண்டு முதல் காலத்தில் 1008 குடங்களாலும் இரண்டாம் காலத்தில் 49 குடங்களாலும் முன்றாம் காலத்தில் 25 குடங்களாலும் நான்காம் காலத்தல் 16 குடங்களாலும் சிவபெருமானைக் நீரால் திருமுழுக்காட்டவேண்டுமென்று பூஜாபத்ததி நூல்கள் கூறுகின்றன.

சிவராத்திரிக்குரிய சிறப்புமிக்க திருத்தலங்கள்

(பக்கம் 300ல் சிவராத்திரி வழிபாட்டிற்குரிய திருத்தலங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவற்றில் விடுபட்டுள்ள செய்திகளும் புதிய செய்திகளும் இப்பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. இரண்டையும் சேர்த்துப் படித்தருளும்படி வேண்டுகிறோம்.)

ஸ்ரீசைலம்

சிவராத்திரிபுராணம் இத்தலத்தைச் தனிச்சிறப்புடன் போற்றுகிறது. இங்கு நந்திதேவர் மலை வடிவமாக இருக்கின்றார். தேவாரம் இந்த தலத்தைத் திருப்பருப்பதம் என்றும் புராணங்கள் மல்லிகார்ச்சுனம் என்றும் குறிக்கின்றன. இது பன்னிரெண்டு ஜோதிர்லிங்கத் தலங்களில் ஒன்றாகும். சிவராத்திரி நாளில் இங்குள்ள பாதாள கங்கையில் மூழ்கி திரளான மக்கள் மல்லிகார்சுனரை வழிபடுகின்றனர். சிவராத்திரியை ஒட்டிப் பெருந்திருவிழா கொண்டாடப்படுகின்றது. சிவராத்திரியன்று மல்லிகார்ச்சுன சுவாமி தேரில் வலம் வருகின்றார். இங்குள்ள அம்பிகை பிரமராம்பிகை என்று அழைக்கப்படுகின்றாள்.


இத்தலம் ஆந்திர மாநிலத்தில் கர்நூல் மாவட்டத்தில் நந்தியாலுக்கு அருகில் உள்ளது. சென்னை திருப்பதி முதலிய இடங்களிலிருந்து நேரடிப் பேருந்து வசதி உள்ளது.

கோகர்ணம்

இது மேற்குக் கடற்கரையோரமாக அமைந்துள்ள தலமாகும். இறைவன் மகாபலேசுவரர் என்றும் அம்பிகை தாம்பரகெளரி என்றும் அழைக்கப்படுகின்றனர். இங்கு மாசி மாதத்தில் பெருந்திருவிழா கொண்டாடப்படுகின்றது. சிவராத்திரி அன்று தேரோட்டம் நடைபெறுகின்றது.

இங்கு நெடுங்காலமாகச் சிவராத்திரி நாளில் தேரோட்டம் நடைபெறுவதைத் திருவிளையாடற் புராணத்தில் "சுரபி *நீள்செவி இலிங்கச் சுடர் உருவாயினன் தண்ணிரவில் திருத்தேர் மன்ற நடக்கும் ஊர் இவ்வூர்*" என்று குறிக்கப்பட்டுள்ளதால் அறியலாம்.

கோகர்ணம் கர்நாடக மாநிலத்தில் ஹுப்ளிக்கு அருகில் உள்ளது. பெங்களூர், மங்களூர் முதலிய இடங்களிலிருந்து நேரடிப் பேருந்து வசதி உள்ளது. சிவராத்திரி புராணத்தில் இத்தலம் தனிச்சிறப்புடன் பேசப்படுகிறது.




ஸ்ரீ மல்லிகார்சுனர் சுவாமி - ஸ்ரீசைலம்

திருவைகாவூர்

திருவைகாவூர் ஆலயத்திலுள்ள இரண்டாவது கோபுரத்தின் வாசற்படியின் தென்புறத்தில் தலவரலாற்றை விளக்கும் சுதைச்சிற்பம் உள்ளது. இதில் வில்வமரம், வேடன், சிவலிங்கம், புலி ஆகிய உருவங்கள் இடம் பெற்றுள்ளன. தலபுராணத்தோடு தொடர்புடைய வேடன், அவனுடைய மனைவி ஆகியோரின் திருவுருவங்கள் உலாத்திருமேனிகளாக உள்ளன. சிவராத்திரியை ஒட்டி பெருந்திருவிழா கொண்டாடப்படுகின்றது. அன்று இரவு நான்கு காலங்களிலும் சிறப்பான பூசைகள் நடைபெறுகின்றது. நான்காம் காலத்தில் வேடனுக்குக் காட்சி கொடுத்த ஐதீக விழா நடைபெறுகின்றது. சிவராத்திரிக்கு அடுத்தநாளான மாசி அமாவாசையன்று பஞ்சமூர்த்திகள் வீதியுலா நடைபெறுகின்றது.

இத்தலத்தில் சிவராத்திரி வழிபாட்டிற்கு உரிய தென்பதை பிரமோத்திர காண்டம், உபதேச காண்டம் சிவராத்திரி புராணம் முதலிய நூல்கள் விரிவாகக் கூறுகின்றன.

இறைவன் வில்வநாதர் என்றும் அம்பிகை வளைக்கை நாயகி என்றும் அழைக்கப்படுகின்றனர். இங்கு ஆலயத்தின் முன்புறம் அமைந்துள்ள தீர்த்தம் யமதர்மனால் உண்டாக்கப்பட்டதால் யமதீர்த்தம் என்றழைக்கப்படுகின்றது.



காளத்திநாதர் திருக்காளத்தி (காளாஸ்திரி)

சிவராத்திரியில் அடிமுடிதேடிச் சோர்வுற்ற பிரமனும், திருமாலும் இங்கு வந்துவழிபட்டனர். அவர்களுடைய சந்நிதிகளும் இக்கோயிலில் உள்ளன. இதனால் இது மும்மூர்த்தி கோயிலென்றும் அழைக்கப்படுகின்றது.

இத்தலத்தில் நான்கு வேதங்களும் வில்வ மரமாக உள்ளன என்று புராணம் கூறுகின்றது. இங்குள்ள தட்சிணாமூர்த்தியின் கரத்தில் கோல் உள்ளது (புராணத்தில் கூறப்பட்டபடி) சிவராத்திரி நாளில் அருள்பெற்ற வேடன் யமனுக்கு அஞ்சிக் கோயிலுக்குள் வந்தபோது அவனுக்குத் தஞ்சமளித்த சிவபெருமான் யமனை வெருட்டக் கையில் தண்ட மேந்தியதை இம்மூர்த்தம் உணர்த்துகிறதென்பர். யமனை விரட்டிய நந்தியும் அவன் திரும்ப வராதி ருக்கக் கருவறையை நோக்காமல் வெளி வாயிலை நோக்கியவாறு அமர்ந்துள்ளார்.

காளத்தி (காளாஸ்திரி)

காளஹஸ்தி என்று அழைக்கப்படும் "காளத்தி மலை" சிவராத்திரிக்குரிய தலங்களில் ஒன்றாகும். இங்கு ஒவ்வொரு பட்சத்தில் வரும் சதுர்த்தசி நாளும் நித்ய சிவாராத்திரியாகப் கொண்டாடப்படுகின்றது."

மாசிமாதம் சிவராத்திரியை ஒட்டிப், பெருந்திரு விழா நடைபெறுகின்றது. சிவராத்திரி நாளில் தனிச் சிறப்புடன் பெரிய அலங்காரத்துடன் காளத்திநாதர் பவனி வருகின்றார். திருவிழாவில் தேரோட்டம் திருக்கல்யாணம் மலைவலம் வருதல் இடபவாகன சேவை முதலியன தனிச்சிறப்புடன் நடைபெறுகின்றன.

காளாமுகர் போற்றிய சிவராத்திரி

ஒரு காலத்தில் "காளாமுக சைவர்கள் " என்ற சைவ சமயத்தின் ஒரு பிரிவினர் இந்தியாவெங்கும் பரவியிருந்தனர். இவர்கள் சிவபெருமானை உக்கிர மூர்த்தியாக வழிபாடு செய்தனர். இவர்கள் அட்டமி, திங்கட்கிழமை, என்கிற சோமவாரம் சிவராத்திரி ஆகிய நாட்களில் கடுமையான விரதத்தைக் கடை பிடித்தனர்.

இந்த விரதங்கள் அஞ்ஞானத்தை நீக்கி உயிர்களுக்கு மோட்சத்தினை அளிக்கும் என்று நம்பினர். சிவராத்திரி வேளையில் சிவபெருமான் சுடலையின் மத்தியில் பேய்கள் கொள்ளிகளை விளக்காக ஏந்தி நிற்க, பூதங்கள் பாடிஆட பெரிய நடனத்தைச் செய்வார் என்பது இவர்கள் புராண நம்பிக்கையாகும்.

தத்துவப் பிரகாச நூலில் இவர்களுடைய கருத்தைக் குறிக்கும் பாடல் ஒன்று உள்ளது. அது

அட்டமிகள் சோமவாரம் சிவராத்திரிகள்
ஆதிநோன்பு செய்ய அஞ்ஞானம் நீங்கி
இட்டமாய் உயிரொளி போய் ஒளியோ வெய்தும்
இது முத்தி என்னும் காளாமுகனே

என்பதாகும். சிவராத்திரி காளாமுகர்களால் மிகச் சிறப்பாக போற்றப்பட்டதை வேறு பலநூல்களாலும் அறிகிறோம் .

உமாசிவராத்திரி

உமையவள் ஓர் ஊழிக் காலத்தின் நீண்ட இரவு முழுவதும் சிவனைப் பூசித்தாள். அதனை நினைவூட்டவே சிவராத்திரி கொண்டாடப்படுகின்றது என்று சில புராணங்கள் கூறுகின்றன. சிவபெருமான் உமாதேவியைத் தன்மடிமீது அமர்த்திக்கொண்டு அவளுக்கு ஆகமங்களின் நுண்பொருளை விளக்கிய காலமும் சிவராத்திரியேயாகும். அவள் பெயரால் அமைந்த சிவராத்திரி ஒன்று உள்ளது. அதற்கு "உமாசிவராத்திரி" என்று பெயர்.

ஓர் இரவின் நடுவில் உள்ள இரண்டு யாமங்களே (இரவு 9 மணி முதல் இரவு 3 மணிவரை உள்ள காலம்) நடு நிசி எனப்படும். இதில் மூன்றில் இரண்டுபாகம் வரை திரயோதசியும் எஞ்சிய ஒரு பகுதியில் சதுர்தசியும் கூடி வரும் நாளை உமாசிவ ராத்திரி என்று ஆகமங்கள் கூறுகின்றன. இதுவே எல்லா சிவராத்திரிகளையும் விட உயர்ந்த பலனைத் தருவதாகும். இதனை சிவசக்தியின் வடிவம் என்றும் சிவலிங்க வடிவம் என்றும் கூறுவர்.

உருத்திர சிவராத்திரி

சிவனுடைய அருளே சக்தி, சக்தியின் அருளினால் தான் இந்த உலகம் தழைக்கின்றது இதனை "அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை எல்லாம்" என்றும், எத்திறம் ஈசன் நிற்பன் அத்திறம் அவளும் நிற்பள்" என்றும் சமய சாத்திர நூல்கள் குறிப்பிடுகின்றன. சிவபெருமானிடத்தில் சக்தி ஒடுங் கியிருக்கும் காலத்திலும் அவள் அவரை விட்டு நீங்கும் காலத்திலும் உலகம் செயல்படாது எங்கும் இருள் சூழ்ந்து அந்தகாரமாகிவிடும்.

கந்த புராணத்தில், உமை நீங்கு படலத்தில் இத்தகைய காட்சியொன்று உள்ளது. ஒரு சமயம் உமாதேவியார் கயிலையைவிட்டு நீங்கினாள். அதனால் உலகம் செயற்படவில்லை. சூரிய சந்திரர்களிலும் நட்சத்திரக் கூட்டத்திலும் தீயிலும் ஒளி மறைந்தது. எங்கும் இருள் சூழ்ந்தது. பிரமனும், திருமாலும் சோர்ந்து மயங்கி வீழ்ந்தனர். அந்த நீண்ட பொழுதின் நான்கு காலங்களிலும் சிவ அம்சமாகத் தோன்றிய பதினோரு கோடி உருத்திரர்கள் சிவ பெருமானைப் போற்றி அர்ச்சித்தனர். அவர்கள் அமைத்து வழிபட்ட லிங்கமே திருஇடைமருதூரில் இப்போது மகாலிங்க மூர்த்தியாகக் காட்சியளிக்கின்றது. சிவபெருமான் அவர்களுடைய பூசையை ஏற்றுக் கொண்டு மூன்றாவது பூசைவேளையில் சிவ லிங்கத்தினின்று ஜோதி வடிவாக வெளிப்பட்டார். அவர்களுக்குக் காட்சியளித்து அவர்களின் வேண்டுகோளின்படி முன்போலவே உலகைப் படைத்தார். அனைத்து உயிர்களும் இன்பமுற்றன. உருத்திரர்கள் வழிபட்ட அந்நாளே சிவராத்திரியாகக் கொண்டாடப் படுகின்றது என்பர்.

திருவிடைமருதூர் ஆலயத்தில் பெருமான் மகாலிங்கம் என்ற பெயரில் எழுந்தருளியுள்ளார். உருத்திரர்கள் அமைத்த தீர்த்தம் உருத்திர தீர்த்தம் என்று அழைக்கப்படுகின்றது. இந்த லிங்கம் ஜோதி லிங்கமாகும். இதனைச் சிவராத்திரியில் தரிசிப்ப வர்கள் உருத்திர பதம் பெறுவர்.



மகாலிங்க சுவாமி - திருஇடைமருதூர்

நான்கும் சிவராத்திரியும்

சிவராத்திரியின் இரவு நான்கு காலங்களாகப் பிரிக்கப்பட்டு நான்கு வேளை பூஜை செய்வது போலவே சிவராத்திரியைச் சேர்ந்த பல செய்திகள் நான்கு என்ற எண்ணிக்கையின் அடிப்படையில் அமைந்துள்ளன. அவற்றுள் சிலவற்றை இங்குக் காணலாம்.

☆ சிவராத்திரியின் நான்கு காலங்களிலும் முறையே வெள்ளி, தங்கம், இரத்தினம், மிருத் (மண்) ஆகியவற்றால் அமைந்த லிங்கங்களைப் பூசிக்கவேண்டும் என்று பெரியோர் கூறுவர்.

☆ மகாசிவராத்திரியில் சென்று, தரிசிக்க வேண்டிய முக்கியமான தலங்கள் நான்காகும். இவை முறையே கோகர்ணம், ஸ்ரீசைலம், காளாஸ்திரி, திருவைகாவூர் என்பனவாகும்.

☆ சிவராத்திரியின் நான்கு காலங்களில் நாகராஜனான வாசுகியும் அவனைச் சேர்ந்த நாகங்களும் நான்கு தலங்களில் வழிபாடு செய்து பேறு பெற்றனர் அத்தலங்கள் அவர்கள் பெயரால் நாகூர், நாகப்பட்டினம், திருநாகேசுவரம், நாககேசுவரம் (குடந்தை) என்பனவாகும்.

☆ கிருதயுகத்திற்கு முன்பு தோன்றிய பிரளயத்தில் உமாதேவியும், திரேதா யுகத்திற்கு முன்னே தோன்றிய பிரளயத்தின் இரவில் முருகப் பெருமானும் துவாபர யுகத்திற்கு முன்னே நிகழ்ந்த பிரளய இரவில் விநாயகப் பெருமானும் கலியுகத்திற்கு முன்னே நடைபெற்ற யுகப்பிரளய இரவில் திருமாலும் சிவலிங்கத்தை அர்ச்சித்து பேறு பெற்றனர்.

திருமாலும் சிவராத்திரியும்



திருமால் பன்றி அவதாரம் எடுத்து சிவபெருமானின் திருவடியைத் தேடிச் சென்ற இரவே சிவராத்திரி என்பது பல இலக்கியங்களில் குறிக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக ரிக்வேதத்தில் விஷ்ணுவராக அவதாரம் கொண்டு சிவபெருமானின் திருவடியைத் தேடிச் சென்று ஓராயிரம் ஆண்டுகள் அலைந்தும் அதனை காணமுடியாது சோர்ந்து அவரை தோத்திரம் செய்ததைக் குறிக்கின்றது. இக்கருத்தை அடியொற்றி பாஸ்கர சங்கிதை, சரபஉபநிடதம் முதலிய நூல்களும் இக்கதையைக் குறிக்கின்றன. பின்னாளில் தோன்றிய வில்லிபாரதத்தில் வில்லிபுத்தூர் ஆழ்வார் **"ஓர் ஏனம் தனைத்டே ஒளித்தருளும் இருபாதத் தொருவன்"** என்று குறிப்பதைக் காண்கிறோம். சிவராத்திரி புராணமும் விஷ்ணு வராகமாய் அவரித்த கதையை கூறுகிறது.

அனேகமாக எல்லாச் சிவாலாயங்களிலும் அமைந்துள்ள லிங்கோற்பவ திருவுருவங்களில் மேற்சொன்ன வரலாற்றை விளக்கும் வகையில் திருமாலை, முழுப் பன்றி வடிவத்தில் அல்லது பன்றி முகத்துடன் கூடியவராக அமைத்துள்ளனர். இதற்கு முற்றிலும் மாறாக சிவலிங்கத்திலின்று வெளிப்படும் சிவபெருமானையும் அவரை திருமால் முழுதேவ வடிவில் மண்டியிட்டு வணங்கிப் பூசிக்கும் நிலையில் அமைந்த திருவுருவத்தைத் தஞ்சை பெரிய கோயிலில் காண்கிறோம்.

இது ஓர் ஊழிக் காலத்தில் நீண்ட இரவில் திருமால் சிவபூசை செய்ததையும் சிவபெருமான் அவருக்கு லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு அருள்பாலித்ததையும் குறிக்கும் வரலாற்றுச் சிற்பம் என்று கூறுவர்.

நன்றி : பக்கம்294ல் வெளியாகியுள்ள சிவராத்திரியும் தாழம்பூவும் என்ற கட்டுரையின் முதல் இரண்டு பத்திகளில் உள்ள கருத்துக்கள் டாக்டர். உ.வே.சா. நூலக உடனாளர் எஸ். சாய்ராம் அவர்கள் அளித்ததாகும். அவருக்கு நன்றி.

உ

அண்ணாமலை வளர் அண்ணா போற்றி!
கற்பகம்தொழும் கபாலீச்சரத்தாய் போற்றி!
அச்சிறுப்பாக்கத்து அருளே போற்றி !!
உமையொருபங்கா போற்றி! போற்றி!!



சிவ மஞ்சரி

இது சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயில்